471

125

125

திரு. கொலந்தான் பண்டிதர்,
ராசிபுரம்,
சேலம்,
"கை முறை அட்டவணை". 1/2

80 1/2

Verification completed
Total pages 184
See Vol II (copy) also
Sundaranandam
7.9.64

தேதி: 3.12.63.

ஓலைச்சுவடியின் பெயர்: "கைமுறை வைத்திய அட்டவணை"

உரிமையாளரின் பெயர்: கொழந்தான் பண்டிதர்.

இடம்: ராசிபுரம், சேலம்.

125

***

கை மு றை வை த் தி ய அ ட் ட வ ணை.

முதல் ஏடு இல்லை. அதில் வரும் செய்யுட்கள் நீங்கலாக மீதி பிரதி செய்யப்பட்டன.

தாகத்துக்கு கருக்கு:-

8. நிறைக் கடங்கார்த் தாகமது எடுத்து தானால் நேராகக் கருக்கு ஒன்று சொல்லக் கேளே

8. கருக்கது தான் போர்டுதற்கு விபரங் கேளு காசினியில் சாய்------யின் பட்டை
உருக்கமுடன் முருங்கையுட பட்டை தானும் உத்தமனே மர்விலங்கைப் பட்டை சேர்த்துப்
பெருக்கமுடன் சித்திர மூலி சேர்த்து பேரான சிவன் வேம்பு தானும் சேர்த்து
யெருக்கிலம் பூவுடனே தென்னம் பஞ்சு யேகமாய்ச் சேர்த் தொன்றாய் நருக்கிப் போடே

9. நருக்கியே போட்ட பின்பு சொல்லக் கேளு நாலு படி சலமதிலே கூட விட்டு
சுருக்கியே கசாயத்தை யெட்டொன்றாக்கி உத்தமனே கஸ்தூரி கூட்ச் சேர்த்து
பெருக்கியே உள்ளுக்குக் கொள்ளச் சொல்லு பேறான வண்ணியது. தெதி கெட்டோடும்
சுருக்கியே யிந்த முறை சித்தர் சொல்லச் சூட்சமடா யின்னமொரு சேதி கேளே.

10. செய்தி யொன்று சொல்லுகிறேன் தெளிவாய்க் கேளு சிரந்தனிலே சாமளா தேவி
நீதியுடன் சதிர கண்டம் பார்வை யிட்டு நெறியுடனே தேவி தன்னை வசியம் செய்தால்
சோதியுடன் வந்ததொரு உள்ளியுந் தான் சொல்லு முன்னே போமடா துன்பம் நீங்க
நீதியுடன் தண்ட லேகியங் கொண்டு வந்தால் நிசமாக உள்ளியது ஒதுங்கிப் போமே.

1 *இடையில் சன்னி பதினொன்று முனம் விடப்பட்டது...

11. கல்லடைப்புக்கு மருந்து:-

கடுக்காய் இள்நீர் விட்டரைத்து சோமத்துப் பெருங்காயம் அரைக்காசிடை கூட்டிக் கலந்து கொடுக்கவும். வாழைக் கிழங்கு இடித்துப் பிழிந்து ஏலம் ரெண்டு காசிடை கூட்டிக் கொடுக்கவும். திப்பிலி கல்நார் கசாயம் யிட்டுக கொடுக்கவும் தீரும்.

சீரிப் பச்சை வேர் ரெண்டு சுக்கு பலாத் தோலி, புறளி ஒரு நார்த்தங்காய் மாத்திரம் யிடித்துச் சூரணம் பண்ணி பத்திய மிருந்தால் வெந்நீரில் கொடுக்கவும். இச்சா பத்தியத்துக்கு குளுந்த தண்ணீரில் கொடுக்கவும்.

ரணத்துக்குப் பூச்சு மருந்து:-

மிளகாயிலை ஒட்டடை, சுண்ணம்பு, விளக்கெண்ணை வார்த்து அரைத்துப் பூசவும்.

கிரணிக்கு அடை மருந்து:-

சடைக் கஞ்சா புழுங்கலரிசி அரைத்து அடை தட்டி பசுவின் வெண்ணையில் சுட்டுக் கொடுக்கவும்.

வல்லாதி கிருதம்:-

சேங்கொட்டை பலம்.50, மூக்குத் தள்ளிப் போட்டு ரெண்டாக நருக்கி சுண்ணாம்பு தண்ணீரில் நாலு நாழிகை தோளாந்திரமாக எரிக்கவும். கடுக்காய் கசாயத்தில் தோளாந்திரங் கட்டி நாலு நாழிகை எரித்து எடுத்துச் சாலில் யிட்டு நாலு வள்ளத் தண்ணீர் விட்டு ரெண்டு படியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு நெய் படி.1/8, கூட விட்டு கொதிக்கையில் சுக்கு, திப்பிலி, மிளகு, சடாமாஞ்சி, சீரகம், கொன்றைப் பட்டை,

தகரை விரை மஞ்சள், கோஷ்டம், வசம்பு முருங்கைப் பட்டை இது வகைக்கு பலம்.க, பலம்.௩, சித்திரமூலம் பலம்.உ, பறங்கிப் பட்டை பலம்.உ, பூண்டு பலம்.உ, இது வெல்லாம் சூரணம் பண்ணி சர்க்கரை பலம்.18 இது வெல்லாங் கூடப் போட்டுக கிளறிக் கடுக்காய் மருவாதி கொள்ளவும். இதனால் தீரும் வியாதி பஞ்ச சூலை, பதினெட்டு கிறந்தி, எண்பத்திரெண்டு வாய்வு இது முதலான ரணமுந் தீரும். விநாயக பூசை பண்ணவும். இது கை கண்டது.

<u>குளிர் காச்சல், ஜுரக் காச்சலுக்கு உருண்டை:-</u>

மிளகு, கரிசலாங் கண்ணி, வெற்றிலைக் காம்பு மடலரி தாரம், பச்சைத் தண்ணீர் வாத்தரைத்து சிறு பயறு மாத்திரம் உருண்டை பண்ணி முலைப்பாலில் கொடுக்கவும். குளிர்சுரம், நீர்சூரம் இவ்வெல்லாந் தீரும். பத்தியம் ஆறு நாளைக்கு உப்பு, புளி ஆகாது. ஏழா நாள் உப்புக் கூட்டிக் கொள்ளவும்.

<u>காணக்கடிக்கு மருந்து:-</u>

படமடக்கி வேர், முத்தல், வசம்பு, வெள்ளைப் பூண்டு அரைத்து வென்னீரில் கொடுக்கவும்.

<u>மேகத்துக்கு:-</u> தண்டாமரைக் கிழங்கு தேன் பாலில் பிசைந்து அண்டாது சனியில் கூட்டிக் கொண்டால் மேகம், மூத்திர எரிச்சல், எலும்புருக்கி இவை தீரும்.

<u>சூலைக் கட்டுக்கு:-</u>

பறங்கிப் பட்டை சேர்.உ, கொடிக் கள்ளி யிளந் தளிராய்க் கொண்டு வந்து இடித்து தண்ணீர் கொஞ்சமாய் வார்த்து வேகப் போட்டுத் தண்ணீர் இறுத்து மாவைப் பிசைந்து கருங் கோழி வயித்திலடைத்து திருகு கள்ளி கொண்டு வந்து பானையில் போட்டு வண்டு கட்டி கோழியை வைத்துச் சட்டி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து ஒரு விறகு போட்டு எரித்து வெந்த பிறகு ஒடுத்து இடித்துச் சூரணம் பண்ணி வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். கொஞ்சமானால் மூன்று நாள் நாள்ப் பட்டால் ஐந்து நாள்க் கொள்ளவும்.

<u>சீத சுரத்துக்கு:-</u> ஆடாதோடையின் பூறல் அத்தி திப்பிலி, சிறுதேக்கு, காடாங் கண்டங் கத்திரியும், காய்ச்சி இறக்கித் தேன் விட்டு தேடா யிதனை யருந்து வீராய் திருந்த யாறு வேளை தனிற் கோடாகோடி சுரமும் போய் குளிருஞ் சுரமுந் தான் போமே.

<u>அசீரணம், பிரமன் களிச்சலுக்கு:</u> பெருமருந்துக் கொடிவேர், மஞ்சள் இது இரண்டு மிடித்து கஷாயம் போட்டுக் கொடுக்கவும் நிற்கும்.

<u>விரோசினத்துக்கு:-</u>

சுக்கு பலம்.உ, கல்லுப்பு பலம்.உ, கடுகு பலம்.ச, இது மூன்றும் அரைத்துக் காட்டெருமைப் பால் வார்த்துக் கிண்டிக் கொடுக்கவும். விரோசனமாம்.

<u>உள்மூலம், ரெத்த மூலத்துக்கு:-</u>

ஆகாசத் தாமரை குருவை யரிசியில் மஞ்சள், மிளகு இது இரண்டுஞ் சிறுகச் சிறுகப் போட்டு அரைத்து அடை தட்டி ஆவின் நெய்யில் சுட்டுக் கொடுக்கவும்.

<u>சருவ வாய்வுக்கும்:-</u>

கொம்மட்டிக்காய்ச் சாறு படி.ச, பிரண்டைச் சாறு படி.க, நல்ல உப்பு படி.க, இது மூன்றும் ஒரு சட்டியில் போட்டுச் சுண்ட வேக விட்டுக் கிளறி வைத்துக் கொண்டு லேகியம் போலே இருக்கும். ஒரு தட்டிடை கொள்ளவும். சருவ வாய்வுந் தீரும்.

<u>கல்லடைப்புக்கு மருந்து:-</u> கல்நார், கல்மதம், சலாசித்து, சாத்திர வேதி

வகைக்கு விராகனிடை.ச, வாழைக் கிழங்கு தண்ணீரிலரைத்துக் கொடுக்கவும். பசுவின் பாலுஞ் சாதமுஞ் சாப்பிடவும். காரப்பு, புளி தவிர்க்கவும்.

பித்த பாண்டுவுக்கு:-

நிலப்பனைக் கிழங்கு, வள்ளிக் கிழங்கு, நெருஞ்சி வேர், நாவல்ப்பூ, ஆவாரம் பூ, முருங்கை வேர், சித்தாமுட்டிக் கிராக்காய், கீழாநெல்லி, சிறுகீரை, காட்டுமல்லிகை பூனைக்காலி விரை, பெருமருந்துக் கொடி, முன்னை வேர், முத்தக்காசு, நன்னாரி வேர், சீதேவி வகைக்கு பலம்.ச, இது வெல்லா மிடித்துப் பானையில் போட்டு தண்ணீர் நாலு வள்ளம் விட்டு ஒரு வள்ளமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு பாலை வேர் சாறு படி.க, மொந்தன் (வாழை) கிழங்குச் சாறு படி.உ, கறப்பம் பால் படி.ச, இது வெல்லாம் ஒரு தாளியில் விட்டு காயை யில் கற்கம், லவங்கம், மதுரம், கோஷ்டம், கற்கடக சிங்கி, இந்துப்பு, ஓமம், வசம்பு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், லவங்கம், பட்டை, சாதிக்காய், வசுவாசி, நிர்கப்பூ, சாத்திர வேதி, சுக்கு, மிளகு, நெல்லிக்காய் தானிக்காய் செண்பகப்பூ, தக்கோலம், மரமஞ்சள், சடாமஞ்சி யிஞ்சி, முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், விலாமிச்சம் வேர், மந்திஊட்டி, பச்சிலை, கச்சோலம், வகைக்கு பலம்.க, இது வெல்லா மிடித்துச் சூரணம் பண்ணிக் கசாயத்தில் போட்டு லேகியம் பாகு பதம் மெழுகு பதமாக இறக்கி தினசரி ஒரு கடுக்காய் மாதிரி சாப்பிடவும். இதில் தீரும் வியாதி பித்த பாண்டு, காமாலை, சோபை தலை மயக்கம் இது வெல்லாந் தீரும். மேலும் பூசவும். விநயக பூசை பண்ணவும். கை கண்டது.

மகா சிந்தாதி லேகியம்:

புளியிலை சாறு கூ.உ, கரிசிலாங் கண்ணி சாறு கூ:க, ஆத்துப் பிறயி சாறு கூ.½, பொடுதலை சாறு கூ.½, சாட்டறணை வேர் பலம்.ய, சிறுகீரை வேர் பலம்.ய, வல்லாரை பலம்.ய, பழைய கிட்டம் சாறு கூ.உ, களாவிருதம் பட்டை பலம்.25, சங்கம் வேர் பலம்.25, களாத்திப் பட்டை பலம்.ய, பிடங்கு நாரிப் பட்டை பலம்.ய, புளியாரை பலம்.ய, நீர்முள்ளி வேர் பலம்.ய, சுரைத் தண்டு பலம்.ரு, கத்தாளஞ் சருகு பலம்.ரு, நெருஞ்சி வேர் பலம்.உ, கீழாநெல்லி சமூலம் பலம்.உ, பெரு மரத்துப் பட்டை பலம்.உ, பெரு மருந்துக் கொடி பலம்.உ; சிறு குறிஞ்சா பலம்.உ, நிலப்பனைக் கிழங்கு பலம்.உ; பாப்பரா முள்ளி சமூலம் பலம்.உ; ஆவரை பலம்.உ, சுள்ளி முள்ளி வேர் பலம்.உ, புலியறணைக் கிழங்கு பலம்.உ; இது வெல்லா மிடித்துச் சாறில் போட்டு சாணி தண்ணீர் விட்டு அஷ்ட பாகமாய்க் காய்ச்சி வடி கட்டி பழைய நல்ல வெல்லம் பலம்48 பொட்டிப் பிசைந்து வடிகட்டி அடுப்பு மேலே வைத்து காய்ச்சி பாகு பதத்தில் கற்கம் சுக்கு, திப்பிலி, மிளகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம் லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, வாய்விளங்கம், கெண்டு பரங்கி, அறத்தை, திப்பிலி மூலம், கடுரோகணி, சீரகம், சொத்தமல்லி, வெங்காரம், தேத்தாங் கொட்டை, முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், வால்மிளகு, ஆனைத் திப்பிலி, அதிமதுரம், சிறுநாகப்பூ, ஏலம், சிவதை வேர், தாளிசை பத்திரி, கோரைக் கிழங்கு, நன்னாரி வேர், இந்துப்பு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், கற்பூரம், நீர்முள்ளி விரை, சந்தனம், கச்சோலம், வெள்ளரி விரை இது வெல்லாம் வகைக்கு பலம்.க, கூட்டிச் சூரணம் பண்ணி பாகிலே போட்டுக் கிளறி இறக்கித் தேன் பலம்.க, விட்டுக் கலந்து கடுக்காய் மாதிரி கொள்ளவும். தீரும் வியாதி சோபை, காமாலை பாண்டு, சுவாச காசம், அஸ்தி சுரம், அரோசிகம், மந்தாக்கினி, மகோதரம், மலபந்தம், வாய்வு, மேகவெட்டை சலக் கட்டு, மேக மூத்திரம், ரத்த பித்தம் இது முதலான ரோகமும் தீரும். விநயக பூசை பண்ணவும்.

சவுபாக்கிய சுண்டி:

சித்தாமுட்டி, பேமுட்டி, நல்ல முள்ளி, கண்டங்கத்திரி, காஞ்சிறி வேர், நன்னாரி

சீந்திக் கொடி, அமுக்கிலாங் கிழங்கு, ஈ தவளை, முக்கூட்டுவளை, ஆயிலிப் பட்டை வகைக்குப் பலம்.ய, வீதம் கூட்டி இடித்து நாலு வள்ளந் தண்ணீர் விட்டு ரெண்டு படியாகக் காய்ச்சி வடி கொண்டு பசுவின் பால் படி.உ, சர்க்கரை பலம்.20, ஒடக் கூட்டி கொதிக்கையில் புரை வாங்கின யிஞ்சி பலம்.100, பாலில் சுத்தி பண்ணிக் கடலை போலே நறுக்கிப் பாகில் போடவும். சித்திர மூலம் பலம்.க, கடுக்காய் பலம்.க, கடுக்காய் பலம்.க, தானிக்காய் பலம்.க, நெல்லி முள்ளி பலம்.க, சதகுப்பை பலம்.க, காயம் பலம்.த, கரிசிலாங் கண்ணிப் பொடி பலம்.உ, திப்பிலி பலம்.உ, மிளகு பலம்.உ, ஒமம் பலம்.உ, கொத்தமல்லி பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, சீரகம் பலம்.ரு இது மட்டும் வறுத்து இடித்து பாகு பதத்தில் சூரணம் கூடப் போட்டுக் கிளறி இறக்கித் தேன் படி.க, கூட விட்டு கடுக்காய் மருவாதி கொள்ளவும். தீரும் வியாதி குசிகா வாய்வு, குதக சன்னி, குசிகா பாரம் குசிகா கிறுணி, வாய்வு, சயித்தியம், அக்கினி மந்தம் அரோசிகம், அஸ்தி சுரம், பிறுண சுரம், மலபந்தம், கர்மாலை தீரும். விநாயக பூசை பண்ணவும். கை கண்டது.

பித்தம் எடுக்க:-

ரசம் காசிடை.த, அரிதாரம் காசிடை.த, கெந்தகம் காசிடை.த, வெங்காரம் காசிடை.உ, மயில் சுத்தம் காசிடை.உ, இது மட்டும் கல்வத்திலிட்டு பேய்பீர்க்கன் காய்ச்சாறு விட்டு மூன்று நாளரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி வென்னீரில் ஒரு உருண்டை கொடுக்க வாந்தியாம். எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்க வாந்தி பிராந்தியாம்.

சத்தி குன்மத்துக்கும் அண்ட வாதத்துக்கு:-

குழல் மணி, வெள்ளை யுள்ளி, சுடியதோர் முருங்கைப் பட்டை, அழலிடை சுக்குக் கொள்ளு ஐந்தும் சமமுக் கொண்டு குழவி செய்யோசை போலக் குமிறிடுங் குடல் வாதங்கள் பழகிய சூலை குன்மம் பக்கிய மூலம் போமே.

கிறுணிக் கபாடம்:-

லவங்கம் குருசானி யோமம், சாதிக்காய், ஓமம், கசகாச, சீரகம், கற்கடக சிங்கி, கருஞ்சீரகம், அதிமதுரம், கோஷ்டம், அதிவிடையம், அக்கிலாக் காரம், கொத்தமல்லி, வாய்விளங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, லவங்கப் பட்டை, தாளிசை பத்திரி, படிக்காரம், காயம், பூண்டு (வனமூலிகை) யிலவம் பிசின், கருவேலம் பிசின், விளாம்பிசின், நிலப்பனைக் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, அப்பைக் கிழங்கு, கொடிவேலி வேர், முத்தக்காசு, பொன் முசுட்டை பெருமரப்பட்டை, முருங்கையிலை, வாழைக்கிழங்கு, கஞ்சாயிலை இது வெல்லாம் இள வறையாக வறுத்து ஆவாரை சமூலம் போட்டு அந்தக் கிசாயத்தில ரத்து மாதளங்காய் கொண்டு வந்து விரை தள்ளிப் போட்டு மருந்தெல்லாந் திணிச்சு சீலை மண் செய்து துணை கருகச் சுட்டெடுத்து கசாயம் விட்டரைத்து ஏழு தரம் புடம் பண்ணி அரைத்துச் சுண்டைக்காய் மருவாதி உருண்டை பண்ணித் தேனில் தயிரில் கொடுக்கவும். கிறுணி தீரும். ஈளை, இருமல், வெள்ளைக் காசி பவுரை கூட மேக சன்னி, திமிரு சன்னி, வாத சன்னி, ஒரண்ட வாதம் தீரும்

பித்த காமாலைக்கு மருந்து:-

அப்பைக் கிழங்கு, சிக்கவரைக் கிழங்கு, ஆகாசக் கெருடன் கிழங்கு, ஆடு தின்னாப் பாளை படுபாகல் கிழங்கு நல்ல மருக்காரம் பட்டை, கலக் கோவைக் கிழங்கு விழுதி வேர், செங்கத்தாரி வேர், ஆதண்ட வேர், சத்தி சாறணை வேர், எருமைப் பாச்சான் கொடி, நல்ப் பிரண்டை வேர், அமுக்கிலான் வேர், பெருங் குறிஞ்சா வேர், முக்குருந்து வேர், புளிப் பிரண்டைக் கிழங்கு, தீங்கு நெல்லிப் பட்டை, நிலப்புளி வேர், ஈ தவளை வேர், படமடக்கி வேருந் தழையும், வெள்ளருகு

உசிலம் பட்டை, புரசம் வேர்ப் பட்டை, செம்பிறண்டை வேர், மூள்ளு விடாம் பட்டை, கண்டங்கத்திரி வேர், காட்டு முருங்கை வேர், குடைமல்லிகை, சித்திர மூலம், நுணப்பட்டை மிளகுரணைப் பட்டை, வட்டச் சுள்ளி வேர், நாராயண சுள்ளி வேர்--- தன் புல்லு வேர் கல்க் கொளிஞ்சி வேர், யீசுவர மூலி வேர், பொன் மூசுட்டை வேர், உத்தாமணி வேர், வெள்ளைச் சீகைப் பட்டை, நல்ல சீகைப் பட்டை, நீர்ப்புங்கம் பட்டை, தழுதாழை வேர், சங்கம் சங்கங் குப்பி சமூலம், களச்சி வேர், நீர்ப்பூலாம் பட்டை, மரத்திப் பட்டை, ஊசித் மரத்திப் பட்டை, பெருங் கொன்றைப் பட்டை, காட்டு முருங் கைப் பிசின் இது வெல்லாம் வகைக்கு பலம்.உ, கூட்டி இடித்துச் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு இதில் கடைத் திரவியம் பூண்டு, திப்பிலி, திப்பிலி மூலம், சாதிக்காய், கொத்தமல்லி, வாய்விளங்கம், காட்டுச் சீரகம், வசம்பு, மிளகு, ஓமம், நற்சீரகம், கடுகுரோகணி, அரத்தை, குடல் வாதப் பட்டை, குடப் பாலைப் பட்டை, நீர்க் கடும்பு விரை இது வெல்லாம் வகைக்கு விராகனிடை.க, கூட்டி இடித்துச் சூரணம் பண்ணி ரெண்டு வகையும் ஒன்டுய்க் கூட்டிச் சேர்த்து வியாதியான பேருக்கு ஆமணக்கெண்ணை படி: க-க்கு ஒரு பிடி சூரணம் போட்டு எரித்துப் பதத்தில் வடித்துக் கொண்டு தினம் ஒரு கரண்டி கொள்ளத் தீரும் வியாதி பருவதிர கூட, மேக சன்னி, வாத சன்னி, ஓறண்ட வாதம், பித்த காமாலை, குடல் வாதம், யிருமல், வெள்ளைக் காசி, நெஞ்சில் மாதுவான், உளலை மாதுலான் மண்டை மாதுலான் பொரி மாதுலான், வீடுபாண்டுவும், வாதகாமாலை இது வெல்லாந் தீரும். கார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும். அப பத்தியமில்லாமல் காக்கவும் துவரைப் பருப்பு, முருங்கைக்காய், அரைக்கீரை கூட்டவும்.

பஞ்சாக்கினி சூரணம்:-

காயம், அரத்தை, திப்பிலியும், கடுகு, சுக்கு, கொடிவேலி, நேக வகுத்துப் பொடி செய்து நெறியாய்த் தேனில்க் கொள்வீராய். மாயப் பித்தம் வலி குன்மம், வலிய தர்சும் உள்க் காச்சல் வாய்வு பத்தும் தான் தீரும், வலிய பஞ்சாக்கினிச் சூரணமே.

வாய்வுக் கிறணிக்கு உருண்டை:-

சாதிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, யேலம் வகைக்கு ரூட்டெடை.க, கடுக்காய்த் தோல் ரூட்டெடை.ச, சர்க்கரை பலம்.க, சர்க்கரையைப் பாகாய்க் காய்ச்சி அந்தப் பாகிலே சூரணத்தைப் போட்டுக் கிளறி சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி அந்தி வெடிக்கு ஒரு உருண்டை கொள்ளவும். வாய்வுக் கிறணி தீரும்.

நசியம்:- அகத்தி பருப்பு, சுக்குத், திப்பிலி, அரத்தை, காயம், புங்கு வடக்கே போற வேர் முருங்கைப் பட்டை இது சமன் கூட்டி தட்டிச் சிறுநீரில் நசியம் விடவும். சன்னி தோஷம் முதலானதும் தீரும்.

சித்தா முட்டி எண்ணை:-

சித்தா முட்டி பலம்.32 நசுக்கி யிடித்து இதில் யெட்டு வள்ளந் தண்ணீர் விட்டு இரண்டு வள்ளமாகக் காய்ச்சி வடித்து யிதில் ஐந்து வகை எண்ணை வேப்பெண்ணை, புங்கெண்ணை, இலுப்பெண்ணை, நல்லெண்ணை ஆமணக்கெண்ணை வகைக்கு படி.க, கூடக் கசாயத்தில் விட்டு ஆவின் பால் வள்ளம்.க, பழச் சாறு படி.சு, இதில் கற்கம், ஏலம், லவங்கம், மதுரம், கோஷ்டம், செவ்வள்ளிக் கொடி, தேவதாரம், சதகுப்பை, அரத்தை, கூகைநீர், திப்பிலி, கடுகுரோகணி, மரமஞ்சள், வாய்விளங்கம், பெருங்காயம், சாதிக்காய், கத்திரி மஞ்சள், செண்பகப்பூ, சுக்கு, மிளகு, கஸ்தூரி. இது வெல்லாம் வகைக்கு கால் களஞ்சு கூட்டி இடித்துத் தாள் பண்ணிக் கசாயத்தில் போட்டு கடுகு தாள மெழுகு பதத்தில் வடித்து தினசரி ஒரு காசிடை உள்ளுக்கு வாங்கி மூக்கில் நசியம் விட்டு மேலுக்கு தவளையிட்டு பிடிக்கவும். தீரும் வியாதி நீலகாசம், பித்த காசம், மண்டை வியாதி, மண்டை சூலை, முகவாத சன்னி, ஒருத்தலை வலி, மூக்கு நீர்ப் பாச்சல், கன்ன சூலை, நாய் வாமம், நாசி யடைப்பு, பதின்மூன்று வகை சன்னியுந் தீரும்.

சந்தேகமில்லை. பூசா விதேதத்துடனே செய்யவும். இது கை கண்டது. பத்தியம், கார்ப்பு, புளிப்பு, கிரந்தி பண்டம் தவிர்க்கவும்.

தாளிசைச் சூரணம்:-

தாளிசை பத்திரி, யேலம், லவங்கம், சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, கூகை நீறு, பேரிச்சம் பழம், முந்திரிப் பழம், மாதளையோடு, சாதிக்காய், கற்கடக சிங்கி, சீரகம், கருஞ்சீரகம், கத்திரி மஞ்சள், வெட்டிவேர், விலாம்பிச்சை வேர், பழைய புளி இவை சமன் கூட்டி சூரணம் பண்ணி இதுக்குச் சரி சமன் சர்க்கரை கூட்டி தினம் ஒன்றுக்கு வெருகடிப் பிரமாணம் யிளைச்ச சரீரத்துக்குப் பசுவின் நெய்யில் கொள்ளவும். தூல காயத்துக்கு தேனில் கொள்ளவும். இதில் தீரும் வியாதி காய சுவாச காசம், யிருமல், பயித்தியம், செயம், மூர்ச்சை, வாய்வு, சத்திப் பிறழை, ரத்த பித்தம், சுரம், வயத்து வலி, சுரத்தின் மேல் தோஷம் இவை யெல்லாந் தீரும். சந்தேகமில்லை, பூசா விதேதத்துடனே செய்யவும். கார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும். பத்தியங் கிரந்திப் பண்டங்கள் தவிர்க்கவும்.

தாளிசைக் குளிகை:-

தாளிசைப் பத்திரி பலம்.௩, செவியம் பலம்.௧, மிளகு பலம்.௨, திப்பிலி பலம்.௨, திப்பிலி மூலம் பலம்.௨, சுக்கு பலம்.௩, லவங்கம் பலம்.௧, லவங்கப் பத்திரி பலம்.௧, செங்கழுநீர்க் கோஷ்டம் பலம்.௩, சீரகம் பலம்.௧, பறங்கிப் பட்டை பலம்.௪, வெட்டி வேர் பலம்.௨, விலாமிச்சம் வேர் பலம்.௩, கொடிவேலி வேர் பலம்.௨, ஆகப் பலம்.30-ம் இடித்து வஸ்திர காயம் பண்ணி மூன்று பங்கு சர்க்கரை கூட்டி ஒரு வள்ளம் பசுவின் பால் ஒரு சட்டியில் விட்டு வேடு கட்டி அதின் மேல் அந்த மருந்தை வைத்து பால் சுண்ட யெரித்து பின்பு மருந்தை யெடுத்து ஆறுகிறதுக்கு முன்னே தேத்தாங் காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு நேரம் ஐந்து குளிகை வீதம் ஒரு மண்டலந் தின்னவும். இதுக்குத் தீரும் வியாதி பயித்தியத்திலே யெடுத்த யீளை இருமல், உள்க் காச்சல், நெஞ்சு நோவு, ஆட்டம், கூடல் நோக்காடு, கை கால் எரிப்பு, அக்கினி மந்தம், இது முதலானதெல்லாந் தீரும். கார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

அஷ்ட குன்மத்துக்கு வில்வாதிக் குளம்பு:-

வில்வில வேர் நைத்தது பலம்.10, [illegible]வளை பலம்.5, கண்டங் கத்திரி வேர் பலம்.௫, விளாம் வேர் பலம்.௩ இது வெல்லாம் இடித்து ரெண்டு வள்ளம் தண்ணீர் விட்டுப் பிசைந்து அடுப்பில் வைத்து இரு நாழியாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு இதில் கற்கம் திப்பிலி, சுக்கு, மிளகு, செவியம், வகைக்கு இரு களஞ்சு அதிமதுரம், சாந்தம், கோஷ்டம், கல்மதம், கோரோசினை, லவங்கம், கடுரோகணி, வசுவர்சி, இது எட்டும் வகைக்கு களஞ்சு.௩, மரமஞ்சள் களஞ்சி.4 இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி மூன் கஷாயத்தில் வேகப் போட்டு பதத்தில யெடுத்துக் கொண்டு சுள்ளிக்காய் பிரமாணம் வில்வில வேர்க் கசாயத்தில் போட்டுச் சாப்பிடவும். ரெண்டு நேரமுங் கொள்ளவும். இந்தக் கசாயம் செல்வழியு மட்டும் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி அஷ்ட குன்மமுந் தீரும். சந்தேகமில்லை. கை கண்டது.

அஞ்சனம்:- சுக்கு களஞ்சு.௨, முருங்கைப் பருப்பு பலம்.௨ இது கருக வறுத்து களஞ்சு வெங்காயம் கூட்டி நல்லெண்ணை விட்டரைத்து சிமிளில் வழித்துக் கொண்டு கண்ணிலிடவும். குளிர் மாறும்.

நாரை நோவுக்கு :-

சட்டி சாறணைக் கிழங்கு அரைத்து நல்லெண்ணையில் யெரித்து தலையில் தேய்க்கவும். புன்னைக்குப் பூடு விரை யரைத்து நல்ல வெல்லமும் பசுவின் நெய்யில் கூட்டிக் குழப்பித் தின்னவும். பசு நெய்யில் நாசிக்கு விடவும். இரு விரட்டி சுட்டு அந்தச் சாம்பல் எடுத்து ஈர வெங்காயம் பழம் புளியும் கூடத் தவைத்து தலைக்கும் உடம்புக்குந் திமிரிட்டுத் தலையில் கட்டத் தீரும். கை கண்டது.

பஞ்ச கவுச நெய் புண் :-

பசுவின் பால் படி.க, பசுவின் கோமியம் படி. $\frac{1}{4}$, பசுவின் தயிர் படி.க, பசுவின் சாணம் பிழிந்து படி. $\frac{1}{4}$, பசுவின் நெய் படி. $1\frac{1}{4}$ இது வெல்லாங் கலந்து ஒன்றாகக் கூட்டி இதுக்குக் கடைச் சரக்கு கடுகுரோகணி பலம்.க, கருஞ்சீரகம் பலம்.க, கலந்து சதுரக் கள்ளிப் பால்.க, கறண்டி கூட்டிக் கூட விட்டு மெழுகு பதத்தில் வடித்து உள்ளுக்கு கொட்டுடை கொள்ளவும். இதுக்குப் பத்தியம் மிளகு நீருஞ் சோறுந் தயிரும், மோருங் கூட்டவும். இதுக்குச் சகல உஷ்ணமுந் தீரும். பிள்ளை யுண்டாம்.

பாருவைக்கு மருந்து :-

கொட்டை யிலை, விஷ்ணுயிலை, விடத் தேரிலை, கூர் யெள்ளு படி.க, கருப்புக் கட்டி யிலை வகைக்கு பிடி கூட்டி இடித்து இருப்புப் படியில் தோண்டி வைத்துக் கொண்டு உடம்புக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டு இந்த மருந்து இந்த முறைக்கு மூன்று நாளைக்குச் சாப்பிடவும். கை கண்டது.

சத்தி குன்மத்துக்கு :-

கடுக்காய்.4 அரைத்துப் பசுவின் வெண்ணை அதுக்குச் சரி கூட்டிக் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்கவும்.

அறணை கடிக்கு :-

குடப்பாலை விரை யரைத்துப் பசுவின் பாலாவது, வெள்ளாட்டுப் பாலாகுதல் அரைத்துக் கொடுக்கவும். அறணை கடி தீரும்.

காணக் கடிக்கு :-

பேய் முசுட்டை வேர், வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் குடிக்கவும் தீரும்.

சலக் கட்டுக்கு :- தண்ட வேர்ப் பட்டை ஒரு எலுமிச்சங் காய் மருவாதி பசுவின் பாலிலரைத்துக் குடிக்கத் தீரும். சகலக் கட்டு விடும்.

கபால வியாதிக்கு மருந்து :-

ஆடாதோடை யிலை, வெண்நொச்சி யிலை, துளசி சமூலம், ஆதண்டை யிலை, கய்யாந்தகரை சமூலம், மிளகு, தக்காளி சமூலம் இந்த யிலை வகை ஒன்றுக்குச் சாறு படி $\frac{1}{4}$ நல்லெண்ணை படி.உ, கடைச் சரக்கு அரத்தை கஸ்தூரி மஞ்சள், தேவதாரஞ் சதகுப்பை, மஞ்சள், வெட்பாலை யரிசி, மிளகு, கம்பிளிப் பிசின், கருஞ்சீரகம், பெருங்காயம், பண்டு, கற்கடக சிங்கி, வசம்பு, பெருங்குரும்பை, இந்துப்பு பூத விருஷ்ஷம், மரமஞ்சள் வகை ஒன்றுக்கு விராகனிடை.க இந்த மருந்தெல்லாம் இடித்து தூள் பண்ணி எண்ணையில் போட்டு மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு தலைக்குத் தேய்த்து முழுகவும். மண்டை வியாதி, மண்டை வாதம், பெருத்த மண்டைச் கரப்பான் இது வெல்லாந் தீரும்.

விஷ்ணுமுட்டித் தயிலம், சுக்குத், திப்பிலி, யோமம், சதகுப்பை, அரத்தை, மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், செண்பகப்பூ, தேவதாரம், பூத விருஷ்ஷம், குரோசாணி, ஓமம், அகில் கட்டை, சந்தனம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, பெருங்காயம், கற்கடகசிங்கி, வளையலுப்பு, யிந்துப்பு, மரமஞ்சள், வால்மிளகு, கட்டிப் பழம், வள்ளம்பூ, திக்கீரை சமூலம் வகைக்கு.க, பொன்னாங்காணி சமூலம்

சமூலம் தாக்கு.க, தண்ணீர் வள்ளம்.ச, பசுவின் பால் படி.க, நல்லெண்ணை படி.க, வேப்பெண்ணை படி.½ இதில் தயிலம் வடித்துக் கொண்டு தலைக்குத் தேய்த்து முழுகத் தீரும் வியாதி மண்டை குலை, மண்டை நோவு, சிரோவாய்வு, குதக வாய்வு, குசிகா சன்னி, காது செவிடு, சன்னி முதலானதுந் தீரும்.

<u>சுரம், அதிசாரத்துக்கு மருந்து:-</u>

இலவம் பட்டை, வில்லை வேர் பட்டை, யிலந்தை வேர்ப் பட்டை, விளாவேர்ப் பட்டை, குடமுரட்டி வேர் பச்சை மூங்கில் புறணி இது வெல்லாம் போட்டு இரு நாழி நீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி திப்பிலி, கிராம்பு, வெதுப்பி, முடிந்து போட்டு கசாய மிடித்து அரைத்துக் கொடுக்கவும்.

<u>அதிசார வாந்திக்கு:-</u>

திரிகடுகு, காயஞ் சீரங் கருஞ்சீரகம், ஓமம், இந்துப்பு இது வெல்லாம் சமபாகம் போட்டு மோர் படி.½; தண்ணீர் படி.½, விட்டுக் காய்ச்சிப் பச்சை சுக்கு கசாயத்திலரைத்துக் கொடுக்கவும்: வாந்தி பிராந்தி நிற்கும். கை கண்டது.

<u>குதக சன்னிக்கு:-</u>

முசுமுசுக்கை வேர், முத்தக்காசு, பற்படாகம், நெல்லி யீற்கு, நரிப் பயத்தங் கொடி, சிறுகுறிஞ்சா சமூலம் முருங்கைப் பட்டை, பண்டு, திப்பிலி, கொத்தமல்லி சுக்கு இது கசாயம் வைத்துக் கொடுக்கவும்.

<u>குளிர் காய்ச்சலுக்கு:-</u>

காயம், பசங் கொம்பன் சுக்குற மணியன் யிது வெல்லாம் வறுத்து அரைத் துக் கலக்கிக் கொடுக்கவும்.

<u>கண்ணோவுக்கு மருந்து:-</u>

சங்கு மிளகு, திப்பிலி, அரிதாரம், புங்கம் விரை, பீதரோகணி, மனோ சிலை, நந்தியா வட்டப் பச்சாறு விட்டு அரைத்து வழித்துக் கண்ணிலிடக் கண்ணிலுள்ள வியாதி யெல்லாந் தீரும்.

<u>தாம்பிரதிக் குளிகை மூலத்துக்கு:-</u>

வாடாமல்லிகைத் தழை, ஒரு முத்து ஈர வெங்காயம் பலம்.ச, கலை மான் கொம்புப் பொடி. பலம்.உ, வெங்காயமுந் தழையும், பொன்னிறமாய் வறுத்து அதில் கலைமான் கொம்புத் தூள் போட்டு நன்று யிடித்து வட்டி வைத்துக் கொண்டு நாள் மூன்றுக்கு இரண்டு நேரமும் சாப்பிடவும். குணமாம். கை கண்டது.
பத்தியத்துக்காகாதது..

கொள்ளு. காடி, கும்முட்டிக் காய், கோழி பன்றி, செம்மறியும், பிள்ளைத் தயிர், பீர்க்கங் காய், போய் பெலாக்காய் பூசணிக்காய் பள்ளத் தொந்த சேப்பங் கீரை, பாகல் கத்திரிப் பிஞ்சுரையும் யெள்ளத் தனையுந் தின் பீராய் யெல்லா மருந்து மிழந்தீரே,

<u>பத்தியத்துக்காகிறது:-</u>

பொன்னாங்கண்ணி சிறு கீரை புதிய நெய் பால் குருவ்ய் யிலை
நன்னி நத்தை சிறு தவளை நல்ல காழான் நெல்லிக்காய்
பொன்னோ பிறகு வெள்ளரிக்காய் புலா மீன் கெளித்தி நெத்திலையும்
கன்னிக் காடை கவுதாரி கரு வெள்ளாடு பத்தியமே.

<u>ஏலாதி சூரணம்:-</u>

ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி சிறு நாகப்பூ, திப்பிலி, திப்பிலி

மூலம், செவியம், சடாமஞ்சி, பேரீச்சம் பழம், முந்திரிப் பழம், தாளிசை பத்திரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், சந்தனம், கூகைநீர், நிலவேம்பு, அரேணுகம், அமுக்கிலார்ன் வேர், நெருஞ்சி வேர், நெருஞ்சிக்காய், சாறணை வேர், வாரக்சி, பெருமட்டி வேர், முத்தக்காசு, நன்னாரி, வேர் இவை யெல்லாம் சமபாகமாகக் கூட்டி சூரணம் இரெண்டு பங்கும் நாட்டுச் சர்க்கரை ஒரு பங்குமாய்க் கூட்டிக் கலந்து கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி பயித்திய வாய்வு, சுவாச காசம், ரத்த காசம், பித்த காசம் தீரும்.

<u>மூலத்துக்கு மருந்து</u>:-

பிறண்டைச் சாறு படி.உ, கருங்கோளி, பொறு சிறக்குப் பட்டையும், பெண்ணுக்குச் சேவலுக்கு இப்படிக்கு ஒரு கோழி கொண்டு வந்து மயிர் ஈரல், குடல், பிடுங்கிப் போட்டு இதுக்கு மருந்து சுக்குத் திப்பிலி, மிளகு, பூண்டு, அசமதாகம், கருஞ்சீரகம், கடுகு, இந்துப்பு பொட்டிலுப்பு இவை சரி கூட்டி வகைக்கு விராகனிடை.ச, காயம் விராகனிடை.உ, இவை சரக்கு களெல்லாம் பிறண்டைச் சாறு விட்டு அரைத்து வழித்து கோழி வயத்தில் வைத்துத் தைத்து மிஞ்சின சாறை ஒரு சின்னப் பானையில் விட்டுக் கோழியை வைத்து வேக விட்டுச் சாறு சுண்டின பிறகு ஒரு படி நல்லெண்ணை விட்டு வேக விட்டுக் கடுகு பதத்தில் இறக்கி ஒரு கலசத்தில் வைத்துக் கொண்டு நேரம் ஒன்றுக்கு ஒரு புன்னைக்காய் பிரமாணம் தின்னவும். கண்டு கண்டு பேத்தி இறக்கிச் கொள்ளவும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். வெள்ளாட்டு உப்புக் கண்டம், சுறா மீன் திருக்கை மீன் விரால் மீன் முருங்கைக்காய் யிலை, கோழி இது வெல்லாம் கூட்டவும்.

<u>தாளிசை வட்கம்</u>:-

சுக்கு பலம்.ங, திப்பிலி பலம்.உ, மிளகு பலம்.உ, திப்பிலி மூலம் பலம்.க, செவியம் பலம்.க, தாளிசை பத்திரி பலம்.க, ஏலம் பலம்.$\frac{1}{4}$, சன்ன லவங்கப் பட்டை பலம்.$\frac{1}{4}$, லவங்கப் பத்திரி பலம்.$\frac{1}{4}$, விலாம்பிச்ச வேர் பலம்.$\frac{1}{4}$, சன்ன கேசுரம் பலம்.$\frac{1}{2}$, யிதுக்கு ரெட்டிப்பு சர்க்கரையைப் பாகு காய்ச்சி மருந்தெல்லாம் பொடி செய்து பாகிலே போட்டுக் கிளறி உருண்டை பண்ணிக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி வாய்வு, சத்தி விக்கல், கிறாணி இது வெல்லாந் தீரும்.

<u>தெற்பிணைக்குக் கிரந்திக்கு எண்ணை</u>:-

குறட்டைக் கிழங்கு பலம்:க, சீரகம் பலம்.$\frac{1}{2}$, கருஞ்சீரகம் பலம்.$\frac{1}{2}$, கடுகு பலம்.$\frac{1}{2}$; சுக்கு பலம்.$\frac{1}{2}$, மிளகு பலம்.$\frac{1}{2}$, பூண்டு பலம்.$\frac{1}{2}$, ஈர வெங்காயம் பலம்.க, விளக்கெண்ணை படி.க; வறுத்து தின எண்ணையில் போட்டு எரித்து ஒன்றை விட்டு ஒரு நாள் கொடுக்கவும்.

<u>கொம்மட்டிக் கடுகு</u>:-

நேர்வாளம் பலம்.உ, சாதிலிங்கம் பலம்.க, திப்பிலி பலம்.க, மிளகு பலம்.உ பூண்டு பலம்.க, கல்லுப்பு பலம்.க, ஓமம் பலம்.க, இந்துப்பு பலம்.க, வெடியுப்பு பலம்.க, பேய்க்கொம்மட்டிக் காய் சுட்டு சாறு படி.$\frac{1}{2}$ இந்தச் சாத்தில் ஏழு மருந்து அரைத்து மிஞ்சிய சாத்தில் கரைத்து அரைப்படி விளக்கெண்ணை விட்டு கடுகு திறா எரித்து வைத்துக் கொண்டு பலமறிந்து கொடுக்கவும். தீரும் வியாதி உடல் பிறட்டு, வாய்வு குன்மம், வயத்து வலி, பெரு வயறும், மகோதரம், வீக்கம் இப்படி வெகு வியாதிகளெல்லாந் தீரும்.

<u>கிறந்தி சூலை மேகத்துக்கு</u>:-

பறங்கிப் பட்டை பலம்.3, கருஞ்சீரகம் பலம்.க, செங்கத்தாரிப் பட்டை பலம்.க, குமிழம் பட்டை பலம்.க, சித்திர மூலம் பலம்.க, சீரகம் பலம்.க, சங்கங்குப்பி யிலைச் சாறு படி.$\frac{1}{4}$, தழுதாழைச் சாறு படி.$\frac{1}{4}$, கருநொச்சிச் சாறு படி:$\frac{1}{4}$, மிளகு தக்காளிச் சாறு படி.$\frac{1}{4}$, பெருவாயன் லத்தி கொண்டு வந்து பசுவின்

பால் படி.க லத்தியில் விட்டுப் பிசைந்து வடித்துக் கொண்டு யெண்ணெயில் விட்டு ஈர வெங்காயம் படி.½ போட்டு மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். எண்ணெ குடித்த அன்றைக்கு வெந்நீரில் பத்தியம் வாங்கிக் கொள்ளவும். மறுநாள் தலை முழுகிக் சிறந்தப் பண்டங்கள் கூட்டவும். இந்தப்படி எண்ணெ விட்டு ஒரு நாள் எண்ணெ குடிக்கவும். ஏழு நாளைக்கு குடிக்கவும். அப்புறம் பத்து நாள்க் சிறந்தப் பண்டங்கள் கூட்டாமல் இருக்கவும்.

<u>மகாவில்வாதி லேகியம்</u>:-

வில்வ வேர் பலம்.50; நன்னாரி வேர் பலம்.5, வேப்பஞ்சுக்கு பலம்.க, நல்ல வெல்லம் பலம்:50, வெட்டி வேர் பலம்.7, விலாமிச்ச வேர் பலம்.7, தண்ணி வள்ளம்.8; எட்டிலொன்றாய்க் காய்ச்சி கசாயத்தில் வெல்லம் போட்டு வடித்து இதற்கு சற்கம் சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, திப்பிலி பலம்.உ; சிறுநாகப்பூ பலம்:உ, தாளிசை பத்திரி பலம்.க, சாதிக்காய் பலம்.க, திப்பிலி மூலம் பலம்.உ, கச்சோலம் பலம்.க, லவங்கம் பலம்.க, செவியம் பலம்:க, கூகைநீர் பலம்.க, சித்திர மூலம் பலம்.க, ஏலம் பலம்:க; சந்தனம் பலம்.க, சீரகம் பலம்:க, கருஞ்சீரகம் பலம்:க; அதிமதுரம் பலம்.க; யிஞ்சி பலம்.க, பேரீச்சம் பழம் பலம்.க, கொத்தமல்லி பலம்.க, முந்திரிப் பழம் பலம்.க, இது வெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணி தேன் படி ஒன்று கூட்டி விட்டுக் கிளறி இறக்கி விநாயக பூசை பண்ணிக் கொடுக்கிற பிரமாணம் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி வாதகாமாலை, அஸ்தி சுரம், பயித்திய வாய்வு, பயித்திய விருமை, வாந்தி விக்கல் யிருமல், மூலவாய்வு, சோபை க்ஷயம், குன்மங் கிராணி வயற்றில் வலி, பீலிகை இது வெல்லாந் தீரும். சந்தேகமில்லை.

<u>யோகஞ்சிச் சூரணம்</u>:-

திப்பிலி, திப்பிலி மூலம்; செவியம், சுக்கு, காயம், சுக்கிற மணியன் பசுங் கொம்பன், பல்லவராயன் அசுமதாகம், ஆனைத் திப்பிலி, நேர்வாளப் பருப்பு, நிலவேம்பு, சீரகம்; கருஞ்சீரகம், சதகுப்பை; கொத்தமல்லிகை, சத்திச் சாரம், நவச்சாரம், வெங்காரம், யெவ்வச்சாரம், இந்துப்பு வளையலுப்பு, கல்லுப்பு (வெட்டு வகை) கொடிவேலி வேர் தண்ணீர் முத்தி வேர், பேயத்திப் பட்டை, சித்தா முட்டி, தலை சுருளி, காட்டு முருங்கைப் பட்டை, கொடிவேலி வேர், முளக் கொளிஞ்சி வெள்ளைச் சாறணை வேர், மருள் வேர், காட்டு மல்லிகை, கைய் யாந்தகரை, புங்கம் வேர், நெருஞ்சிக் காய், விளகஞ் கிழங்கு, சாறணை வேர், கறுவ மூங்கில் இது வெல்லாம் சமன் கூட்டி தூள் பண்ணி யிதில் மூன்றிலொன்று சிவதை வேர் கூட்டி நெய்யில் யிள வெந்நீரில் கொள்ளவும். தீரும் வியாதி வாதரோகம், வாய்வுத் திரட்சி, வயற்றெரிப்பு, விக்கல், உடம்பு நோக்காடு, பெரு வயறு நீர்க் கோர்வை, வெற்பு பாவை, பாண்டுரோகம், கைகால் உடம்பு வீக்கம், விஷபாகம், பிறமை ஒட்டு சுரம், உள்மாந்தை, யிருமல், செரியாக் குணம், வாந்தி, வாயில் ரெத்தம் விழுகிறது, தீபன மந்தம், மார்பில் குத்து இது வெல் லாந் தீரும். விநாயக பூசை பண்ணவும்.

<u>இங்குலீகப் புகை</u>:-

ரச முறிவுக்கு நெய்:- ஏலம் விராகனிடை3, லவங்கம் விராகனிடை.3, சாதிக்காய்.உ, கசகசா விராகனிடை.2½, கொத்தமல்லி விராகனிடை.6, சன்ன லவங்கப் பட்டை விராகன்.3, சுக்கு விராகன்.3, மிளகு விராகன்.3, நல்ல சீரகம் விராகன்.3, பூண்டு விராகன்.3, ஈர வெங்காயம் பலம்.க, பசுவின் நெய் படி.க, செம்பீரப் பழம்.15, இளநீர் படி.க, பசுவின் பால் படி.உ, சர்க்கரை பலம்.கூ, செப்பு நெருஞ்சி சமூலம் யிடித்துப் பிழிந்த சாறு படி.1/8

இது வெல்லாம் நெய்யில் கூட விட்டு சரக்கெல்லாம் யிடித்து வஸ்திர காயம் பண்ணிப் போட்டுக் கடுகு திரள மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு துட்டெடை நெய் ரெண்டு நேரமும் கொள்ளவும். யிங்குலிகப் புகை ரச மூறியும்.

சிரங்குக்கு மருந்து :- 4.12.63.

நெல்லிக்காய் கெந்தகம் பலம். 1/4 நற்சீரகம் பலம். 1/8, ஈர வெங்காயம் படி. உ, புழுங்கலரிசி படி. ½, அரிசியை யிடித்து மாவு பண்ணி நல்ல சீரகத்தைப் பொடி செய்து மாவில் கலந்து வெங்காயச் சாறு விட்டு மாவைப் பிசைந்து கெந்தகத்தை அந்தச் சாறு விட்டு அரைத்து மாவை யடை தட்டி அடைக்கு நடுவே கெந்தகத்தை வைத்து பசுவின் நெய் விட்டு வேக வைத்து அந்த அடையை யெடுத்து கெந்தகத்தை நெய்யில் போட்டு அடையை அந்திக் கொன்று காலமைக் கொன்றுமாகத் தின்னவும். நெய் மேலுக்குப் பூசவும்.

கெந்தக ரசாயனம்:-

கெந்தகம் பலம். 8, பசுவின் பாலில் சுத்தி பண்ணி வைத்துக் கொண்டு சேங்கொட்டை. 32, யெருமைச் சாணி கரைத்து அதை வேகப் போட்டுக் கழுவி யெடுக்கச் சுத்தியாம். பின்பு மூளையெல்லாம் கசிசுப் போட்டு பாக்குப் பிளவை போல நறுக்கி பசுவின் பாலில் சுத்தி செய்து பசுவின் பால் விட்டு அரைத்துக் கெந்தகம் நன்றாய்ப் பொடி செய்து திப்பிலி பலம். ¼, தெசாவரம் பலம். ¼, சுக்கு பலம். ¼, மிளகு பலம். ¼, லவங்கம் பலம். ¼, லவங்கப் பட்டை பலம். ¼, லவங்கப் பத்திரி பலம். ¼, தானிக்காய் 3 செவியம் பலம். ¼, வாய் விளங்கம் பலம். ¼, சித்திரமூலம் வேர்ப் பட்டை பலம். ¼, இது வெல்லாம் இடித்து வஸ்திர காயம் செய்து முன் மருந்தெல்லாம் கூடக் கலந்து தேன் படி. ½, பசுவின் பால் படி. ½, கூடக் கூட்டி எல்லாம் பிசரி யெண்ணைச் சட்டியில் வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இதக்குத் தீரும் வியாதி உள்க் காச்சல், சிலேற்பன சுரம், அக்கினி மந்தம், உஉஷ்ண வாய்வு, வாதசூலை, கடி சேட்டை யென்பத்து நாலு வாதமும் தீரும். இதுக்குப் பத்தியம் புழுங்கலரிசிச் சாதம் வறுத்த துவரைப் பருப்பு, உப்பு, பசுவின் பால்; பசுவின் நெய், முருங்கைக்காய், அரக்கீரை, சிறுகீரை, பாக்கு வெத்திலை; கரு வெள்ளாட்டுப்புக் கண்டம்; ஆகும். வாழை இலை, வாழைக்காய், வாழைப்பழம், வாழைத் தண்டு; உளுந்து பயறு கொள்ளு, நல்லெண்ணை, கத்திரிக்காய், புகை புளி ஸ்ரீசங்கமம் ; தூரப் பயணம் இது வெல்லாமாகாது.

வாத பாண்டு ரோக மருந்து :-

வாத பாண்டுரோகமாகில் வந்திடும். பரிசு கேளாய் தாகமும் பசியுங் கெட்டு தன்னின் மெய் சுருங்கி வாடி. சோபமும் முண்டாய் மிக்க சுரோணிதம் வற்றி வற்றி வாத மாந் தாது மெத்த வதி செயமாகுங் கண்டாய் பலமரைக் கட்டம் பொடியதுவே பகுந்துபே எலுமிச்சஞ் சாத்தில் வெல்கவே விட்டரைத்துமே உருட்டி யெருவினிற் புடமும் தீவைத்து சூல சூரணம் செய் காசிடை தேனில் கொண்டிடச் சகல பாண்டுவும் போம். மலசில் காமாலை அணைத்துமேயே குமரிவையே யிது மாறிந்திடுமே.

சாறணை பிரமி கொண்ணை சாற்றும் வெள்ளருகிடுடு
கூறிடுங் கொடியவேலி கொணர்ந்திவை சமனாய்க் காய்ச்சி
ஆறிடக் குடிக்க வீக்கம் ஆகிய விஷ பாகங்கள் ம
மாறிடு மிகற் கொப்பான் மருந்து மோயிலலை கண்டாய்.

கண்டிடும் பழைய கிட்டம் கழல் திரிபலையுஞ் சுக்குக்
கொண்டிடும் கொடிய வேலி பிரமி சாறணையுங் கூட்டி
யெண்டருங் கோமியத்தில் லிவை சமன் காச்சி யீய்ப்
அண்டுமோ சோபை பாண்டு அறிந்துமே யிதனைச் செய்வீரே.

செவ்வியங் காய முள்ளி செய்ய சாரணை வேர் சுக்கு
வெவ்வ மில்ல ரசம் பட்டை யியம்பிடுங் கொன்றைப் பட்டை
கவ்வை கார் முள்ளி கண்டங்கத்திரி யமுரி நீரிலிவ்விவை சமனாய்க் காச்ச
யில்லை விஷபாகம் வீக்கம்

வீக்கம் நீங்கச் சுக்கு முட்டம் வேண்டு மரசம் பட்டையுட னா
க்குப் பாம்பாங் சாரணை வேர் அடவாய்ச் சமனாய்க் காச்சிடவே
வாக்கும் போது விஷபாக மறகிக் கடலிற் புகுந்தோடும்
பார்க்க வீக்கம் பறந்தோடும் பரிவா யிதனைச் செய்திடுமே.

<u>புருவரை, யிருமல், ஒட்டு சுரத்துக்கு மருந்து</u>:-

வெள்ளைச் சீகைப் பட்டை, மருக்காரம் பட்டை, நன்னாரி வேர் ஊஞ்சல் பட்டை லாக்கெனை படி.1½, ஊஞ்சல் சாறு படி.உ, யிஞ்சி சாறு படி.½, நன்னாரி வேர் ஒரு பிடி, மருக்காரம் பட்டை ஒரு தேங்காய் மருவாதி பூண்டு பலம்.உ, பேய்பாகல் கிழங்கு பலம்.உ, சுக்கு திப்பிலி, மிளகு, கற்கடக சிங்கி, அரத்தை, சிறுதேக்கு, கருஞ்சீரகம், கடுகுரோகணி வகைக்கு விராகனிடை.உ கடுக்காய்.உ20 தானிக்காய்.10 இடித்துச் சூரணம் பண்ணி எண்ணெயில் போட்டுச் காய்ச்சி கடுகு திரள மெழுகு பதத்திலிறக்கிக் கொள்ளவும். காலமே ஒரு சிறு கறண்டி கொள்ளவும். பத்தியம் உப்புக் கூட்டவும். புளி, புகை தவிர்க்கவும். விநாயக பூசை பண்ணவும்.

ஒசந்த வியாதியாலுல் ஏலம், தாளிச பத்திரி, லவங்கம், சாதிக்காய் அனுபானம் அறிந்து கூட்டிக் கொள்ளவும்.

<u>மோரெண்ணை</u>:-

நல்லெண்ணை படி.4, பசுவின் மோர் படி.1, யிதில் கற்கம். சுக்கு, கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், செவ்வள்ளிக் கொடி, அதிமதுரம், கடுகு ரோகணி, அரத்தை, திப்பிலி, வெப்பாலை யரிசி, அரத்த சந்தனம், ஏலம், லவங்கம்; நாகப்பூ, தேவதாரம், அரக்கு, பச்சிலை; சடாமாஞ்சி, வெட்டி வேர், விலாமிச்ச வேர், அழுக்கிலா வேர், சாரணை வேர், முடக் கொத்தான் வேர் முத்தக்காசு வகைக்கு விராகனிடை.4 இதுவெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கூடப் போட்டு அடி பற்றாமல் துழாவிக் காய்ச்சிக் கடுகு திரள மெழுகு பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு விநாயக பூசை பண்ணி எட்டு நாளைக்கொருககால் முழுகி வரவும். இதுக்குத் தீரும் வியாதி அஸ்தி சுரம் நாள் சென்ற சுரம், அங்க தாகம், யிளைப்பு இது வெல்லாந் தீரும்.

<u>மாந்தக் குளிகை</u>:-

சுக்கு, திப்பிலி, சீரகம், ஓமம், ஒருதலைப் பூண்டு, காயம் இவை சமன் கூட்டி, கய்யாந்தகரைச் சாற்றிலரைத்து உருண்டை செய்து ஒரு உருண்டை முலைப்பாலிலாகுதல் வெந்நீரிலாகுதல் உரைத்திடச் சகல மாந்தமுந் தீரும். மாந்தத்துக்கு வயிறு கழிய வேணு மென்றாலும் நிற்க வேணு மென்றாலும் வேலிப் பருத்திக் கொழுந்து தகரைக் கொழுந்து பாவட்டங் கொழுந்து பாகல் கொழுந்து சுக்கு, திப்பிலி, வசம்பு, மிளகு, ஓமம் இது வெல்லாம் வகைக்கு விராகனிடை.4 இள வறுப்பாய் வறுத்து இள வெந்நீரிலரைத்துச் சுண்டைக்காய் மாதிரி உருண்டை செய்து நிழலலத்தி வைத்துக் கொண்டு, வயறு கழிய வேணு மென்றால் வெந்நீரிலரைத்துக் கொடுக்கவும். கழிச்சல் நிற்க வேணு மென்றால் முலைப் பாலிலரைத்துக் கொடுக்கவும்.

~~நச்சு உரத்துக்கு~~:-

Not useful

மூச்சு உரத்துக்கு:-

பிள்ளைகளுக்கு உரம் விழுந்கால் விளக்கெண்ணை நெய் முலைப்பாலுங் கூட்டி மந்திரிக்கவும். மந்திரித்து உள்ளுக்கு வாற்கவும்.

மூச்சுக்கு:-

புல்லாங் குச்சி முசசான் நீளத்தில் ரெண்டாகக் கிழித்து முசசுத் தப்பின வனையும் பின்னு மெர்ருத்தனையும் தக்கீசுத்தி விடுச்சி நிற்கச் சொல்லி முன் மந்திரங் கொண்டு விபூதி போட ரெண்டு குச்சியுங் கூடும். ஒரு வெட்டாய் வெட்டிப் போடவும்.

அரையாப்புக்கு மருந்து:-

தாளகம் விராகனிடை.1½, சித்திரமூலம் பொடி விராகன்.க, எருமை நெய் படி.¼, இதில் போட்டுக் காய்ச்சிப் புதுப் பானையில் நிறையத் தண்ணீர் விட்டு அதில் சாய்த்து மூடி வைத்து மறு நாளெடுத்து தினங் களச்சிக்காய் மருவாகி தின்னவும். பத்தியம் உப்பு வறுத்துக் கூட்டவும். புளி தவிர்க்கவும் கை கண்டது.

வெட்டைக்கு நெய்:-

அமுக்கிலாம் வேர் பலம்.2½, பொன்னுங்காணி பலம்.½, சிறுகீரை பலம்.½, விலாமிச்சம் வேர் பலம்.½, நிலப்பனைக் கிழங்கு பலம்.½, வல்லாரை பலம்.½, தண்ணீர் விட்டான் கிழங்கு பலம்.½, பழுபாகல் கிழங்கு பலம்.½, சகாதேவி வேர் பலம்.½, பூமிசர்க்கரை பலம்.½, தண்ணீர் வள்ளம்.உ விட்டு வன்மூலிகை யிடித்து போட்டுக் கசாயம் வடித்துக் கொண்டு அதில் கறக்கம் பால் படி.4, நெய் படி.க, இதில் கடைத் திரவியம் சிறு நாகப்பூ, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், பேரீச்சம் பழம், முந்திரிப் பழம், ஓமம், அதிமதுரம், தாளிச பத்திரி, அரத்தை சந்தனம், அகில்க் கட்டை, வெட்டி வேர், கூகை நீர், விலாமிச்சம் வேர், கோஷ்டம், கொத்தமல்லி, கற்பூர சிலாசித்து, வாய்விளங்கம், கண்டு பறங்கி தேவதாரம் வகைக்கு பலம்.½, சர்க்கரை படி.க, கடைச் சரக்கு இடித்து வஸ்திர காயம் பண்ணி சர்க்கரையும் போட்டு பாகு பதமாய் ஆக்கி இறக்கி விழுக பூசை பண்ணி நேரம் ஒரு கரண்டி நெய் கொள்ளவும். சகல வெட்டையுந் தீரும்.

அசுவ கெந்தி ரசாயனம்:-

அமுக்கிலாம் வேர் பலம்.10, பொன் னுங்காணி பலம்.உ, சிறுகீரை சமூலம் பலம்.உ, விலாமிச்சம் வேர் பலம்.உ, நிலப்பனைக் கிழங்கு பலம்.உ, வல்லாரை பலம்.உ, தண்ணீர் விட்டான் கிழங்கு பலம்.உ, பழுபாகல் கிழங்கு பலம்.உ, நெய்ச் சட்டி பலம்.உ, பூமி சர்க்கரை பலம்.உ, இது வெல்லாம் நறுக்கி யிடித்து எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி யிதில் எட்டு சேர் பசுவின் பால் விட்டு எட்டு சேர் பசுவின் நெய் விடவும். பால் குறுகிற பதத்தில் எட்டு சேர் சர்க்கரை போடவும். பாகு பதமான போது இதில் கடைச் சரக்கு: சிறு நாகப்பூ, ஏலம் சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், பேரீச்சம் பழம், முந்திரி பழம், ஓமம், அதிமதுரம், தாளிச பத்திரி, அரத்தை, சந்தனச் சிராய் அகில் கட்டை, வெட்டி வேர், கூகை நீறு, விலாமிச்சம் வேர், கோஷ்டம், கொத்தமல்லி, கற்பூர சிலாசித்து, வாய் விளங்கம் கண்டு பறங்கி, தேவதாரம் வகைக்கு பலம்.க இது வெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணி முன் சொன்ன பாகிலே போட்டு மெழுகு பதத்திலிறக்கிக் கொண்டு விழுக பூசை பண்ணி நேரம் ஒரு கடுக்காய் பிரமாணம் கொள்ளவும். தீரும் வியாதி பிறமியம், சுவாச காசம், அஸ்தி சுரம், காச ரோகம், ரெண்டு பிள்ளை பெற்று யில்லாத போதும் பத்தரு அரோசிகம் வறக்காமாலை இது வெல்லாந் தீரும். வீரிய விர்த்தியுண்டாம். கை கண்டது. கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

ரெத்த மூலத்துக்கு மருந்து:-

வடக்கே போற அவிஞ்சி வேர்ப் பட்டை, பச்சைப் பாக்கு மருவாதி அரைத்து இள வெந்நீரில் கொடுக்கவும். வயறு கழியும். கருங்கோழி, மிளகு நீர் பண்ணிக் கொள்ளவும். அசனத்துக்கு அந்தச் கறியிட்டுக் கொண்டு சாப்பிடவும். இப்படி மூன்று நாள்க் கொள்ளவும். பிறண்டை வேர், கருங்குறுவை யரிசியும் ஒரு எலுமிச்சங்காய் மருவாதி பனைவெல்லம் கூட்டி மாவைப் பிசறி நல்லெண்ணையில் பலாவாரை சுட்டுக் கொடுக்கவும். காரப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

உள்மூலக் கிராணி, சீய் மூலத்துக்கும் கோளிக் கருத்து பண்ணும் வகை:-

கருங் கோளி வெந்நீர்ப் படுக்காமலே சிறகப் பிய்த்து போட்டு இடித்து நல்லெண்ணை ரெண்டு படியில் சுண்டச். சரக்கு மருந்து: சுக்கு, மிளகு, பூண்டு, சீரம், வசக் சுருப் பட்டை, காயம் வகைக்கு பலம். ½; வெந்தயம் கல்லுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, சீனக்காரம், குடம் இதெல்லாம் ஒரு காய வைத்துப் புடமிட்டுப் பொடி செய்து இதுக்கு வெட்டு மருந்து நல்ல கற்றாணைக் கிழங்கு, புளியறணைக் கிழங்கு, சாறணைக் கிழங்கு, பிறண்டைக் கிழங்கு. மறள் கிழங்கு, அப்பைக் கிழங்கு ஒரு எலுமிச்சங் காய் மருவாதி தன்னி லொக்க அரைத்து நல்லெண்ணையில் கருக்கு திறளப் பண்ணி மெழுகு பதத்திலிறக்கிக் கொண்டு ரெண்டு நேரமும் எலுமிச்சங் காய் மருவாதிக் கொள்ளவும். உப்புக கூட்டவும். புளிப்புத் தவிர்க்கவும்.

விக்கல் சுவாசம் பித்த பாண்டுவுக்கு மருந்து:-

சுக்கு, மிளகு, திப்பிலியுந் துய்ய லவங்கப் பட்டையுடன்
தக்க லவங்கங் கூகை நீரம் தாளிச பத்திரி யிவை யெல்லாம்
ஒக்கக் கொண்டு சூரணமாய் உரவே தேனில் கூட்டி யிடில்
விக்கலிருமல் லெகு மூச்சு பிமை ரெத்த பாண்டுவும் போம்.

உள்ளும் பிறத்தியுங் கூட்ட விபரம்:-

வெந்நீரில் கடுக்காய், நெல்லி தானிக்காய், கமலத் தண்டு, தேவதாரம் அடுத்த விஉடும் வேறு மூளமாகு மென்றே உரை செய்வார் தொடுக்குஞ் சீந்திக் கொடி சுக்கு தகைக்கு மிளன் வில்வமுடன் அடுத்தார் தண்டை மேல் புறனி தள்ளி அடுத்த விஉடும் வேற மூளமாகு மென்றே உரை செய்வார்

கடுக்காய் நெல்லி தானிக்காய் கமலத் தண்டு தேவதாரம்
அடுத்த விஉடும் வேற மூளமாகு மென்றே உரை செய்வார்
தொடுக்குஞ் சீந்திக் கொடி சுக்கு தகைக்கு மிளன் வில்வமுடன்
அடுத்தார் தண்டை மேல் புறனி தள்ளி அருந்தத் தோஉடு விஉடும் போமே.

சுரத்துக்கு எண்ணை:-

முடக் கொத்தான் கொழுந்து ஒரு பிடி யிண்டங் கொழுந்து ஒரு பிடி, கொடிக் களிச்சி கொழுந்து ஒரு பிடி, சாறணைக் கிழங்கு ஒரு சாக்குக் கூடை கொண்டு வந்து நருக்கி பதக்குத் தண்ணீர் வார்த்து ஒரு படி தண்ணீரா யிறக்கி வில்வல வேர், வேலிப்பருத்தி வேர், கருங்குங்கிலியம், கஸ்தூரி மஞ்சள், வெள் வெங் காயம், வசம்பு வகைக்கு விராகன். 3 கசாயம் விட்டரைத்து ரெண்டு படி விளக் கெண்ணைவிட்டு யெருமை வெண்ணை பழைய புளி, ஒரு விளாங் காயத்தனை கசாயத் தில் கரைத்து வெண்ணை ரெண்டு விளாங்காயத்தனை போட்டு எண்ணை கசாயம் யெல்லாங் கூட விட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து தினம் ஒரு காசிடை கொள்ளவும். ஒன்றை விட்டொரு நாள் ஆழாக்கு எண்ணை வயறு கழியக் கொடுக் கவும். சுரம், வீக்கம், சரத்தின் மேல் காமாலை முதலானதுந் தீரும். காரப்பு, புளிப்பு, புலால் தவிர்க்கவும்.

அஷ்ட பீனிசத்துக்கு மருந்து:-

கஸ்தூரி விராகன்.க, குங்குமப்பூ விராகன்.க, கோரோசனை விராகன்.க, சாதிக்காய் பலம்.க, லவங்கம் பலம்.க, குசும்பைப்பூ பலம்.க, ஏலம் பலம்.உ, மிளகு பலம்.உ, சாதிபத்திரி பலம்.க, சிறுகீரை வேர் பலம்.4 பசுவின் நெய் படி.2½ இதுவெல்லாம் இடித்து ஈளாய் பண்ணி நெய்யில் போட்டு தயில பக்குவத்திலிறக்கி விநாயக பூசை பண்ணி நாசிக்கு ஒரு விராகனிடை தயிலம் நிறுத்து விடவும். ஒன்றை விட்டொரு நாள் தலை முழுகி வரவும். இலுப்பைப் புண்ணாக்கிட்டு முழுகவும். அஷ்ட பீனிசந் தீரும். கைகண்டது.

இரைப்புக்கு மருந்து:-

கொடிவேலி, குப்பை மேனி, வேலிப்பருத்தி, ஒரெரான்டுக்கு சாறு படி.¼, வெள்ளைச் சீலையில் கட்டி ஈரமான தீபத்தில் ஐந்து பலம் கெந்தகம் போட்டுச் சுருட்டி விளக்கெண்ணெயில் நனைத்துக் கீழாகப் பிடித்தால் தயிலம் விழும். அந்தத் தயிலம் குன்று மணிப் பிரமாணம் வெற்றிலையில் தடவித் தின்ன இரைப்புத் தீரும்.

பித்த சுரக் கசாயம்:-

கொண்டனை யாள பந்தம் கூறிய பற்படாகம்
உண்டான நின்னிலங்கை ஓடிடும் பித்த வெங்கிக்
கண்டங்கத்திரி வேர் சின்னங் கரஞ்சொரி தன்னில் வேரும்
மிண்டிய்சிறுதேக்கு சுக்கு வெட்டி வேர் சீந்தி தானே.

சீந்திலும் ஒக்கக் கூட்டி செய்யதோர் கசாயங் காய்ச்சி
வேந்தெழுந் திப்பிலியை மேன்பொடியாகத் தூவி
யேந்திளையாளே கேளாய் யியல் பெற மருந்து கொண்டால்
சேர்ந்திடும் சேற்பனத்தில் சுரங்களுந் தீருமென்றே.

திப்பிலி கண்டங் கத்திரியுந்திகழும் வட்டத் திருப்பியுடன்
பற்படாகஞ் சீந்தி யிருவேலி பகரு மிலாமிச்சஞ்சுக்கு மிவைதான்
செப்பமாய்க் கசாயமிடச் சேற்பன பித்த சுரந் தானும்
தப்புவதெப்படித் தானென்று தயங்கி யோடுந் தார் குழலே.

சகல சுரத்துக்குங் கசாயம்:-

நிலவேம்பு பற்படாகஞ் சுக்குந் தானும் நேரான சிறு தேக்கு செங்கழுநீர்க் கோ
உட்டம்
நலமுடைய திப்பிலியும் ஆடாதோடை யிறுகு நன்றுகக் காஞ்சொரியும் முதகுஞ் சீந்தில்
பலமுடனே கசாயமிட மாதே கேளாய் பாங்காக அசீரணங்கள் சன்னி பாதம்
குலமுடைய முறல் முதலான தெல்லாம் கூப்பிட்டு முறையிட்டுக் குலைந்து போமே.

தொந்த சுரத்துக்கு:-

சித்தா முட்டி வெப்பாலைப் பட்டை சீந்தி நிலவேம்பு சிறுகாஞ்சொரி
முத்தமொடு பேய்ப்புடல் பற்படாகம் முருங்கை நிம்பை கடுக்காயும் முனிந்து கூட்டி
சுக்குடன் கசாய மிட்டுக் குடித்தால் மாதே தொந்த சுரம் மிகப் பயந்து
நடுங்கி யோடும்
சத்தியமாமிதெனவே வானவர்க்கு சங்கரனுருமை யவட்கு சாற்றினரே.

அதிசார சுரத்துக்கு கசாயம்:-

பெருமரத்துப் பட்டையுடன் விடையந் தானும் பேசரிய் வில்வமு மாதளையிவேருடன்
சரியுடனே தான் கூட்டிக் கசாய மிட்டால் சர்வ சுரம் அதிசாரந் தானும் போகு
மே
யிருவேலி பற்படாகங் கொத்தமல்லி விலாமிச்சு சீந்தி சுக்கு சிறுகாஞ்சொறி
வரிசை நிலவேம்பொடு வட்டத் திருப்பி வன்மையுடன்சறவ சுரம் வாங்குந்தானே.

தாப சுரத்துக்கு:-

கடுகோடு சுக்கு சீந்தி கண்டங்கத்திரி வேர் தானும்
படர்பில் காஞ்சொறி முத்தம் சுவவெட்டி சீந்தில் தானும்
மடையும் பத்திரி வேர் தானும் ஆன சந்தனமுங் கூட்டி
சுடு கசாயம் சுத்த தாப சுரங்களுந் தீருமென்றே.

அக்கினி மந்தத்துக்கு:-

கண்டங்கத்திரி சுக்கு சீந்தில் கொண்டு கசாயங் கூட்டில் திப்பிலி
யண்டிய சூரணம் அக்கினி மந்தம் கண்டிடிலோடுஞ் சுவாசமுங் காணே.

கெற்ப சுரத்துக்கு:-

நன்னாரி மாகாளிக் கிழங்கு தானும் நலமான முத்தமோடு வெட்டி வேரும்
சொன்னதொரு மதிமதுரம் சுக்கு சீந்தில் நலங்கியதோர் விலாமிச்சஞ் சித்தாமுட்டி
தின்னுத பேராமுட்டி தேவதாரம் சிறந்த தொரு நிலப்பனை சந்தனமுங் கூட்டி
அன்னுளிப் கசாய மிட்டுத் தேனே குத்தில் அரிவையர்க்கு கெற்ப்ப சுரம் அகலுந்
தானே.

பிள்ளை பெற்ற சுரத்துக்கு:-

சித்தாமுட்டி சீந்திலொடு முந்தக்காசு திகழெருக்கம் வேர் சுக்கு நிலவேம்போடு
புத்தியுடன் பேராமுட்டி கசாயமிட்டு புகழ் பெறவே திப்பிலியின் பொடியே தூவித்
தந்தை யெனும் மொழியார்கள் பிள்ளை பெற்றுத் தனி யறையிலிருக்கையிலே சுரமே
வந்தால்
சுத்தமொடு தீர்ந்து விடுமென்று நாங்கள் சுவாமியார் மாயனுக்குச் சொன்னாரே.

மறுகை திருப்பிலல்:-

பன்னு சிறு வழுதலையு முத்தக்காசு பற்படாகஞ் சீந்திலொடு சிறுகாஞ்சொறி
துன்னியதோர் கோரைசனை திப்பிலி வேம்பு சேர நின்ற சிறு தேக்குச் செங்
கழுநீர்க் கோஷ்டம்
நன்னு சலம் நாளி வாத்தளக்காய்ச் காய்ச்சி வன்மையுடன் பருகிடில் மறுகல்
காச்சல் வகைகளெல்லாம் போன வழி யறியரியாமே.

மாந்தத்துக்கு மேல் சுரமானால் வயறு கழிய மருந்து:-

சீந்திக் தண்டு கடுக்காயும் சிவதை வேருங் களிப்பாக்கு
யேந்துங் கடுகுரோகணியும் யெளிலாய்ச் சுக்கு வழுதலையும்
காய்ந்த தன்னீரெட்டி லொன்றாய்க் காய்ச்சிக் குடிக்க வல்லீராய்
மாந்தமான சுரம் போகும் வயறு களியுங் கண்டீரே.

சுரத்துக்கு மேல் வீக்கமானால் மருந்து:-

கரியாந்தகரை தூதுவளை கடிய நொச்சி பிரமியுடன்
மெய்யா விளங்கு நீர் முள்ளி விரசிய மல்லிகைத் தண்டுடனே
செய்யாக் குரந்தை பேராமுட்டி திகழும் சுக்கு நருக்கியிட்டு
நீ யதாய்க் காச்சிக் குடிப்பீராய் சுரமும் வீக்கமும் போய் விடுமே.

சுரத்தின் மேல் கை கால் வீக்கமானால்:-

முங்கிலிலை நீர் முள்ளித் தண்டு யிலை சீந்திக் தண்டு, நீலி சாறனை வேர்
தூதுவளை நத்தைச் சூரி, முசுமுசுக்கை எலுமிச்சை யிலை, சித்தாமுட்டி பேராமுட்டி
செம்முள்ளி, துளசி, கஞ்சாங் கோரை, விஷ்ணு காந்தி இது வெல்லாங்
கசாயமிட்டுக் கொடுக்க வீக்கம் வாங்கும்.

விலைஉட்டும சுரத்துக்கு:-

திப்பிலி கண்டங் கத்திரியும் திகழும் வட்டத் திருப்பியுடன்
பற்படாகஞ் சீந்திலிரு வேலி பகரு மிலாச்சஞ் சுக்கு

செப்பமாகக் கசாயமிட்ச் சேத்தும பித்த சுரந் தாமும்
தப்புவதெப்படித் தானென்று தயங்கியோடுந் கார் குழலே.

சகல சுரத்துக்கும்:-

ஆடாதோடை சிறுகாஞ்சொரி அடருஞ் சீந்தி பற்படாகம் நீலா கண்டங் கத்திரியும் நெரிய சுக்கு நிலவேம்பு
வாடா குடிநீர் தேன் கலந்து வடித்துக்குடிக்க வல்லீராய் சோடா கோடி சுரம்
விட்டுக் குளிருந் தாப சுரம் போமே.

முதிர விளைந்த மிளகு சுக்கு முதிர்ந்த திப்பிலி வெள்ளுள்ளி
நாலுஞ் சீரகம் ஒரொன்று அரைக்களஞ்சு நன்று யரைத்திள வென்னீரில் அரைத்துக்
கரைத்து உண்பீராய் நன்று யோடும்.

பித்த சுரம்:-

சீந்தி தண்டு முத்தம் நன்னாரி செவியம் சுக்குத் துளசியுடன்
ஆய்ந்த நீரு யிரு நாளி அட்டவே காச்சி யருந்திடுகில்
சேர்ந்த வாதமுடன் தயங்கு சேத்துமம் அதிசார
அந்தா தாப சுரந் தீரும் அழுந்தமான குடி நீரே.

பித்த வாத சுரத்துக்கு பித்தத்துக்கு:-

கொத்தமல்லி யிரு களஞ்சி கொய்த சுக்கு களஞ்சுவதான்
அத்தம் பெரிய குளிர் காச்சல் அன்னி வெதுப்பு அதிசாரந்
மத்த பித்தம் வாத சுரம் வகையாய்த் தீரு மோடிடுமே.

குளிர் சுரத்துக்கு:-

ஆடா தோடை பேய்ப்புடலும் அடருஞ் சீந்தி பற்பாடகம்
நாடா கண்டங் கத்திரியும் நன்றாய்க் கசாயம் வைத்திடுகில்
வீடாக் குளிருஞ் சுரந் தாமும் விட்டு ஓடும் யிருமலுமே.

அஉட்ட சுரக் குடிநீர்:-

தண்ணீர் விட்டான் கிழங்கு மேல் புறனி சீவிப் போட்டுத் ------
கசாயம் வைத்துக் கொடுக்கவும்.

(வேறு)

பொன்முசுட்டை வேர் கொளிஞ்சி வேர் முன்னை வேர் சம்மூல யிது வெல்லாங்
கூட்டிக் கசாயம் வைத்----அரைத்துக் கொடுக்கவும்.

அருவைக்கு:-

காட்டு முருங்கை வேர்ப் பட்டை ஒரு தேங்காயளவு தவைத்துப் புதுப் பானையில்ப்
போட்டு ஊற வைத்து ஒரு சேரை உள்க்குக் கொள்ளவும். பேதி கண்டு இளப்பாறல்
தயிருஞ் சாதமும் சாப்பிடக்கூடுமாம்.

(வேறு)

வெள்ளாட்டு உப்புக் கண்டம் நாலாறு யெடுத்து திருகு கள்ளிப் பாலூட்டி நிழலி
னைத்தி அதின் பிறகு நய்யக் கொட்டி கல்லுப்பு, மிளகு, பூண்டு, கடுகு, சுக்குப் பொடி
செய்து உப்புக் கண்டத்தில் போட்டுக் கொதிப்பிக்க அதிகாலமே ஒரு கண்டத்தில்
பாதி தின்ன அருவை தீரும்.

ஓறண்ட வாதத்துக்கு எருப்புடம் போட்டு பற்பம் பண்ணி எடுத்துக் கொண்டு
சர்க்கரை கூட்டி அரைத்துப் பசுவின் பாலில் குடிக்கவும்.

(வேறு)

நீலி வேர் மேல்ப் பட்டையை அரைத்துச் சுண்டைக்காய் மருவாகி முன்று உருண்டை
பண்ணி முன்று நாளி நல்லெண்ணை பத்தி முன்று நாள் முழுங்கவும். பத்தியம் வென்னீருஞ்
சோறும் கொள்ளவும்.

Incomplete

<u>அந்தி மாலைக்கு மருந்து</u>:- வாகை விரை திப்பிலி, மிளகு, இந்துப்பு, கோமூத்திரம் விட்டரைத்துக் கண்ணிலிடத் தீரும்.

(வேறு)

மிளகு, நல்லெண்ணெய் விட்டரைத்துக் கண்ணிலிடத் தீரும்.

<u>இந்திராணித் தயிலம்</u>:-

மாவிலிங்கம் வேர்ப் பட்டை, அவிஞ்சி வேர்ப் பட்டை, முருங்கைப் பட்டை, சித்திர மூலம், எருக்கம் பூ வகைக்கு பலம்.10, தண்ணீர் வள்ளம்.8 கஷாயம் எட்டி யொன்றாய்க் காய்ச்சி கடைத் திரவியம் சுக்கு, மிளகு, வசம்பு, ஓமம், காயம், பூண்டு வகைக்கு பலம்:க, நல்லெண்ணெய் விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், வெள்ளாட்டு நெய் வகைக்கு படி:க தயில பக்குவத்தி லிறக்கி விநாயக பூசை பண்ணி பிடிப்பிக்கவும். சன்னி13-ம், வாதம் 84-ம் தீரும்.

<u>நேத்திர வாய்வுக்கு</u>:-

ஆயில் பட்டை, புன் முருங்கைப் பட்டை, ஊர் முருங்கைப் பட்டை வகைக்கு பலம்.3, தண்ணீர் படி.8, எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கடைத் திரவியம் பூண்டு பலம்.க, மிளகு பலம்.½, இந்துப்பு விராகனிடை.2½, சதுரக் கள்ளிப் பால் படி .¼ பசுவின் நெய் படி.க, தயில பக்குவத்தி லிறக்கி முழுகவும். நேத்திர வாய்வு தலை யிடிப்பு சகலமுந் தீரும். பூசா விதானத்துடனே செய்யவும்.

<u>காமாலைக்கு</u>:-

கத்தாழைச் சாறு படி.க, எலுமிச்சம் பழச் சாறு படி.க, கையாந்தகரைச் சாறு படி.க, அரப்பொடி பலம்.3, ஊசிக் காந்தம் பலம்.2, விரை போக்கின கடுக்காய் 60 இந்த மூன்று வகையும் கையாந்தகரைச் சாற்றிலரைத்து மற்றச் சாற்றில் கரைத்துக் குழம்பாகக் காய்ச்சி சுண்டி சாறு பக்குவத்தில் பனைவெல்லம் பலம்.5, கூடப் போட்டுக் காய்ச்சி லேகியமான வாறே எடுத்துக் களச்சிக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி ரெண்டு நேரமுந் தின்னவும். பஞ்ச காமாலையுந் தீரும். கை கண்டது. பூசா விதானத்துடனே செய்யவுடம.

<u>பித்த விகாளத்துக்கு</u>:-

இளநீர் இரண்டு மூன்று கண் திறந்து சத்து ஊத்திப் போட்டு ஒரு எலுமிச்சம் பழம் பிழிந்து (பனியில் வைத்து) மறுநாள் காலமே சர்க்கரையாவது நல்ல வெல்லமாவது போட்டுக் கொடுக்கவும்.

<u>செய்நீர் வைப்பு</u>:-

வெடியுப்பு பலம்.5, புளிப்புக் கறண்டியில் சுருக்கிப் பின்பு அரைக்க மெழுகாம். அதைக் கறண்டியில் புடம் வைக்கச் செய்நீராம்.

வெடியுப்பு, புளி, சீனம், இந்துப்பு, கல்லுப்பு, வெங்காரம் ஒன்றாய்க் கூட்டி புடம் வைத்துப் பீங்கானில் வைக்கச் செய்நீராம். பராபரை விந்து இந்த நீரால் மூன்று நாளரைத்து வில்லை காய வைத்து மேலே சடுத்தா சுத்தி வைத்து ஏழு சுத்து பிடிப்பிச்சு அதின் மேலே சீலை மண் செய்து புடம் வைக்கவும். இப்படி பதினொன்று புடமிடவும். கட்டிச் செயமாம். இதுக்குக் கட்டின கல்லுப்பு ஒன்று கூட்டி உருட்டிக் கொள்ளவும்.

<u>சலக் கழிச்சலுக்கு</u>:-

அறுகு, பூளை, கொடுப்பை, கையாந்தகரை, களச்சிக்காய் நெல்லி, முடக்கொத்தான் நாயுருவித் தழை முடி வள்ளி, கருவேப்பிலை, சித்தாமணக்கிலை, நாரத்தை யிலை, எலுமிச்சை யிலை பாகலிலை, முசுமுசுக்கை, சமூலம், வேப்பிலை, சுரையிலை, பூசணியிலை இது வகைக்கு பலம்.க, நிறுத்தி

அவித்து சாறு வாங்கிக் கொள்ளவும். சிந்தாமணி வேர், நாறத்தை வேர், எலுமிச்சம் வேர், குறுந்தும் மூட்டி வேர், எருக்கிலம் வேர், நீர் வள்ளிக் கிழங்கு விலாம்பிச்சம் வேர், இலுப்பைப் பட்டை, அத்திப் பட்டை, அரசம் பட்டை, வேப்பம் பட்டை, வெள்ளரி வேர் பூசனி வேர் இது வகைக்கு பலம்.க, நிறுத்து யிடித்து யிரு நாழி தண்ணீர் விட்டு மறுநாள் வடித்துக் கொண்டு மூன்று நாள் தீயிட்டு இளந் தீயா யெரித்து ரெண்டு உழக்காய்க் காய்ச்சிக் கொண்டுஇதுக்குச் சரக்கு வகை: ஆலமொக்கு பலம்.3, நல்ல சந்தனம் பலம்.க, கம்பரிசி பலம்.க, சிறு நன்னாரி பலம்.க, கார்போகரிசி பலம்.3, விளாவரிசி பலம்.3 வெங்காயம், சுக்கு, கெந்தகம், சாத்திர வேதி, கல்நார், சோமநாதப் பெருங்காயம் இவை வகைக்கு பலம்.3 இது வெல்லா மரைத்து நல்லெண்ணை படி.க, நெய் படி.க, அரைத்த மருந்தும் பச்சிலைச் சாறும் வேர் வெந்த சாறும் ஒன்றாய்க் கலந்து வைத்து மற்ற நாள் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து தலைக்கு நாலு நாளைக்கு ஒருக்கால் மருந்தெண்ணை யிட்டு சீயக்காயிட்டு முழுகவும். மற்றப்படி தினசரி அருண உதையத்தில் சாறு வாங்கும் மருந்தெண்ணை யிட்டு சாயங்காலம் எருமைச் சாணியிட்டு வெந்நீர் வாத்துக் கொள்ளவும். ஞாயிற்றுக் கிழமை நாள் அருண உதையத்துக்கு சூரியனுக்கு பொங்கலிட்டு எண்ணை வடித்துக் கொள்ளவும். *குஷ்டிதி* இருவத்தி நாலு வகை சலக் களிச்சலும் தீரும்.

<u>கெற்ப கிரந்திக்கு:-</u>

செங்கத்தாரி, நில்க்கிளா நீர் முள்ளி, செம்முள்ளி, கருமுள்ளி, கோழியவரை யிலை கரு நொச்சி யிலை, மிளகு, தக்காளி யிலை, கள்ச்சியிலை, வில்வ யிலை இது வகைக்குச் சாறு படி.க, நருள்ளிச் சாறு படி.க, விளக்கெண்ணை படி.க, ஒருக் கொட்டைப் பூடு.3, வசம்புத் தேனு.க, இது வெல்லாங் கூட்டி அறுபது நாழிகை சூரியப் புடமிட்டு மறுநாள் எண்ணை பதமறிந்து வைத்துக் கொண்டு மாதம் மூன்று முதல் கொண்டு ஒன்பது மாதம் வரைக்கும் மாதம் மூன்று நாள் ஒன்று கொள்ளவும். பிள்ளைக்கும் இதுவே எண்ணை.

<u>வாதத்துக்கு எண்ணை:-</u>

சமுத்திராப் பழம் இலவங்கப் பட்டை, கடுகு, திப்பிலி, வசம்பு, ஓமம், வெள் வெங்காயம், இவ்வை சமன் கொண்டு வந்து கண்டங்கத்திரிச் சாறு, முடக் கொத்தான் சாறு வாத மடக்கிச் சாறு, எருக்கம் பால் வகைக்குப் படி.க, வேப்பெண்ணை படி.$\frac{1}{4}$, புங் கெண்ணை படி.$\frac{1}{4}$, இலுப்பெண்ணை படி.$\frac{1}{4}$, நல்லெண்ணை படி.$\frac{1}{4}$ ஆக எண்ணை வகை 4-ம் இந்தச் சாறும் சலங்கைக் கொதியிலிட்ட பிறகு எண்ணை வார்த்துக் கடைச் சரக்கு எல்லாம் சூரணம் பண்ணி வேகிற எண்ணையில் கூடப் போட்டு எண்ணை பதத்தில் வடித்து உடம்பில் பிடிப்பிக்கவும். வெந்நீரில் குளிக்கவும். இந்தப்படி நாற்பத்தெட்டு நாள் பிடிப்பிக்கவும். சீதக்-கடுப்பு

<u>சீதக் கடுப்புக்கு:-</u>

வேப்பங் கொழுந்து ரெண்டு கொட்டைப் பாக்களவு நற்சீரகம், சுண்டைக் காயளவு, அரைத்து சத்து பனங் கருப்புக் கட்டி கூட்டி அரைத்த சட்டி சாய வைத்து அந்தச் சட்டியில் போட்டு நல்லெண்ணை விட்டுக் கிளறி மூன்று நாள் தின்ன நிற்கும்.

<u>ரத்தக் கடுப்பு, சீதக் கடுப்பு, கணக் கொதிக்கு மருந்து:-</u>

கடுகு, சுக்கு, மிளகு, பூண்டு, மூனை வாங்கிப் போட்டு வேப்பங் கொழுந்து பிரண்டை வேர், கொளிஞ்சி வேர், முள்ளி வேர் இவை நன்றாய் விழுதோட அரைத்து சட்டி காய வைத்து நல்லெண்ணை குத்தி வெங்காயம் நசுக்கிப் போட்டு தாளிதம் பண்ணிக் கொதிப்பித்து ஆறின பின்பு கொடுக்க நிற்கும்.

<u>வயிறு கழிச்சலுக்கு:-</u> அரளி குடப்பாலைப் பட்டை கஞ்சாவிரை, சாதிப்பத்திரி, அதிவிடையம்

கோரைக் கிழங்கு, நற்சீரகம் இவை சமன் கூட்டி கஞ்சா யிலைச் சாறு வார்த்து ஒரு சாமமரைத்து ஒரு சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வயறு களிச்சலுக்கு மோர் தயிரில் கொடுக்கவும்: சுரத்தின் பேரிலானால் கசாயத்தில் கொடுக்கவும்.

<u>நீர்க் கட்டு நீரடைப்புக்கு மருந்து</u>:-

நேர்வாளங் கொட்டை.3 அரைத்துச் சீலையில் தடவித் திரித்து அபானத்வாரத்தி லேத்தவும். வயறு கழியும் ஒரு புன்னைக் காயளவு மஞ்சள் அரைத்து சத்துச் சுண்ணாம்பு கூட்டி தண்ணீரில் கரைத்துக் குடிக்க மலஞ் சலம் விழும்.

<u>நீர்க் கட்டுக்கு</u>:-

ரெண்டு படி எருமை மோரில் கால்படி கல்லுப்புப் போட்டு ராத்திரி முப்பது நாழிகை ஊற விட்டுக் காலமே கலக்காமல் அரைக்கால் படி யிறுத்துக் கொடுக்கவும். கடகடப்பான கழிச்சலுக்குச் சாதிக்காய்.க, மாங்கொட்டைப் பருப்பு.க; இவை ரெண்டும் உமிக் காந்தலில் புதைத்துச் சிவக்க வெந்தவுடனே எடுத்தரைத்து இள வென்னீரில் கொடுக்கவும்.

(வேறு)

முருங்கை நாக்கும் பருத்தி சிப்பியும் குறுக நறுக்கிச் சிவக்க வறுத்து வெந்தயம் பலம்.$\frac{1}{4}$ கூட்டிப் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு அரைக்காய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

<u>நீரழிவுக்கு</u>:-

துவசி முருங்கை யிலைச் சாரணையிலை, எலிச்செவி யிலை, நறுந்தாளியிலை நீர்முள்ளி யிலை, நல்ல புண்ணாக்கு யிட்டுப் புருக்கி நல்லெண்ணை வார்த்து மூன்று நாள்த் தின்னவும்.

(வேறு)

சங்கம் வேர் எருமைப் பால் விட்டரைத்து அந்தப் பாலில் குடிக்கவும்.

(வேறு)

நொச்சிக் கொழுந்து பூலாங் கொழுந்து மயிர் மாணிக்கங் கொழுந்து ஆவாரங் கொழுந்து விடத் தேறங் கொழுந்து இந்த ஐந்தும் அரைத்து வெண்ணையில் குழைத்து விழுங்கவும். கைப்பாகிய உப்புத் தவிர்க்கவும்.

<u>பெருவரைக்கு மருந்து</u>:-

ஓமம், அரத்தை, மிளகு, தேசாவரம், திப்பிலி, பூண்டு, சீந்தி, நெல்லிப் பட்டை வேர், பச்சை நெல்லுமி, கருஞ்சீரகம், பறும்பாகல் கிழங்கு, சித்தவரைக் கிழங்கு, சிறுதேக்கு, கடுகுரோகணி, மருக்காரம், வேர்ப்புட்டை, வகைக்கு விராகனிடை.க, அரைத்து ஒன்றரை உழக்குத் தண்ணீரில் கரைத்து சட்டி காய வைத்து உணர்த்திப் பொங்க விட்டு இறுத்துக் கொடுக்கவும்.

<u>மகா விஷமுட்டித் தயிலம்</u>:-

எட்டிப் பழச்சாறு வள்ளம்.உ, முருங்கைச் சாறு, நொச்சிச் சாறு, அழுக்கிலாங் கிளங்குச் சாறு உள் முக்குத்த யிலைச் சாறு எருக்கிலைச் சாறு, கொடிவேலி சமூலம் எருக்கம் பால் கள்ளிப் பால், மாவிலிங்கைச் சாறு, தழுதாழைச் சாறு யிலைக் கள்ளிச் சாறு சாட்டறணைச் சாறு உகாயிலைச் சாறு, துளசியிலைச் சாறு, காட்டு முருங்கைச் சாறு, பொடுதலைச் சாறு, மூதியார் கூந்தல் சாறு, ஆயில் பட்டைச் சாறு, வாகைப் பட்டைச் சாறு, புங்கிலைச் சாறு இது வகைக்கு படி.$\frac{1}{2}$ சாறு பிழிந்து கொண்டு சுக்சோலந் தண்ணீர் விட்டுப் பிழிந்து கொண்டு படி.$\frac{1}{2}$, நல்லெண்ணை வேப்பெண்ணை, யிலுப்பு, புங்கெண்ணை, சிற்றாமணக்கெண்ணை, வகைக்கு படி.உ, பசுவின் பாலானாலும் வெள்ளாட்டுப் பாலானாலும் வள்ளம்.உ இதில் கடைத்

திரவியம் கொடிவேலி வேர்ப் பட்டை, புற்று, அதிமதுரம், கோஷ்டம், இந்துப்பு, கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, கடுகு, ஏலம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், நல்ல சந்தனம், சிறுநாகப்பூ, கச்சோலம், எட்டிக் கொட்டை, வகைக்குப் பலம்.க, கூட்டிச் சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி இந்தச் சூரணத்தைப் பாலிலரைத்து அந்த எண்ணெக் கசாயத்தில் கூட விட்டு நாலு நாள்ச் சிறுக எரிய விட்டு ஐந்தா நாள் எண்ணை பதத்தில் கற்கத்தை எடுத்து உருட்டிக் கலசத்தின் மேலே போடக் கலசத்தி லொட்டாமல் தெரித்து விழுந்தால் பதமாம். அந்த எண்ணையை அக்கினியின் மேத்தச் சுர சுர என்னுமலிருந்தால் பத மென்று அறியவும். கம்பிளியினால் ஞ்திக் கிட்டிக் கோல் போட்டு எண்ணை யற வடித்து அக்கினி பூசை விநயக பசை பண்ணி வைத்துக் கொண்டு வேண்டின போது இடவும். இதுக்கு திமிர் வாத முதலான எண்பது வாதமும் பதின்று வகைச் சன்னியும் குணமாம்.

<u>இதுக்கு வேது பிடிக்க வென்னிற்கு மருந்து</u>:- 5.12.63.

தழுதாழையிலை, குப்பை மேனியிலை, சாறணைக் கொடி, எருக்கம் பழுப்பு, அளிஞ்சி யிலை, புங்க யிலை, உகாயிலை இது வெல்லாங் கூட்டி வேது பிடிக்கவும். விளக்கெண்ணை நல்லெண்ணை கூட்டி முழுகவும். உடம்புக்குத் தயில மிட்டுக் கொள்ளவும். எந்த வாதமும் சன்னியுந் தீரும்.

<u>மூலத்துக்கு</u>:-

சங்கம் வேர்ப் பட்டை பலம்.க, மலைத்தேன் பலம்.க, வார்த்து அரைத்து நாளொன்றுக்கு எலுமிச்சங் காயளவு உள்ளுக்குக் கொடுக்கவும். இந்தப்படி ஐந்து நாள் கொடுக்கவும்.

<u>மேலுக்கு பத்து</u>:-

பேய்ப்பீர்க்கம் விரை, உத்தாமணிச் சாறு விட்டரைத்துப் பவுவ் வாய்க்கு ஐந்து நாள் பத்துப் போட உள்மூலை, பிறமூலை, கத்தரிச்சு விழும். பத்தியம் தயிருஞ் சோறு பாக்குப் போட்டுக் கொள்ளவும். உப்புப், புளி தவிர்க்கவும். உள் மூலம் பிற மூலந் தீரும்.

<u>பெரும்பாட்டுக்கு</u>:-

கருங்குங்கிலியம் பொடி செய்து எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து நல்லெண்ணையில் குடிக்கப் பெரும்பாடு தீரும்.

<u>அரக்குத் தயிலம்</u>:-

அமுக்கிலாங் கிழங்கு, சந்தனக் கட்டை, விருகங் கிழங்கு, தேவதாரி வகைக்கு ஈ கிகு.க, மறுன் கிழங்கு, சித்தாமுட்டி, பேறுமுட்டி வேர், நெரியச் சட்டி வேர், நன்னாரி வேர் வகைக்கு ஈ க்கு½ கோரைக் கிழங்கு, விலாமிச்சம் வேர், வெட்டி வேர், வகைக்கு பலம்.5 இது வெல்லாம் பத்து வள்ள மோரில் போட்டு ஒரு வள்ளமாய்க் காய்ச்சிக் கொள்ளவும்.

கொம்பரக்கு சேர்.4, 6 படி தண்ணீர் விட்டு நாலு படியாகக் கம்பிப் பதத்திலிறக்கிக் கொள்ளவும். நெல்லிக்காய்ச் சாறு படி.4, ஒரு மிடாவில் விட்டுக் கூறெள்ளெண்ணை படி.4, பொன்னாங்காணி கரிசிலாங்கண்ணி, மொசுமொசுக்கை, தாழை விழுதம்றள் கிழங்குச் சாறு வகைக்குச் சாறு படி.3, இளநீர் படி.3, இதில் கற்கம் லவங்கம், பச்சிலை, செண்பகப்பூ, அகைநீர், கொத்தமல்லி, ம மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கோஷ்டம், அதிமதுரம், சடாமாஞ்சி, லவங்கப்பத்திரி, லவங்கப் பட்டை, யேலம், பூலாங் கிழங்கு, வெட்டி வேர், குன்டோதரன் கிழங்கு, அரத்தை, மிளகு, சாம்பிறுனி, கற்பூரம் வகைக்கு விராகன்.4 கஸ்தூரி விராகன்.க, குங்குமப்பூ விராகன்.உ, கோரோசினை விராகன்.உ, பசுவின் பால் படி.4, கடைச் சரக்கைப் பாலிலரைத்துக் கூட விடவும். ஏலம், லவங்கம், குங்குமப்பூ, கோரோசினை கஸ்தூரி

பொடி பண்ணி தயிலம் இறக்கின பிறகு போடவும். இதற்குத் தீரும் வியாதி அஸ்தி சுரம், அங்கதாகம், உட்புறப் பிரமேகம், இளைப்பு, எலும்புருக்கி, இவை முதலானவைந் தீரும். பூசா [illegible] செய்யவும்.

கெந்தக ரசாயனம்:-

பறங்கிப் பட்டை பலம்.8, கடுக்காய், தானிக்காய், நெல்லிப்பருப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், லவங்கம், லவங்கப் பட்டை, ஓமம், குரசாணி ஓமம், சித்திர மூலம், அரத்தை கொடு பறங்கி, செவியம், விலாமிச்சம் வேர், நிலப்பனைக் கிழங்கு, சடாமாஞ்சி, கோஷ்டம், வாய்விளங்கம் இது வகைக்கு விராகனிடை.உ இது வெல்லாம் சூரணம் பண்ணிக் கொண்டு நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்.4 பசுவின் பாலில் சுத்தி பண்ணிக் கொண்டு சூரணம் விராகன்.க, கெந்தகம் விராகன்.க, சாதிக்க உள்ளுக்கு இதற்கு தீரும் வியாதி கிரந்தி, உடம்புக் கடுப்பு, வறட்சி, பெருஞ்சிரங்கு, வாய்வு, உஷ்ண வாய்வுந் தீரும்.

வெகு ஜலத்துக்கு:-

காட்டுக் கொடிவேர் எலுமிச்சங் காயளவு பசுவின் பாலிலரைத்துக் குடிக்கக் குணமாம்.

பருவரை, வெரிவங்கி, செவிட்டு வங்கிக்கு, மந்தாக்கினி சூரணம்:-

ஆவாரம் பட்டை, கொன்னை, நாவல் பட்டை, மருதம் பட்டை இது நாலும் உலர்த்தி சமபாகம் பொடி பண்ணிப் புதுத் தேனில் குழப்பிக் கொள்ளக் குணமாம்.

பருவரை, வெரிவங்கி, செவிட்டு வங்கிக்கும்: வனமரம் பட்டை பிடங்கு நாரிப் பட்டை உசிலம் பட்டை, யின்டம் பட்டை, செங்கத்தாரி வேர்ப் பட்டை, நன்னாரி வேர்; வெப்பாலைப் பட்டை, சுண்டை வேர், புலிதடிக்கி வேர்; மிளகறணை வேர், வட்டக் கிலுகிலுப்பை; வேர், மணத்தக்காளி வேர், கண்டங்கத்திரி வேர் யின்பூறல் நாயுருவி வேர்; புளியறணைக் கிழங்கு, காவளை வேர் இது வகைக்கு பலம்.க, இது வெல்லாம் இடித்து நாழி எள்ளுக்கெண்ணெயில் எரித்து உள்ளுக்கு ஒன்றை விட்டு ஒரு நாள் கொடுக்கவும். விரேசனமாம். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். வெரி வங்கி செவிட்டு வங்கி பருவரை யிவை அனைத்துங் குணமாம். உப்பு, புளி தவிர்க்கவும்.

மந்தாக்கினி சூரணம்:-

அசமதாகம், பெருங்காயம், வாய் விளங்கம், மூத்தக்காசு, நிலாவாரை, சவூலம், சீரகம், கருஞ்சீரகம், குடப்பாலைப் பட்டை, செங்கழு நீர்க் கோஷ்டம், கண்டங்கத்திரி, முள்ளி வேர், திரிகடுகு, கெ திப்பிலி, காட்டு மாசாளி மலைத்தாங்கி சிலந்தித் கொடிவேர், கொடு பறங்கி வெள்வச்சாரம், சத்திச் சாரம், வசம்பு, மஞ்சள், மரமஞ்சள், பஞ்சலவணம் இது வகைக்கு விராகனிடை.4 சூரணம் பண்ணி சமபாகம் சர்க்கரை கூட்டி வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். அனேக வாத குன்மம், மலக்கட்டு, பாண்டு காமாலை, அரோசிகம், மந்தாக்கினி, வாத பித்த சிலேற்றுமம் எல்லாந் தீரும்.

கால், கை எரிச்சல் அஸ்தி சுரம், மூத்திர கிரிச்சம், மேக வெட்டைக்கு:-

சகாதேவி மூலம்.க, மதுரம் ரத்த சந்தனம்; சடாமஞ்சி, கடுகுரோகணி, கடல் நுரை, சுக்கு, திப்பிலி, ஆனை வசம்பு, அரக்கு மஞ்சிட்டி, யேலம், மூத்தக்காசு, செங்கழுநீர்க் கோஷ்டம், மரமஞ்சள், வேலிப்பருத்தி, தேவதாரிக் கட்டை, காட்டு மாசாளி அமுக்கிலாங் கிழங்கு, சித்தா முட்டி, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், சதகுப்பை, மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், பூலாங் கிழங்கு, கார்போகரிசி, தக்கோலம், நாகேசுரம்,

ஆக இந்த வகைச் சரக்கைக் காய வைத்துச் சூரணம் பண்ணி அந்தச் சகாதேவியைக் காய வைத்திடித்து ஒரு துலாம் நிறுத்து ஒரு மிடாவில் போட்டு எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு ஒரு வள்ளமாகக் காய்ச்சி பசுவின் பால் படி.௧, கிட்ட தயிர்த் தண்ணீர் படி.௧, நல்லெண்ணை படி.௧, அரக்கு படி.௧, நன்று இடித்துத் தெள்ளிக் கொண்டு அரக்கு பொடி ஒரு சட்டியில் போட்டு ஒரு வள்ளத் தண்ணீர் விட்டுச் சத்தே காய்ச்சி வடித்துக் கொண்டு அந்தக் காயத்தோடே கூட வார்த்து அந்தச் சூரணத்தைக் கசாயத் தண்ணீர் வார்த்து நன்று அரைத்து இது வெல்லாம் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வைத்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். இதுக்குத் தீரும். வியர்வு பிரமேகம், தாகம், மூத்திர கிரிசம் அஸ்தி சுரம், கால் கை எரிச்சல் குணமாம்.

<u>கடி குணத்துக்கு:-</u>

சேங்கொட்டை.5, சர்க்கரை விட்டு பனங் கருப்பிட்டி விராகன்.5, வெள்ள வெங்காயம் விராகன்.5, எள்ளு விராகன்.15 இலைக் கள்ளிப் பட்டை பலம்.௧, கொடிவேலிப் பட்டை பலம் எல்லா மரைத்துக் காய வைத்து எலுமிச்சங் காயளவு வெந்நீரில் கொடுக்கக் கடி குணமெல்லாந் தீரும்.

<u>மேக வெட்டைக்கு இள நீரெண்ணை:-</u>

சிந்தாமணக்குக் கொட்டை வள்ளம்.௧, எருமை மோரில் வேக வைத்து நிழலி லுலத்தி இடித்து எண்ணை ஊத்துகிறதுக்கு இளநீர்.30, தயிர் மேல் தண்ணீர் படி.௧, குமரித் தண்ணீர் படி.௧, ஈர வெங்காயச் சாறு படி.௧, கடுக்காய் படி.½, இடித்து ஆள் கூடப் போட்டு எண்ணை வடித்து கற்கம் ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, லவங்கப் பட்டை, சடாமாஞ்சி, கஸ்தூரி மஞ்சள், சுக்கு, திப்பிலி, மிளகு, வெட்டிவேர் விலாம்பிச்ச வேர், தாளிச பத்திரி, சாதிக்காய், சந்தனக் கட்டை, அதிமதுரம், மந்திரிப் பழம், பேரீச்சம் பழம் கூகைநீர் வகைக்கு விராகனிடை.௧, இடிச் சூரணம் பண்ணி பசுவின் பால் படி.½, கூட விட்டு மெழுகு பதத்திலிறக்கி தட்டிடை அளவு ரெண்டு நேரமும் கொள்ளவும். பத்து நாளைக் கொரு ~~தரம்~~ தடவை விரோசனத்துக்கு வாங்கவும். சுறுவு மேகமுந் தீரும்.

<u>பேய் நாய், பேர் நரி வண்டு கடி, விஷ வலிப்பு சன்னி பதினெட்டுக்குப் பரணி:-</u>

ரசம், அரிதாரம், நிறுவிஷம், குக்கிர நாவி, மனோசிலை, கெந்தகம், இந்துப்பு, கருஞ்சீரகம், வெங்காரம், காயம் இவை பத்தும் சம நிறை நேர்வாளம் இதுக்கு சரி கூட்டி கொட்டாங்கச்சிக் கரி விராகன்.௨, பனைவெல்லம் விராகன்.5, இவை கூட்டி உத்தாமணிச்சாறு வார்த்து ரெண்டு நாளரைத்து தேங்காய்ப் பாலிலொரு நாளரைத்துப் பரணியில் வைத்துக் கொண்டு விஷமெல்லாப்பட்டதுக் கெல்லாம் குன்றி அளவு நாக்கில் தடவ விஷமுடனே மீளும். வெத்திலையிலுந் தின்னலாம். விஷந் தலை மண்டைக் கொண்டு கண் மூடிப் புல் கிட்டில் உச்சி பிடரி இந்த இடங்களில் குடோரியாடி வெலிப்புருத்திச் சாத்தில் குழப்பிக் குடோரி யிட்டு வாயிற் பூசவுந் தீரும். பச்சை நாபி, நாபி, ஒடுவை நஞ்சு பதினெட்டு, பேய் நாய், பேய் நரி கடி, மனைச் காளான் தின்றது பிள்ளை பெற்றுச் சன்னி வந்து பல்க் கிட்டினும் இந்த மருந்து கொடுக்கவும். இது வெல்லாந் தீரும். உப்பு, புளி தவிர்க்கவும். கை கண்டது.

<u>சுறுவ மேக சூரணம்:-</u>

சுக்கு, மிளகு, திப்பிலி பூண்டு, ஓமம், திப்பிலி மூலம், செவியம், அத்தித் திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், சதகுப்பை, கொத்தமல்லி, சத்தியவ்சாரம், நவாட்சரம், வெங்காரம், பஞ்சலவணம் இது வகைக்கு விராகன்.4 சுத்தி பண்ணின நேர்வாளம் விராகன்.௬, வனமல்லிகை கொடிவேலி வேர்; பேய் முசுட்டை வேர், பேய்த்தும்மட்டி வேர், தலைசுருளி வேர், காட்டு முருங்கைப் பட்டை, முள்க் கொளிஞ்சி வேர், காட்டு மல்லிகை வேர், மலை மஞ்சி வேர், கையாந்தகரை,

நிலவேம்பு, புங்கம் வேர், நெருஞ்சி வேர், நெருஞ்சிக்காய், கருணைக் கிழங்கு மெருகன் கிழங்கு, மூங்கில் கிழங்கு இது இடித்துச் சூரணம் பண்ணி வகைக்கு விராகன். 8, இது வெல்லாம் யேகமாய்க் கலந்து சூரணம் மூன்று பங்கும் திகண்ட வேர் சூரணம் ஒரு பங்கும் வட்டக் கலந்து புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு தேனிலாவது நெய்யிலாவது வெந்நீரிலாவது கால்மே வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இதக்குத் தீரும் வியாதி வாய்வுத் திரட்சி, வாதரோகம், பஞ்ச குன்மம், விக்கல், உடம்பு, சந்து நோவுகள், பெருவயறு தண்ணீர்த் தாகம், ஆமை வயறு வெப்புப் பார்வை, பாண்டுரோகம், கால் கை உடம்பு வீக்கம் முக வீக்கம் விஷபாகம், ஏறு வீக்கம், யிறங்கு வீக்கம் ஐந்து வகை உள்மாந்தை யிருமல் குளிர் காச்சல், பழைய வெதுப்புச் செரியாக் குணம், வாயிலு வர்ப்பண்ணுகிறது, வாயில் ரெத்தம் விழுகிறது நெஞ்சு முரண்டு பிறனி அசனஞ் செல்லாத மாவைக் கட்டு வயறெரிப்பு கீரிப் பாம்பு, அசத்தி மாந்தம் மூலை காமாலை யீரலளத்தி அக்கவை கெண்டைப் பிறட்டல் யின் ஏறுகப் பட்ட வியாதி யெல்லாந் தீரும். சந்தேமில்லை. பூசா ~~[illegible]~~ விதான த்துடனே செய்யவும். இது அகஸ்திய சுவாமி சொன்னது. இந்தச் சூரணம் ஒரு மண்டலங் கொள்ளச் சகல மேகங்களும் சகல உஷ்ணங்களும் தீரும்.

கிரந்திக்கு யேரண்டத் தயிலம்: கெற்ப ஸ்ரீகளுக்குமாம்:-

சித்தாமணக்கெண்ணை படி. உ, வெங்காயச் சாறு படி. உ, பசுவின் பால் படி. உ, கருநொச்சியிலை, சிலந்தி, நாயகனிலை, துளசியிலை, செருப்படியிலை, மணத்தக்காளியிலை, தவசி, முருங்கையிலை, சீறியெலை, நுணயிலை, ஊசித் தகரை யிலை, சட்டித் தகரை யிலை, ஆதண்டையிலை இது வகைக்கு சாறு படி. 1/4 வீதம் கூட்டி கொதிக்கையில் கற்கம் பறங்கிப் பட்டை பலம். 4, விடங்கங் கிழங்கு பலம். 8 செங்கத்தாரிப் பட்டை பலம். க, வெள்ளறுகு சங்கங்குப்பி, சங்கம் வேர், கண்டங் கத்திரி வேர், குளாத்தி ஓமம் இது வகைக்கு பலம். க, வசம்பு பலம். 1/2, சாதிக்காய் பலம். 1/8, சாதிப்பத்திரி பலம். 1/8, குருசானி ஓமம் பலம். 1/8, கடுகுரோகணி பலம். 1/8, கசகசா பலம். 1/8, சுக்கு, திப்பிலி, சிறுதேக்கு, திரிபலை, செம்பிருந் தாரு இது வகைக்கு பலம். 1/2 எல்லாங் கூட்டி இடித்துச் சூரணம் பண்ணித் தயிலத்தில் போட்டு பதகுவத்திலிறக்கி தின்மொரு கறண்டி கொள்ளவும். வயறு கழியும். தீரும் வியாதி பதினெட்டுக் கிரந்தியுங், குட்டமுங் கடியுந் தீரும். கெற்பிணிகளுக்கு முன்று மாதஞ் சென்ற பிறகு முன்று திரம் வேதிக்கு இரண்டு கறண்டி கொள்ளவும். வயறு [illegible]யாம். சாதஞ் சோறுங் கொள்ளவும். புளி விடவும். மற்ற வேளையில் தினமொரு முட்டடை எண்ணெ பத்து மாத பரியந்தங் கொள்ளவும். இருவது நாளைக்கு மேல் புளி கூட்டிக் கொள்ளவும்.

நெல்லிக்காய் எண்ணை:-

சித்தாமுட்டி புலம். 50, சிறுகீரை பலம். 10, பொன்னாங்காணி, சீந்தித் தண்டு, சீதேவி, செங்கழுநீர், கையாந்தகரை, வகைக்கு பலம். 10, இவை எல்லாங் கூட்டி இடித்துப் பானையில் போட்டு 6 வள்ளத் தண்ணீர் விட்டு ஒரு வள்ளமாகக் காய்ச்சி நல்லெண்ணை படி. 6, பசுவின் பால் படி. 6, நெல்லிக்காய்ச் சாறு படி. 6 இவை கூட விட்டு அதிமதுரங் கோஷ்டம், ஏலம், லவங்கம், தேவதாரம், செண்பகப்பூ, அரத்தை, சதகுப்பை, மரமஞ்சள், திரிகடுகு, சாதிக்காய், வெட்டிவேர்; விலாம்பிச்ச வேர், சந்தனச் சிராய் வகைக்கு பலம். 1/2 இடித்து தாள் பண்ணி அரைத்துக் கரைத்து எண்ணெ பதத்தில் வடித்துத் தலையில் தேய்த்துக் கொண்டு முழுகவும். தீரும் வியாதி பித்தந் தலை சுத்துகிறது உஷ்ணதிகமுந் தீரும்.

~~கிருமி மூலக் கி[illegible]க்கு மருந்து~~:-

கிராணி மூலக் கிராணிக்கு மருந்து :-

ஆவாரம் பட்டை கிரவம் பட்டை, முள்ளி வேர்ப்பட்டை, அத்திப் பட்டை, அரசம் பட்டை, நாவல் பட்டை இது வெல்லாம் மேல் புறணி சீவிப் போட்டுச் சமன் கூட்டி நறுக்கி வைத்து மூன்று படி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி பிழிந்து இதில் சுக்கு, திப்பிலி, சாதிக்காய், இலவங்கம் இது வகைக்கு விராகன். ½, கூட்டி இளவறுப்பாய் வறுத்து கசாயம் விட்டரைத்துக் கரைத்துக் கொடுக்கக் களிச்சல் வலி சுரமுந் தீரும்.

(வேறு)

காட்டு முருங்கைப் பட்டை உலர்த்தி இடித்துக் கொண்டு சுக்கு, திப்பிலி, ஓமம், வெள்ளுள்ளி, சமன் கூட்டி ஒரு படி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க இரைச்சல், கழிச்சல் வலி இவ்வை யெல்லாந் தீரும்.

(வேறு)

நெல்லரிசி ஒரு சேரை ஈருள்ளி இது ரெண்டும் வறுத்து ஒரு படி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க வலியுங் களிச்சலுந் தீரும்.

(வேறு)

வில்வலையோடு கொத்தமல்லி நெல்பொரி, சீரகம், நெல்லிப்பருப்பு இது சமன் கூட்டி ஒரு படி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க வலி களிச்சல் வாந்தி தாகம் சுரம் இவை தீரும்.

(வேறு)

சுக்கு, மிளகு, உள்ளி வகைக்கு விராகனிடை. ¼ அரைத்துச் சமன் குறங் காட்டுக் கொளிஞ்சியிலை சாறு போலரைத்து இதில் அரைப்படி நீர் விட்டுக் கரைத்து அரைப்படி நல்லெண்ணையைக் கறண்டியில் விட்டு நெருப்பெழக் காய்ச்சி இதில் ஊற்றக் கொண்டு அக்கினி எழும்பும். இது இறுத்து மூன்று நாள் கொடுக்க களிச்சல் நிற்கும். பத்தியமில்லை.

(வேறு)

வெள்ளுள்ளிப் பருப்பை நெய்யில் சிவக்க வறுத்து ஓமம் போட்டுக் கருவேப்பிலை யீர்க்குப் பொடியும் சமன் கூட்டி அரைத்துக் கொடுக்கவும். களிச்சல் நிற்கும்.

(வேறு)

வில்வயோடு நெல் பொரி, நில விளாத்தளை சமன் கூட்டிக் கசாயங் கொடுக்கத் தாகம் நிற்கும்.

அதிசாரக் கிராணிக்கு மருந்து :-

சுக்கு வெந்நீரில் அரைத்து அடை தட்டிப் போட்டு ஒன்பது புடமிட்டு வெந்நீரில் கொடுக்கவும். வாந்தியானால் தேனில் கொடுக்கவும்.

(வேறு)

இலவங்கத்தையும் அப்படியே புடமிட்டுக் கொடுக்க கழிச்சல் வலி தீரும்.

கதளிக் கிருதம் :-

வாழைக்கிழங்கு சாறு படி. 4, காட்டு முருங்கைப் பட்டைப் பால் வாத்தரைத்துப் புளிந்து சாறு படி. க, சங்கம் வேர் பால் வாத்தரைத்துப் பிழிந்து சாறு படி. சங்கம் வேர் பால் வாத்தரைத்துப் பிழிந்து சாறு படி. க, பேராமுட்டி வேர்ப் பட்டை பால் வார்த்திடித்துப் பிழிந்து சாறு படி. க, புங்கம் வேர்ப் பட்டை சாறு படி. 1/8 நிலப்பனைக் கிழங்குச் சாறு படி. 1/ , தண்ணீர் முட்டான் கிழங்குச் சாறு படி. 1/8, பூமி சர்க்கரைக் கிழங்குச் சாறு படி. 1/8 நன்னாரி வேர்ச் சாறு படி. 1/8, ஆகச் சாறு வகை பத்தும் கடைத் திரவியம் தானிக்காய், குரோசாணி, ஓமம், சுக்கு, சீனி சர்க்கரை, திப்பிலி, மிளகு, சீரகம், கடுக்காய், சீனிக் கல்கண்டு, நெல்லி முள்ளி, கொத்தமல்லி, வாய் விளங்கம், கருஞ்சீரகம், தேசாவரம், கூகை நீர் கிரந்தித் தகரை தக்கோலம், மந்திஉட்டி, சடாமஞ்சி, மதுரம், தாளிச பத்திரி, சன்ன லவங்கப் பட்டை

வால் மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், லவங்கம் திந்திரிப் பழம், பேரீச்சம் பழம், செங்கழநீர்க் கிழங்கு, கசகசா கோஷ்டம், ரேணுகம் வகைக்கு பலம்.க, கஸ்தூரி பணவிடை.உ, கோரோசனை விராகனிடை.½, பச்சைக் கற்பூரம் பணவிடை.4, சாறு ரெண்டு வள்ளமும் ரெண்டு படியாய்ச் சுருகின பக்குவத்தில் பசுவின் நெய் படி.க, விட்டுக் காய்ச்சி மெழுகு பதமாய்க் காய்ச்சி அந்தப் பதத்தில் சூரணத்துக்குச் சமன் சர்க்கரை கூட்டிப் போட்டுத் துளாவி இறக்கி வைத்துக் கொண்டு சூரணம் போட்டுக் கிளறி வைத்துக் கொண்டு கடுக்காய் மருவாதி ரெண்டு நேரமுங் கொள்ளவும். தீரும் வியாதி மூத்திர கிருச்சரம், மேகந் துன்மாங்கிஷம், யிந்திரக் கட்டு, யெரி மூத்திரம், சலக் கட்டு, சலக் கழிச்சல், உஷ்ணரோகம், அஸ்தி சுரம், அங்கதாகம், மேக21-ம் தீரும். கடைச் சரக்கு கிருதி பண்ணிக் கொண்டு போட்டுக் கொள்ளவும்.

மாந்த சுரத்துக்கு வேதிக் கசாயம்:-

அரைப்பிடி வேப்பலகு அஞ்சு கடுக்காய், வரிக் குமிரி யாருடம்பில் வத்தல் நசுக்கி யிரு நாழி நீர் விட்டு யெட்டிலொன்றாய்க் காய்ச்சி பருகிற விரோசனத்தை பார்.

சீத சுரக் கசாயம்:-

கத்தாளஞ் சருகுடனே கடுக்காயுங் கூவிப்பாக்குங் கருவேலும் பிறமியுடன் கன சுக்குங் கூட்டி
பத்தாமல் நாலி லொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு பதமில் யெண்ணையுடன் பருகுவீராய்
வத்தாத குடல் வத்துஞ் சத்தம் போகும் என்ம மிகுங் குன்மமுட னிருமல் போகும்
பெத்தாரே சீதவேதி யென்றே பேருலகில் பெரியோர்கள் பேசினரே.

சுரப்பான் வீக்கத்துக்கு:-

ஓடுகின்ற சாறணையும் உப்பு மகசிரியும் வாடுகின்ற சுக்கும் வகை கூட்டி
நேரே மருத மருக்கக் குடிக்க வாய்வு கரப்பான் வீக்கம் பருகப் பரு
கெனக் கழியும் பார்:

இருமலுக்குக் கண்டங்கத்திரிச் சூரணம்:-

கண்டங் கத்திரி சமூலம் திரிகடுகு, திரிபலையுங், கற்கடக் சிங்கி, சிறு தேக்குச் செங்கழுநீர்க் கோஷ்டம், சடாமஞ்சி, இந்துப்பு இவை வகைக்கு பலம்.20 பொடி செய்து தேனில் கொள்ளத் தீரும். வியாதி வாய்நீர் கொறுக்கல், விக்கல், சுவாசங் குத்திருமல் அடுவருப்பு மூக்கு நீர்ப் பாச்சல் கூயம் இது வெல்லாந் தீரும். கை கண்டது.

இருமலுக்குக் கையாந்தகரைச் சூரணம்:-

கையாந்தகரைச் சாறு படி ஒன்றில் மிளகு படி.க, கடுக்காய், திப்பிலி இந்துப்பு, சிறுதேக்கு, கோஷ்டமிவை கூட்டி அந்தச் சாற்றில் ஊறப் போட்டு நிழலி லுலத்திச் சூரணம் பண்ணிக் கய்யாந்தகரைச் சாற்றில் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி வாதத்தில் பிறந்த வியாதியும் சேற்மத்தில் பிறந்த வியாதியும் வாந்தி பண்ணுகிறதும் கிறுனி சூலை வலி நெஞ்சடைப்புச் சுரம் வாய்வு பாண்டு குன்மம் வாய் நீருதல் மூக்கு நீர்ப் பாச்சல் சுவாச காசம் யிருமலோடே கூடினதுந் தீரும்.

வேறு சூரணம்:-

திரிகடுகு, திரிபலை, மூத்தக்காசு, வாய்விளங்கம், திப்பிலி மூலம், சிறு தேக்கு, யிருசீர்கம், தேவதாரம், கொடிவேலி வேர், வெப்பாலை அரிசி, ~~வெப்பாலை~~ பேய்த் தும்மட்டி வேர், மஞ்சள், மரமஞ்சள், வளையலுப்பு, ஆனைத் திப்பிலி இவை சமன் கூட்டிப் பொடி செய்து இதுக்குச் சமன் சுக்கில் பொடி செய்து கூடக் கலந்து தின்மொன்றுக்கு வெருகடிப் பிரமாணம் நெய்யிலாகுதல் தேனிலாகுதல்

பசுவின் பாலிலாகுதல் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி காசம், சுவாச காசம், மூல வியாதி குன்மம், வெப்புப் பாலை, சகல வாய்வு, வய பொருமல், அந்திர வாய்வு, சீரிப் புரு சுரம் தலைவலி, உஷ்ணம் இது வெல்லாந் தீரும்.

அஷ்டமாந்தத்துக்கு மருந்து :-

காயம் விராகனிடை. 4, பூண்டு விராகனிடை. 8, மிளகு விராகனிடை. 4, ஏலம் விராகனிடை. 5, நாயுருவி விராகன். 2, வேப்பங் கொழுந்து அவ்விரல் கொண்டது புடம் பண்ணி முலைப் பாலாகுதல் பசுவின் பாலாகுதல் அரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி முலைப்பாலில் கொடுக்கவும். எட்டு வகை மாந்தமுந் தீரும்.

(வேறு)

உத்தாமணி தழை, கொளிஞ்சித் தழை, சுரைத் தழை அவரைத் தழை இது சமன் கொண்டு இடித்துச் சாறு வாங்கி ஓமம் வசம்பு, மிளகு வகைக்கு விராகனிடை. க, ஆமையோடு பற்பம் விராகன். 3 முன் சாறு கொதிக்கையில் சூரணம் போட்டு மெழுகு பதமாக இறக்கித் தேத்தாங் கொட்டைப் பிரமாணம் உருண்டை செய்து முலைப் பாலில் கொடுக்கவும்

கணைக்கு என்ணை :-

பச்சை ஆமணக்கெண்ணை படி. ½, கடுப்பட்டை சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, வெந்தயம், ஈர வெங்காயம், ஏலம், கருவேப்பிலைப் பட்டை கருவேலங் கொழுந்து கடைச் சரக்கு வகைக்கு விராகனிடை. ½ இது சூரணம் செய்து எண்ணையில் போட்டு சிவந்து பதத்திலிறக்கவும்.

தாப சுரத்துக்கு:

மணலை வழித்து வெச்சென்னில் மணக்க விழ நீர்கிளை த்தி
குணமே கொள்ளு மெழுமிச்சம் கொடிய பழத்தின் சாறு விட்டு
தினமே சீனி மந்திரிக்க தேன் பேரீந்து அதிமதுரம்
மணமே கோடி கணங் கோட்ட மதிக்குஞ் சீரகமது கொள்ளே.

கொள்ளே மருவுஞ் சென்பகமும் குளிருஞ் சாத்திர வேதியது
முள்ளே மதிக்கு மிருவேலி அறவுஞ் கொடிய தற்கோலம்
துள்ளவே போந்த நெற் பொரியும் சுக்கு மாதளம் பழச் சாறுந்
கொள்ளீருள்ளே பரிதாபங் குழமுஞ் சுரமு மாறிடுமே.

பஞ்ச மூலக் கசாயம் :-

சுக்கிரெடு திப்பிலி துய்ய திப்பிலி மூலம்
தக்கிரெரு வேலியுஞ் செவியமும் நற்கசி
ஒக்க யிடுங் குடிநீர் உண்டிடவு மன்றே
அக்கினி எழப்பும் சீரண சுரம் போமே.

ரெணத்துக்கு என்ணை :-

துத்தம் விராகனிடை. 3, துருசு விராகனிடை. 3, பச்சை வெட்டு விராகனிடை. 6, சாம்பிராணி விராகனிடை. 3, சாதிலிங்கம் விராகனிடை. 2, மொழுகு விராகனிடை. உ, வசம்பு விராகனிடை. உ, மிருதார் சிங்கி விராகனிடை. உ, பூண்டு பலம். க, செம்பிருபட்டை பலம். ½, நல்லெண்ணை படி. ½, இது வெல்லாம் பதமா யெரித்துக் கொள்ளவும். இதில் கூட்டுகிறது விருள்ள பட்டை எல்லாம் கூட்டிக் கொள்ளவும்.

நசியம் :-

அகத்திப் பருப்பு, சுக்கு, திப்பிலி, அரக்கை, காயம், புங்கு, வடக்கு வேர், முருங்கைப் பட்டை இது வெல்லாஞ் சமன் கூட்டி நசியத் தட்டி சிறுநீரில்

நசியம் விடவும். சன்னி தோஷ முதலானது தீரும்.

<u>சீர்மாலை சுரத்துக்கு கசாயம்:-</u>

நெருஞ்சி வேர் பிடி.க, சிறுபூளை வேர் பிடி.க, முடக் கொத்தான் வேர் பிடி.க, சங்கம் வேர் பிடி.க, கீழாநெல்லி பிடி.க, கரிசிலாங் கண்ணி பிடி.க, சொறைத் தண்டு பிடி.க, நீர்முள்ளித் தண்டு பிடி.க, பேப்பீர்க்கு பிடி.க, சிறு கீரை வேர் பிடி.க, சுக்கு திப்பிலி, மிளகு, முண்டு, சீரகம் கசாயத்தில் முடிந்து போடவும். இந்தப்படி ஆறு வேளை கொடுக்கவும்.

<u>சுராங்குசம்:-</u>

கெந்தகம் சாதிலிங்கம், வெங்காரம், ஓமம், திப்பிலி வகைக்கு பலம்.க, எலுமிச்சம் பழச் சாத்தில் மூன்று நாள் ஒவ்வொரு சாமமாக அரைத்துக் குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலத்திப் பரணியில் வைத்துக் கொண்டு சீதசுரம், சிலேற்றும சுரத்துக்கு கஞ்சாங் கோரைக் கசாயத்தில் கொடுக்கவும். மற்ற சுரத்துக்கு வெந்நீரில் கொடுக்கவும். புளி, புகை விடவும். உப்புக் கூட்டவும்.

<u>மூத்திரசம்:-</u>

நாவி.4, குத்தம்.4, கிழங்கு.4, கெந்தகம்.க, புள்ளி மான்.16, வெளிமான்.16, சித்திரமூலம் கசாயம் அரைப்பு நாள் ஏழு. அப்பிரகம் சுத்தி பண்ணிப் போடவும்.

<u>ராசோக்கியம் விரேசனக்குளிகை:- சகல வியாதிக்கும்:-</u>

சாதிலிங்கம், வெங்காரம், வாய் விளங்கம் இது சமன் கொண்டு நேர்வாளத்துக்குச் சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலொரு சாமமரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு விரேசனத்துக்கு ஒரு குளிகை வெல்லத்திலிடவும். மீறினால் மோருஞ் சாதமுஞ் சாப்பிடவும்.

<u>சேற்றுமமால்:-</u>

நெஞ்சம், மார்பும் உலர்ந்த தலை திரும்பும். இதற்கு மாதளஞ் சாற்றில் ஒரு குளிகையிடவும். பத்தியம் வெந்நீரும் சோறும். மஞ்ச குன்மத்துக்கு நொச்சிச் சாற்றில் ஒரு குளிகை இடவும். பத்தியம் மோருஞ் சோறு, சீரக கசாயமும் கொள்ளவும். உஷ்ணத்துக்கு நெல்லிக்காய்ச் சாத்தில் ஒரு உருண்டை இடவும். பத்தியம் பசுவின் மோருஞ் சோறும்.

வாய்வு குன்மத்துக்கு கீழ் வயிற்றில் சீழ் விழும். கை கால் சுழன்று வரும். வெள்ளை வாந்தி வாய் நீர் வரும். இதற்கு வல்லாரைச் சாற்றில் ஒரு உருண்டை இடவும். பத்தியம் நொய்க் கஞ்சியாம். பித்தம் இருவத்திரண்டு வகைக்கும் மார்பு யெரியும். உப்பிச முண்டாம். புளிச்சேப்ப மிடும். இதற்கு வெள்ளாட்டுக் கோமியத்தில் ஒரு உருண்டை இடவும். பத்தியம் நொய்யரிசிக் கஞ்சி சோறு வெந்நீராகும். வயறு கழிச்சலானால் மலடிகையில் தண்ணீர் மோர்ந்து வரச் சொல்லி அதைக் குறுகக் காய்ச்சி அதில் பாதி குளிகை இடவும். சீரகப் பொடியும் குளிகையில் பாதியிடவும். எருமைத் தயிர், தொப்புளுக்கு கட்டுறதுமாம். இளைத்திருந்து செரியாமலிருந்தால் வெந்நீரில் கொடுக்கவும். பத்தியம் காச்சு மோருஞ் சோறுமாம். வர்தம் எண்பத்து நாலு வகைக்கும் ஒரு குளிகை மாதளையிலைச் சாற்றிலிடவும். பத்தியம் பாலுஞ் சோறும். அதி வாதத்துக்குப் பசுவின் பாலிலேயும் நெய்யிலேயும் குளிகை யிடவும். பத்தியம் கஞ்சியும் சோறுமாம். சுவாச காசத்துக்கு மேல் மூச்சுப் போகாமலிருந்தால் உடம்பு மிளைத்திருந்தாலல் நஞ்சுண்டான் சாத்தில் ஒரு உருண்டை இடவும்.

பத்தியக்*நொய்யரிசிக்*கஞ்சி*சோறு*வெந்நீராகும்*.*வயறு*.கழிச்சலானால்*மல

புறவுஞ் சோறமாம். பெருவயறு யுக்கிலல் கல்லைப் போலே, யிருக்கும். தொப்புள் மூக்கிலல். உள்ளே. போம். கீழாலே வலம் விடாது. இதக்குப் பளியிலைச் சாத்தில் ஒரு உருண்டை. இடவும். பத்தியம் பாலுஞ் சோறமாம்.

கோட்டாஞ்சி செயமக்கினி வைக்க:- 6.12.63.

சூதம் விராகனிடை. 4, மனோசிலை விராகனிடை. உ, கெந்தகம் விராகனிடை. 8, காந்தம் விராகனிடை. 16, லோகம் விராகனிடை. 2, ஆக வகை 5-க்கு கத்தாளஞ் சாறு வார்த்து வை நாள்ரைத்து சித்திரை மாதம் முன் ஏழு பின் ஏழிலாவதர் ஒரு கலத்தில் தப்பி அந்த அடயை வெய்யிலிலே வைத்து எடுத்துக் கொண்டு தீரும் வியாதி வன்மம், பாண்டு ரோகம், பீலிகை பயித்தியம், புளிக்தேப்பம்; குளிர் சுரம் விடும். சகலத்துக்கும். இஞ்சிச் சாற்றிலிடவும்.

சுரர்ங்கிடம்.

சுத்தி பண்ணின கெந்தகம் விராகனிடை. உ, சுத்தியான சாதிலிங்கம் விராகனிடை 3. சுத்தியான நேர்வாளம் விராகனிடை. 4 இந்த வகைகள் ஒன்றாக கூட்டி நெட்டைப் பேய் மிரட்டிச் சாறு விட்டரைத்துக் குண்டு மணிப் பிரமாணம் உருண்டை செய்து நிழலுலத்தி யெடுத்துக் கொண்டு சீத சுரத்துக்கு சுக்கு கசாயத்தில் உரைத்துக் கொடுத்தால் நாலு ரெண்டு திரம் வேதியாம். பிறகு வென்னீருஞ் சாதமுங் கொள்ளவும். எந்தச் சுரத்துக்குமாம்.

குளிர் சுரத்துக்கு அரிதார மாத்திரை:-

பொன்னரிதாரம். பலம். க, சுண்ணாம்பு நீர் பலம். உ, இது இரண்டு வகையுங் கல்வத்திட்டு கருப்பு வெத்திலைச் சாற்றிலரைத்துக். குண்டு மணிப் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலத்தி வைத்துக் கொண்டு குளிர் சுரத்துக்கு ஒரு மாத்திரை கருப்பு வெத்திலை யிலே வைத்துக் கொடுக்கவும். வாந்தி பிராந்தியாம். சுரம் மத்தியானத்துக்கு நிற்கும். மெத்த உபத்திரமா யிருந்தால் மோருஞ் சாதமுங் கொடுக்கவும். இச்சா பத்தியம்.

பூராதிக் குளிகை:-

ரசம், கெந்தகம், பச்சைக் கற்பூரம், லவங்கம், சாதிக்காய் இது வெல்லாம் நன்றாய்ப் பொடி செய்து இந்த மருந்து ஒரு பங்கும் நேர்வாளம் இரண்டு பங்கும் கத்தா ளஞ் சாறு விட்டரைத்து உந்துப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலத்தி பலமறிந்து யேறக் குறையச் சர்க்கரையிலிடவும். மூன்றே முக்கால் நாழிகையில் எட்டு வகைச் சுரமும் விடும். கை கண்டது. பத்தியம் இச்சா போசனம்.

இச்சா போசன மாத்திரை:-

Incomplete

ரசம், கெந்தகம், தாம்பிர பற்பம் இது மூன்றும் சமனிறை இதில் மூன்றத்தொன்று நாபி யிந்த மருந்துக்கெல்லாம் ரெண்டு பங்கு சாதிலிங்கங் கூட்டி நொச்சியிலைச் சாறு விட்டு ஒரு சாமமரைத்துப் பாசிப் பயறளவு உருண்டை செய்து கொண்டு நொச்சியிலை பச்சைச் சாற்றில் பதினைந்து மிளகு பொடி பண்ணிப் போட்டு ஒரு குளிகை இடவும். சகல சுரமும் உடனே வேர்வையிட்டு நிற்கும். இச்சா பத்தியம். தயிர்ச் சாதம் சர்க்கரைப் பானகம். ஸ்ரீசங்கை புலகாரங் .காய்ந்த ஜலம் மாங்கிஊடிஞ், மிளகு நீர் சந்தனம் கற்பூரம் பசி மூடிக்கவும். (. ஏடுகள் இல்லை).

வாத ராட்சதன்:-

ஊமத்தை விரை, வெண்கார மைந்து உதவுகின்ற கெந்தகந் தாளுரய்க் கூட்டி
நாமத்திற் பெரியதோர் நாபியேழாம் நலமான யிரத மெட்டு நிறுத்துக் கொண்டு
சேமத்தே நின்பழச் சார் சித்திர மூலம் திரமான வேர்ச். சாற்றிலத்துவுண்டை
வாமத்தே வாய்வு சுரந் தீருமென்ம் மதித்துரைத்த வாத ராட்சத மிதாமே.

ரசராச் மாத்திரை:-

சூதமெட்டு நிறை நர்வியே நிறை துய்ய கெந்தி நேர்வாளமுஞ்
சோர்விலாத வரிதாரமும் பொரிவு காரமும் வகைகள் சொல்லுவேன்
நீதியாக வொவ்வொன்று தானளவு நிறைகளாக றென நிகழ்த்திடுர்
நின்ற திப்பிலியு மிளகு சுக்கு மது நீ யறிந்த நிறை மூன்றதாய்
காதலான ஷமத்தின் வித்து நிறை கணக்குடைலென உரைத்திடு.

காட்டில் வாழ் கொடிவேலி வெந்திடு கசாயம் விட்டரை ஏழு நாள்
வேதநூர் மொழி தப்பாமலே லெவ்வளவு விரையவே குளிகை செய்திடு
மிகவுலத்தி யொரு பறலி தன்னிலடை மிகு ராச்ரச ராசனே.

மிகு ராசரச ராசனென்ற தனை விளையுமிஞ்சி ரச மீதிடில்
வெருலி வீழ்ந் தயருஞ் சன்னி வாத முதல் மேவு சேற்றும சுரம் பித்தமும்
மாறு தொந்த சுரம் வயிறு மந்த சுரம் மற்றுமுள்ள சுரமானதும்
மயக்க மற்று மிக மயற்பிரிந்த விடுமான பத்தியஞ் சொல்லுவேன்.
கூறுகின்ற பசுவுடு பாலிழுடு கொச்சையாகிய வெள்ளாட்டின் பால்
கொண்டு வந்து தொடு வுண்டிடும் பெரிது கொடியதாக மெய்ம்பிலுல்
ஏறுகின்ற மர மீதிலே விளையு மின்பமான யிளநீர் தனை யியல்புடன்
கொடு மிலாது சர்க்கரை யிள வென்னீர் தன்னிலிடு மின்னே.

4. கெருடந்திவச ரசம்:-

மடலரிதாரஞ் சூத மனோசிலை சாதிலிங்கம், விடமுள்ள பொன்னூமத்தை வித்தக
கெந்தகம் வெங்காரம்,
திட நவச்சாரந் தத்தம் திரிகடுகு லவங்கந்தான், கடுகுரோகணி தான் வெந்த
கசாயங்கள் வைத்துக் கொண்டே.

5. கொண்டதோரிஞ்சிச் சாற்றில் குறிக்கரை நாலு சாமம்
மண்டியே பயறு போலுண்டை வகை யறிந்தும்பிராகில்
கொண்டதோர் சுரமுந் தீரும் சோகையுங் குளிருந் தீரும்.
வென்ற தோராடாதோடை வெந்திடும் பிட்டுச் சாறே.

6. பிட்டிடுஞ் சாற்றிலுண்டை பேனியே செய்திராகில்
மட்டில்லாச் சீத தோஷம் மாற்றிடு மிஞ்சிச் சாற்றில்
கட்டளையாக வுண்டை கதிக்கவே செய்யத் தாபம்
விட்டிடும் வெப்புத் தீரும் விளங்கிய கெருடராசன்.

7. சங்கு நாத மாத்திரை:-

ஆதிலிந்தரி தாரமொன்றிரு அம்மை விந்து மனோசிலை
கோது திப்பிலி காசினியுடன் கோதையே வகையாக வொன்
றீது ரெண்டிடை சங்கு எட்டிடை மோதி வட்டம் சாற்றினில் முடுகி யோடி
யரைப்பதே.

8. அரைத்த யிந்த மருந்தாமந்த நொச்சிச் சாற்றினிலரைத்த
யிந்த மருந்த பயறளவுண்டை வகுத்து பின்ரைத்த
யிந்த மருந்த தேனிலவனி தன்னில் விடுவிரும்
உரைத்திடுண்டை உறுதியாகக் கொடுமினே.

9. மிருதோஷ பாண ரசம்:-

காயரோகம் விக்கல் சத்தி கடிய சோகை பாண்டுவும்
வாய்வு சூலை குன்ம வாத விக்கந் தன்னுடனே
ஓய்விலாத வயத்து வலி உண்மையாந் தேனிலிட
மர்ய நோவு சங்க நர்த்த வல்ல பத்துமுண்மையே.

1. பாருல்கி லவச்சாரஞ் சத்திச் சாரம் படிகாரமுடன் பஞ்ச லவணங் கூட
சீர் வெள்ளைப் பாஷாணம் நர்பி கெந்தம் திறமான கெவுரி பாஷாணஞ் சேர
பூரணமாந் தொட்டி பாஷாணத்தோடு புகழு மிர்தார மஞ்சிலையும் நாபி
வாறணமாங் கோஷ்டமுடன் வசம்பு நல்ல வர்கான் கெந்தகமும் மருவிக் கூட்டே.

2. கூட்டுமதி லோக பற்பம் அப்பிறக பற்பம் குணமான வெண்காரஞ் சமனதாக
நாட்டியுள்ள திரிகடுகு தயிலந் தன்னில் நலமாகவே யரைத்து குப்பி தன்னில்
வாட்டமுடன் தீர் மூடித்து ரெண்டு சாமம் வகையாக யிட்டு எடுத்துக் கொண்டு
தாட்டிகமாய் வெள்ளெள்ளித் தயிலந் தனினில் சாதவா யொரு பொழுது அரைத்துக் கொள்ளே

3. கொள்ளுவீர் கொடிவேலித் தயிலந் தன்னில் குறிப்பாக வொரு பொழுது அரைத்துக் கொண்
தெள்ளியதோர் நேர் வாளத் தயிலந் தன்னில் திறமாக வொரு பொழுது வரைத்து நன்று
யுள்ள குன்றிப் பிரமானம் உருண்டை பண்ணி உகந்த பஞ்சதாரத்தில் கற்பூரத்தில்
கொள்ளுவீர் சன்னியுடன்னபிறேதமாகுல் கூவென்றே யெழுந்திருந்து குலாவுந்தானே.

<u>மகா அக்கினி குமார சஞ்சீவி மாத்திரை:-</u>

<u>அகவல்:-</u>

சீர் பெருகு மகா அக்கினி குமார சஞ்சீவி தாரணியில் கும்ப முனி தானுரைத்தார் பூரண
மாய் சுத்தி செய்த நேர்வாளஞ் சேர்ந்த ஒரு படி தான் பத்தியுடனே நாட்டில் பசுவின் பால
புத்தியுடன் நன்றாய்க் குளினி விட்டு நாலிரண்டாய்த் தான் காய்ச்சி வென்றியுடனே கடைந்த
வெண்ணை தனை ஒன்று படச் சேர்ந்த சிமிளில் வைத்து திறமாகவே மோரில் வாய்ந்த தங்கச்
சுய்யனற் பொடியும் கூர்ந்த உருக்குப் பொடி பலமும் உகந்த சுத்த நாகமுடன் திருத்தமுடன்
பித்தளையுஞ் சேர்ந்த செம்பும் பெருத்த வெங்கலமுந் திராப் பொடியும் வெவ்வேறு பல
மாய் மங்கை பவளக் கால் மனோசிலையும் யிங்கிதமாய் பொன்னரிதாரம் போந்த அரிதார
முடன் வன்னிரதம் வகை பலமாய்ச் சொன்னதொரு சூதந்தம் பலம் நாலு கதித்த கொத்த
மல்லி ரெண்டு ஆய்ந்த பொடி பண்ணி அடவாகச் சேர்ந்த பொடி மோரதனில் போட்டு
முதிரவே காய்ந்த பின்பு வாரமுடனே திறகி வந்து தென்னுல் சீராய்க் குளிக் கல்லிலே
சாய்த்து குமரி யதின் சாறு விட்டு அருக்கறவே சாமம் அரைத்து நன்றாய் பருக்கறவே
காய வைத்துத் தான் குகையில் கதித்த மருந்தை வைத்து வாயளவு மேலோடு வட்ட மிட்டு
தாயெனவே சீலை மண் தானேயு திறமாகச் செய்து பின்பு கோலமுடன் காய்ந்து குணமாக
வாலிபமாம். சட்டி தனிலே வைத்துச் சதிராகச் செம்மண் யிட்ட பொட்டி சுத்திவா.
ஒத்தி வச்சுத் திட்டமுடன் மேல்ச் சட்டி மூடி விதமாகச் சீலை மண் தான் நாலு சுற்றுமே தட
நன்றாக சாலப் படியாய் நாலு சதுரமதாய் யிரண்டு முழக் குழியதனில் யேல்முடன் வைத்து
எருவடிக்கிச் சாலவே கெசபுடமாய் வைத்துக் கெம்பீரமாக்கி யசையா திரவு பகலான
பின்பு வகை படவே தானெடுத்துக் கொண்டு சதிராய்க் கடைச் சரக்கு ஊனமில்லாத் திரிபல
கை திரிகடுகு ஓமமுடன் மானவெயிர் சீரகமுஞ் சக்கரையும் சேர்ந்த வளையலுப்புக் காரணமா
யிந்துப்புங் கல்லுப்பும் பூரணமாங் காட்டு சுருங்கைப் பட்டை கதித்த சித்திர மூலமுடன்
கோஷ்டமதி மதுரங் கொத்தமல்லி தேட்டமுடன் அக்கிராக் கார மடவான வாய் விளங்கப்
சிக்கு தி நாகப்பூச் செவியமும் பக்குவமாம் சாதிக்காய் சாதிபத்திரி சவுதம்பருஷ்டகமும்
தாளு முலை தாங்கி தாளிச பத்திரி நீதியுள் லவங்கம் லவங்கப் பத்திரி லவங்கப் பட்டை
சங்கம் வேர் கலங்கும் பழுபாகல் காடு மாகாளி துலங்கு கிளி மூக்கின் தன் கிழங்கு கேள்
வகைக்கு ஒர் பலமாய்த் தெளிவா யிடித்துச் சூரணமாய்ச் செய்வித்து அளிவில்லாத் திப்பிலி
மூலஞ் சேர்ந்த பச்சை நாவியுடன் பொற்றலையின் சாற்றாலொரு பொதரைத்துச் சோர்ப
மில்லா வெள் வெங்காயத் தயிலம் விட்டரைத்துத் தானுருளள்ளியே குன்றுமணி யளவாகத் தெ
மையாய்த் தானுருட்டியே நிழலில் தந்திரமாய்க் காய வைத்து ஊன்பிற நெல்ப்
புடமோர் மண்டலந்தான் ஆனபின்பு கேள் மியிலே திரிகடுகு கூட்டிச் சேர்ந்த கசாய
மதில் ஒரு குளிகை தான் கொடுக்க உண்மையுடன் வெருவி வரும் மூன்று சுரமும் முறிந்தோடும்
சரக மொன்று கொத்தமல்லி யதிலொரு உருண்டை கொள்ளத் தாகமுடன் அக்கினி சுரந்

தாப சுரம் ப்சா சென்லே யோடுமே. சொன்னே முரைக்தோ மலைதாங்கி
ஓடும் நெல்லி வத்தல் சுக்குடனே தேடி யிதமாய்க் கசாய மிடுவீ ரொரு குளிகை
யதமாங்கிருமி யறிந்த கொள்வீர் விதமாக யிஞ்சிச் சார் தேனிலிடுவீரொரு குளிகை
பஞ்சு போல் சன்னி பதினென்டும் வஞ்ச மற்றுத் தீருமே போமே திரமாக மலைதாங்கி
வேருக் கருகசி விதமாக வோருண்டை கூட்டி யருந்தக் குறித்த சன்னி பல்கிட்டி.
வாட்டமுடன் வாய் மூடி மயங்கியதும் ஓட்டுமே..

மெய்யாகக் கொள்வீரால் விளங்கும் குடல் வாய்வு எய்யு மிந்திர வாய்வு
எரிமுன்மம் மய்யுமற ஆடாதோடைச் சாறு மானதொரு மாத்திரையுந் தேடி யிடத்
தீருமே செய்யக் கேள் நாடியதோர் பீனிசங்களொன்பதுக்கும் பேயிப் பசுவின்
நெயிடானவுரைத் தொரு மாத்திரை துளசி* மானிலக்கீர் மூக்கில் நசிய மிட
முறிந்தோடும் பீனிசங்கள் தேக்கிய நொச்சிச் சாறு திப்பிலியும் போக்கிக் கருக்கிப்
பொடியைக் கலந்த சாற் கூட்டிப் பெருக்கிய மூக்கிலிடப் பீனிசங்கள் வெருக் கொளுமே
நொச்சி குப்பை மேனி வேர் நேர் மஞ்சள் வேளை வேர் வீச்ச மிளகு நல் வெள்ளை
யுடன் வச்ச பொடி கூட்டியே காயக் கொதித்த பின்பு விட்டிறக்கி தேட்டமுடன்
மாத்திரையிற் சேர்ந்த பின்பு வாட்டமுடக் தேய்த்துத் தலையில் திருத்தமுடன். மூன்று
நாள் யெக்கிய உசிலம் பட்டை யிடித்த சார் தீத்தி யிள வென்னீர் விட்டு யிசைய முருக்
காட்ட விளையுங் கபாலத்தில் வியாதியெல்லாம் தள தளென விட்டோடுஞ் சொன்னோம்
வேப்பெண்ணெ மாத்திரையுங் கூட்டளையாய்க் கூட்டிக் கலந்திடவே திட்டமுடன் கால்
வாதம் நரி வாதம் கதித்த மதி வாதம் சாலவே தீருமென்று சாற்றினர். சீலமுடன் சத்தி
சாறணைக் கிளங்கு தளித்த சீனா நெல்லி வைத்த மலைதாங்கி வகை மூன்று மெத்தவே
காச்சிய நீரில் கலந்து ஒரு மாத்திரையும் பாச்சிப் பகிரொரு நாள் பத்தியமாய்
ஆச்சியரைக் கொண்டா வலிப்பாக முறித்தி வகை யத்தினையுந் தன்டாமரை நீர்
போல் தாமேடுங் கண்டீரே. நொச்சிக் கொழுந்து நகரு மகத்திப் பருப்பு வச்ச
மலை தாங்கி வன முருங்கை யிச்சையுடன் சேர்ந்த நீரெல்லாஞ் சிறுநீருடன் கூட்டித்
தேர்ந்து நசியு மிடத் தீருமே.

மாந்த வலிப்புட்னே சன்னி மதித்த பதினென்றுங் கதித்த முசல ~~வாய்வு~~
கண்டன் கபால சன்னி சலித்தோடு மூச்சையுடன் வாய்வு முறியுமே யுண்மையிது
ஆச்சியரே கொத்தமல்லி யதிமதுரம் பூச்சியையாய் நெல்லி வத்தல் சுக்கு நிறைந்த
வேப்பீர்க்குடனே நல்ல கசாயமிட்டு நன்மையுடன் வெல்லவொரு மாத்திரையும் கூட்டி
வகையாகக் கொள்வீரால்ச் சாத்தும் பயித்தியங்கள் தாமோடும் யெத்தியதோர் .
திப்பிலியுந் தேனுஞ் சிறந்த பொடியுடனே ஒப்ப ஒரு உருண்டையுடனி கூட்டி வைப்பாய்
வெருகடிதான் கொள்ள விட்டோடுஞ் சேற்றுமங்கள் ஒருமிக்கத் தொன்னூற்றாறு மோடுமே.
பரிவாகச் சீந்திக் கிளங்குச் சார் திப்பிலித் தூளான பொடி சார்ந்தமுடன்
சர்க்கரையுந் தான் கலந்து பாந்தமுடன் மாத்திரை யொன்று வகையாக நாள் தோறுஞ்
சேர்த்துத் தினந் தினமுந் தின்பீரால் வாய்த்த கிரந்தியுடன் மேகங்களிரு மூன்றாற்றிரு
பத்வு மிறந்து விடுமென்றே யியம்பினர் திரும்படவே. ஐய்யாந்த கரைச் சார் கலந்த
கண்ணிலே யிடவும். மெய்யாய் விஷம் மீளும் வித்தகரே. பொய்யாத கோஷ்டங்
கோரோசினையுங் கூட்டி முலைப் பாலில் தாஉட்டிகமாய்க் குளிகை தானுரைத்துத்
தேட்டமுடன் நெற்றி தனிலிடவும் நித்தம் வசியமதாய் யுத்தபடி. கேளு முரைத்திடுவோம்
பத்தியுட் வீறுமை கல்லாமை நீர்க்கோவை தன் கவிசை தீரா வியாதிக்குஞ் செப்பக்
கேள் சீராக காட்டு முருங்கைப் பட்டை கடுக்காயுந் திப்பிலியும் வாட்டுங் கசாயத்தில்
மாத்திரையங் கூட்டிக் குடிப்பீரால் ரோகங் குடிப் போகுங் கண்டீரே.. வடிப்பமுடன்
கண்ணில் மதியாதே படிப்படியே. வந்த தொன்னூற்றிருறு மதியாத நோவுக்கும்
நந்தியா வட்டப் பூ நல்ல சார் தந்திரமாய் கரிப்பன் சார் நின் பளச் சார் கனத்த
முலைப்பாலில் தரிப்பாக மாத்திரையுந் தானுரைத்து விருப்பாகக் கண்ணிலிட விட்டோடுங்
கண்டீரே. முருப்படியே திப்பிலி தான் செய்தபடி சேர்ந்த தொரு செந்தகமும் வைப்பாம்

விராகனிடை மாத்திரையுஞ் செப்புடன் தேனில் தின்முந் தெகிட்டாமல் கொள்வீராய் யூனமற யிளையுடன் பிசமும் மானதொரு மந்தார காச மதித்த சுவாச காச மந்திரமே போமென்றறிந்து கொள்வீர். விந்தையுள்ள வட்டத் திருப்பி வேர் மாயாத நீர்முள்ளி யிட்ட சங்கு நாயுருவி யிவை கூட்டி திட்டமுள்ள நிலையாவாரை வேரும் நிறைந்த கசாய மதில் விலையாகத் திப்பிலியும் வெங்காரம் மலையாதே மாத்திரையுஞ் சட்டி வகையாகக் கொள்வீரால் பார்த்து வந்த காமாலை பாண்டுருவம் மாற்றதே மேவும் விஷ பாகம் வீக்கமில்லை யத்திணையும் பாவமது போலப் பறந்தோடும் நாவலரே தீராத கல்லடைப்ப சேர்ந்த சதையடைப்பின் தாராளமாக வந்தால் சக்கரையும் சீரான வெள்ளரியின் வித்துடனே வெங்காரமுங் கூட்டி விளா [illegible] காந்தி வெந்தனீர் தெள்ளிமையால் நாடியொரு மாத்திரையை நன்றாகவே கூட்டி தேடிக் குடிப்பீரால் தீருமே ஒடி மல சலந்தான் கட்டி மயங்கில் சிரசுத்தை அலையாமல் வெந்தனீரானது வில்மலையாமல் வைப்பீரொரு குளிகை மலஞ் சலந்தான் விட்டோடுந் தப்பாது கீரிப் பூந்தான் வயிற்றில் இப்படியே மேற்ற மிகுந்த தென்றல் மேவு நிலையாவாரையின் வைத்த கசாயமதில் மாத்திரையும் பத்தியுடனுண்டால் புழு விழுமே. புல்லையுடன் கேட்டருளீர் பண்டு சிமிளில் பதித்த வெண்ணை நன்றாக உள்ளங் கால் தொப்புளி வன்மையுடன் தடவத் தள்ளாத பேதிய தாகும் முள்ள பணம் பாதி நிறை சர்க்கரையில் பன்பாகக் கொள்வீரால் காதயுடன் பேதி கழியுமே. நீதியுடன் நின் பழத்திலே தடவி நிறை முக்நதே பார்க்க யன்பான பேதி யதிகமாம். வன்பான ரோக மிகுந்த தென்றல் நோய் தனக்கு மண்டலந் தாகமுட கொள்வீரறிவுளரே. பாகமுறை நாதனருள்ப் படியே நன்றாகச் சொன்ன மொழி யோது தமிழ் மாமுனிவ்ரோதிமுர் நீதியுடன் கொண்டால் யூனமாகுங் கொள் குறியைப் பார்த்து விண்டார்க்கிதுவே விதி.

அகஸ்திய சுவாமி அருளிச் செய்த மகா அக்கினி குமார சஞ்சீவி மாத்திரை முறை முற்றும்.

<u>மலைச்சுமி ரசாயனம்:--</u>

1. சங்குடன் சங்கங் குப்பி தயவுடன் சித்திர மூலம் பொங்கமாம் அசுவ கெந்தி புகழ்
   நிலப் பனையின் வேரும்
   தங்க நன்னாரி வேரும் சொல் விலாமிச்சம் வேரும் யிங்கிவை செங்கத்தாரி யிசைந்
   திடுங் குமிள் நெருஞ்சி
   மங்கு பூவரசம் பட்டை வகைக்கொரு பல முரைத்தோம்.

2. உரைத்திடும் ஓமம் கோஷ்டம் மோர்த நாகேசரங் கூடப்
   பருத்த சுக்கடனே திப்பிலி பழகிய மிளகு தாளும்
   திருத்தமாம் வாய் விளங்கம் சேர்ந்திடும் லவங்கப் பட்டை
   யர்த்தையும் லவங்கப் பத்திரி யருஞ் சடாமஞ்சி கூட்டே.

3. கூட்டிடும் பறங்கிப் பட்டை குறிப்புடன் சமமாய்ச் சேர்த்து
   தீட்டு சர்க்கரை தேன் நெய்யுஞ் சேரவே நாளி விட்டு
   திமிடிப
   பூட்டிய ~~[illegible]~~ தாக்கிப் புத்தியா யெடுத்துக் கொண்டு
   நாட்டமாய் நாற்பத்தெட்டு நாளது கொள்ளுவீரே.

4. கொள்ளவே சகல மேகங் குன்மமுங் குலை குட்டம்
   பள்ளிய மலத்தின் கட்டுப் பயித்திய வாய்வு சோம்பல்
   தெள்ளிய தாது வன்டாம் சேர்ந்திடு விறனமும் போம்
   முள்ளத்தின் மந்திரி சொன்ன வுகந்திடு ரசாயனந்தானே.

5. <u>கபால குலைக்கு</u>:-

   மிளகறனை பட்டையுடன் சித்திர மூலம் வெள்ளறுகு சிவனார் வேம்பு
   சாதிலிங்க களபமுடன் செந்தயமும் வெள்ளைக் குங்கிலியம் கஸ்தூரி மஞ்சள்
   மஞ்சிட்டி வகை ஒன்றாய் வளமையுடன் பதினெட்டுப் பொட்டணந் தான்

6. செய்த பின்பு காலசந்தி ரெண்டு நேரந் திரமாகப் புகை சுங்கான் தன்னில் வைத்து
அய்ய மறப் புகை வாங்கி ஒன்பதா நாளா மளவும் யிப்படியே புகைதான் கொண்டு
மெய்ய மருங் கன்றளே பத்தியந்தான் வாசுான் புளியும் டிமாற்றிவிட்டால்
மெய்யிறவே சுபால நோய் தீருமென்று விளம்பினர் தமிழ் முனிவர் விரசிறலே.

சன்னிக்கு:- உருண்டை

7. சுக்குடனே முந்திரிகைப் பழம் பேரிந்த சுசமான திப்பிலியு மிளகுங் கோஷ்டம்
பச்சுலமாம் அதிமதுரங் கடுக்கா யேலம் பார் நெல்லி தானிக்காய் லவங்கம் கூட
மிக்க யிருவேலியுட னிலுப்பைப் பூ மிக்க நிறை சரியாக நிறுத்துக் கொண்டு
சிக்கெனவே கருப்பம் பால் தன்னை விட்டுத் திறமாக வொரு பொழுது அரைத்துச் சேரே.

8. சேர்த்திடுவாய் ஈடிவ ஊக் காய தான் மட்டுச் சிறந்த வுர்டை யளவாக உலத்திக் கொண்டு
நாத்திசையில் சன்னியது பதிமூன்றுக்கு நல்மாக நாடியது வகைதான் பார்த்து
யெற்றதென் முலைப் பாலில் விதங்கள் பார்த்து யிடுவீரால் சன்னியது முறிந்தே ஓடும்
சாத்திரத்தின் படியாலே முனிவன் சொன்ன சன்னி பாத கவுண்டை தறனி மீதே.

9. கேகு மிலுப்பைப் பூ வொன்று கிளர் திப்பிலியுஞ் தாறென்று
வாளந்தான் ஒன்று மதித்த மஞ்சள் தானஞ்சு
கும் கோட்டந் தாளுவஞ் சுக ரோகணியும் பதினு
வாருமிவை தான் பொடி பண்ணி மதித்தே யிலுப்பைப் பூ வாங்கே.

10. வாங்கியே ஒன்று படி பூவில் மதித்த தண்ணீராய படி
பாங்காய் விட்டுக் கசாய மது பதிக்க நீர் விட்டரைத்து
ஆங்கே கடலை யளவாக அமரு முண்டை முலைப் பாலில்
தாங்காதுரைத்து ~~...~~ கொள்வீரால் சன்னி வாத சுரம் போமே.

வில்வாதி லேகியம்:-

1. சொல்லரிய வில்லை வேர் அன்புது பலத்துடன் தோன்றிய விலாமிச்சை வேர்
தாதுவிளை நன்னாரி முன்னை பெருவாகையுஞ் சொல்லரிய சிறு வாகையும்
நல்லதொரு சிறுவிளாப் பெரு விளா நாற்பூட்டி நாடு தேற்றன் வேருடன்
நயமான பாதிரியின் மொமொசுக்கையுடன் நலமாக ஒரு பலமதாய்
வெல்லரிய வேறதனை யிடித்தே கசாயமது வெந்த நீரெட்டொன்றதாய்
வாகான நீரிலே யிஞ்சியும் விளாங்கனியும் வடித்து மும்மட்டி மாதளை
வெல்லவே ரசமது வடித்த சார் வகையொன்று விதமாக நாளி கூட்டி
மெய்யான சர்க்கரையுடன் கற்க வகை விரும்பவே கூறுவோமே.

2. கூறவே திரிபலகை கிரும்புடன் திரிகடுகு கோஷ்டா நற்சீரகம் குமமான யேலம் பருத்தி விரை சந்தனம்
கூறு மிலவங்கஞ் செவியம் சேர் கடுரோகணி தேவதாரம் விளாச் சிறப்பா யிலுப்பை மலரும்
திகழ் மஞ்சள் வில்லையின் கனியுடன் நெய்தலும் நேரான முந்திரிகையும் பெருவகைக்கொரு பலங் கொண்டிடித்த தாள் பிசறிக்
குழம்பதாக பெருகு தேன் நாழியது விட்டுக் குழம்பான பின்பு நோய் தீரும் வகை கேள்
விருமரோசிகம் யெலி பாண்டு சத்தி விக்கலொடு பெருவயறதும் மேலா மகோதரம் காசமது கை கால் எரிப்பது விட்டோடுமே.

3. வெள்ளோக்காள மன்ன தோஷம் குலை உறமான புதிறெரு வகை
உதவிய சயங்கும் வெகு நாள் பித்தஞ் சுரம் ஓடும் அருபத்து நாலும்,
தேடிய பயித்திய மதுபட நெட்டுமே தீராத அஸ்தி சுரமும்
திறமான தாது மருந்திடு கிருமியது உள்ளதுந் தீராத அதிசாரமும்
நாடியே விட்டோடும் அரை மண்டலங் கொள்ள நலமுடன் உண்ட பேர்க்கு

நயமான வில்வாதி லேகியம் வகை யிது நாட்டிலுண்டான பேர்க்கு
பாடிய தமிழ்க்கும் மாமுனிவர் சொன்னதைப் பழுதில்லா விது வென்னவே
பத்தியுடனிது வென்ம நம்பினவருக்கினிது பரமன ருளுண்டாகுமே.

மகா குண்டலாதி லேகியம் :-

4. சங்கம் வேர் ரெண்டு நிறை வில் லை வேரும் சாறணையுங் கொடிவேலி தனித்த வேரும்
பங்கமறச் சாறணையும் சமனதாகப் பருத்த தொரு வாளை முன்னை குமிளம் வேரும்
யிங்கிதமாம் பாதிரியு முள்ளி வேரும் யியல்பான வஞ்சலையும் நெருஞ்சி கூட
மங்கைபரே யின்புறல் பலமொன்றாக மதித்திடித்து யிருகலம் நீர் விகையாயக் கூட்டே

5. கூட்டியே முலைப்பாலுந் தானி விட்டு குறுகவே கசாயமது ஆன பின்பு
நாட்டிலுள்ள வஞ்சலையுஞ் சங்கு நொச்சி நலமான வெத்திலையின் காம்பு நன்றாய்
தீட்டு கையாந்தகரை நாயுருவி சேரந் திற மருக்கு பொருமியுடன் துளசி கூட
வாட்டு முத்தாமணி முருக்குச் சிற தக்காளி வகை வகைக்கு ஒரு படியாய் வடித்துப் பாரே.

6. பாருமே கசாய மிட்டு வறக் கத்தாழை பதித்த மஞ்சளிஞ்சி யெலுமிச்சஞ் சாறு
சீர் பெறவ் நாறத்தங் கனியின் சாறு திறமாக வகை வகைக்கு நாளியாகத்
தாரணியில் கற்க வங்க மிளகு சுக்குத் தனி ஓமம் செவியமுந் திப்பிலி மூலம்
வீரமுடன் சிறுதேக்குக் கூகை நீறு விளங்கு திரிபலகை சீரகமு மன்பாய்.

7. அன்பான சாதிக்காய் கிரும்பரத்தை அல்வான வாய் விளங்கஞ் சிறுநாகப்பூ
பண்பான தாளிசங் கற்கடக சிங்கி பருத்தேல மில்வங்கம் லவங்கப் பத்திரி
சொம்பான வதிமதுரம் அக்கிருகாரம் அளிந்து வகைக்கொரு பலமாய்ச் சொல்லக்
நண்பாகப் பொடி செய்து நெய்யும் நாளி நலமான தேன் நாளி நாடி விட்டே.

8. விட்டு நல்ல கற்கண்டு நாளி கூட விதமான லேகியத்தில் தாம்பிர புற்பம்
வட்டமிடு லோக பற்பம் அப்பிரக பற்பம் வங்க பற்பம் காந்தமிவை வகை செந்தூரம்
திட்டமுடன் முக்கள்ஞ்சு தாவுங் கூட்டித் திறமாகக் கொண்டிட்டே காச மோடு
மட்டில்லா யிருமலுள் மாந்தை யோடு மங்கார்த சய நோவு மாற்றுந் தானே.

9. மாற்றி விடு மகோதரங்கள் குன்ம நோய்கள் வயற்றிலுள்ள கிருமியுடன் மூலம் போக்கி
யாற்றுது பனிசமுஞ் சுவாச காச மருகின்ற பிற வலிப்புத் தலை நோய் தீரும்
சாற்றும் சுரம் விஷக் கடியின் விசுர்ரந் தாகம் தங்காத காமாலை பாண்டுப்பம்
மேற்ற பெருவயிறுடனே வாயுவாத் மெடுத்த சுரோணித சூலை பித்தம் போமே.

10. போமமே கெற்ப விப்புருதி யோடு பொருந்தாத குதக வாய் வயற்று நோவு
வாகாக மண்டலந்தான் கொண்ட பேர்க்கு வகையான் தேகம் வச்சிர காயமாகும்
போக மிகவுண்டாகும் புத்தி சேரும் புளி புகையுந் தானகற்றிக் கொள்வீராகில்
ஆகு மிது குரு முனிவருரைத்த நாலினருள் குண்டலாதி யிது வறிந்து பாரே.

11. மண்டை நோவுக்கு :-
பிடரி வலிக்குந் தலை நோவு பெருக வுண்டாம் பல் கூசும் படியே
காது மிகவடைக்கும் பார மயிர்க் கால் நேர்வாகும்
அடைபடு நாசி சலமாகும் அரிய கண்கள் திரண்டோடும்
வடியே சொன்ன நிறங் குறியை வகையா யறிந்து மருந்து செய்யே.

12. செய் செங்கழுநீர்க் சோகூட மது திறமா யாறு விராகனிடை
ஆயும்படியே யதிமதுரம் அடவாழ்ச் சாதிக்காய் ரெண்டும்
பாயும் விராகன் வகை யொன்றும் பதித்த பனிரெண்டாய் மதித்து
காயு மேலந் தாளென்று கதித்த கல்நார் நாலாமே.

13. ஆமே லவங்கமாருக அருள் செண்பகமு மஞ்சாளும் பூ மண் திட்டி ஓடையா யாகும்
பொருந்தி நெய்யி லெரித் தடவாய் காமன் மூக்கி லொன்று தனித்து மூன்று பணம் விட்டு
நேமத்துடனே மூன்று நாள் நிலவா யிந்தப் படி செய்யே.

14. இந்தப்படியே மூன்று நாள் யிலங்குஞ் சீகைக்காய் விட்டு
சொந்தப் படவே யிள வெந்நீர் தணிந்து விட்டுத் தான் முழுகி
அந்தத் துடனிப்படி மூன்று யடவே முழுகி யொன்பது நாள்
வந்தாலிந்த நோய் தீரும் மதித்த முனி வருரைப்படியே.

<u>கலியாணி லேகியம்:-</u>

15. நெல்லிக்காய்ச் சாறு படி நாலு கொண்டு நேரான சர்க்கரையைப் போட்டுக் காய்ச்சி
நல்லதொரு திரிபலைச் காட்டுத் திப்பிலி நயமான கொடிவேலி வேருமோமம்
சொல்லிய வெப்பாலரிசி கொற்றமல்லி தோராத விளாவரிசி கொன்றை வேரும் வல்லமையாய் மிளகுடனே பேய் மருட்டி வேரும்.

16. வாகான சீரகமும் பல மொன்றொன்றாய் ஒன்றாகத் திரி கோபம் பலமு மெட்டு
உகந்து பொடி செய்து வடி கொண்ட பாகம் நன்றாகக் காய்ச்சதொரு பக்குவத்தில்
நலமான பொடி போட்டுக் கிளறிக் கொண்டு மண்டியதோர் பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு
வளமையுடன் களஞ்சு கொள்ள மதித்துச் சொல்வோம்.

2. சொல்லரிய பிரமேக மிருபதோடு தொடுத்த தோர் காமாலை பாண்டு ரோகம்
கல்லரி மூத்திர கிரிச்சி மூலங் குட்டங் கனத்த குன்மஞ் சந்து மாரிந் தெலும்புங் கூடும்
அல்லவுடன் மிடறு தொனி நரை தான் மாறும் ஆகாத மலடியர்க்குப் புத்திரனுண்டாம்
நல்லதொரு புத்தி வரும் பலமுண்டாம் நயமான கலியாணி லேகியந் தானே.

3. <u>காலாக்கினி ருத்திரன்:-</u>

பாங்கான அபினி யிருபது விராகன் பதியவே கொடி வேலிச் சாற்றில் போட்டு
தீங்கறவே யிருபத்தொரு நாள் மட்டும் திறமாக ஊறிய பின் காய விட்டு
தாங்காமல் திப்பிலி கெந்தகமும் வெவ்வேறு தனித் தனியே விராகனிடை யிருபதாக
தாங்காமலிம் மூன்றும் பொடியதாக்கி தனித்த சித்திர மூலச் சார் தன்னை விட்டே.

44. விட்டரைத்துச் சுண்டைக்காயளவு உருண்டை விதமாகத் தேனிலொரு வுருண்டை கொள்ள
மட்டில்லா யிருமலுடன் உப்பிச தாகம் மந்தார காசமொடு சந்நி வாதம்
விட்டிடுமே கிருமி முதலான தெல்லாம் விரவு நெய் புளிப்பகற்றிக் கொள்வீராகில்
கட்டளையாய் முனி யுரைத்த வழி தப்பாமல் கணக்கறிந்து பண்டிதரே கண்டு கொள்ளே.

5. <u>பிரமேக நீர்த் தாரை எரிவுக்கு பச்சை வெட்டு வெண்ணெய்:-</u>

பாங்கான கரு நொச்சி எலுமிச்சங்காய் பழச் சாறு பசுவின் பாலெள்ளிலெண்ணெய்
வாங்கியே யொவ்வொன்று படியதாக மதித் தெரித்துச் சாறு சுண்ட எண்ணெயாக்கித்
தாங்காமல் கடைச் சரக்குப் பச்சை வெட்டுத் தனித்த தொரு குங்கிலியம் பலமு மூன்று
ஓங்கிய கற்பூர சிலாசித்து ரெண்டு உகந்த கல்நார் ரெண்டு பொடி பண்ணிப் போடே.

6. போட்டு ஒரு கொதி கொதித்த வந்தவாறே புகழ் பெறவே யிறக்கி மறு சட்டி தன்னில்
வாட்டமற விட்டதிலே எண்ணெய் சாய்த்து வாகாகச் சிலுப்பி யதில் வெண்ணெய் வாங்கி
நாட்டமாய் நாலாறு தண்ணீர் விட்டு நயமான பின் தண்ணீர் தனிலே போட்டு
பாட்டிமையாய்த் தினந் தினமுந் தண்ணீர் விட்டு பாங்கா. கனிம்பக் காயளவு தின்னே.

7. தின்று மந்தி கால மிருபது நாள்க் கொள்ளத் தீராத மேக வயற்றெரிச்சல் நிற்கும்
சொன்ன தண்டில் நீர்த் தாரை யெரிச்சல் ரெத்தந் தணுக மாச் சீய் விழுதல் சுகமதாகும்

கன்னியர்க்கு மிப்படியே கொள்ள மேகங் காதூ மெய் குழந்தை பிள்ளை யுண்டாம்
சொன்னபடி தப்பாது புல்களாறந் தொல்லுலகில் முனி யுரைத்த வெண்ணை தானே.

மூலத்துக்கு:- 7.12.63.

8. மஞ்சள் பொடி தான் பலம் ரெண்டு வளர் கோதும்பை யரிசியுடன்
தஞ்சப் படவே பல மூன்று தனித்த உத்தாமணி ரசமும்
மிஞ்சவுடனே மூன்று பல்மிதமாய்க் கலந்து ஏழாக
அஞ்சவுடனே ஏழு நாளருந்தீர் பசுவின் மோருடனே.

9. உடனே வெள்ளைக் குங்கிலிய மொன்று சாதிலிங்க மொன்றரையாம்
திட மாட்டின் கொம்பு வேர் சேர்ந்த வெள் வெங்காயத் தோல்
அடவா யோமக் கடுக்காய் மரிந்தே கோரோசினை வல்கக்கு
மிடமே விராகனெவ்வொன்று யின்சந்து பொர்டிதான் செய்வீரே.

10. செயதே எழு பொட்டணமாய்த் திரமாய்க் கட்டி வைத்த பின்பு
அய்யமார்வே புளியஞ்சியை நாடிப் பிடிக்க வல்லீரால்
மெய்யாய் மூளைத்த மூளையெல்லாம் வீறு யுருகி விழுந்திடுமே:

11. <u>கற்பு புளி தவிரவும் நேத்திர வாய்வுக்கு</u>:-
பேயின் பீக்கஞ் சாறுடனே பேணிய வெள்ளாட்டு பாலும்
ஆயுங் கையாந்தகரை வெண்ணை சேர வகையோர் படியர்க
பாய் நல்லெண்ணை யொன்னரையும் பனிக்காய்க் கூட்டி யடுப்பில் வையே.

12. வைத்தே தீபம் போலெரித்து வகையாய்க் கிரகத் திரவியந்தான்
சித்த லவங்கப் பட்டையுடன் சேர்ந்த லவங்கப் பத்திரியும்
மெத்த நாகேசுரங் கடுக்காய் மிசையுந் தானிக்காய் நெல்லி
வத்தல் கோஷ்ட மதிமதுரம் வகையாங் காட்டு மாகாளி.

13. காளியெனவே வலம்புரிக்காய் கதித்த புருஷ கெந்தமுடன்
வாழுஞ் சீர் கெந்தகங் கூட மஞ்சளுடனே மரமஞ்சள்
கேழுந் தன்னீர் மிட்டானில் கிராம்பு மஞ்சிஷ்டி வகைக்கு
ஊளிப்படியே விராகனென்று உடனே வெள்ளாட்டுப் பால் வார்த்தே.

14. வார்த்தே வகையாய்த் தானரைத்த மதித்த யெண்ணை தன்னில் விட்டு
பாத்தே பதத்தில் வடிவெடுத்து பனிக்காய்த் தலைக்கிட்டே முழுக
சாத்த மஞ்சிச் சிலையுடன் தானே வந்த சிரோஞ்சலை நேத்திர வாய்வு
முதல் தீரும் நிலவர்யத் கன்னிலெண்ணை விடே:

15. விட்டே தயிலந் தலைக்கிட்டு விரகா----------குத்
திட்டப்படியே தான் கட்டத் தீருஞ் சருவ ரோகமெல்லாம்
மட்டுப் படவே குரு முனிவன் மதித்த நூலை மெய்யென்று
சட்டப்படியே செய்வீராய் தப்பா தொன்றுந் தரணியிலே.

<u>அரோசிகத்துக்கு</u>:-

16. புழுங்கலரிசி யேலரிசி புகழ் திப்பிலியுஞ் சீரகமும்
அழுங்க சுக்கு வில்லை யோட்டுஞ்சிஞ் சீலை தன்னில் முடிந்து
விளங்க அரிசி யினம் பதமாய் வறுத்துத் தண்ணீர் ரெண்டு படி
கலங்க விட்டு நாலொன்றாய்க் காச்சிக் குடிக்க வல்லீராய்
தழங்கு சத்தி அரோசிகமுந் தானே விட்டுப் போய் விடுமே.

<u>தாகத்துக்கு</u>:-

வேப்பீர்க்கு ஒரு படி புளியீர்க்கு ஒரு பிடி, வில்வலையோடு, அத்திப் பட்டை

கருவேப்பிலை யீர்க்கு ஒரு பிடி யிது வெல்லாஞ் சட்டியில் போட்டுச் சீரகம் லவங்கம் முடிஞ்சு போட்டு அரைப்படியாகக் காய்ச்சி அந்த மருந்தை அரைத்து அந்தத் தண்ணீரில் கொடுக்கவும்.

அந்திர தாகத்துக்கு:-

1. வெட்டி வேரு யதிமதுரம் மிகுந்த சுக்குக் கொத்தமல்லி
திட்டமான சதகுப்பை சீரகங் கோஉஷ்டம் விலாம்பிச்சம்
மட்டமாகத் தான் கூட்டி மருகக் காய்ந்த நீர் தன்னி
லட்டமா அந்திர தாக மகன்று தான் சாந்தமாமே.

2. அரசுடன் கொழுந்து பட்டை அதிகமாய்க் கொழுந்துந் தோலும்
விரசு கல்லத்திப் பட்டை வியர் பெரு கொழுந்து கூட்டி
மூரசதி மதுரந் தானுமுதிர்ந்த சீரகமுங் காய்ந்தால்
அரவுமா மந்திர தாக மகன்று தான் சாந்தமாமே.

3. வில்வலைக் கொழுந்தும் யதிமதுரம் வெட்டி வேருங் கோஉஷ்டமுடன்
பல்ல வெட்பாலரிசியுந் தான் பகரும் பச்சைப் பயறுடனே
நல்ல கொத்தமல்லியுடன் ஓமமும் காய்ந்து குடிப்பீரே
எல்லாந் தாகந் தீரு மிது யிமையோர் சொன்ன குறியாமே.

சந்தனாதி தயிலம்:- அகவல்:

. மர்தரிட மேர்க மிக் வர்திமுல் வாள் மயிலே தாது கெடும் நீரழிவு தான் தோன்றும் போதவே தாந்தலெடுத்துக் கனக் கன களத்துக் கஞ்சி தண்ணீர் வாந்தி யுடன் மெத்த வரு நமமே பாய்ந்த மீறிர் பல்லோர்க்கு நல்ல பயன் சந்தனாதி தன்னை வல்லோர்க்கு வைத்து கோமானிலத்தில் பொல்லார்க்கு அம்மை உமை பாகரால் அரன் கயிலையில் பொறித்த செம்மையுள்ள வாகடத்தைச் செப்பக் கேள். நன்மை பெறு சந்தமொடு கோஉட்டஞ் சதாவேரி நன்னாரி முந்திய பொன்னாங்காணி முத்தமுடன் அந்த அகில் வில்வமுடன் சீந்தி விலாம்பிச்சி வெட்டி வேர் சொல்லர விந்தமுடன் சித்தா முட்டி வல்லாரை ஒன்றாங் குறையாமல் ஓர் பலந்தான் கொண்டிடித்து சென்றிரு தூணி நீரில் செலுத்தி நன்றாய் காய்ந்தள பாகக் கசாயத்திரு நாளி வாய்ந்த யென்னை பாலினிள நீர் வார்த்துப் பின் தேர்ந்ததொரு சந்தனங் களல்லாமல் சாதிக்காய் கோஉஷ்டமுடன் வந்த வசுவாசி மக்ரீப்பூரம் பைந்தொட்டியே பச்சிலை குச்சோலம் மஞ்சள் மரமஞ்சள் நிச்சயமாஞ் செங்கள்நீர் செண்பகப்பூ அச்சமாம் ஏல் மிலவங்க பிருவேலி சித்தரத்தை வால் தேவதாருஞ் செவ்வள்ளியுடன் தாலமுடன் தக்கோலங் கடுரோகணியுஞ் சொல் சாதிப் பத்திரி மேல் பத்திரியுங் கிள்ளை உரையுங் குருசாணி நாகப்பூ வெள்ளிலதி மதுரம் வேதிக்காய் வள்ளை விளா வேர் பாலையுந் தகரம் வேண்டி செஞ்சந்தனமும் ஒப்பாக களஞ்சி நிறை ஒன்றாக தப்பாமல் தாளி கொடுப்பை நல்ல சாத்திர வேதியுடன் வீளி குமரி ஊளியரே ஓ குளக் குச்சாகங் குறையா மலிட்ட பின்பு வாட்டு மெழுகு பதம் வந்து தென்மேல் வன்மையுடன் பாத்திறக்கிச் கொண்டு பகரக் கேள் வட்டினிலே வட்டத் தாளி யெடுத்து மாதளம் பூப் பரப்பிக் கட்டினதற்கு முன் பாய் கடைச் சரக்கு யிஉஷ்டமுடன் குங்குமங் கஸ்தூரி கோரோசினை புகுகு சட்டம் பங்கயக் கண் மாதே பரிவு செய்து நங்கை யினி வாய்த்த சந்தனாதி தன்னை வைத்து வென்னீரால் முழுக ஏத்த தொரு கர்ந்தலெழு மூள்ருக்கி கடுத்து ளையும் உள்மூலம் அஸ்தி சுரம் மாத்திரமாய் விரியும் புண் கிரந்தி வன் பித்தம் வாந்தியுடன் தோத்திரமா யிந்திர கண்டி மிக வறட்சி நேத்திர வாய் காசமொடு சுக்கிரனுங் கண்ரோய் கடுத்தளை மாச் வலிப்புல்லம் வரு நீரும் காசை ஒட்டாரத் தொண்டைப் புகைச்சல்த் தொரையில தேய குரல் மண்டைப் பனிசம் வாய் வகு வருப்பு பல்லுளதே கெ---ருலை கவுசை கிளிசை கடுப்புடனே சறசை பெரும்பாடு தனியுமே யற்ப மெனற் யென்றுதே மானிடரே யின்ப் சந்தனாதி தன்னைப் பல்லுக வைத்துப் பருவ மிட்டால்

விண்ணுளர் மேனியைப் போலாகு மிது நன்றாய்ப் பார்க்கிலிது ஆன படி பொன்னுளியாமே வானவர்கள் சத்த ரிஷி மாமுனிவர் தங்களுக்கு யிந்த விஷத மத்தியமே சொன்னார் நிதானமாய்ப் புத்திப் பார். பண்டிதரே நீங்களிந்தப் பாரில் வயித்தியத்தைக் கொண்டு திரிந்தே பிழையுங்கோள்

அரக்குச் சந்தனாதி:-

நல்லெண்ணெ படி. 4, தயிர்த் தண்ணீர் படி. 4, சாளி தேவதாரம், விருகங் கிழங்கு, சித்தாமுட்டி வேர், அமுக்கிலான் வேர் வகைக்கு பலம். 30, சந்தனக் கட்டை பலம். 30 நாரத்தை யிலை, சீதேவி வேர், துளசி, அவரி, வகைக்கு பலம். 10, இவை யெல்லாம் நருக்கி யிடித்து ஒரு பானையில் போட்டு எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு ஒரு வள்ளமாகக் காய்ச்சவும்.

கொம்பரக்கு மடல் பலம். 30, வேறே சட்டியில் போட்டு கமலாக்கினியாய் அடி பத்தாமல் எரித்துக் கிளறிக் கொடுத்து மெழுகு பதத்தில் இறக்கி வடித்துக் கொண்டு விஜயக பூசை பண்ணித் தலைக்குத் தேய்க்க மேலுக்குப் பிடிப்பித்த உள்ளுக்குத் தட்டிட்டு கொள்ளவும். ஐசயக்கா யிட்டு முழுகவும். தீரும் வியாதி அஸ்தி சுரம், எலும்புருக்கி, பித்த காமாலை, சோப வறட்சி, யிருமல், அக்கினி மந்தம், மேகம் யிருபத்தொன்றுந் தீரும்.

உறையூர் நாச்சாரமன்:- ?

ரசம், சாதிலிங்கம், கெந்தகம், வெண்காரம், அரிதாரம், சுக்கு, திப்பிலி, ஓமம், கடுகுரோகணி வகைக்கு விராகனிடை. உ, நேர்வாளம் விராகனிடை. 16, கய்யாந்த கரைச் சாற்றிலொரு நாளரைத்துக் குன்றிப் பிரமாணங் குளிகை பண்ணி செப்புப் பரணியி லடைத்துத் தானிய புடத்தில் முப்பது நாள் வைத்துப் பின்பு எடுத்துக் குளிருங் காச்சலுக்கு சுக்கு கசாயத்தில் கொடுக்கவும்.

ராம பாணம்:-

வெண் பாசாண மொரு களஞ்சு மிகவே கெவுரி யிரு களஞ்சு
கொம்பு பாகலிலைச் சாற்றில் மூறுக வரைத்துப் பயறளவு
உருண்டையாய் உருண்டை தான் பண்ணி உரைத்து மோரிலொன்று கொள்ள
நன்பாய்க் குளிருஞ் சுரந் தீரும் ராம பான மிட்டிடவே.

சீத சுரத்துக்கு உருண்டை:-

சாதிலிங்க மரிதாரம் தக்க வெள்ளைப் பாஷாணம்
நீதிப் பாகலிலைச் சாற்றில் நேக வரைத்துப் பயறது போல்
வீதத்துடனே உருண்டை செய்து வெண் மோர் தன்னில்குளிகை ரெண்டு
ஆதாய் மூன்று நாள் கொள்ள அரப் போகுங் குளிர் சுரமே.

தீரும் நாலா மாறலுந்தான் திகழ விரங்கிக் குதித்தோடுஞ்
சோறு மோரும் பத்தியங் கொள்ளுரத்தி ராம பாணமென்றே.

நாலா முறைக்கு:-

கெவுரி பாஷாணம் பாகற் காயில் சுத்தி பண்ணிக் கோவையிலைச் சாற்றிலரைத்து பச்சைப்பயறு மஜ்வாதி உருண்டை பண்ணி முலைப்பாலில் கொடுக்கவும். நாலா மாறல் நிற்கும்.

பாஷாண அரிதார முறிவு:-

பாகலிலை நீர்முள்ளி யிலை கரிசிலாங் கண்ணி ஆத்தப்பசரி செம்பருத்தி கடுக்காய் இது சமன் கொண்டு கசாயம் வைத்து ஆறு வேளைக்குக் கொடுக்கவும் விக்கம் வத்தும்.

காமாலை சுரத்துக்கு:-

நெருஞ்சி வேர் படி. சு, சிறுபீளை வேர், முடக்கொத்தான் வேர், சங்கம் வேர், கீழாநெல்லி வேர், கரிசிலாங் கண்ணி, சொரைத் தண்டு, முள்ளித் தண்டு, வேப்பீர்க்கு,

சிறுகீரை வேர் வகைக்கு படி.க, சுக்குத் திப்பிலி, மிளகு, சீரகம், பூண்டு கஷாயத்தில் முடிந்து போடவும்.

சிரங்குக்கு மருந்து :-

ரசம், ஏலம், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், வால்மிளகு, கார்போக அரிசி, கெந்தகம், அரிதாரம் வகைக்கு விராகனிடை.உ, நல்லெண்ணெ படி.½, சூரிய புடம் பழையது சாப்பிடவும்.

அதிசார சுரத்துக்கு :-

இலவம் பட்டை, வில்வ வேர்ப் பட்டை, மிலந்தை வேர்ப் பட்டை, விளாம் வேர்ப் பட்டை, குட முரட்டி வேர்ப் பச்சை, மூங்கில் புறணி இது சமன் கொண்டு இரு நாழி நீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி திப்பிலி, சிராம்பு வெதப்பி முடிந்து போட்டு அரைத்துக் கொடுக்கவும்.

வாய்வுக்குச் சூரணம் :-

மலைதாங்கி வேர், (கறுண படி.க) அழுக்கிலாம் கிழங்கு, கறுண படி.க, வெள்ளம் (கறுண படி.க) இதை ஆறு படி பசுவின் கோமியத்தில் ஊறப் போடவும். கோமியம் சுவற விட்டு நிழலுலத்திச் சூரணம் பண்ணிக் கொள்ளவும்.

ஓமம் மட்டி.க, முசுமுசுக்கைச் சாறு படி.க, இதில் ஊற விட்டு உலத்திக் கரிசிலாங் கண்ணிச் சாறு படி.க, அதில் ஊறப் போட்டு உலத்தி இடித்துச் சூரணம் பண்ணின சூரணத்தில் கலந்து கொண்டு காலமே வெருகடிப் பிரமாணம் சாப்பிடவும். வாய்வும் வயத்திலுள்ள வியாதியுந் தீரும்.

கிரந்திக்கு வெட்டைக்கு :-

சாதிக்காய் பலம்.க, சாதிபத்திரி விராகனிடை.½, கருங்குங்கிலியம் விராகனிடை.1/8, கருஞ்சீரகம் பலம்.1/8, களிப்பாக்கு பலம்.உ, ஈர வெங்காயம் படி.½ ஆகாசக் கெருடன் கிழங்கு ஆண் பிள்ளைக்கு பெண் கிழங்கு பெண் பிள்ளைக்கு ஆண் கிழங்கு இது சூரிய புடம் எட்டு நாள் வைத்துக் கொடுக்கவும். உப்பு, புளி விடவும்.

பிரமியத்துக்கு :-

ஆகாசத் தாமரைச் சாறு படி.¼, ஏலம் விராகனிடை.க, சீனி சர்க்கரை விராகனிடை.உ, சாத்துடன் கூடக் கலந்து சாப்பிடவும். இப்படி மூன்று நாள் சாப்பிடவும். பிரமியந் தீரும். இச்சா பத்தியம்.

இருபத்தொரு மேகத்துக்கும் இருபத்தொரு பிரமியத்துக்கும் :-

கத்தாழை வேர் ஒரு சுமை கொண்டு வந்து மேல் புறணி சீவிப் போட்டு கறணையாய் நறுக்கி உரலிலே போட்டுத் துவைத்துச் சாறு குறுணி வாங்கி ஒரு கல்லுச் சட்டியிலே விட்டு அடுப்பில் வைத்து எரிய விட்டு அரைப்படியாகக் காய்ச்சினால் --1--போலேயிருக்கும். இதுக்கு கற்கம் கடைச் சரக்கு லவங்கம் விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.4, சாதிபத்திரி விராகனிடை.4, சீரகம் விராகனிடை.8, ---சீனி சர்க்கரை பலம்.3, பெருங்காயம் விராகனிடை.3 இது வெல்லாம் சூரணம் பண்ணி பாகிலே போட்டு லேகியமாய் பண்ணி பழகின கலசத்திலே வைத்துக் கொண்டு தினம் நெல்லிக்காய்ப் பிரமாணம் அந்தி சந்தி ரெண்டு நேரமும் கொள்ளவும். இருபத்தொரு பிரமியமும் மேக வெட்டையும், மூத்திரக் கிரச்சியும் தீரும். புளி விடவும். இச்சா பத்தியம். விசேஷ பசை பண்ணிச் சாப்பிடவும்.

பயித்தியம், ~~உன்மாதம்~~ உன்மத்தம் மூத்திரக் கிரிச்சிக்கு :-

சாதிபத்திரி, அதிமதுரம், தாளிச பத்திரி, சதகுப்பை, சீத கெந்த

மஞ்சிஷ்ட்டி சிறு நாகப்பூ மூத்தமொடு நீதி கோஷ்டஞ் சாத்திர. வேதி நிறைய வகைக்கு
விராகனிடை போதவும் நன்னீர் பால் பதக்கு புகமும் நல் நெய் ரெண்டு படிசாதிச்
சர்க்கரை பனைவெல்லம் தயவாய்ப் பாலில் தானரைத்து விடுக நெகிழக் கலந்து
மெள்ளக் கனலில் கொதிப்பித்து கடுகு பதத்தில் வடித்துக் கொண்டு கருதித் தினமுங்
களஞ்சு கொண்டால் முடும் பயித்தியம் பெரும்பாடு மேகம் மருந்கீடு முயலக நோய்.
மிக்க சடைபோறுமைக் குரைத்தார் மானே யிதனைத் தின்ன வல்லீரே.

மூலத்துக்கு மருந்து:-

காட்டுக் கறணை கரிக் கறனை காரும் பிறண்டை புளியாரை
தோட்ட மெருகு செம்பிறண்டை தூய்யோர் தின்றுத தராயுடனே
கூட்டி யுணத்திப் பொடி செய்து கொம்புத் தேனில் வெருகடி ஈருள்
ஊட்டி ஏழு நாள் தின்ன ஒடுங்கி மூலம் பறந்திடுமே.

இந்தச் சூரணம் கால் பலமும் ஒரு சேரை குருவையுங் கூட்டி இடித்துக்
களிக் கிண்டி நல்லெண்ணை வாத்துக் கொண்டு கருப்புக் கட்டி கடித்துக் கொண்டு ஏழு நா
நாள் தின்னவும். (ஏடு இல்லை) Incomplete

மேகம் இருபதுக்கு மருந்து வகை:-

ஆவிரை யந்த முள்ளி அழகிய முருக்கம் புட்டை
தாவிலா மஞ்சளொக்கச் சமனதாய்ப் பொடிகளாக்கிக்
கா்விபங் கன்னுப் மோரில் கலந்துமே நல்ல நாளில்
நாளினில் கொள்ள மேகம் யிருபதும் நலிந்து போமே.

தேற்றுங் கொட்டை நெல்லி முள்ளி செய்ய மஞ்சள் கடுக்காயும்
சாத்தாய் கோரை கடல் ராஞ்சி கரும்பே முள்ளி முருக்கம் பட்டை
சாற்றே சமமாய்க் கூட்டி இதை தயவாய்க் கசாயம் கொடுக்க வல்லீர்
தோற்றே போமமேக மெல்லாம் சொன்னோம் சொன்னோம் சொன்னோமே.

நெல்லி கடுக்காய் தானிக்காய் நிகழ்த்துங் கோரைக் கிழங்குடனே
சொல்லும் வட்டத் திருப்பி யெர்ன்ச தொகுத்துச் சமமாய்க் காய்ச்சியிட
யில்லை யிருபது மேகமுமே யிது தானுண்மை செகதலத்தில்
வல்லை பொருவு மூலையாளே மதித்தே தானு முரைப்பாயே.

சகல வாய்வுக்கும் வீக்கம் விஷ பாகத்துக்கும்:-

சிவதை பலம்.200, சாறணை சமூலம் பலம்.400, தண்ணி வள்ளம்.16 இது
காய்ச்சி ஒரு வள்ளமாக யிறுத்துக் கொண்டு இதில் இந்துப்பு பலம்.உ, வெள்ளுள்ளி பலம்.
20 இவை இடித்துக் கசாயம் பண்ணவும். இதுக்கு கடுக்காய் பலம்.32, பெருங்காயம்
பலம்.க, சுக்கு பலம்.1½, மிளகு 1½, திப்பிலி பலம்.1½, உப்பு பலம்.1½,
நேர்வாளம் பருப்பு பலம்.க இந்த மருந்தெல்லாங் கசாயங் குத்தி அரைத்துக்
கரைத்து மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு ஒரு கறண்டி வீதம் சாப்பிடவும். இதுக்
குச் சகல வாய்வும் வீக்கமும் கட்டியுந் தீரும். விநாயக பூசை பண்ணவும்.

துன்மாங்கிஷத்துக்கு:-

சீனிக்காரம், பொரிகாரம், சிறந்த இந்துப்பு, நவச்சாரம்
தீதுமல்வே பொடி செய்து தருகா நாயுருவிக் கருத்தம்
கினக் கதலித் தண்டுடனே கருக வறுத்துப் பொடி செய்து
தேனில் குழைத்துத் தின்பீராய் தெரிக்குந் துன்மாங்கிஷக் கட்டே.

இரைப்புக்கு:-

கொடிவேலி, குப்பை மேனி, வேலிப்பருத்தி, ஒரொன்று சாறு உழக்கு வெள்ளைச் * சீலை
சீலையிலொட்டி திரமான பதத்திலே ஐந்து பலம் கெந்தகம் பொடி செய்து சீலை
சீலையில் பரப்பிச் சுருட்டி விளக்கெண்ணெயில் ஊறப் போட்டு விளக்கில் பத்த
வைத்து தலை கீழாப் பிடிக்கத் தாரை தயிலம் விழும். அந்தத் தயிலம் வெற்றிலையில்
மூன்றிப் பிரமாணம் தடவித் தின்ன இரைப்புத் தீரும்.

மேல்க் கோவை, கீழ்க்கோவை, பெரு வயறு மகோதரத்துக்கு:-

கிளிஞ்சில் ஒரு கூடை கொண்டு வந்து அதை உள் சதை எடுத்துக் கொ *
கொண்டு காயப் போட்டு இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு கெசரி
வெருகடிப் பிரமாணம் தேனில் இஞ்சிச் சாற்றில் கொள்ளவும். இதற்கு பத்தியம்
உப்பு, புளி ஆகாது: தினம் வெந்நீர் விட்டுக் கொள்ளவும். இப்படி எட்டு
நாள்க் கொள்ளவும் தீர்ந்து போய் விடும்.

தாளிசை வடகம்:-

சுக்கு பலம்.3, திப்பிலி பலம்.உ, மிளகு பலம்.க, திப்பிலி மூலம்
பலம்.க, செவியம் பலம்.க, தாளிசை பத்திரி பலம்.க, ஏலம் பலம்.¼,
சன்ன லவங்கப்பட்டை பலம்.¼, லவங்கப் பத்திரி பலம்.½, விலாமிச்சை
வேர் பலம்.½, சன்னகேசரம் பலம்.½ இதற்கு ரெட்டிப்பு சர்க்கரை பாகு
காய்ச்சி மருந்தெல்லாம் பொடி செய்து பாகில் போட்டுப் பதத்திலிறக்கி
உருண்டை பண்ணிக் கொள்ளவும். வாய்வு சத்தி விக்கல், களிச்சல், கடுப்பு
இது வெல்லாந் தீரும்.

மூக்கு நீர்ப் பாய்ச்சலுக்கு நசியம்:-

சாறணைக் கிழங்கிந்துப்பு சரசயில் மிளகு சீனி
கூறிடு நறு நெய் சீனி தன்னில் கொண்டிடு மூலைப் பாலொக்க
வீசுடன் நெய்யக் கட்டி விடுகுவே நசியம் மூக்கில்
சீசுடன் மூக்கு நீரும் தினவு னடைப்பும் போமே.

கை காலெரிப்புக்கு:-

சேப்பு நெருஞ்சி வேர் இரண்டு பிடி ஒரு படி பசுவின் பால் வாத்த
ரைத்துச் சர்க்கரை போட்டுக் குடிக்கத் தீரும்.

(வேறு)

கோவைத் தண்டு சீந்தித் தண்டு தவைத்து எருமை மோரில் பிசைந்து
பிசைந்து வெல்லம் போட்டு மூன்று நாள். கொடுக்கவும்.

கல்லெரிப்புக்கு:-

விளக்கெண்ணெ நல்லெண்ணெ, பசுவின் நெய்யிது மூன்றுஞ் சார்த்து உடம்
பிலிட்டுப் பிடித்து வெந்நீர் வார்க்கவும். உடம்பெரித்துக் கொப்புள மெழுந்தால்
களச்சிப் பருப்பு பொடி செய்து நல்ல வெல்லங் கூட்டி உள் ருக்குக் கொடுத்து
தண்டில் எண்ணெ நெய்யும் பசி இருக்க கல்லு விழும்.

நீரடைப்புக்கு:-

ஆடு தின்னாப் பாளையிலையை அரைத்து தொப்புளில் பூசச் சலம் விடும்.

கிருமி சோகை பாண்டு குன்மம் கை கால் வீக்கம் மகோதரம் கிரிகை பீலிகை
யிருமல் மூலங் காமாலைக்கு:-

இஞ்சி தோல் போக்கினது பஞ்சு போல் கொட்டினது பலம்.100, இதில்

நல்லெண்ணெ கருப்புக் கட்டி பலம்.100, கட்டி நீருகப் பிசைந்து வடித்துக் காய்ச்சிக் கோரையிலே ஒட்டின பதத்தி லிறக்கி இதுக்குக் கடைச் சரக்கு சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், நெல்லி, தானிக்காய், சிறு மூலகம், லவங்கம், தவலாச்சீரி, அரத்தை, ஏலம், பச்சிலை, லவங்கப் பட்டை, அதிவிடையம், சித்திரமூலம்; ஓமம், வாயுசத், சீரகம், இந்துப்பு, அட்டுப்பு, கருஞ் சீரகம், கற்கடக சிங்கி, விளாவரிசி, வெப்பாலரிசி, முத்தக்காசு, கருவேப்பிலை, சிட்டப் பொடி இவை வகைக்கு ஒரு களஞ்சு கொண்டு பொடி செய்து அந்தக் குழம்பிலே சாரித்து இரு நாழி உரி தேன் வார்த்து பழகின பானையில் வார்த்து நாளொன்றுக்கு மூன்று களஞ்சு கொள்ளவும். இந்த வியாதியெல்லாந் தீரும்.

கெற்ப கிரந்திக்கு என்ணை:-

சிறு குறட்டைக் கிழங்கு அவரை போல் நறுக்கினது பலம்.உ, சீரகம் பலம்.க, கருஞ்சீரகம் பலம்.க, கடுகு பலம்.க, சுக்கு பலம்.க, மிளகு பலம்.க இது வறுத்துப் பொடி பண்ணி வெள்ளுள்ளி பலம்.க, ஈர வெங்காயம் பலம்.உ, நறுக்கி விளக்கெண்ணெ படி.உ, கிழங்கு நறுக்கினது கூட்ட போட்டு இடித்து எரித்துப் பதத்தில் வடித்து ஒன்றை விட்டு ஒரு நாள் கொள்ளவும். பிறந்த பிள்ளைக்கும் வார்க்கவும். கிரந்தி தீரும்.

நேத்திர ரோகத்துக்கு என்ணை:-

நெல்லிக்காய்ச் சாறு படி.க, கத்தாழஞ் சாறு படி.க, கழுதாமைச் சாறு படி.க, கையாந்தகரைச் சாறு படி.க, நல்லெண்ணெ படி.உ, பசுவின் பால் படி.உ, இது வெல்லா மொரு பானையில் வார்த்து மூன்று கொதியான பின்பு அதிமதுரம் பலம்.5, கடுகுரோகணி பலம்.5, திப்பிலி விராகனிடை.உ, சித்தரத்தை விராகனிடை.உ, சுக்கு விராகனிடை.உ, தாமரை வளையம் விராகனிடை.உ, விலாம்பிச்சை விராகனிடை.உ, மந்திட்டி விராகனிடை.உ, இது வெல்லாம் இடித்துப் பொடி செய்து என்ணையில் போட்டு மெழுகு பதத்திலிறக்கி தலைக்கு முழுக நேத்திர ரோகம் தீரும்.

பூதிகார் தயிலம்:-

ஆயில் பட்டை பலம்.25, மாவிலிங்கம் பலம்.5, சித்தாமுட்டி பலம்.5, பேராமுட்டி பலம்.5, குன்றிப் பட்டை பலம்.5, கொடிவேலி பலம்.5, கொன்றைப் பட்டை பலம்.5, நீலி வேர்ப் பட்டை பலம்.5, கண்டங்கத்திரி வேர் பலம்.க, தாவளை பலம்.க, எருக்கம் வேர் பலம்.க, ஊமத்தம் வேர் பலம்.க, சிறுகிளா வேர் பலம்.க, மலைச் சுண்டை வேர் பலம்.க, உத்தாமணி வேர் பலம்.க, காட்டு முருங்கை வேர் பலம்.க, நொச்சி வேர் பலம்.க, முள்ளி வேர் பலம்.க, ஆமணக்கம் வேர் பலம்.க, அமுக்கிரு வேர் பலம்.க, கழக்கொட்டி வேர் பலம்.க, சாட்டறணை வேர் பலம்.க, மூங்கில் வேர் பலம்.க இவை யெல்லா இடித்து நசுக்கிச் சாலிலிட்டு தானி தண்ணீர் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு நல்லெண்ணெ படி.4, விட்டுக் காய்ச்சிசிற போது கற்கம் அரத்தை, வாய் விளங்கம், தேவதாரி, கிரந்தி, தகரம், தற்கோலம், சிறுதேக்கு, திப்பிலி மூலம், மிளகு, முக்காவளை, மந்திஷ்டி, பெருங்காயம், கடுகு, சீனி கடுகு, தற்கோலம், மிளகுரணைப் பட்டை, கருஞ்சீரகம் வகைக்கு பலம்.க கூட்டி இடித்துச் சூரணம் பண்ணித் தயில பக்குவத்தில் பார்த்துச் சூரணம் போட்டுக் கிளறிக் கடுகு திறள மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு தானிய புடம் வைத்து ஒரு சட்டிடை உள்ளுக்கு கொள்ளவும். தலையில் தேய்த்து உடம்பிடித்து நசியஞ் சுட்டவும். தீரும் வியாதி தலை வலி, பாரிச வாய்வு, தமர் வாதம், மூக்கு நீர்ப் பாச்சல், கடுகிய தும்மல், ஒருத்தலை வலி இது முதலான வாதந் தீரும்.

வங்கார சஞ்சீவி மாத்திரை:-

அரப் பொடி பலம்.க, உருக்குப் பொடி பலம்.க, செம்புப் பொடி பலம்.க, பித்தளைப் பொடி பலம்.க, வெங்கலப் பொடி பலம்.க, ஊசிக் காந்தம் பலம்.உ,

சூதம் பலம்.க, கெந்தகம் பலம்.6, வெங்காரம் பலம்.க, மனோசிலை பலம்.க, கத்தாளஞ் சாறு விட்டு மூன்று நாளரைத்து ஒரு சட்டியில் விட்டு மறு சட்டி கொண்டு மூடிச் சீராக்கிச் சீலை மண் செய்து அடுப்பில் வைத்து இருபத்து நாலு சாமம் எரித்து ஆற விட்டு இறக்கிச் செந்தூரத்தை எடுத்துப் பரணியில் அடக்கவும்.

நாவி பலம்.க, பசுவின் கோமியத்தில் மூன்று நாளூறப் போட்டு எடுத்துக் கொண்டு திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, நன்று இடித்துச் சூரணம் பண்ணி மேல் செந்தூரத்துடனே கல்வத்திலிட்டு வெள் வெங்காயத் தயிலத்திலரைத்து அரைப் பணவிடை தூக்கம் மாத்திரை கட்டி நிழலிலுலர்த்தி நெல்படம் ஒரு மண்டலம் வைத்தெடுக்கவும். இதுக் கநுபானம் ஒரு மாத்திரை, வெள்ள வெங்காயத் தயிலத்தில் கொடுக்க கொழுப்பு தள்ளி இருக்கிற சரீரத்தில் சிலந்தி கல்லில் மெடுத்து புண்ணுடன் சூலை பதினெட்டுந் தீரும். ஒரு மாத்திரை வெள்ள வெங்காயத் தயிலத்தில் கொள்ளக் கிரிச்சி வாதந் தீரும். ஒரு மாத்திரை வெருகடி சன்னி வெருகடி திப்பிலிப் பொடி வெருகடி தேனில் பத்து நாள் கொள்ள இதுக்குத் தீரும் வியாதி பிரமியம் 18, கல்லடைப்பு.18, இந்திர கண்டி.5, தந்த வாய்வு நாற்திருபத்தெட்டு உஷ்ண ரோகம்.326, சேற்ப ரோகம் 96-ம் தீரும். ஒரு மாத்திரை புள்ளித் தயிலத்தில் கொள்ள வயத்தில் வியாதி 66, வாய்வுத் திரட்சி 3 , பெரு வயறு விஷபாகம், சேஷ்மரோகம், காமாலை, பாண்டு தீரும். வயத்தில் வலி மூர்ச்சை பிறக்கட்டு, தமர் வாத ரோகமுந் தீரும். ஒரு மாத்திரை திரிகடுகு வெதுப்பிப் பொடி செய்த நாள் வெருகடியுந் தேனும் மிஞ்சிச் சாமம் விட்டு ரெண்டு நேரம் இருவது நாள்க் கொள்ளச் சன்னி.18, வாதம்.80, வாய்வு 26, சத்தி குன்மம், வலி குன்மம், ஆம்பல் பித்தம்.16, குன்மமும் பயித்தியத்தோடே சேர்ந்தது கோடா குளிகை வாய்வு முகவாதம் மண்டை சூலை பீனிசம்.18, நாசியடைப்பு, கபால வாய்வு, தலை நோவு, செவி நோவு, செந்தாளிகையும், தொண்டை நோவு, நெஞ்சு நோவு, முசல கண்டன் மூர்ச்சையும், அஷ்ட வாதங் குடல் வாதம், அந்திர வாய்வு, முழங்கால் முட்டி, திமிரு வாதம், நடுக்கு வாதம் இவையெல்லாந் தீரும். மற்றுமுள்ள வியாதிகளெல்லாம் அநுபானங் கண்டு செய்யத் தீரும்.

காளமேக நாராயண இரத செந்தூரம்:-

சூதம் விராகனிடை.45, கெந்தகம் விராகனிடை.45, சாதிலிங்கம் விராகனிடை.12, அரிதாரம் விராகனிடை.6, மனோசிலை விராகனிடை.1½, இதுவெல்லாஞ் சுத்தி பண்ணிக் கொள்ளவும். இவை யெல்லாம் எருக்கம் பால் செம்முள்ளிச் சாற், மாதளம் பூச் சாறு, முருக்கம் பூச்சாறு, தும்பை யிலைச் சாறு, செருப்படியிலைச் சாறு வகை ஒன்றுக்கு ஒவ்வொரு சாமம் அரைத்து வில்லை பிடித்துக் காய வைத்துப் பொடி பண்ணி காசிக்குப்பிக்கு ஏழு சீலை மண் செய்து உலரப் போட்டு விட்டுக் குப்பியில் முக்கால் மட்டும் மருந்திட்டுக் குப்பி வாய்க்கு பலப்பக் கல் கொண்டடைத்து அரை மண் நண்டு வளையிலிருக்கிற மண் கொண்டு வாயடைத்துச் சீலை மண் செய்து ஒட்டி யடுப்பு போட்டு ஒரு தாளி பதித்து பதினாறு விராக்கிடை மண் விட்டு அதின் மேலே குப்பி வைத்துக் கழுத்து மட்டும் மணலிட்டு சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து விநாயக பூசை பண்ணி ஒரு விறகால் தீபாக்கினி யிருபத்தொரு சாமம் கமலாக்கினி இரண்டு சாமம் எரித்து மறுநாள் நெருப்பாற விட்டு எடுத்து வயிரவ பூசை பண்ணி எடுத்துக் கொள்ளவும். நிறம் முருக்கம் பூப் போலே யிருக்கும். இதுக்கு அநுபானம் கண்டங்கத்திரி யிலை, தூதுவளை யிலை ஆடுதோடை யிலை இது மூன்றுஞ் சமனாயரிந்து யிடித்துப் பிட்டு வைத்துப் புளிந்து சாறு கொண்டு திரிகடுகு வெதுப்பின பொடி வெருகடியும் தேனும் யிதில் அரைப் பணவிடை செந்தூரங் கூட்டிக் கொள்ள ஈளை இருமல் எலி கடி, மந்தார

காசம், சுவாசகாசயம், காய சுவாசம்சேற்றம மூர்ச்சை சன்னி மூர்ச்சை, மேலிளைப்பு உப்பிசம் இவை யெல்லாம் பத்து நாள் கொள்ளத் தீரும். செந்தூரத்தி லரைப் பணவிடையும் திப்பிலி வெதுப்பின பொடி களஞ்சும் தேனிற் குழைத்து இரண்டு நேரமும் ஒரு மண்டலங் கொள்ள பதினேழு வகைச் சூலையும் புண்ணுடோரமும் பதினெட்டு வகை குட்டமும், கடி விஷமென்னப் பட்டதெல்லாம் தீரும். கபால குட்டம், சொரி சிரங்கு, அரையாப்பு, அரைப்புத்து நெஞ்சு நோக்காடு, அரி பீனிசம், மண்டை சூலை, கண்ரோசி, காதில் சீய் மடல் வீக்கம் சுக சன்னி இவை யெல்லாந் தீரும். இதிலொரு பணவிடை செந்தூரமும் கத்தாழையில் வைத்த லோக செந்தூரம் ஒரு பணவிடையும் வெங்காரம் விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, அசமதாகம் விராகனிடை.க இவை யெல்லாம் வெதுப்பி பொடி செய்து முருங்கைப் பட்டை டித் தண்ணீரில் ரெண்டு நேரமும் ஒரு மண்டலங் கொள்ளச் சன்னி பதின்மூன்று வாதம், எண்பது சத்தி குன்மம், அஷ்ட குன்மம், மூல வாய்வு, கல்லடைப்பு, மூத்திர கிரிச்சம், இருபத்தொரு கிரந்தி சுட்டு இவை முதலான வியாதி யெல்லாந் தீரும். இந்தச் செந்தூரம் நிலவாகைச் சாற்றில் அரைப் பணவிடை கூட்டிப் பத்து நாள் கொள்ளக் கெற்ப விப்புருதி கல்லு விப்புருதி சூவலை வி புருதி உள் மாந்தை, பிரமாந்தை, பக்க வாய்வு, அண்ட வாய்வு, குடல் வாதம், நரை வாதம், கால் வாதம், யோனிச் சூலை, நாவிச் சூலை, திரை சிறு புழு இவை யெல்லாந் தீரும்.

மாந்தத்துக்கு களத்துக்கு நெய் :- 9.12.63..

சுக்கு பலம்.12, முசில்பட்டை பலம்.12, நறுக்கித் தனி நீரிலிட்டு நாலிலொன் றாய்க் காய்ச்சி யிறக்கிப் ~~புளிப்~~ மெதிர இதிற் கற்கம் அதிமதுரம், பெருங்குரும்பை, ~~ஆத்திப்~~ ஆத்திப் பூ, அதிமதுரம், கோஷ்டம் கொடிவேலி வேரு, பெருங்காயம், கோரைக் கிழங்கு, திரிகடுகு, சிறுதேக்கு, மூலகம், விளாவரிசி, இந்துப்பு, பொன் முசுட்டை வேர், மஞ்சள், சீரகம், செவியம், ஓமம், வசம்பு வகைக்கு களஞ்சு.க அரைத்து வெள்ளாட்டுப் பால் படி ரெண்டு நெய் படி ரெண்டு விட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்து தினமும் களஞ்சி நெய் கொள்ள சத்தி விக்கல் குணமாகும்.

அறுகம் வேர் நெய் :-

அறுகம் வேர் அவைத்துப் பிழிந்த சாறு குறுணி, பசுவின் நெய் படி.க, பால் படி.க, கூட விட்டு இதற்கு கற்கம் அதிமதுரம் பலம்.க, சீரகம், சாதிபத்திரி, விலாமிச்சை வேர், சித்தாமுட்டி வேர், தில்லை வேர், வகைக்கு விராகனிடை.உ. ஏலம், கிராம்பு, மிளகு, கோஷ்டம், வகைக்கு விராகனிடை.க, பாலை முகிள் ரெண்டு பிடி இது வெல்லா மரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துக் குடிக்க உள்க் காச்சல் பிரமியம் பழஞ் சுரம், யிருமல், உடம்பெரிப்பு, ரத்த பித்த காசம், உடம்பு இளைப்பு, நீர்க் கடுப்பு, எலும்புருக்கி, தாகம், கண்ணெரிச்சல், மூலரோகம் தீரும். திரிளாத பெண்கள் திரரும். ~~மலட்டுத்தன்மை நீங்கும்.~~

தூதுவளை நெய் :-

தூதுவளை வேர் பலம்.12, முள்ளி வேர் பலம்.6, கண்டங்கத்திரி வேர் பலம்.6 இது நறுக்கி இடித்துத் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு நெய் படி.க; பால் படி.க, கூட விட்டு இதில் கற்கம் திரிபலை, திரிகடுகு, கூகை நீர், ஏலம், லவங்கம், சாதிபத்திரி, அரத்தை, சிறுதேக்கு, கோஷ்டம், தாளிச பத்திரி, கொடிவேலி வேர், நன்னாரி வேர், சிறுநாகப்பூ வகைக்கு களஞ்சி.க, சிறுகாஞ் சொறி வேர், ஆடாதோடை வேர், அதிமதுரம், சீரகம், தேற்றாங் கொட்டை, சடாமஞ்சி, செவ்வள்ளிக் கொடி வகைக்கு பலம்.½, கண்டங்கத்திரி விதை பலம்.½, மொசுமொசுக்கை வேர் பலம்.½, அரைத்துக் கரைத்து பதத்தில் வீஞ்சிச் சாறு உழக்கு விட்டுக் கடுகோட இறக்கித் தேன் படி.1/8, சர்க்கரை பலம்.க கூட விட்டுக் கிளறிக் கடும் நெய்யும். ஒரு கரண்டி கொள்ளக் காசம், இருமல் சுவாச காசம், உப்பிசம், ஈளை, மூல ரோகம், பீனிச காசம், ரெத்த காசம் மேகம் சேத்தும ரோகந் தீரும்.

சாதிக்காய் நெய்:-

சாதிக்காய் விராகனிடை.8, லவங்கம் விராகனிடை.6, சுக்கு, திப்பிலி தாளிச பத்திரி, சீரகம் வகைக்கு விராகனிடை. 4, சிறுநாகப்பூ, அதிவிடையம், நமக்கு மூலம், கோரைக் கிழங்கு, குரசானி யோமம் வகைக்கு விராகனிடை.3, சாதிபத்திரி, மதுரம் வகைக்கு விராகனிடை.உ இது வெல்லாம் வறுத்துப் பொடி பண்ணி நாழி பசுவின் நெய், கொதிக்க வைத்து இந்தப் பொடியைப் போட்டுக் கிளறி ஒரு பலஞ் சீனிக் கல்கண்டு பொடி பண்ணிப் போட்டு வைத்துக் கொண்டு ஒரு கறண்டி கருடனே கொள்ளக் கிருமிக் கழிச்சல் வயிற்றுக் கடுப்பு வால கிருமி, கணக்கழிச்சல், மாந்தக் கழிச்சல், சுரம், அடி தள்ளின கடுப்பு, காமாலை, பாண்டு தீரும்.

பறங்கிப் பட்டை நெய்:-

பறங்கிப் பட்டை பலம்.3, பசுவின் பாலில் ஊற வைத்து அரைத்து நெய் படி.க, பால் படி.க, கூட்டி எரித்து நக்க மேகம், நீரடைப்பு, நீரெரிப்பு மேக வாய்வு, தீரும்.

(வேறு)

சீரகம் பலம்.உ, அரைத்து ரெண்டு படி நெய்யில் கரைத்து இளம் பதமாகக் கொதிக்கையில் பறங்கிப் பட்டை பலம்.12, சீவி யடித்து வஸ்திர காயம் பண்ணிச் சுராவித்துக் கொதிக்கிற நெய்யிலே தூவிக் கை விடாமல் காளா. இறக்கித் தினம் பாக்களவு கொள்ளவும். இதுக்கு மகா வாய்வு, அண்ட வாதம், பக்க வாய்வு, நீர் எரிப்பு, நீரடைப்பு, நீர்க் கடுப்பு, மேகரணம், மேகசூலை, கிரந்தி, வீக்கம், வாதசூலை, கை கால் முடக்கு, அக்கினி மந்தம், மூல ரோகம் இவ்வகையாகிய வியாதிகளெல்லாந் தீரும்.

சந்தனாதி கிருதம்:-

வில்வ இலைச் சாறு படி.உ, நெய் படி.க, கூட்ட விட்டு திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், நல்ல சந்தனம், யேலம், லவங்கம், தாளிச பத்திரி, கோஷ்டம், நன்னாரி வேர், திப்பிலி மூலம், லவங்கப் பட்டை, முந்திரிப் பழம், சீரகம் வகைக்கு களஞ்சு.க, அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து சீனி கல்கண்டு பலம்.½ பொடி பண்ணி கூடப் போட்டு அந்தி, சந்தி ஒவ்வொரு கறண்டி கொள்ளவும். பழஞ் சுரம், அஸ்தி சுரம், காமாலை பாண்டு பித்த சுரம், மாந்த சுரம், உடம்பு இளைப்பு, வறட்சி யிருமல், மாந்தம் மூலரோகம் வாய் நோக்காடு, கிரந்தி தீரும்.

பிறண்டை நெய்:-

பிறண்டைக் கிழங்கு, கருவாழைக் கிழங்கு, காட்டுக் கருணைக் கிழங்கு, காரிக் கருணைக் கிழங்கு, மருள் கிழங்கு, நன்னாரி வேர், விருசுங் கிழங்கு, சித்திர மூலம், வகைக்கு பலம்.உ, எட்டு படி தண்ணீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி யிறுத்துக் கொண்டு ஒரு படி நெய் கூட விட்டு இதில் சுக்கு, திரிபலை, சீரகம், ஓமம், திரிகடுகு, இந்துப்பு, கோஷ்டம், சாதிக்காய், கடுகு, வெந்தயம், வகைக்கு களஞ்சு.க, அரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொள்ளவும். எட்டு வகை மூலமுந் தீரும்.

மாரீசக் கிருதம்:-

மிளகு பலம்.க, ஆடாதோடைச் சாற்றிலரைத்து பால் படி.½, நெய் படி.½ ஆடாதோடைச் சாறு படி.½ ஒன்றாய் விட்டு குழப்பிக் காய்ச்சிக் கருகுடனிறக்கித் திப்பிலி விராகனிடை.3, சீனி பலம்.½.பொடி பண்ணிப் போட்டுக் கிளறி ரெண்டு நேரமுந் தின்னக் காசம், இருமல், நெஞ்சுப் புகைச்சல், சிலேட்டுமம், அடைப்பு, வெட்டையினால் மேலெழுந்த யிருமல் தீரும்.

கோரக்கா மூலிகை நெய் :-

கஞ்சா யிலை பலம். 10, கொம்பரக்கு பலம். 10, வெல்லம் பலம். 20, நன்னாரி வேர் பலம். 5, நாவல் புட்டை பலம். 5, கோரைக் கிழங்கு பலம். 5, சீந்தில் தண்டு பலம். 5 இவையெல்லாம் நறுக்கிக் கசாயம் வைத்து இறுத்துக் கொண்டு பசுவின் நெய் படி. ௨, ஆடாதோடைச் சாறு படி. ௨, முசுமுசுக்கைச் சாறு படி. ௧, வெள்ளாட்டுப் பால் படி. 4, கூட விட்டு மலாக்காய்ச் சந்தனம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், முந்திரிப் பழம், அதிமதுரம், கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு, ஏலம், லவங்கம், லவங்கப் பட்டை, சிறுநாகப்பூ, சீரகம் வகைக்கு விராகனிடை. ௨, திப்பிலி பலம். ௧, நற்கு மூலம் பலம். ௧, சூரணம் பண்ணிக் கோரோசினை குங்குமப்பூ புனுகு வகைக்கு விராகன். 1½ கூட்டி நெய்யில் போட்டுக் காய்ச்சி இறக்கிற போது பனங்கல்கண்டு பலம். ௧, ராயபுரிச் சர்க்கரை பலம். ௧, கூடப் போட்டுக் கிளறிக் கடுகுடனே இறக்கி வைத்துக் கொண்டு கடுகும் நெய்யும் கொள்ள மேல் நோயாகிய ரத்தம், பித்தம், ரெத்த காசம், ரெத்த மூலம், ரெத்த பீனிசம், ரெத்த பாண்டு, காமாலை, சோகை யிருமல், காசம், தலைவலி, பித்த ரோகம், மேகரோகம், வாயு ரோகம், கண்டத்திலுள்ள ரோகமெல்லாந் தீரும்.

மகா பஞ்ச கெவ்விய கிருதம் :-

வாகை பெருங் குமிழம் வேர், முன்னை பாதிரி வில்வம், சித்தமல்லி, பேராமல்லி, வெட்பாலை, கண்டங்கத்திரி, முள்ளி, நெருஞ்சி, நாயுருவி, அவுரி, சிறுகாஞ்சொறி வகைக்கு பலம். ௨, திரிபலை, வெட்பாலை அரிசி, மஞ்சள், கடுகுரோகணி, கோஷ்டம், கொன்றைப் பட்டை, மாஞ்சில் இவை வகைக்கு பலம். ௧, இடித்து மடா வில் விட்டு ஐந்து வள்ளத் தண்ணீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு இதில் பசுவின் நெய் அதின் சாணிச் சாறு, கோமியம் பால் வகைக்கு படி. ௨, கூட விட்டு கற்கம், சிறுதேக்கு, வட்டத் திருப்பி, சிவதை, நாகண மருதாணி யிலை, திரிகடுகு, கடுகுரோகணி, வெள்ளறுகு, நிலவேம்பு, நத்தைச் சூரி வேர், நன்னாரி வேர், கொடிவேலி வேர், வஞ்சிப் பட்டை, அரத்தை, கூகை நீர், கண்டங்கத்திரி விரை வகைக்கு விராகனிடை. ௧, அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துக் கொண்டு தினமொரு கரண்டி ரெண்டு நேரமுங் குடிக்கத் தீரும் வியாதி சுரம், முசல கண்டன் பாண்டு பீலிகை, மூலரோகம், குன்மம், காமாலை, ஈளை, இருமல் உள் மாந்தை, காசம், ரெத்த காசம், அஸ்தி சுரம், குடல் வாதம், மூத்திரக் கிரிச்சி, சீதம் பிரமேகம், சரீர இளைப்பு, கை கால் முகந் தலை எரிப்பு குட்ட ரோகம் மேற்கண்ட விஷம் குசிகா சன்னி, சிபிர் வாதம் சூலை தீரும்.

வாத ராட்சதன் குளிகை :-

ரசம், கெந்தகம், அரிதாரம், காந்த பற்பம், அப்பிரக பற்பம், வெள்ளைச் சாறணைச் சாறு வார்த்து ஒரு நாளரைத்துச் சீந்திக் கொடிச் சாறு வார்த்து ஒரு நாளரைத்துத் திரிகடுகு கசாயத்தில் ஒரு நாளரைத்து விராகனிடைப் பிரமாணம் உருண்டை பண்ணி மடக்கிலிட்டு சீலை மண் செய்து குக்குட புடமிட்டு எடுத்துக் கொண்டு வேண்டிய அனுபானத்திலிடவும். சகல சன்னி தோஷமுந் தீரும்.

கதலிக் காந்த கிருதம் :-

வாழைக் கிழங்குத் தண்டு பூ யிலை சமூலம் தவைத்துச் சாறு படி. 3, நெல்லிக்காய்ச் சாறு படி. ௧, பெரும் பூசனிக்காய் கய்யாந்தகரை, நீர் வள்ளிக் கிழங்கு, முசுமுசுக்கை வகைக்குச் சாறு படி. ௧, பானையில் விட்டு வாழைப்பூ பலம். 100 தவைத்து போட்டு அஷ்ட பாகமாகக் காய்ச்சி இந்தக் கசாயத்துடன் அத்திப் பட்டை, ஆலம் பட்டை, அரசம் பட்டை, யிச்சிப் பட்டை, நாவல் பட்டை, பிராய்ப் பட்டை, வஞ்சிப் பட்டை, வெள்வேலம் பட்டை, முருக்கம் பட்டை, குளவேம் பட்டை, இலுப்பைப் பட்டை, நாவல் பட்டை, நறுவிலிப் பட்டை, நெல்லிப் பட்டை, கடப்பம் பட்டை, நரி நல்வல்

சித்தகத்திப் பட்டை, மருதம் பட்டை, உதியம் பட்டை, புளியம் பட்டை, மாம் பட்டை இவை வகைக்கு பலம்.5 ஒரு சாலில் போட்டு சால் தண்ணீர் விட்டு நாழியாகக் காய்ச்சி ரெண்டு கசாயமும் ஒன்றாய்க் கூட்டி இதில் நெய் படி.8, பசுவின் பால் படி.8, விளாம்பழம்.8, வில்வப் பழம்.8, கூடப் போட்டு இதில் கற்கம் வாய் விளங்கம், சீரகம், திரிகடுகு, அதிமதுரம், ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, கச்சோலம், அதிவிடையம், சிறுதேக்கு, சொக்கமல்லி, கூகைநீர், முந்திரிப்பழம், பேரீச்சம் பழம், மலைதாங்கி வேர் வகைக்கு பலம்.க இடித்து வஸ்திர காயம் பண்ணி கடுகு திரண்ட பக்குவத்தில் வடித்துக் கொண்டு கடுகை நீக்கிப் போட்டு இந்த நெய்யில் சீனி பலம்.25, தேனி படி.2, விட்டு தினம் உள்ளங்கை கொண்டது ஒரு மண்டலங் கொள்ளத் தீரும் வியாதி பிறமியம் 18, மேகம் 20, உள்க் காச்சல்.9, பயித்தியம்.8, சீயும் ரெத்தமும் விழுகிறது பெரும்பாடு எலும்புருக்கி சத்தி இது மெருந் தீரும், வீரிய வர்த்தினை உண்டாம்.

மகா வில்வாதி லேகியம்:-

சித்தாமுட்டி வேர், சிறுமுன்னை வேர், வேலியனைஞ்சான் வேர், சித்திர மூலம், வேர், நொச்சி வேர், பிறண்டை வேர், சிறுகாஞ்சொறி வேர் வகைக்கு பலம்.க, வில்வ வேர் பலம்.60, சுக்கு, மிளகு, திப்பிலி, வாய் விளங்கம், கண்டு பறங்கி, நாகேசுரம், கற்கடக சிங்கி, அரத்தை, சீரகம், ஏலம், கிரந்தித் தகரம், மலை தாங்கி வேர், திருச்சி கற்பூரம், அசமதாகம் வகைக்கு பலம்.5, தெசாவரம் பலம்.2½, திப்பிலி மூலம் பலம்.2½, பழைய நல்ல வெல்லம் பலம்.60, தேன் படி.4, மந்திர மூலிகையும், வில்வ வேரும் இடித்து எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு நாலு படியாகக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு வெல்லங் கரைத்து அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் கடைச் சரக்குச் சூரணம் போட்டுக் கிளறித் தேன் விட்டு மெழுகு பதத்திலிறக்கி விநாயக பூசை பண்ணி இரண்டு வேளையும் கொட்டைப் பாக்கு மரியாதிக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி அம்பல வாய்வு, சுவாச காசம், குன்மம் எண்பத்து நாலு, வாய்வு, அந்திர தாகம், அஸ்தி சுரம், அஸ்தி சூலை, மேகரோகம், பித்த பாண்டு, மூர்ச்சை, சோகை, கெண்டை, கவுசை சயித்திய வாய்வு, செரியாக் குணம் விக்கல் வாந்தி, அசனி, பக்கச் சூலை, வீக்கம் பனிசம், மூக்கு நீர்ப் பாய்ச்சல், சிலேட்டுமம், அருவருப்பு வாணீர் கொளுத்துரது இருமல், இளைப்பு, கவிப்பு, உடம்பு பாரம், உப்பிசம், சுவாசம், வாய் நாற்றம் இவை வெல்லாந் தீரும்.

பதினெட்டுக் கிறுணிக்கு:-

சாதிக்காய், சாதிபத்திரி, கிறாம்பு, குரோசாணி, யோமம், அபினி இலவம் பிசின், அக்கிறுத் தாரம், சமுத்திராப்பழம், வெளிச்சி பிசின், நீர்முள்ளி விரை திட்டு விரை நத்தைச் சூரி விரை வகைக்கு விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.½ இந்த மருந்தைக் குமரிக் காயில் வைத்து உலர்ந்து மாச் சீலை சுத்தி இரு நாழி பசுவின் பாலில் வேக வைத்து சுவறின பின்பு காயை யெடுத்து மருந் தெல்லா மெடுத்து நேக வரைத்துச் சுண்டைக் காயளவு உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு கிறுணி வியாதிகளுக்கு பழஞ் சோற்றுத் தண்ணீரில் ஒரு குளிகை ரெண்டு நேரம் மூன்று நாளைக்கு கொடுக்கவும். பதினெட்டு கிறுணியுந் தீரும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்.

தோஷத்துக்குக் கலிக்கம்:-

மூடக் கொத்தான் விரை, மிளகு, அகத்தி விரை இவை மூன்றும் சமமாகக் கட்டி வெள்ளரிப் பூச்சாறு விட்டரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு தோஷத்துக்கு சன்னிக்கும் அமரத்துக்கும் முலைப் பாலிலரைத்துக் கண்ணில் போடவும் தீரும்.

சந்தனாதி யெண்ணை: சந்தனக் கட்டை வெட்டி வேர், விலாம்பிச்சம் வேர், எலுமிச்

வேர், சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், நன்னாரி வேர் ஆயில் பட்டை, வில்வ வேர், கோரைக் கிழங்கு, முள்ளி வேர், முன்னை வேர், கத்தாழம் வேர், வகைக்கு பலம்.10, வேர் வகையெல்லாம் சிறுக நறுக்கி பத்து மரக்கால் பிடிக்கிற பானையில் போட்டு நாலு மரக்கால் தண்ணீர் வார்த்து குழியாகக் காய்ச்சவும். வெட்டி வேர், விலாமிச்சம் வேர், நிறுத்த படிக்கு ஒரு பானையில் போட்டு ஆறு படி தண்ணீர் விட்டு ரெண்டு படியாகக் காய்ச்சவும். தாமரை வளையம், தண்ணீர் விட்டான் கிழங்கு, கூத்தன் குதம்பை, சவுரிக் கொத்துக் தாழை விழுது, பொன்னாங்கண்ணிச் சாறு, சிறு கீரைச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு வகைக்கு படி.க, இளநீர் படி.4, பசுவின் பால் படி. , பழகின தாளியாய்ப் பத்து மரக்கால் பிடிக்கிற தாளியில் நாலு மரக்கால் எண்ணை விட்டு இந்தக் கசாய வகை யெல்லாம் அன்றுடகம் பார்த்து எண்ணையிலே விட்டு விநாயக பூசை பண்ணித் தாளிக்குக் காப்புக் கட்டி அடுப்பிலேத்தி அன்றுடகம் வந்த சாறு கசாயம் எல்லாம் எண்ணையிலே விட்டு பாலொரு நாள் இளநீரொரு நாள் அன்றுடகம் உதவின த விட்டு எருவும், உமியும் அனல் காட்டவும். இதுக்குக் கற்கம். ஏலம், சீரகம், அதிமதுரம், கோஷ்டம், சந்தனம், தேவதாரம், சிறுதேக்கு, கஸ்தூரி மஞ்சள், கூகை நீர், அகில் கட்டை, சந்தனம், அரத்தை, நெல்லிப் பருப்பு, செண்பகப்பூ, மர மஞ்சள், கொத்தமல்லி, சடாமஞ்சி, தாளிச பத்திரி, கடல் நுரை, கற்கடக சிங்கி, சிறுநாகப்பூ, சித்திர மூலம், பெருநாகப்பூ, முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், செவ் வள்ளிக் கொடி, லவங்கப் பத்திரி, லவங்கப் பட்டை, சதகுப்பை, சாதிக்காய், சாதிபத்திரி சாம்பிராணி, கிரம்பு, திப்பிலி மூலம் இந்த வகை யெல்லா மிடித்து தாள் பண்ணி அரைத்து விடவும். வெட்டிவேர், விலாம்பிச்சம் வேர், கசாயம் எண்ணை வடிக்கிற முதல் நாள் விடவும். மெழுகு பதத்தில் வடிக்கவும்.

<u>ஈக்குக் கணத்துக்கு மாந்தத்துக்கு உருண்டை:-</u>

ஓமம் பிடி.க, வெள்வெங்காயம் விராகன்.3, வசம்பு விராகன்.க, பொருமி வேர்ப் பட்டை விராகன்.12, நாலு வகையும் சீலையில் பொட்டணங் கட்டி சின்னக் குதிரை லத்தி ஒரு விளாங்காய் மரியாதி ஒன்றரைப் படி தண்ணீரில் கரைத்து அந்தப் பொட்டணம் போட்டுத் தண்ணீர் வற்ற மட்டும் வேக விட்டு எடுத்து வெந்நீர் விட்டு அரைத்து மிளகு மட்டுவாதி சுண்டைக்காய் மட்டுவாதி, பயறு மட்டுவாதி உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைக்கவும். கட்டு மாந்தத்துக்கு விளக்கெண்ணை கொதிக்க வைத்து அமுக்கிலா யிலைச் சாற்றில் பிழிந்து ஒரு உருண்டை உரைத்து வார்க்கவும். பொரு மாந்தத்துக்கு மிளகு தக்காளிச் சாற்றில் கொடுக்கவும். கை கால் குளிர்ந்த மாந்தத்துக்குப் பெரு முட்டைப் பீரிச் சாற்றில் வார்க்கவும். வயறு கழிய வாந்தி எண்ணை சிக்கிறல் பெருந் தக்காளிச் சாற்றில் வார்க்கவும். பிள்ளைகளுக்கு அறைக் காச்சலுக்கு கையாந்தகரைச் சாற்றில் வார்க்கவும். ஈக்குக் கணத்துக்கு பொருமிச் சாற்றில் வார்க்கவும். நில்லா விட்டால் யிரட்டம் பாலில் வார்க்கவும். பத்தியம் வெந்நீரும் சோறும், உப்பும் கூட்டவும்.

<u>நாலு வகைக் கிறிக்கு மருந்து:-</u>

கருஞ்சீரகம் விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ, ஏலம் விராகனிடை.க, சீனிக் கடுகு விராகனிடை.க, கற்கடசிங்கி விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, கடுகு ரோகணி விராகனிடை.க, ஈர வெங்காயம் பலம்.க, பழுபாகல் கிழங்கு, எலுமிச்சங் காயளவி புனங் கோவைக் கிழங்கு, அப்பைக் கிழங்கு, ஆகாசக் கெருடன் கிழங்கு, வறுத்தா த்தின எண்ணை படி.க, இந்த மருந்தெல்லாம் அரைத்து எண்ணையில் போட்டு வெங்காயச் சருகு பதமான போது இறக்கிக் கொள்ளவும். பத்தியம் பொரிச் சாறுஞ் சாதமும் நீர் மோருங் கூட்டவும். உப்புங் கூட்டிக் கொள்ளவும். (ஏடு இல்லை)

<u>மஞ்சிட்டாத் தயிலம்:-</u>

1. போற்றரிய மஞ்சிட்டி பலந்தானும் புகழ் பெரிய வில்வ வேர் வயிரம் பத்து

மாத்தாரிது சந்தனச் சிராய் வகுப்பான ஆய்ப் பட்டை மருவிய முன்னை வேர்
வகைக்கொரு பலமோ பத்து
வித்தாரிய அசுவ கெந்தி கண்டங்கத்திரி மேவிய நிலக் குமிழ் நொச்சிவேர் விதமாக
வகைக்கோர் பல மெட்டதாக்கே.

2. ஆக்கே உகாய் வேர் சீந்திற் றண்டு சாறணை வேர் அடங்கிய ஆமணக்கம் வேர்
போக்கே உகாய் வேர் எருக்கம் வேர் சங்கம் வேர் புளி முருங்கை வேர்
களாய் வேர்
நீக்கே வகைக்கோர் பலமஞ்சாய் நிகழக் கூட்டி நிறுத்தனை யொன்றுயிடித்து
தாக்கே தேவதாரம் அரத்தை ~~[illegible]~~புங்கம் வேர் பட்டை தகைபட வகை
யொன்று பலமாமே.

3. ஆறே மருந்தைக ளெல்லா மடவா யிடித்துப் பஞ்சு போலக்
கூறே நீர் தான் மரக்காலிருபது கொடிய நாரிலதைப் புகட்டி
வீறே பதக்காய்க் காய்ந்த பின்பு இறுக்க யின்னங் கசாயத்தை
நாறே கொள்ளும் படி ரண்டு நலக்க உவந்த சமன் கேளே.

4. கேளே நெய் படி பத்துக் கள்ளா நாலு படியாக்கி
நாளே முன் கசாயத்தில் நலக்க யிதுவுந் தனைப் புகட்டி
ஆளே மிளகு படி ரெண்டு அடவாய்க் குமரி நீரிலிட்டு
தேளே நீர் படி ரெண்டாக்கிச் சேர வொன்றாய்க் கலக்கி வையே.

5. வைய்யே யென்னை யறு நாளி வளமாய்ப் பாலுஞ் சரியாக்கி
கொய்யோ மூன்று நாளாகக் கொடுக்கு மனலில் தீபதமாய்
பைய்யே மருந்து யினிக் கேளு பகரு மரத்தை யதிமதுரம்
செய்யே சந்தனம் சடாமஞ்சி சிறந்த கோஷ்டந் தனைக் கூட்டே.

6. கூட்டே மஞ்சள் நன்னாரி குக்கில ரக்குப் பொன் முசுட்டை
ஆட்டே தேவதாரமுடன் அடர்ந்த கடுகு திரிபலையாம்
சட்டே யேலம் பத்திரியும் ஒலைகும் பட்டை அது கூட்டி
நீட்டே பச்சை மரமஞ்சள் செண்பகம் நிறைந்த விளாமிச்சம் வேர் தானே.

7. தானே நாகப் பூட்டனே தளரா வெட்டி வேர்அதுவாம்
ஆனே யென்னை அறு நாழிக் கொன்றே பலந்தான் கடைச் சரக்கு
மானே ஆவின் பால் விட்டு மருக அரைத்து அதில் போட்டு
கூனே கமலமது வாகக் கொண்டே யெரியாய் மூன்று நாள்.

8. எரிப்பா யாறு நாள் தீர்ந்தால் யிதமாய் மூன்று மெழுகு பதம் ~~நீ~~/
நரிப்பாய்த் தயிலம் நிலவாக்/~~[illegible]~~ச் சிவக்கும் பதம் பார்த்து
குறிப்பாய்க் ~~கணேசன்~~ தேவியுடன் குருவா யென்னைப் பூசிப்பாய்
அரிப்பா யிப்படி நவ நாளும் அர்ச்சித் தேத்தத் தயில மிதே.

9. தயிலந் தன்னைப் பத்தா நாள் தாங்கி வடித்து அதில் போட
மயிலம் புனுகு கஸ்தூரி மதித்த சினையுஞ் சவ்வாதுடனே
அயிலங் குங்குமப்பூவும் அதிலே வராகன் தனை யொன்று
கயில மறவே முழுகி வந்தால் கடக்கும் ரோகந்தனை கேளே.

10. கேளே தானிய புடமதனில் சிறக்க வைப்பாய் மண்டலந்தான்
நாளே சுழிக்க முழுகி வந்தால் நலங்கும் ரோகந் தனைக் கேளாய்
ஆளே கபால ரோகமது அடர்ந்த ரோக மறுபதுமே
தேளே பித்தம் நாற்பதுவும் சிறந்த வாதம் என்பதுமே.

11. என்பது வாத மய்யந் தான் யிலகுந் தொண்ணூற்றாறுடனே
உன்பது வாய்வு நீரழிவு உகந்த யிருபத்து நாலுடனே
வன்பது வான அறுபத்தொரு வகுத்த கிரந்தி வகையாறும்
தின்பது குட்டம் பதினெட்டுந் தீரும் வகையை நீ கேளாய்.

12. கேளே நரையள் திரைமாமங் கெற்பந் தனை யுண்டாக்கும்
ஆளே மேனி சிவப்பேறும் அழகு பொருந்திக் கிறபைய்யதாங்
கோளே யில்லை அவன் தனக்கு கொடிய ரோகந் தனைத் தீர்க்கும்
வாளே உலகில் வயதேறும் வாள்வாய் மதியுடன் ஞானமென்றே.

13. எனவே முனிவர்தான் கூற எருதிலேறு மீசனவர்
நன்றே யிது தாருலகத்தோர்க்கு நலத்த முனியே யிது வென்று
சென்றே மகிழ்ந்து வாணியுடன் தெளிந்து பிரமா தாமுரைத்தார்
மன்றே புகழும் வியாகியோரே மகிழ்ந்து செய்வாய் தயிலமிதே.

1.4. வாய்வு சூலை ஆமை வலி வயற்று வலிக்கு மருந்து :-

காயமொரு பலவிடையாஞ் சுக்கிந்துள்ளி களல்ப் பருப்புவறுத்தக் கொள் கடுக்காய் மூன்று
நேயமுடன் கிராகனிறை யொன்றேன்றாக நேர்கரைத்து வெந்நீரில் நிசமாய்க் கொள்ள
மாயமெய்ங் கிலக விரிமானே கேளாய் வாங்காத சுரணம் போம் வாயுஞ் சூலை
ஆயனருள் மருகன்ற வருளிதலே ஆமை வலி முதலான தகவுந்தானே.

திரிபுர தாண்டக ரச செந்தூரம் :-

1.. கெந்தகமே யிரண்டரையே யிர மூன்றே கிளர் பலமாய்ச் செம்முள்ளி கிளர் தக்காளி
சிந்து செருப்படி யிலை தாளிம்பச் சாறுஞ் செம்பரத்தம் பூச்சாறு மாதளம் பூச்சாறும்
தந்திடுஞ் சாறுள்வொன்றி லொவ்வோர் நாளுஞ் சலியாதே யரைத்து பொடி குப்பி சேர்த்து
மந்தவே மப்பிக்கு வெள்ளைக் கல்லு முடைக் கடுக்காய் புத்தோடோடு மக்கருக்கே.

2. கருக்காகக் குப்பிக் கேள் சீலை மண்ணைக் கடுகவே யிட்டுலர உலரச் செய்தே
செருக்காகக் குப்பி வாய் வளப்பக் கல்லால் செறித்த தன மேலிடு மருந்தை செப்பக் கேளாய்
சுருக்கான களிப் பிளவை கடுக்கா யுப்புத் தொடு சூளி மன்னரக்குக் கிட்டம் வெல்லம்
பொருக்கான கருவேலம் பிசின் சுண்ணம்பும் பொன் மெழுகும் படிக்காறப் பொடியுஞ் சேர்

3. சேர்த்திடு முட்டையின் மஞ்சட் கருவை வார்த்துச் செமத்தரைத்த பின்னிம்பச் சாற்றரைத்தே
யேர்த்த பிசினைக் குப்பி வாய்த் தடைத்தே யெழிலீங் கொல்லி வல்லுள் அடுப்புப் போலே
பார்த்ததன் மேலொரு தாளி பதித்ததற்குள் பருவிரல் நாலளவாக மணலை விட்டு
காத்த கணபதி பூசை வயிரவ பூசை கண்டு பரதேசி யருக்கன்ன மூட்டே.

4. ஊட்டி யந்தக் குப்பி வைத்த குப்பி மூட வுாதியாய் மணலை யிட்டுத் தீபம் போலே
போட்டொரு சாமங் கமலாக்கினி யிரண்டு புரை சாமங் காடாக்கினியா யிருபத்தொன்றே
மாட்டு தீப் பிரித்தாற வெடுத்துடைக்கே மாதலம் ப முருக்கம் பூப் போற் செந்தூரம்
தீட்டு பெயர் திரிபுரதாண்டகமா மென்று செப்பிடுவார் வாகடத்தைத் தெரிந்த பேரே.

5. சண்ட மாருத செந்தூரம் :-

கெந்தகஞ் சூதம் சமமும்பல மெடுத்துக் கிளைக் கற்றூளையுங் கூத்தன் குதம்பைச் சாறும்
முந்த ரசம் பட்டை செம்முள்ளி யோடே முடை கடுக்காய்க் கசாயத்தி லொன்றாக
வந்திடு நாளரை முன் போற் குப்பிக் கிட்டே வளரெரி முன்போலி பத்தஞ்சாஞ் சாமந்
தந்திடு பாலம் பழம் போலிருக்குங் கண்டாய் சண்ட மாருத செந்தூரந் தானே.

6. சரபஞ்ச ரச செந்தூரம் :-

சூதமே மேன்ச பலங் கெந்தக மொன்றரையே தலங்கு கூத்தன் குதம்பை குப்பை மேனி
பேதமா மிச் சாற்றில் ரெண்டு சாமம் பெருமுள்ளிச் சாற்றிலல் நாலு சாமம்
போதவே காணியார் பன்னிரெண்டு பொருந்த பொடிக் குப்பி யிடு மிருபத்தஞ்சு
சரத மாதளம் பூப் போலெடுத்துக் கொள்வாய் சரபஞ்ச ரச் செந்தூரந் தானே.

7. <u>காளமேக நாராயண செந்தூரம்</u>:-

கெந்தகமே ஒன்று மிரண்டு பதாக்கிக் கிளரரிதார மெட்டுச் சீலையேரெண்டு
வந்த லிங்கம் பதினஞ்சு பலமாய்க் கூட்டி வெள்ளெருக்கம் பால் தும்பை முருக்கம்
சிந்து செருப்படி பொரோசிலையா முள்ளி திகைப்பூடு நாமத்/டி மப்பூச் சாற்றிலே
முந்த வொவ்வொன்றொரு சாமமரைத்தே முகிள் குப்பி யிட்டேற்றி முன் போல்ப் போடே.

8. பொடிருப்பதஞ்சு தென்பல் தீப்பிரித்த போதவே யாற விட்டுப் பசை செய்தே
ஓடு குப்பி முன் சொன்படி யுடைத்தே முருக்கம் பூப் போலான செந்தூரப் பேர்
நாடு காள மேகம்ப நாராயண செந்தூர மென்று நாட்டுஞ் சீட்டுத்
தேடலுபானத்திலிடச் சகல ரோகந் திரை கூடல் புக்கொடுஞ்சி விடுந் தெய்வக் கொம்பே.

<u>ஈஸ்வர சிந்தாமணி ரச செந்தூரம்</u>:-

9. கெந்தக மொன்றரையே ரசமோ ரெண்டு சிலைலிங்கம் வெங்காரம் பல மொவ்வொன்றே
வந்த மனோசிலை யரையாம் பல மெடுத்தே மாதளம் பூதக் காளி வெட்சிப் பூவால்
நந்திடுஞ் செம்பரத்தம் பூ முருக்கம் பூவால் நலமாக வரை முன் போல் குப்பிக் கிட்டே
அந்த வளையக் குப்பி கிடையாலிட்டால் மனக் குப்பிக் கிடு மருந்தே மாட்டுந் தீயே.

10. தீ யெரித்து முன் போலிருப்பத்தஞ்சு சென்ற பின்பு மங்கிலியக் குறுத்திக்கையால்
நீ யெடெனப் பராபரையாய்க் கண்டு நெஞ்சில் நிலை யீசன் தாளுகக் குப்பி வாங்கிப்
பேரயுடைத்துப் பூசை செய்யப் பலிக்கும் நன்மை பொருந்திடு மீஸ்வர சிந்தாமணி செந்தூரமாய்
பின் உனக் குளிகை நடுத் தடியை வல்லி வஞ்சி யஞ்சிக் கெஞ்சிடு நூல் மருங்கிலுளே.

<u>ஸ்ரீஸ்ரீஅகஸ்தியர் குண வாகடம்</u>:-

<u>அந்தாதி விருத்தம்</u>: செகரயன் கூறப்பட்டது:-

1. மணி தங்கு மருவி நெற்றி மலையத்தின் முனிவர் குழ்ந்தே
யணி தங்குமாக் கடம் மேல் அரும் பிணி வருதல் செப்பாய்
தினி தங்கு வேதத்துற்ற செல்விய வகை யுணர்ந்தே
கனிதங் குதவிலிலே கடந்த மாமுனிவன் செய்தான்.

2. செய்தன தமிழாலந்தந் தேறுமா யுறு வேதத்தால்
மெய் பெற மொளிந்தார் வாரி விருந்தினர் கா வாயாலே
வெய்ய நோய் வினை தானங்க விருத்தமந்தாதியாக
பைய்யலே யொருங்கு சேரப் பரிவொடு செப்பலுற்றும்!

3. ஆம் பொருட் கோலவையத் தறிவு தொல் மாந்தல் மேலே-
தேம்புதல் பொருந்த நோய்த்தான் சேர்வகை தெரிவையாலும்
வாம் பெருங் குற்றத்தாலும் வரன் முறையாலுஞ் சென்று
தாம்ப்யில் பிழையால் வந்த சார்வதைச் சாற்றுவோமே.

4. சாற்றிய மாதர் மேலே தங்கிய காதலாலும்
மேற்றமா மருந்தீட்டாலும் மோய் விலா நடையதாலும்
போற்றிய தனங்கள் கெட்டுப் போகையிலுஞ் சேட்டை
மாற்றிய நட்புப் பேசி மலிந்திட நின்றதாலும்.

5. நின்ற காலங்கள் செய்யும் நீதிக்களாலும் பைய்யுள்
யொன்றி வென்று ஊனை யுண்டிடும் பொல்லாதாலும்
மன்ற நின்ற உலவு செய்யும் மனமது யிடைஞ்சலாலும்
சென்ற நீர் பகையிலும் செயல் விழி தயிலாதாலும்

6. தன்றலைச் சுமைகளாலும் தரு மூடற் கடுப்பினாலும்
மென் பனி நனைதலாலும் மீனின் முள்ளருந்தலாலும்
வன்பு வாகனத்திலேறி வருந்தட மலவிலாலும்
முன் பயில் நெய் பாலென்னை மருத்தின்வை விட்டதாலும்.

7. விடும்பி மயில் நெல் வார் தோல் விருங்குகையாலும் விம்ம
வனமது முருகவே தானருந்திப் பின் செரியாதாலும்
கடுக வுண்டோட லாலும் களல் மணற் சுடுதலாலும்
வடுவுறு தண்ணீர் தேக்கி வாய் மலிவுற்றதாலும்.

8. உற்றதோருடற்குச் சொன்ன வுயர் குண வினந் தன்னுள்
முற்றி மல்லியாதி யெல்லா முதிரவே தோன்றும் போது
செற்றமாம் வாத பித்தம் சேட்டுமந் தன்னி லொன்றை
பற்றியே தோன்று மென்றே பகர்ந்தனர் முனிவர் தாமே.

9. <u>வைத்தியன் முறைமை</u>:-

முனிவு நோயைத் தீர்க்க மதறிவுடையான் மண் மேல்
மனிதராய் வந்த தெய்வ வயித்தியன் முறைமை சொல்லிற்
கனிய வாகடமும் நாடி கருமறிந்திதை யந் தன்னிற்
பணி வளர் குருவைத் தேவைப் பத்தி செய்வானுமாகி.

10. பத்தியால் மருந்து செய்யில் பலிப்புளான் சலிப்பின் மேய
சுத்தியாங் குணத்திலே சாந்த விதமாங் குணத்தை யுள்ளான்
புத்தியால் மிகுத்தோன் வஞ்ச பொஞ்சியான் னெஞ்சிலன்
சித்தியா முப்புச் சத்துஞ் சிதை விலான் சின விலாதான்.

11. சினம் பரியோற போறுந் திடமுள்ளான் மடைமையில்லான்
கன மென்ன வுயிரைக் காக்குங் கருணையான் குளித்த சீலன்
வினமென உலகங் கொள்ளு மேற்றத் தான் தோற்றத்தான் மா
மன முறு நயவான கேள்வி வயித்திய னென்னலாமே.

12. என்பிலுற் காலை நாட்டி யிலங்கு நல்லனை கள்ட்டி
நன் பிருப்பச்சுப் போட்டு நரம்பினல் வரிச்சுக் கட்டி
முன்றசைச் சுவரை வைத்துத் தோலினல் மேய்ந்த வீட்டில்
வன்பிணப் பிறப்பைக் காண்பான் வயித்திய னென்று மாங்கே.

13. ஆங்க வன்றன் பாற் சென்றங் கருள் வழிபாடு செய்தே
தாங் குணர்ந்தினிய காய தவிசின் மேலிருத்தி நீருந்
தேங்கமப் பழுந் தாவித் தெய்வ மென்றிட்டுப் போற்றிப்
பாங்குள வடக்காய்த் தாம்பும் பணமும் வெள்ளிலையும் வைத்தே.

14. வைத்து முன் தூப தீபம் வயித்தியன் தனக்கு நல்கி
மெய்த்தவ விதி தானென்றே மெய்யுணர் குருவைச் சீஉடன்
கைத் தலங் கொண்டு போற்றும் காட்சியா மென்று நோயால்
லெய்த்தவன் வணங்க நோயிலிரண்டிலோர் கூறு போமே.

15. கூழ தானறிந்த போற்றுங் குணம் பரிகாரஞ் சொல்லப்
பாரு நோயென்ன முன்னிப் பனிய வுற்றிருந்த பின் னை
வீர சேருடம் பின் வாதை விளம்பு வழியப்பு நாடி
யே சீர் வலக்கை பற்ற வியலது பரிகாரிக்கே.

16. யியல் பினிலது வாக்கியையிய யியங்கு நாடிதனைப் பார்த்து
செயலறு வாத பித்தம் சேட்டுமத் தோஉடங் கட்டு

Page 52 later ha[...] to 59 dealing with subje[ct] not useful [...] the Dharma[...]

மியல் பெரும் வியாதி தீராவிடில் விட்டு மெல்லப் போக
பயமறத் தீருமாகிற் பரிகார முண்டென்றே.

17. ஓர பலம் பிராயங் காலங் காயம் வந்தற்ற நால் வகைத உனையு ணர்ந்த
பின் உன
பேதமுற வியாதி தனிற் பலமுந் தீர்க்கும் பெருமை தரு முறை மருந்தின் பலமும்
நோக்கி
தாத மருங் குழல் மடவார் மருந்து செய்யிற் றந்தி முகத் தொந்தி வயற்றைங்
கார்க்குத்
சீதமுறங் கரும்பிள நீர் வெள்ளுண்டை செப்பிய முப்பளந் தேங்காய் சிறக்க
நல்கே.

18. நல்கிய கிரக சாந்தி நற் சிவ பூசை ஞானம் சொற் குரு பசை மயேஸ்பர
பூசை
சீத கும்ப மல்க வித் தெய்வ பூசை ஆகுதிகள் பொசிப்பு நல்கி மல்கிய பிதர்
களுக்கு வகை வகை யினிதாய் நல்சே.

19. நல காலம் முதாக்கும் சிவன் மால் வேதா நமக்கி நகையிவல் ந் யிலையை
நீக்கிப்
பலகால மியல் பயிற்றி வனத்தே வாரும் படியாரும் பதமளிக்கும் படியினும்
செல காலம் வருங்காலம் நிகமுங் காலம் தேர்ந்துணர்ந்தே புகழ் விக்குஞ்
சேதானன போற்
சொல் சாலம் புவி தனிலே தொழுத போற்றித் தொடுத்த பத வினிடையே
தோன்றச் செய்தார்.

20. அவை யடக்க முற்றும்.

2Ø. <u>அங்சாதி பாதந் தத்துவத்தியாம்:-</u>

செய்ய தாமரை மேல் வேதாச் செப்பிய வியாதிக் கீயப்
பையவே படைத்த மெய்யிற் பற்றிய நரம்பு சேரத்
துய்ய வென் பிறைச்சி மற்றுந் தொகுத்தவை யறிந்து முன்னோர்
அய்யமத கலச் சொன்னரங்காதி பாத மென்றே.

21. அங்கலந் தொல்லூற்று மவர வராக்கையாகு மெய்தா
யிங்கித குறையதாகு மிறைச்சி நாற்றிருபத்தஞ்சு
பங்குள்ள பலமா மென்பர் பார்வை சேரிரண்டு கண்ணுங்
கங்குல் போலளகமாதே களஞ்சி ரண்டாகுங் கண்டாய்.

22. கண்ணொடு நாசி மூன்றுங் களஞ்சி நாற் களஞ்சி நாக்கு
நன்னொரு கன்னஞ் சேர நாற் களஞ்சாகு மெய்யின்
உன்னிறை யெலும்பெல்லாம் நாற்றொருபத்தே பலமா மென்பர்
யென்னுறும் யீரலாவ தென் பல மென்னலாமே.

23. என்னு முப்பலமே நுரையீரனிச் சிறு குடரி நீள
முன்ன முப்பத்திரண்டு முளமதாம் பையைச் சொல்லில்
மன்னுமை முள மந்தரந் தாமரை மொட்டு மய்ந் களஞ்சி
பன்று நாற் களஞ்சி பித்த பயயாம்பாய் வேற் கண்ணாய்.

24. பாய்ந்த மெய்க் கபமுன் நாளிற் பயித்தியமுள்க்குச் சோரி
ஆய்ந்த நாழி மூசம் மாலியாங் சூரியா நாடி
யேய்ந்த தோர் றெழுத்தீராயிர மலை யெலும்பைப் பின்னி
சேர்ந்த தாளாதியாகச் சிர முரவியங்குங் காணே.

25. இயம்பிய படரு முனை மென்பு நாடி கருமற்றுஞ்
செயம் பெறு சிங்கை நாடன் செகராய சேகரன்
போலுயர்ந்த வாள வடக்கராக முட்டிய களத்தின் மீதே
அயன் சிறு ளத பேணி புளந் தளந்த மைத்தாரன்றே.

26. ஆன வென் பல்லுமுலேட்டம் பல வீரெட்டாங் கண்
பானலார் மேகு தன்டு பன்னிரு கோர்வையாகும்

தானமா மூட்டிலூ டே தர்ன்சை வஞ்சு தாளின்
மேனகு கரமு மொக்கும் விரளவாகத் தானே!

10.12.63.

27. தானரை சிலை வால் தோல் மேற் றங்கிய நரம்பு போல
ஊனு முடம்பதெல்லா மொத்துடனரம்பு நிற்கும்
*நீருங் கான் மாஞ்சிரை பன்னும் கலந்த மெய்க் கனமதாக்கி
மான் மாமோக நீரும் மிலங்கி தளிப்பதாமே.

28. மலங் கடை குடரைச் சுற்றி பன்னுமு முச்சந்தி நோக்கி
யலம் பெறக் குடிகை தன் மேல் தாக்கியே யபானம் நோக்குாகும்
நலம் பெய மப்புத் தானும் நாபிக் கீழ் தரம் பற்றி
சலம் பேயிசா றி வீழ்ந்தி தன்டுற நோக்குந்தானே.

29. நோக்குங் காலெலும்பிரோன் நோக்குற்க் கலர்ந் தடர்க்கே
யாக்கு முன்னடு மூலத்தே யாகமாஞ் சுழுனை தோன்றி
ஊக்கும் பின் கலை யிடைக்கே யர்தார மா ா டோடி
காக்கு ம்டலத் தா டேகி கபாலத்தே யெருந்த நிற்கும்.

30. நிற்குமே யிடையு முற்றம் நிகரில் பிங்கலையின் மூலம்
பற்றியே பாக மாறிப் பயின்ற சுத்திரிகைக் கால் போற்
சுற்றியே சுழுனை யூடே தொடர்ந்திரு புறத்தஞ் சென்று
முற்றவே விரத்திற் பொர்ய் மாலக மென நாசி முற்றும்.

31. நாசயாம் நரம்போ ரேம் நல்லிசைக்கு குருவமாகி
தேசதாம் நாபி யுற் ச் சிக்கென மேலே யோடி
நேசமாங் கண்டம் புக்கி நேர் பெற மேலே யோடி
நிகழ்த்த நாவடியி ா ிற்றுப் போர் செறி விழியினேள் போயிருநயனம் பற்றிச்
சீர் செறி யிந்த நாடி இந்ா வென்னுரை செய்வர்ரே.

33. உரை செறி மூலந் தன்னி லகித் தெ நாடி ா ய் ர்ரர்
வரை யிரு விலாஞூடேர்டி மன்னு க்கைக் குழியிற் புக்கிப்
புரையுறு களத்தி லோடிப் போயிடு செவியிற் புக்கும்
விரை யலம்புருடன் நாவு மெய்ப்புருடந் தானுமே.

34. தானமா மூலந் தன்னிற் தங்கிய குருத நாடி
யூனமா முழுதைப் பற்றி யுற்றுற நிற்கு மென்க
வான சிங்கினி யிடி யவ்வை தொறும் பற்றி யோடி
மான நாற் பாய்ந்த நிற்கும் வாம்பரி யென்னத் தர்னே.

35. பரிந்த வாருழையாம் கர்டி பசுந் தழை யடே யோடுந்
திரிந்த கூரஜ வார் நாடி செறிந்த தோரா டே செல்லும்
விரிந்த சங்கினியுஞ் சந்தில் மெல்லிய யல்லை பற்றும்
புரிந்கெருப் புகளி தானும் பொருந்திடு மென்பைத் தானே.

36. என்று நர்டி கர்டான மூலமே யொரு வளையமாகப்
பின்னியே உரியே பேர்லப் பெருகி மேற் பரந்தே யேறுங்
கன்னலாய்க் கர்ு ம.:தாங் கூத்தந்த முடிச்சேர்டொத்து
தன்னிலே நாடி கூடித் தசை யென் பொ டொன்று மென்றே.

37. என்றதோர் நாடி சேர எழுபத்திராயிரத்து
மொன்றவே யிதனிலுள்ளே யுதிரமே யோடி நிற்கும்
நின்ற நீடென் பிலள்ளே நிற்பது முளையாகும்
பொன்ற வார் தசையினா டே பொருந்த வதிருவியாயே.

38. ஏய்ந்தெழு பிராண வாய் விலாடத்தி நடுவே தோன்றி
வாய்ந்த நற் சந்தி புக்கி மன்னிய மூலத்தோடி
யேய்ந்திடா தொல்லத்தே யுற்றிடையும் பிங்கலையூடோடி
தோய்ந்த தோர் சிரத்தைச் சுற்றித் தண்டத் தோடோடி மீளும்.

39. ஓடுமே பன்னிரெண்டன்னரைத்த வங்குலத் தீளம்
நீடுறு நாடி மற்றங் கெட்டுள்ளே யெகுந் தும்பிக் கோடுற
மூலை நன் மாதே சுற்றிடைக் குவைதாகும்
நாடொறும் பிராண வாயு நாடொறு மியங்கலாகும்.

40. ஆகுமோர் கடிகை முன்னூற்றறுபது சுவாசம் நாளொன்
றேகுமே யிருபத் தோராயிரத்தறு நூறு தன்னிற்
போகுமே மூன்றி லொன்றே புறத்தே மற்றிரண்டு கூறு
மேகுமே மீண்டு முள்ளே யிறப்பது மியற்றி மீளும்.

41. மீள்வது செய்யாதாகில் மேவிய பிராணன் தன்னை
தோள் பனை யனையாய் கேளாய் சுழுனையின் வழியே யோடிக்
கோள் செறி மூன்று கோணக் கொழுங் கனல் தொகுத்திப் பார்க்கில்
நீள் வள ரொளியை யுற்றே நின்றிடும் புறத்துப் போகர்.

42. போக்கமுஞ் சுழுனை பற்றிப் பொருந்திய மூலந் தன்னில்
நாக்கமா மொல்லகத்தே யுற்று நேர் பார்த்த போது
நீக்கமா லிருளெல்லாம் போய் நீ ளொளி தோன்றும் பின்னை
வாகுறத் தன்னுள்ளே தான் மானெறிக் காணலாமே.

43. நெறி யறக் கொய்த கொய்த நேசமுற்றுள்ளே யுள்ளே
குறியுறப் பைய்யப் பய்ய குருத்தையே சுருக்கி நாளும்
செறிவுறச் சுழுனை தன்னிற் சீறிய வழி யடோட்டி
யறிவுறு மொழியைப் பார்த்தங் களிவில்லா திருத்தலாமே.

44. யிருமை சேர் குதத்தைப் பற்றி யியங்கிடும் பானன்றனும்
மருவு சீர் மலங்கள் போக்கி வயங்கு தொடையில் நின்று
முருவலே பரிசங் காட்டி யுண்டவன் அன்னங் கடன் வீர்க்
கருதியே யுடலு ளெங்கும் காந்திடப பரப்புங் காலே.

45. பரவிய நாடிக் கெல்லாம் பகர்ந்திடிற் சமன் சமானன்
விரவிய நரம்பூடோடி வியானனே யுலாவி நிற்கும்
வரமிகு நாகன்றனும் மருவியே நோக்கு மென்க
முறையுறு மூக்கியன்றன் மூரியா யிருப்பான்றனே.

46. யிருப்பனே கூர்மன் கண்ணிலே நின்று குளிர்ந்தி மைத்துச்
சிரிப்பனக் கிரி கான்றனைச் செவ்விதாய் மூக்கில் நின்று
கருத்தை நினவு புந்திக் காஞ்சனஞ் சிந்தை செய்து
பொருத்தமு மிதையுந் தன்னிற் பொருந்தியே நிற்ப னென்னே.

47. என்பிலாத் தனஞ் செயன்றனியங்கிய வாயு விட்டுப்
புனல் புனல் வாயுவெல்லாம் போகிருந்தான் போகாமல்
அன்பு சேர் நல்லே ர் போல் நின்றறுடன் வீக்கங் காட்டி
மென் புனல் உடம்பு பந்தால் வெண்டலை கிழித்துப் போமே.

48. போம் புருடனுக்கு நண்பு பொருந்து மந்திரி தானின்று
வாம்பரி நிகர் பிராண வாயுவைத் தோற்று வித்துக்
கும்புகைக் கெதிலெழும்பு கூடிய விடத்தே நின்று
சோம்புற விருமலீழை யுடரவுற்றளிக்கும் கண்டாய்.

49. அளி செறி பிறவஞ்ஞானதான் மூலத் தோஷிக்குத்
தெளி தரு பீடமாகிச் சேர்ந்த பின் பரந்து நிற்கும்
மெலியதோர் கதிர் காலென் பினிசை விலில் வயனிலமும்
விளிவுறவுருதி மெய்யால் மேவுறக் கொளுந்துங் கண்டாய்.

50. ஆய் வுடற் றெரக் குருளையாம் பஞ்ச விந்திரிய
மெய் வயிர மிருக்கான வச்சாளி
நேயமுற விவை காதிற் கிலிசையா திருக்குந்
தீய திவை நருவிற் சேரக் குலையுமே.

51. மலைந்திருங் மெய்யத்துக்கும் குதத்துக்கும் நடுவதாக
நலந் திகழ் மூல தாரம் நாற் சதுரங்களாகி
மிலைந்ததிலோவு மாகி மேற்றுறி கோணமாகி
மலைந்திரு மடப்பம் பூளினடைவு போலிருப்பதாமே.

52. மேவிய விதனினின்று மேவுச்சி நாக்குக் கன்னம்
பூவி யலங்கி மட்டும் பொருந்திருஞ் சுவாதிட்டானம்
காவியங் காலமுபி கருது நன்முலதாக
தாவியே சேர்ம மென்னும் தங்கிய லிலிங்கமாமே.

53. மானமுய் நாபிச் சக்கரம் வாறண வண்டம் போலே
யானதா மிதனைச் சூழுமா யிரத் தெட்டு நாடி
பீனமா மிதனை யெல்லாம் பின்னிலோர் ரனி நிற்கும்
தானமா மணி பூரப் பேர் தங்க ப்பாங்கியமாமே.

54. இயம்பிமுர் தமிளென்றிரு பிறர் புரத் தேர்டொத்து
தளங்கிட நடுவு சந்த தன மொத்த நெஞ்சதாகி
நயந்தரு நினைவு புத்தி நல்தனஞ் சிந்தை சேர்ந்து
சியந்தரு மிதைய பற்பம் சேர்ந்தினி திருப்பதாமே.

55. யினிய நீர் பொசிவதாகு லிவ்வுயிர்க் குணங்கள் கொள்ளுந்
தனியிட மாகப் பேசுந் தானெடுந்தானமாகி
யினிதமாம் ரவிக்கென்ற மாதார மாகுல் வாழும்
புனிதமா மிதனை முன்னோர் புகழுவர் விசுத்தி யென்றே.

56. என்பிலா வீத் தன்டிலீமாய் நடுவு நெற்றி
மின் பெற வுருகி நிற்கும் ஒருக்கையின் வடிவுமாகி
மன் பெருச் சினையும் வேண்டா மரையு மங்கலே யாகும்
அன்பு சேர் பரா பிரைக்க மாசன விடதாமே.

57. ஆசனமோங் கார முன்னி யதனிருந்த மூலவனல் தன்னை மெள்ள
வாச முழுஞ் சுவாதிட்டானத் ஈ டோட்டி மணி பூரகத்தேற்றியகத் தள்ளாக்கி
நீசமாம் விசுத்தி தன்னைக் கிடிகிப் பின்னை நிலை பெறு மாக்கினி யகளில் நிறுத்தும்
போத
கேசமுறுஞ் சிரசதலே யாகும் பின்னை கிளைப்பு வனம் படைத்த பொருள் கிடைத்தல்
பாராய்.

58. பாராய் பரஞ்சோதிச் சுடருட்டே பளிங் கொளி போல் நேராய் நின்றிலங்குவதும்
நின்ற நின்ற நாட்க கூடி யோராதொரு வடிவாய் யோங்காரத் துள்ளொளியா யாட்ட
பேராய்ப் பெரு வளியாய் பெ ஈந்து வுலகத்திருக்கும்.

59. யிருக்கும் கருவி தொன்னூற்று றென்பத்திரி மண்டலமேல் நின்
றருக்கமுடுஞ் சிவ ரையு மாதாரங் களாளெறென்பர்
செருக்கண்டாய நின்றி யற்றுந் தெய்வம் பல வன்னர செய்வாய்
மருக் கொண்டழி கொண்டிருளளகமாகே தெளி நீ மாளறவே.

60\. 60. மருவால் வந்தே யுலகளிக்கு மனைவார் புரியரோன் மருவாரைத்
தெறு மாலியிலோன் செகராய சேகரன்றன் திருச் செவியிற்
பெய மாமுடலினுங் கூடு தனைப் பிரித்தே யுரைக்கும் பேதைமை தான்
விரமா முன்னே சடங்கொருவன் விரை விடுற்றும் பரிசாமே.

61\. சாகந் தண்ணீரன்ன மிவை ததும்புக் கொண்ட போது பின்னை
மேகம் போலுங் குழல் மடவாய் விரையப் பின்னும் பசிப்பது
கேளாகச் சேருங் குடலிற் றீயதனைக் கொருந்து விட வுதப்
பாகஞ் சேரு மெனவுலகிற் பகர்ந்தார் தெரிந்தார் பாவினரே.

62\. தெரியவே தண்ணீர் மண் பாத்திரத்திலே கரைத்து வைத்தால்
வரியு நீர் மேலதாகி மண்டி தாறுமா போற்
சரி குழலனைய மாதே சல மலம் படுக்கும் போதங்
குரிய தோரு திர சரி யுடம்புதாய் நின்றதாமே.

63\. நின்ற தோராக மெங்கும் நிரம்பிய நரம்பு தோறும்
சென்றதொரு திரந் தன்னைச் செலுத்தியே வாயு நிற்கும்
மொன்ற வோருதிர. ந் தன்னிலுட்டவன்லங் கூடன்னை
மன்ற நருகத் தாகம் வாரு மிழ்வுங்கி தானே.

64\. அங்கி தாழுடலினுள்ளே யனிலமோ டொத்த நிற்கிற்
தங்கிய உணவதெல்லாம் சமித்திடு மரோகம் வாரா
யிங்கிதஞ் சலியா தென்று மியல்புடனிருக் கலாமே.

65\. யிருந்த நீரன்னங் கொள்ளு மியல்பு தானுரைப்பக் கேளாய்
பொருந்துடல் நாற் கூறுகப் புத்தியாற் கூட்டு கொண்டு
வருந்தியே யிரு கூறன்னம் அப்பொரு கூர் மெய்யில்
வருந்தியே ஒரு கூறுந் தான் வருந்திலே கிடக்க நன்றே.

66\. நன்று காண்னனந் தன்னை நாறு மில்வடைவே கொண்டு
நின்று நூறடிப் போய் பின்னை நித்திரை சயனந் தன்னிற்
சென்ற தாம்பூலங் கொண்டு சிறந்த நாற் கடிகை சென்றுற்
றன்ன பூங் குழலா ரோடே துயில்பவர்க்கில்லை நோயே.

67\. நோயில்லை யுதிரம் நீரசிறுட்ங்குடம் பொத்த நிற்கி
லாயுவுஞ் சுகமுண்டாகும் அன்ன மப்படியே சேரும்
ஞாயமா மதியுண்டாக்குந் தடருடல் மிகத்த நெய்க்கும்
நாயக மயில் போல் நல்லாய் நல மிக விளையுங் காணே!

68\. விளையும் நீருதிர மங்கி மெய் யொத்த நில்லாதாகில்
களையு நீர் விளையாதாகிற் கப மிகப் பார்க்கு மென்க
வளையு மெய் யுதிரமாறில் மாருத மாகு மென்பர்
கிளையு மொள்ளங்கியேறிற் குளிர்ந்தது பிடித்தந் தானே.

69\. தாமுடற்குறுதி செய்யிற் தழலின் மேலாம் பால் நெய்
யூனுறக் காயிமேடே யுண்ணில்லை யுள்ள தெல்லா
மானிடற் குடலிற் சோர வன் குடர் நிற்பதாகும்
காணுறக்க மழுங் கோதைக் கருங் குழற் கமலமாதே.

70\. <u>வாகடம் பதினேழும் வைத்த விபரம்</u>:-

சாத்திர மறிகிலார் சூதர் வித பண்டிதர் வார்த்தையின் பெருமையால் மருந்தை
யீந்தக் கால்
கோத்திரங் குலமொடுங் குலையும் பாவத்தால் வீற்றிடும் நரகத்தில் வீழ்வர்
காண் கொலோ.

71\. நடு நிலை தானமும் நற் சிகிச்சையும் கொடிபடு வியாதியின் குணமுங் கூறிமேம்
விருத்தலை மருந்து தான் விரும்பிக் கூட்டிட வடிவுள்ள சாத்திரம் வகுப்பக் கேண் மீமே

72\. சுரங்களுந் தொந்தமான சுரங்களு மதிசாரத்தின்
சுரங்களுஞ் சன்னி பாத சுரங்களுந் தருணச் சோதிச்
சுரங்களும் லவங்கனந்தான் தய்ப்பதஞ் சாத்திய மசாத்தியம்
நிரந்தரமாகச் சொன்னோம் நேரிழை யறிந்திடாயே.

73\. வாகடம் பதினெளங்களும் வகுத்துச் சொல்லுகிறேன்
நாவிடுகண்டு சந்தா பமே கலக்கம் நாசியிலூதுந் தாள் நசியம். அஞ்சனந்
நாவிடுங் கசாயஞ் சூரணங் கிருதம் தயிலமாங் குழம்பொடு லேகியங் குளிகை
மேவிடுஞ் சுத்தி பற்பம் செந்தூர விரும்பவுபான வகை. பதினேழும்
காவடர் குழலா யாயுறு வேதக் கணித நூலின் படி வகுத்தார்..

74\. <u>தாகத்துக்கு கண்டு</u>சம்:-

அதிமதுரம், சீரகம், வெங்காரங் கோஷ்டம், மரிய தேன் சீனியுட எலுமிச்ச ரச மோடிது சமமாய்க் கூட்டி யுடன் கண்டுசஞ் செய்ய வியல்பில்லாத் தாகங் கெடு மின்ன மோர் கிறுகை பொது மயிரைச் சுட்ட கரி அதிமதுரம் சீனி பொய்யாத தேனுடனப் பிறகங் கூட்டி வித விதமாய்க் கண்டுசஞ் செய்ய நாவுக்கம் விட்டோடு மிக்குணத்தை விரைந்து பாரே

<u>சத்தி விக்கலுக்கு அரிகருங்கல்க் கலேபம்:-</u>

75\. கடுக்காய் சுக்கு வெங்காரம் கருஞ் சனிக் காரமுடன்
அடுக்காய்ச் சனி தேன் கூட்டி யழகாய் நில---ற்றரைத்தே
கடுக்காம் வாந்தி விட்டோடுந் அவ்ள நாக்கிற் தேய்த்து விட்டாற்
சடக்காய் யிற்றக் கிறிகை தன்னை சதிராய்ச் செய்து சாற்றீரே.

<u>லவங்காதி கல்க்கம்:-</u>

76\. கிராம்பு சாதிக்கா யதிமதுரங் கனி மாதளையின் சாறேலம்.
விரந்த வில்வ வேர் சங்கு விளாவின் பழமாத் தேனுடனே
பராந்த கடுக்காய் வெங்காரம் பாகும் வாந்தி விக்கலுடன்
நிராந்த மருந்தே யெரித்தெடுத்து நிரையச் செய்வாய் நீள் குழலே.

<u>சன்னிக்குக் காயதி லேபம்:-</u>

77\. பெருங்காயந் திரிகடுகு காரமிந்துப்பு பேதியாங் கொம்மட்டி மாதளம் பழத்தின்
சரஞேஷ்ருங் காதலிஞ்சிறச மியுடனே கூட்டி யிது நாவிற் தேய்க்கவே விட்டோடுஞ் சன்னி
பருஞ் சாயக் கழுதை விட்டை மஞ்சள் வில்வ வேம்பு படாகஞ் சங்குல் லை சகாதே வியாற் சந்திற்
கருஞ் சாய காகத்தினிற் குடனே புகைக்க கடுஞ் சீதஞ் சுரத்துடனே விஷசுரமுந் தீருமே.

78\. <u>குளிர் சுரத்துக்கு நாகாற்சுனர் தூபம்:-</u>

நண்டுத் தோடு முள்ளித் தோல் நல்ல குஞ்சங் குல் லையுடன்
அண்டங் காக்கையிற் குடனே யசமோதகமு மாட்டெருவிற்
குன்டு சட்டி தனிற் புகைக்க குளிருஞ் சுரமும் விடுமென்றே
தண்டங் கருப்பை யுள்ள தூறுங் காதல் முனிக்குத் தாலுரைக்கான்..

79\. <u>சன்னி பாத சுரத்துக்கு வயிராதி தூபம்:-</u>

பாம்புச் சட்டை மயிலிறகு பரிய கழுதை விட்டையுடன்
கும்பக் கோம்பி வில்வ வேர் கூடவோம் முள்ளித் தோல்
தாம்பத் துளசி குந்திருக்கந் தேவட்டிப் புகைக்க விட்டோடுஞ்
சாம்பு சன்னி வாதமொடு சர்வ சுரமு மகன்றிடுமே.

80. 80. சன்னி பாத சறுவ சுர விஷ முனியத்துக்குச் சேத்திர பால சாபம்:

கலை விட்ட மயிலிறகு பாம்புச் சட்டை கருங் குதிரைக் குளம்பு நண்டு
காட்டுப் பன்றி
சலமிட்ட குளம்புள்ளித் தோட்டுடனே குன்லை சகா தேவி பொன் மெருகோமந்
சாபம்
பலனிட்ட விந்தப்புக்காகத் திறகும் பச்சோந்தி யோர்முன் தோல் தேனி
விரட்டுக்
திலமிட்டே யாட்டெருவிற் புகையே செய்யுஞ் சேத்திர பாலச் சாபஞ் செப்பி
டாயே.

வச்சிரகபாடம்:-

சாதிலிங்கம், வெங்காரம், இந்துப்பு, லவங்கம், சுக்கு, வமந்தம், விரை, இலவம் பிசின், கெந்தகம், காச்சிப் பருப்பு, அவினி கொடிவேலி வேர்ப் பட்டை, அதிவிடையம், ஆத்திப்பூ, கஞ்சாப் பொடி இவை வகை ஒன்றுக்கு விராகனரை ஐந்து கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றில் நாலு சாமம் அரைத்து கஞ்சா விலைச் சாற்றில் நாலு சாமமரைத்து மிளகு மரியாதி உருண்டை பண்ணி வெள்ளாட்டுத் தயிராகுதல் அருளாதிக் கசாயத்திலாகுதல் தேனிலாகுதல் கொடுக்கவும். தீரும் வியாதிக் ரத்தக் களிச்சல், சகல விடாக் களிச்சல், வயிற்று வலி, சறுவ வயற்று வலியுந் தீரும். பத்தியம் தயிரும் சோறும் உண்ணவும்.

கிரந்திக்கு என்னை:-

சுக்கு விராகன்.உ, திப்பிலி விராகன்.உ, மிளகு விராகன்.உ, கார்பு பறங்கி விராகன்.உ, கருஞ்சீரகம் விராகன்.உ, சிவனார் வேம்பு பலம்.க, கொட்டைக் கரந்தை பலம்.க, பறங்கிப் பட்டை பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, ஈர வெங் காயம் பலம்.உ, வெள்ளைப்பூ பலம்.உ, பனங் கோவைக் கிழங்கு பலம்.உ, சித்தா மணக்கெண்ணை படி.க, பகத்தில் வடித்து மூன்று நாள் வேதிக்கு வாங்கவும். ஆறு நாள் பத்தியங் காக்கவும். புளி, புகை உப்புந் தவிர்க்கவும். வெந்நீருஞ் சாதமுஞ் சாப்பிடவும்.

சறுவ வியாதிக்குங் காச்சலுக்கும் என்னை:-

விளக்கெண்ணை வெட்பாலை வாலுளுவை, வசம்பு, வெள்ளுள்ளி, யரைப் பலமா மிக்க நிறை மாடை
அல்கான பசு மஞ்சள் சாறு ரெண்டு கறண்டி அல்கான குஞ்சா வினிலையும் பல மரை
யாம்
குளக்காக அடிப்பேத்தி என்னையுடன் கலந்து கிண்டியே வடித்து மேல் பூனி யுள்ளுங்
கொண்டால்
விளக்கான போலெரியும் பழஞ் சுரங்கள் தாறும் விற்டுவாய் நடுக்குமுடன் வெப்பும்
விட்டேகும்.

Incomplete

சகல சுரத்துக்குத் தயிலம்:-

மெருகு சல்லம் வெப்பாலம் பட்டை, பேருமுட்டி வேர் சகா தேவி, அமுக்கிரு வேர், விஷ்ணு காந்தி, சீந்திற் தண்டு, சாறடை வேர் இது வகைக்கு பலம்.அ சகாதேவிச் சாறு கரிசிலாங் கண்ணிச் சாறு நொச்சிச் சாறு, கரந்தைச் சாறு, நீலிச் சாறு வகைக்கு படி.க, அரக்கு ஒரு படி போட்டு ரெண்டு படி தண்ணீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சிக் கூட விடவும். பால் வள்ளம்.க, மோர் வள்ளம்.க என்னை படி.4, இதிற் கற்கம் சிறுதேக்கு, அரத்தை, செவியம், சாதர சாகம், சீரகத்து வயம், ஓமம், விளங்கந் திப்பிலி மூலங் கடுகுரோகணி கற்கடக சிங்கி, மரமஞ்சள், பற்டு வசம்பு, கோஷ்ட மஞ்சள்---பொடி) எடு யில் லை

சகல வியாதிக்குந் தயிலம்:-

சிவனார் வேம்பு, அலிஞ்சி வேர், காஞ்சூரி விரை வேர், வாதசி வேர், சங்கன் குப்பி வேர், விளாம்பட்டை கொடிவேலி சமூலம் இந்தத் தயிலம் வடித்து அதின் மேன் பொடி ரசம் சுரைக்காய்க் கெந்தகம், நெல்லிக்காய்க் கெந்தகம், வெட்

பாலேயரிசி, கருஞ்சீரகம், சடாமஞ்சி, மரமஞ்சள், கற்கடகசிங்கி, இது கத்தாளம் சாறு அரைப்பு ரெண்டு சாமம் இந் தயிலத்துடனே மேல் பொடி போட்டு வைத்துக் கொண்டு இடப் பதினெட்டுக் கூட்டம், செல்லிட்டை கடி செய்யான் கடி, அரையாப்பு, சிரங்கு கண்டமாலை, ஆடுக புண், புத்துக் கண்ட் மாலை, சகல புண்களும் சகல விஷமுந் தீரும்..

சருவ வியாதிக்குந் தேங்கா யெண்ணெ:-

சதிரக் கள்ளி முடக் கொத்தான் கொடிவேலி, சிவதை, அமுக்கிரு, சாறணை, அவுரி இந்த வேர் வகைக்கு பலம்.50 இடித்து எட்டு மரக்கால் தண்ணீர் விட்டுப் பதக் காலாக் காய்ச்சி இறக்கித் தேங்காய்ப் பால் படி.உ, விளக்கெண்ணை படி.உ, விட்டுத் தயிலத்திலே கற்கம் கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், திரிகடுகு, கற்கடக சிங்கி, அரத்தை, சதகுப்பை, கடுகுரோகணி, அக்கிரா, திப்பிலி, விளாவரிசி, செவியம், செவ்வள்ளிக் கொடி, சித்திரமூலம், கருஞ்சீரகம், பூண்டு, வசம்பு, காயம் இது வகைக்கு விராகனிடை.3 இதுக்கு முன் கசாயமிட்டு அரைத்து வேக வைத்து பதத்தில் வடித்து பதினைந்து களஞ்சென்னை கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி வாதம்.80, பித்தம்.40 சேற்பனம்.20, க்ஷயரோகம்.20, பிறமியம்.20, பேயோடு பித்த பிரமை மூட்சதை மலட்டு வலி வஞ்சினைக்குளம் தலைக் கடைப்பு வாற்குதல், குறைதலை, குதகமில்லாதிருக் சிறது மூயல கண் பிணி வாதம் யோனி சூலை, கை கால் முடங்கல் கமல் யோனி சிறு நீர் கடுப்பு, தண்டில் தடிப்பு யிப்படி உடம்பில் மருவின வியாதி யெல்லாந் தீரும்.

சருவ வியாதிக்கு அவுஷதம்:-

நல்லெண்ணை படி.க, இலுப்பெண்ணை படி.க, வேப்பெண்ணை படி.க, கடுகெண்ணை படி.க, புங்கெண்ணை படி.க, இதில் கற்கத் திரவியம் சித்தாமுட்டி வேர், அமுக்கிலாம் வேர், நிலவேம்பு, நொச்சி வேர், முள்ளி வேர், கண்டங்கத்திரி வேர், நாயுருவி வேர், கோரைக் கிழங்கு, பேய்ச் சுமட்டி வேர், முருங்கை வேர், சா து வளை வேர், ஆனை வசம்பு, வாய் விளங்கம், யெவாச்சாரம், சத்திச் சாரம், சடா மஞ்சி, பூலாங்கிழங்கு நாகேசுரம், குக்குலு குங்கிலியம், கோஷ்டம், அதிமதுரம், நல்ல சந்தனம், சீரகம், கருஞ்சீரகம், மந்திஉஷ்டி, விஷ திப்பிலி, பெருங்காயம், சுண்டு பறங்கி, நெல்லிக்காய்க் கெந்தகம், அரிதாரம், பச்சை நாவி, பச்சைக் கற்பூர மனோசிலை, ஊசிக் காந்தம், வெண்காரம், கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், கடுகு, வேப்பங் கொட்டை இந்துப்பு வளையலுப்பு, சவ்வாரி லவணம், ஏலம், லவங்கப் பத்திரி, லவங்கப் பட்டை, கல்லுப்பு, லவனம், சாதிக்காய், திப்பிலி மூலம், கடுகு ரோகணி, சதகுப்பை, தேவதாரம், வசம்பு, திகடை, வெட்டி வேர், வகைக்கு பலம்.½ வீதம் நிறுத்து நன்றாக யிடித்துச் சூரணம் பண்ணிக் கசாயத் தண்ணீர் விட்டு அரைத்து அந்தக் கசாயத் தண்ணீரிலே ஒன்றாகக் கரைத்துக் காய வைத்துப் பதத்தோடே இறக்கி வடித்துக் கொள்ளவும். இந்த அவுஷதம் சன்னி சருவாங்கி வாதம் சகல வியாதி யுந் தீரும்.

பீனிசத்துக்கு:-

கஸ்தூரி மஞ்சள் பலம்.½, பூலாங்கிழங்கு பலம்.½, செண்பகமொட்டு பலம்.½, லவங்கப் பட்டை விராகனிடை.5, நாகணம் விராகனிடை.5, அதிமதுரம் விராகனிடை.5 ஆக வகை.3 முன்னே வேர் குளம் வேர், பொறுமுட்டி வேர், காட்டு முருங்கை வேர் பெருமுட்டைப் பீரி வேர், கனிஞ்சி வேர், புங்கம் வேர், யெருக்கம் வேர், நாயுருவி வேர், மாதேவிக் கிழங்கு, கிளி மூக்குக் கிழங்கு, சிலந்திக் கொடி, மலைதாங்கி வேர், அமுக்கிலாம் வேர், பரந்தேரம் வேர், நீலி வேர் ஆக வேர் வகை.20, வேலிப் பருத்தியிலை, நொச்சியிலை, குதிபாந்தகரை யிலை, பெறுமுட்டைப் பீரியிலை,

எருக்கம் பழுப்பு, நாயுருவி யிலை, துளசியிலை, களிஞ்சியிலை ஆக இலை வகை. 8, கூடப் போட்டுத் தலைத்து பிழிந்து சாறு படி. 4 வேறே வைத்துக் கொண்டு வேர்களை குறுக்க நறுக்கி நன்றாகத் தவை. (முடிவு ஏடுயில்லை)

<u>பிள்ளை தோன்றாமல் கருவழிக்க :-</u>

மூன்றாங் குளி கலக்கி மூன்று நாள் பல்லிப்பூடு தின்னத் தோற்றாது..

(வேறு)

முடக் கொற்றானுக்குக் காம்புக் கட்டி மற்று நாளெடுத்து வேரைக் குளிசம் பண்ணி நாலாங் குளி நாள் மந்தாளிச் சிரசில் முடிந்திருக்கப் பிள்ளை தோன்றாது. நெல்லும் கடுகு மரைத்துக் குடிக்க மலடியாம். நாலாங் குளி குளித்தால் ஆவிரையை அம்மானை யளவு மூன்று நாளரைத்துக் குடிக்கக் கருவற்றுப் போம். நந்தியா வட்டம் வடக்கு போன வேரும் செம்பரத்தம் பூவும் காடியிலரைத்து மூன்று நாள் குடிக்கவும். கெற்பந் தங்காது.

<u>சூதை வராமல் முண்டையளுக்கு பிள்ளை விழ :-</u>

பலகறையை நெரிச்சு எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து வெயிலிலே வைத்து மிளவு மரைத்துப் பாலில் கலந்து குடிக்கவும்.

(வேறு)

முருங்கைக் கொட்டையை மூளை வாங்கிப் போட்டுத் தேனிலரைத்து முழுங்கவும்.

(வேறு)

சங்கிலை சுக்கு, மிளகு, வெள் வெங்காயம் மூளை வாங்கிப் போட்டு இவை யெல்லாந் தண்ணீரிலரைத்து முழுங்கவும்.

(வேறு)

<u>பிள்ளை விழ :-</u>

ஒரு இளநீர் சீவெட்டிக் கண் திறந்து ஒரு சேரை அரக்கைப் பொடி செய்து போட்டு மற்று நாள் காலையில் இளநீரை யூற்றிக் குடிக்கப் பிளை விழும். சங்கடமாயிளைப்பால் மோருஞ் சோறுங் கொள்ளவும்.

(வேறு)

புன்னைக்குப் பூண்டு விரை எலுமிச்சங் காய்ச் சாற்றில் அரைத்து அதிலே பொரிவண்டரிசி இரண்டு கூட்டி நருக்கிப் பச்சைக் கற்பூரம் பச்சைப் புழுகு மரிச்சு அனுபோகம் பண்ணுகிற நேரம் உள்ளு லிங்கத்தில் தடவிப் புணரப் பிள்ளையுடனே விழும்.

(வேறு)

வேளையிலைச் சாறு படி. ½, நல்லெண்ணை படி. 1/8, கூட்டிக் கலந்து கொடுக்கப் பிள்ளை விழும். பிள்ளை தோற்றாது யிதலே மருந்து நாலாங் குளி தடங்கி மூன்று நாள் குடிக்க பிள்ளை தோற்றாது.

<u>தலை யருக்கு மாற மருந்து :-</u>

ஊஞ்சல் மரக் காளானைத் தூள் பண்ணி எள்ளு ஊறின நீர் சன்ப்பம் விரை ஊறின நீர் சார மண்ணூறின நீர் இவை கிட்டினதில் குடிக்க கைப்பு, புளிப்பு விடவும்.

<u>மெலியிற பிள்ளைக்கு :-</u>

சிற்றவரி விரை நருக்கி எண்ணையிற் கொதிப்பிக்கத் தாயுள்ளம் நக்கிப் பிள்ளை யுடம்பிலுந் திமரிட்டவும். மெலியிற பிள்ளைக்கு விடக் தேரிலையும் சிறுபூளை வேரும், கருவேலம் பட்டையும் யிலையும் வேம்பும் நருக்கி வசம்பு வெள் வெங்காயம் நருக்கிக் கூட எண்ணையிற் பிசைந்து உச்சியிலும் வாத்து பிள்ளை வயற்றுக்கு வார்க்கத் தீரும்.

<u>மார்த்தாண்ட ரசம் :-</u>

சாதிலிங்கம் விராகனிடை. க, ரசம் விராகனிடை. உ, மனோசிலை விராகனிடை. 5,

தாளகம் விராகனிடை.6, துருசு விராகனிடை.9, வெங்காரம் விராகனிடை.9, நாபி விராகனிடை.3; கெந்தகம் விராகனிடை.உ, எலிப் பாசாணம் விராகனிடை.௩; கெவுரி பாஷாணம் விராகனிடை.௩, மாஷிகம் விராகனிடை.10, இது வெல்லாம் சுத்தி பண்ணி எலுமிச்சம் பழச் சாறிலொரு நாளரைக்கவும். பழங் காடியிலொரு நாளரைக்கவும். காடி படி.௩, பூசனிக்காய்ச் சாறு படி.௩; சுண்ணாம்பு கலந்த சாறு சுற விட்டலி பாகத்தில் லேகு வைத்து உருண்டை பண்ணி செப்புக் கிண்ணியில் வைத்து மேலும் செப்புக் கிண்ணியிட்டு மூடி ஒரு சட்டிக்கு நாலு விராக்கடை மணல் வார்த்து மேல்ச் செப்புக் கிண்ணி வைத்து கிண்ணி மூட மேலே மணல் வார்த்து அடுப்பில் வைத்து மேலே தம்பு போட்டுப் பொரியந் தனிலும் எரியிட்டு இறக்கி ஆற விட்டுக் கிண்ணி மருந்தைக் கல்வத்தில் வைத்து துளசிச் சாறு, நொச்சிச் சாறு, சகாதேவிச் சாறு, பீமரப்பட்டைச் சாறு வாத்தரைத்து மீன் பிச்சுக் கூட்டி அரைத்துப் பயறு போலே உருண்டை பண்ணி நிழலுலர்த்தி மூங்கிச் குழாயில் போட்டு வைக்கவும். சீத சுரத்துக்கு பத்து நாளைக்கு மேல் முக்கிரட்டை வேரிடித்து வெண்ணீரில் பிசைந்து வடித்த நாக்கு சுக்கு, நெல்லிக்காய்ப் பிரமாணம் அரைத்துக் கரைத்து அந்தச் சுக்குச் சாற்றில் ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். பத்தியம் பயத்தங் கட்டுச் சாற்றில் மிளகு பொடி போட்டுப் பழவரிசிச் சோற்றில் வார்த்துப் பத்தியமிடவும். அரைக்கரைச் சாறு, துவரைப் பருப்புச் சாறு புடலங்காய், குழம்பு, முருங்கைக்காய்க் குழம்பு, தூதுவளங் காய்க் குழம்பு, நமைய நாற்த்தங்காய் ஆகும்.

லோகேசுர ரசம்:-

சுத்தி பண்ணின ரசம் விராகனிடை.10, கெந்தகம் விராகனிடை.10, தாளகம் விராகனிடை.5, மாஷிகமாவது நிமிளையாவது விராகனிடை.5, நாபி விராகனிடை.$2\frac{1}{2}$, தாம்பிர பற்பம் விராகனிடை.10, அப்பிரக பற்பம் விராகனிடை.10, இது வெல்லாங் கல்வத்திட்டு எலுமிச்சம் பழச்சாறு ஒரு நாள் செருப்படிச் சாறு ஒரு நாளரைத்து கடலை போலே உருண்டை பண்ணி வளையல் குப்பிக்கு மூன்று சீலை மண் செய்து உலர்த்தி ஒரு சட்டி வைத்து ஒரு சாமம் எரிய விடவும். ஒரு பலம் ரசத்துக்கு ஒரு சாம மெரியிற பிரமாணம் காந்தம் சீதளமான பின்பு இறக்கி வைத்துக் குப்பியை யெடுத்து மருந்தைக் கல்வத்திலிட்டு மருந்துக்கு நாலத்தொன்று நாவி கூட்டி நாவிக்குச் சரியாய் மிளகு கூட்டி சகாதேவிச் சாறு நொச்சிச் சாறு யிதிலரைத்து மிளகு போலே உருண்டை பண்ணி உலர்த்தித் தேங்காய்க் கொடுக்கையில் வைத்துக் கொள்ளவும். சுறுவமான சுரத்துக்கு சன்னி வாதங்களுக்கு அதுக்குச் சொன்ன கசாய கற்கத்தில் கொடுக்கவும். காசஞ் சாடி யன்ம மகோதரம் பாண்டு காமா சோபை குட்டம் வாங்கள் மூல வியாதி அக்கினி மந்தம் இதுகள் முதலான வியாதிக்கும் அந்தந்த வியாதிகளுக்குச் சொன்ன கற்கக் கசாயத்தில் கொடுக்கச் சறுவ ரோகமுந் தீரும்.

சீதாக்கினி குமாரன்:-

ரசம், கெந்தகம், எலிப் பாசாணம், நாபி, கெவுரி பாஷாணம், தாளகம், மனோசிலை, சாதிலிங்கம், பால் துத்தம், கடுகுரோகணி, எட்டி விதைகள், சயிந்த லவணம் சித்திரமூலம், ஆலம்பட்டை, திரிகடுகு, கடுக்காய், வெங்காரம், தாம்பிர பற்பம் இது வெல்லாம் சம பாகங் கூட்டி அங்கிச பாதவிலைச் சாற்றில் ஒரு நாளரைத்து சித்திர மூலச் சாற்றிலொரு நாளரைத்து குப்பை மேனிச் சாற்றிலொரு நாளரைத்து வச்சிர மூசையில் மருந்தை யிட்டு வாய் மூடிச் சீலை மண் செய்து சீலை மண் நன்றாக வெந்தால் அப்படி மூன்று புடமிட்டுக் கல்வத்திலிட்டு அவிழ்த்தி லொன்று நாபி கூட்டி ஒரு பாக மிளகு கூட்டி நன்றா யரைத்துச் சிமிழிலடைத்துச் சறுவ சுரத்துக்கும் அநுபான விசேஷத்திலிடவும். சன்னி வாத தோஷத்துக்கு பஞ்சசால்க் கசாயத்திலிடவும். அவிஷதங் கொடுத்த தேங்காய் இளநீர் சர்க்கரை கொடுக்கவும்.

பிராண அக்கினி குமாரன் ரசம்:-

அரிதாரங், கெந்தகம், வெண்காரம் இது நாலு பங்கு நவட்சாரம் நாலு

பாகம் காரீய பற்பம் நாலு பாகம், எருக்கம் வேர், யிஞ்சி கொடிவேலி, வேர், வெள்ளைப் பூண்டு கடுக்காய் தானிக்காய், நெல்லிமுள்ளி, வெற்றிலைச் சாறு கசாயம் பண்ணுவதைக் கசாயம் பண்ணி சாறு விடுகிறதைச் சாறு விட்டு ஏழு நாள் நன்றா அரைத்து உருட்டி சிறுகச் சிறுக உருண்டை உருட்டி நிழலுலர்த்தாக உலர்த்திக் காசிக் குப்பியிலிட்டு வாலுகா எந்திரமாக எரித்து ஆறின வாறே இறக்கி ஆற வைத்து எடுக்கச் சூரியப் பிரகாசமாம். இதுக்குத் தீரும் வியாதி மகா கோரமாயிருக்கிற சன்னி, வாதம், சுவாச காசம், குஷ்டம், வய்த்த வியாதி, நீர்க்கோர்வை, ஐந்து மான் குன்மம், கிருமி, சர்வ வாதமும் போம்.

<u>எலிப் பாஷாண சுத்தி:-</u> 12.12.63.

எலிப் பாஷாணத்தைக் கடலை போலே நறுக்கிச் சட்டிக்கு வாய் கட்டி மேலே பரப்பிச் சிறுகீரைச் சாறு படி.௧, பொன்னாங்காணிச் சாறு படி.௧, பாகலிலைச் சாறு படி.௧, செருப்படிச் சாறு படி.௧, மணத்தக்காளிச் சாறு படி.௧, துளசிச் சாறு படி.௧, நீர்ப்பசளிக்காய்ச் சாறு படி.௧, பசுவின் பால் படி.௧, இது வெல்லாம் ஒன்றாகக் கூட்டி நாற்றங் காயளவு சுண்ணாம்பு கரைத்து எட்டுப்படி சாறுஞ் சுவற மட்டும் எரித்து வேக வைத்து சாங்க சதுளமான பின்பு மறு நாளெடுத்துக் கொண்டு தேன் விட்டு மந்தாக்கினியில் சிறுக வறுத்து எடுத்து வென்னீர் விட்டு கழுவிப் போடச் சுத்தியாம்.

<u>பொன்னரிதார பற்பம்:-</u>

தாளகம்
சுத்தி அரிதாரத்தைச் சீலையில் முடிந்து சுண்ணாம்புத் தண்ணீரில் அந்திரமாக வைத்து அறுபது நாழிகை எரிக்கச் சுத்தியாம். சுத்தி பண்ணின வெங்காரம் சுத்தி பண்ண கெந்தகம் இந்த இரண்டும் அரிதாரத்துக்குச் சரியாகக் கூட்டி அரைத்து அகலில் தடவி வைத்துச் சீந்திச் சாறு வார்த்துப் பின்னை யொரு அகல் மூடிச் சீலை மண் செய்து பூமியில் புடம் போடவும். பற்பமாம்.

<u>உதைய பராக்கிர ரசம்:-</u>

கெவுரி பாஷாணம் விராகன்.4, எலிப் பாஷாணம் விராகன்.4 இது இரண்டுக்குஞ் சுத்தி இது ரெண்டுங் கடலை போலே வெட்டி ஒரு சட்டியில் ஒரு சுறுகை தேன் விட்டு இந்தப் பாஷாணம் நறுக்கினதைப் போட்டு வேக விட்டு நாலு பொங்கு வந்து வெந்த பின் வென்னீர் விட்டுக் குடைஞ்சு போட்டு சாதிலிங்கம் விராகனிடை.4, சங்கு சுட்ட சுண்ணாம்பு விராகனிடை.8, நல்ல சாதி ஸ்ரீ கெந்தகம் சீதசலம் விட்டு அரைத்த சந்தனம் விராகனிடை.௧, இது வெல்லாங் கல்வத்தில் வைத்துத் துளசிச் சாறு விட்டு ஒரு நாள் மத்தித்து உழுந்து போலே உருண்டை பண்ணி உலர்த்திப் பரணியில் வைத்துக் கொண்டு சீதசுரம் பத்துக்கு மேல் பன்னிரெண்டு நாள் செல்ல விட்டுச் சுரகாதி கற்கத்தில் கூட்டிக் கொடுக்கவும். பத்தியம் பயத்தஞ் சாதம் பழவரிசி யசனம் போடவும். புளி மோர் முதலானது தவிர்க்கவும். சீத சுரம் விடும். இனி உமையிலே அரைக்க வேண்டியல் கொம்மட்டி மாதளம் பழச் சாறுவது நாற்த்தம் பழச் சாறுவது பசரிச் சாறுவது பொன்னாங் காணிச் சாறுவது விட்டரைக்கவும். பின்னை வக்க மெடாது.

<u>நவலோக பற்பம்:-</u>

மனோசிலை, அரிதாரங், கெந்தகம், சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வாத்தரைத்து வெங்கலஞ், செம்பு வெள்ளி திராய் ய்யம் யிரும்பு, பித்தளை துத்தநாகம் இதுகள் தகடு செய்து யிதுகள் மேல் சந்தனமாகப் பூசி எருமுட்டையில் புடம் போடவும். பற்பமாம். பொன்னுக்கு கெந்தகங் கூட்டாமல் அரிதாரம் மனோசிலை ரெண்டும் பூசிப் புடம் போடவும் பற்பமாம்.

~~நவலோக செந்தூர பற்பம்: ஒன்பது வகையும்~~ திரு ப

நவலோக செந்தூர பற்பம்:-

ஒன்பது வகையும் ஒரு பங்கு ரசம் ஒரு பங்கு கூட்டி எலுமிச்சம் பழச்சாறு விட்டு ரசம் ரணமாக மட்டும் அரைத்து செங்கா சலக் குப்பி எருவிலிட்டு மேலே குப்பி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து புளி தாளியில் மணலரைக் காதி மட்டுக்கு மண லெடுத்து அதின் பிறகு குப்பியை வைத்து கழுத்துக் குப்பிக் கழுத்தளவு மணல் சொரிந்து மேலே சட்டி கொண்டு மூடிச் சட்டி வாய்க்கு மண் கொடுத்து மேல் சட்டிக்கு நெல்லு வைத்து நெல் பொரியிற மட்டும் எரிக்கவும். மேல் பொரிந்தவுடனே அனலைப் பிரிச்சுப் போடவும் மற்று நாளாற விட்டு எடுத்துக் குப்பியை உடைத்துப் பார்க்கவும். மேலே ஏறினது முருக்கம் பூ நிறமாம். இது புறாச் சந்திரோதையம் அடியிலே நின்ற செந்தூரம் வெள்ளையானால் மேக ரோகத்துக்கு ஒரு பணவிடை அநுபானத்தில் கொடுக்கவும். மற்ற ரோகத்துக்கு ஆகாது. மயில் கழுத்து வர்ணமாயிருந்தால் சகல சுரத்துக்கும் சன்னிக்கும் குன்மத்துக்கும் பணவிடை அநுபானத்திலிடவும். சந்திர காவி நிறமானால் சகல ரோகத்துக்கும் சன்னிக் குன்மத்துக்கும் பணவிடை அநுபானத்திலிடவும். சந்திர காவி நிறமானால் சகல ரோகத்துக்கும் பணவிடை யநுபானத்திலிடவும். இதுக்குப் பேர் வெள்ளை நிறத்துக்கு நவ லோக பற்பம் மயில் கழுத்து வர்ணத்துக்கு வச்சிர செந்தூரமாம். சந்திர காவி வர்ணத்துக் பூரண சந்திர வுதையம்.

பஞ்சலோக செந்தூரம்:-

அரப்பொடி.௨, கெந்தகம்.9, வெங்காரம்.8, காந்தம்.7, இந்துப்பு.4, இரசம்.5 இவை யெல்லாம் சுத்தி பண்ணி கற்றாழைச் சாற்றில் பத்து நாழிகை யரைத்து அடை தட்டிக் காய வைத்துச் சட்டிக்குள் வைத்துக் கற்றாழைச் சோறு முக்கால் மட்டும் வார்த்து இருபத்து நாலு சாமம் எரிய விட்டு எடுத்து வைத்துக் கொண்டு இதை அநுபானத் தில் பணவிடை கொடுக்கச் சத்தி குன்மம் ஏப்பல் பித்த குன்மம்.16, வாய்வு,26, வாதபித்தம்.128, சேற்றுப்பு.96, ஈளை யிருமல், எலிகடி இளைப்பு, நரம்பு, காசம், காமாலை, பாண்டு சோகை வறக்காமாலை, நீர்க் காமாலை, விஷபாகம், சோபம் சூலைக் கடுப்புக் கரப்பான் கிறந்தி உடம்பு வேர்வை யெல்லாந் தீரும்.

கெசகேசரி செந்தூரம்:-

சுத்தி பண்ணின ரசம்.60, கெந்தகம்.45, சாதிலிங்கம் பலம்.15, வெண் காரம் பலம்.10, பச்சை நாவி பலம்.20, மனோசிலை பலம்.10, சாதிலிங்கம் மனோசிலை வெண்காரம் மூன்றும் சுத்தி பண்ணி மூன்று மருந்தும் கூட்டி செருப்படிச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து கற்றாழைச் சாற்றிலொரு சாம மரைத்து மாதுளம் பூச்சாற்றில் அதின் இலைச் சாற்றில் இரண்டரை நாளரைத்துப் பொடி பண்ணிக் கெங்கா சலக் குப்பி கொண்டு வந்து ஏழு சீலை மண் செய்து உலர விட்டு இந்த மருந்தைக் குப்பி ஆற மட்டும் விட்டு ஒட்டிய அடுப்பு. போட்டு வண்ணான் வெள்ளாவி போலே போட்டு அதிலே தாளியை வைத்து பதித்த நால் விரல் கனம் மணல் விட்டு அதிலே குப்பியை வைத்து குப்பிக்கு முகத்தளவு மணல் விட்டு விநாயக பூசை பண்ணி தீபாக்கினி ஒரு சாமம் கமலாக்கினி ரெண்டு சாமம், காடாக்கினி இருபத்தொரு சாமம் எரிய விட்டு வயிரவ பூசை பண்ணி நாலாம் நாள் ஆற விட்டுக் குப்பியை உடைத்துப் பார்க்க முருக்கம் பூப் போலே இருக்கும். அதை ஒன்றில் வைத்துக் கொண்டு செந்தூரத்தி லரைப் பணவிடை திரிகடுகு, வெதுப்பிப் பொடி பண்ணி வெருகடிப் பிரமாணம் தேனில் ரெண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ளச் சூலை.17, வாய்வு.26, குன்மம்.16-ந் தீரும். இதிலொரு பணவிடை கோலமாம். கயிலத்தில் ரெண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள 18-குட்டமும் குறை நோவும், கடி விஷமும், வண்டு கடி, காணக்கடி, விஷகடி, எலிகடி, பாதரோகம், காலிற் கடி விஷமும், செய்யான் கடி, செருக்கடி, செவ்வட்டை கடி மற்றுமுண்டான புழுக்கடி சிறுபுழு யிவை யெல்லாந் தீரும். இதிலொரு பணவிடையும், வங்க மரைப் பணவிடையும்

ஆவாரந் தயிலத்தில் நாற்பது நாள் கொள்ள நீரிழிவு 20வகை மூத்திரக் கிரிசனமும் இந்திர கண்டியும் சோமரோகம் பன்னிரண்டு வாய்வு நடுக்கல் ஆறு வகையும் வாய் நாக்கு முள்முதல் யெட்டு வகையும் உப்புச் சேடியும், நாக்குக் களலையும், உண்ணாக்குத் தொண்டைப் புற்று தொண்டைக்குள்ப் புண்ணும் நாக்குச் சிலந்தியும் நாக்குக் கீள் பிடியும் நாக்கு அன்ன தாமரையும் மண்டை சூலை லிங்கப் புற்று யோனிப் புற்றுந் தீரும். இதில் ஒரு பணவிடை ஆவாரை யிலைச் சாற்றில் நாற்பது நாள்க் கொள்ள உள் உருக்கி எலும்புருக்கி பழஞ் சுரம் உள்க் காய்ச்சல் நாலு நாள் மாறல் காலெரிப்பு கண்ணெரிப்பு தேகம் எரிப்பு இவை யெல்லாந் தீரும். இதிலொரு பணவிடையும் தும்பைச் சாற்றில் கொள்ளச் சுரந் தீரும். இதிலொரு பணவிடையும், காட்டுக் கருணைக் கிழங்கு உலர்த்திப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் நல்லெண்ணையில்க் குழப்பி நாற்பது நாள் கொள்ள எழு மூல முண்டானதும் பீக்கிரணி உண்டானதும் சக்கிரணி உண்டானதுந் தீரும்.

இதிலொரு பணவிடையும், பேய்ப்புமட்டிச் சாற்றில் கொள்ள வயற்றிலுண்டான தெல்லாந் தீரும்.

இதிலொரு பணவிடையும் தேனில் கொள்ளச் சேற்றுமமுண்டான தெல்லாந் தீரும்.

<u>அதிர சூர விக்கிரம யிரசம்: பூரண சந்திரோதைய செந்தூரம்:-</u>

இரதம் பலம்.60, சுத்தி பண்ணின கெந்தகம் பலம்.45, வெங்காரம் பலம்.10, மனோசிலை பலம்.10, அரிதாரம் பலம்.5, தங்கம் பலம்.10, பச்சை நாவி பலம்.20, இவை செம்பருத்தி சாறு விட்டு ஒரு சாமமரைத்து கற்றாழை வேர்த் தண்ணீர் விட்டு ஒரு சாமமரைத்து முருக்கம் பூச்சாறு விட்டு ஒரு சாமமரைத்து துத்தன் குதம்பைச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து மாதளம் பூச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து உலர விட்டுப் பொடியாக்கி கெங்கா சலக் குப்பியில் ஏழு சீலை மண் செய்து உலர போட்டு மருந்தைக் குப்பியுற மட்டிட்டு அடுப்பில் ஒரு தாளியைப் பதித்து தாளியில் நாலு விரக்கடை மணல் விட்டு அதிலே குப்பியை வைத்துக் குப்பி வாய்க்கு கழுத்து மட்டும் மணல் விட்டு விநாயக பூசை பண்ணி தீபாக்கினி ஒரு சாமம் கமலாக்கினி ரெண்டு சாமம் காடாக்கினி இருபத்தொரு சாமம் நாலா நாள் தீப்பிரிச்சு தீயாற விட்டு வயிரவர் பூசை பண்ணிக் குப்பியை உடைத்துப் பார்க்க முருக்கம் பூப் போலேயாம். இதிலொரு பணவிடையும், வெள் வெங்காயத் தயிலத் திலிடச் சன்னி 18-ந்தீரும். கோழிமுட்டைத் தயிலத்தில் ஒரு பணவிடை கூட்டி ரெண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள வாதம். 80-ந் தீரும். ஒரு பணவிடை திரிகடுகு வெதுப்பின பொடி வெருகடிப் பிரமாணங் கூட்டித் தேனில் ரெண்டு நேரமுங் கொள்ள நாறபது நாள் கொள்ள வாய்வு 26, புண்குடோரக்கி லெருத்த சூலை 17, வன்மம் 16, விக்கல் 8, காமாலை. 32, கண்டமாலை.9, விப்புருதி 18 குட்டம் 18 காணக்கடி விஷக்கடி, வண்டுகடி, செவ்வட்டை கடி, எலிகடி, 18 கபால சூலை குட்டம் கபாலக் கடி, விஷம், சிரங்கு, சொடுயீளை, யிருமல் உண்டான காலம் உள்மாந்தை சரமாந்தை. சேற்பமம். 96, பித்த கோபம். 120, குவளை விப்புருதி கருவிப்புருதி, நெஞ்சுக்குள் கழலை, காதிலுண்டான வியாதியும் பீனிசம்.10 முன் இளக்கம் வறட்சி ஒருத்தலை நோவு, கபால வாய்வு, சோபம்.18, விஷ பாகம்.12, கெற்பவிப்புருதி முழங்கால் கரப்பான், தமரக வாய்வு, அரையாப்பு, அரைப்புற்று தண்டில் கிரந்தி லிங்கப் புற்று அடி வயிற்று வீக்கம் கட்டுக் கள்ளான புழு வீக்கம் குதக வாய்வு, மூல வாய்வு மூலம்.9, பெருவிரலிலே நின்று உச்சந் தலைக் கேறுகிற வாய்வு புவனத்துக்குள்ளே நின்று உச்சந் தலைக் கேறுகிற பவன வாய்வு நயனத்தில் 96 வியாதியும் பல்க் கண்டத்தில் 28 வியாதியும் கெற்பத் தாளிப் பிளவையும் மற்றுமுண்டான வியாதியுந் தீரும்.

இதிலொரு பணவிடை சர்க்கரை வெருகடிப் பிரமாணம் சீனி வெருகடிப்

பிரமாணம் சாதிக்காய், சாதிபத்திரி, குரோசானி யோமம் கல்மதம் இலை சரி கொண்டு வெதுப்பிப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் ஆவாரம் விரை நிழலிலே உலர்த்திப் பொடி செய்து வெருகடிப் பிரமாணமும் ஆவாரந் தயிலமும் தேனும் விட்டுக் குழப்பி ரெண்டாப் பகுந் ரெண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள நீரளிவு.20, சுக்கிரக் கிறிச்சனம்.20, சோமரோகம்.12, உள்ளருக்கி எலும்புருக்கி பிரமியம்.18, வயிற்றில் சிப் பிறந்தகம், கெற்ப விப்புருதி கல்லடைப்பான்.18, அதிசாரம் 12, கிருமி.6 உஷ்ணரோகம், வறட்சி 25, எரிப்பு, வாயூறல், சகல ரோகமுந் தீரும். இவை யோனியெரிப்பு, பெரும்பாடு, ரெத்த பித்தம், ரத்தப் புற்று ரெத்தரோகம், பிரமியம், சிலந்தி படுவன், பருவிரல் கடிகள் மற்றுமுண்டான விஷங்களுந் தீரும். தாது விருத்தியும் விளையும்.

இதிலொரு பலவிடையும் கள்ளி வேரும் கள்ளிக் கொழுந்தும் எருக்கம் வேரும் இலைக் கள்ளி வேரும் புரசங் கொட்டையும் மான் கள்ளி சமூலம் பேய்க் குமட்டிக் கசாயம் மருங்கை வேரும் தை வேளையும் ஆயிற் பட்டையும் இவை உலர்த்தித் தயிலம் வைத்து இந்தத் தயிலத்தில் ஒரு காசிடையும் செந்தூரமுங் குழப்பிக் கேவுங் குத்தி மூன்று நாளைக் கொருக்கால் இப்படி பத்து நாள்க் கொள்ள சிலே சரீரங் கண்டு கொள்ளவும். வியாதி கா வியாதி விடுந்தால் விட்டு விடவும். வயறு கழியும். அதுக்கு மோருஞ் சோறுண்ணவும். இதுக்கு அறுபத்து நாலு கெற்ப விப்புருதியும் பதினெட்டு குடல் வாதமும் அண்டவாதம், குமல் வா தம், பதினறும் வயுக்கியுண்டான கிருமிகளும் மலட்டுப் புழு கெற்ப வாய்வு சீறி சிறு புழு மகோதரம் பெருவயறு சேற்றுமம் 18. விஷபாகம்.12, பெண்டுகளுக்கு தாம் விலகினதும் மடி கண்டுகளும் வயற்றில் பிறப்பட்ட வியாதிகளும் சிலந்தி உண்டான தெல்லாம் தீரும்.

<u>சகல ரோகத்துக்கு் விருத்திந்த சோதி ரசம்:-</u>

தாம்பிர பற்பம், அப்பிரக பற்பம், அரிதார பற்பம், கற்சம், கடல் நுரை, நாபி, ரசம், வெள்வேலம் விரை, நல்ல பாம்பு விஷம் இவை மட்டும் சரியாய்க் கூட்டி பூனைக் காஞ்சொறிச் சாற்றில் மர்த்தனம் பண்ணி சிப்பி முத்து பற்பம் பவள பற்பம் வெங்கல பற்பம் காந்த பற்பம், வங்க பற்பம் ஐந்து வகையும் ஒரு பங்கும் மர்த்தனம் பண்ணின ஒரு பங்குங் கூட்டிக் காசிக் குப்பியிலிட்டு மூன்று சீலை மண் கொடுத்து புடச் சட்டியில் வைத்து மேலே ஒரு புடச் சட்டியால் மூடிச் சீலை மண் செய்து ஒரு சாமம் எரிய விட்டு அதின் பிறகு எடுத்து மயில் பிச்சு வெள்ளாட்டுப் பிச்சு நல்ல பாம்புப் பிச்சு பன்றி மஞ்சி கெண்டை மீன் பிச்சு குதிரையின் பிச்சு இவை மட்டும் உலர்த்தி இள வெந்நீர் வார்த்து அரைத்து சாறு பிழிந்து கொண்டு அந்தச் சாற்றில் ஐந்து தீர மர்த்தனம் பண்ணி பயறு பிரமாணம் குளிகை பண்ணி அநுபானம் மூலைப் பாலிலரைத்திடவும். சுரத்தில் சன்னி மூடி மறதி கொடுத்து நாக குடியள் விழுந்து பேச்சில்லாம லிருந்தாலும் இந்த லோகத்து நினைவு தப்பி இந்த லோகத்து நினைவு இருந்தாலும் மூக்கால் நாழிகை சீவன் வந்து பேசின பின்பு மரணமாம்.

<u>ரெத்தக் கடுப்புக்கு நந்தன் குளிகை:-</u>

சாதிக்காய், லவங்கம், அதிவிடையம், கசகசா, குரோசானி, யோமம், சாதிப்பத்திரி, மலைதாங்கி வேர், முள்ளி லவம் பிசின், விளாம்பிசின், கஞ்சா வகைக்கு விராகனிடை.க, வெதுப்பி அத்திப் பட்டை, அரசம் பட்டை, மாம்பட்டை, நாவல்பட்டை, ஆவாரம் பட்டை, இலந்தைப் பட்டை இவைகள் வெவ்வேறே கசாயம் பண்ணி விட்டு மத்தித்து இலந்தைக் கொட்டைப் பிரமாணம் குளிகை பண்ணி சுரத்தின் பேரில் கடுப்புக்கு வெந்நீரில் கொடுக்கவும். சுரமில்லா விட்டால் தயிரில் கொடுக்கவும். ரெத்தக் கழிச்சல் நிற்கும்.

<u>சேசுப்ந்த ரசம்:-</u>

நாபி விராகன்.க, அதிவிடையம், வெங்காரம், சாதிலிங்கம், ரசம், இந்துப்பு, இலவம் பிசின், வகைக்கு விராகனிடை.க, திரிகடுகு, இரத் தேகம், கெந்தகம், சாதிக் காய், லவங்கம், ஜமத்தம் விரை, கழல் பருப்பு, கொடிவேலி வேர், பச்சை, அவினி

மருந்து பச்சைக் கற்பூரம் இது சமன் கூட்டினது விராகனிடை.18, இதில் பாதி விராகனிடை.9, பலகரை சுட்ட சாம்பலாவ கடல் கிளிஞ்சி, சுட்ட சுண்ணம் பாலது சங்கு சுட்ட சுண்ணாம்பாவது கூட்டவும். அப்பிற கப் பற்பம் விராகனிடை.9, ஆக. விராகனிடை.16-ம் கல்வத்தில் வைத்து ஊமத்தம் வேர் கசாயத்திலரைத்துக் கஞ்சாயிலைச் சாற்றிலரைத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைக்கவும். அதை மாதளங் காயில் வைத்து முளமேக்கிட்டு எருமுட்டையில் புடமிட் டெடுத்து வாழைப்பூச் சாறு விட்டரைத்து அதளாதிக் கசாயம் விட்டரைத்து இப்பால் பேய்த் தும்மட்டிக் காய்க் கசாயத்திலரைத்து சிறு சுண்டைக்காய் போலே உருண்டை பண்ணித் தேனில் வெள்ளாட்டுத் தயிரில் சர்க்கரையில் சீயக்காய், நெல்லி நெய்யில் பொரித்து அரைத்துக் கொடுக்க அருளாதிக் கசாயத்தில் சாதிக்காய், வெண்ணெயில் பொரித்து அரைத்துக் கொடுக்க அருளாதிக் கசாயத்தில் சாத்தியாதி வடகம் பாதி கூட்டிக் கொடுக்கவும். அதிசார கிராணி விசுளி வயறு நோவு இரைச்சல் கடுப்பு ரத்தக் கழிச்சலும் தீரும்.

<u>மருந்தீட்டுக்கு:-</u>

வயறு பொருமும். கோழை உப்பிக்கிலாயிருக்கும். சோறு செரியாது. வாய்வு உண்டாயிருக்கும். அளவும் பலமுங் குறையும். நெஞ்சில் சுரம் வரும். பசி நரம்போடி யிருக்கும். நெஞ்சுலத்தும். சீக்கொள்ளும். ஆட்டுத் தொப்பை போலே பை யுண்டாம்.

<u>எலிகடி, மருந்தீட்டுக் கடின முளத்துக்கு மருந்து:-</u>

தாலவளை வேர்ப் பட்டையை இடித்துச் சூரணம் பண்ணி ஒரு சேரை எடுத்து அரைத்து ஐந்து காரமிட்டு மிளகு நீர் பண்ணினது ஒரு பிடி, நல்லெண்ணெ எலுமிச்சம் பழச்சாறு படி.கு, கூட்டிக் கொடுக்க வாந்தியும், பிராந்தியுமாய் பதினெட்டு வகை மருந்தீடும் விழும். சுக்கு கசாயம் விட்டுக் குடிக்க உள்ள தெல்லாம் விழும். மாற்று மிளகு நீருஞ் சோறும் தின்னவும்.

<u>சல்லீரம்:-</u>

ஆருஞ் சிவமே ஆறு பத்து அணுகே சாரம் ஆறஞ்சு
வேறு மன்னங் காலே யரைக்கால்
வேயுன்ற காரியாதமதாய் கூடி மிடியே லவணக்கால் கொண்ட காரமிரு களஞ்சு
சீமஞ் சீனம் பாதமிதா சீன வெப்பு வகையிருவே.

<u>கெற்ப மலட்டு குலைக்கு எண்ணெ:-</u>

சிவம் விராகனிடை.60, சாரம் விராகனிடை.30, அன்னம் விராகனிடை.11¼ கருசு விராகனிடை.10, வெடியுப்பு விராகனிடை.7½ பொரிகாரம் விராகனிடை.3, சீனம் விராகனிடை.? நதியாய் மாதருடன் நெஞ்சரக்கந் தானரிந்து ஆதியென்று தயிலம் இறக்கையாய் புவுலகில் ஆரலங்கே மன்னா உலை ஆய்ந்து கேள் சீரணிக்கும் கொன்றை வொகு வளை வேர் கொடிவேலி சித்தாமுட்டி, குன்றி வேர், ஆயுத்த தோர் கூர்க் கடுக்காய் நன்றி யெற ஒரோன்று மன்று பலம் வந்த நீர் முக்குணி சீரரிந்து பாண்டமது சேர்த்து வெந்து யெட்டொன்றாய்க் குறுக்கி யிறுத்த கசாய மதில் கட்டான வேம்பாறு களச்சியிலை கிட்டமுடனே பிறமி குறிஞ்சா பேய்ப் பீர்க்கு பேய்க் குமட்டி சாரமுடனே ஓர் சாடீ உரி யெடுத்துத் திரமாக்கிக் கற்கந் திரிகடுகு, திரிபலை, கடுரோகணி, நேர்வாளம், வெள்ளெள்ளி, விரல் காயும், சோமப்பு, வெள்ளை வசம்போர் களிஞ் சாய் வேண்டியுள்ள கசாய மதிலரைத்துக் கரைத்து பன்பாக யெசெய்யு மெண்ணெ நாவுரியில் இதில் கலந்து வசனம் பதமரிந்து வாகுடனே சுடனொரு கற்ப சொற் பக்திருக்கிலிட்டு ஓட்ட வடித்தெண்ணெ குளம்பாக நாடிக் கனபதியைக் கை தொழுது காசிடை உள்ளே அருந்தத் தனியா வயிற்று வலி தானுமே பிரியாக மாதவுடை சிரத்து மனங் கருக்கு மா மாதருக்கு. ஆதவாய்க் கொள்ள அதிசயமாய் சீரணிக்குங் கெற்பச் சுமரோனிதமும்

திருமியுற்ற சூலையுடன் உற்பனமாய்க் கொள்ள ஒழியுமே யிப்புவியில் பேதை பிணி தீரும் பெருங் கற்ப உற்பனமாம் சூல நீராம்பல் சூலையுமே. சீறியொடு வாயுதிரட்சை வயற்றுக் கலிசை கெண்டை மாயு மகோதரமும் மாயுமே போயொழியும் பிணி நோய் களெல்லா மிங்கவே தீருமென்று முன் குருவுரைத்த மொழி.

சிவதைச் சூரணம்:-

சீர் பொருந்திய சிவதை முப்பலம் சேர்த்திடும் திரிகடுகுடன்
திட்டமாகவே திரிபலை திரிசாதமோடு மற்றதும் பால் விளங்கிய வாய் விளங்கமும்
பஞ்ச காரையுள் பாவியே வெள்ளரிலரக்கிட் நெஞ்செரிப்புடன் வாந்தியும் நேர்ந்திடு
பித்த குன்ம வாயுவும் சேறுமா மூலரோகமும் கிள்வு குட்டங் கிரந்தியுந் தீருமென்று சிவன
ருளிய சிவதைச் சூரணம் யேற்றிடுங்

மற்றுனி ரசாயனம்:--

சீரகமரத்தையோடு திப்பிலி வாய்விளங்கம் சிறுதேக்கு சித்திர மூல மெற்க கடுகு ரோகணி தாளிச பத்திரி ஏலம் லவங்கம் சடாமஞ்சி யிடை காலா வீர மறு பட்டையாங் கெந்தகமும் ரெண்டு வென்றி வரு திரிகடுகு ஒன்றரையுமாக வார மூறு சடையிடை பத்மது வொன்றே மத்தினி ரசாயனத்தை பத்திரட் கூட்டே.

தீரும் வியாதி மண்டை சூலை, பீனிசம், வறட்சி சூலை, குன்மம், வாதம், மேக வெட்டை, அண்ட வாதம், நீர்ச் சிறப்பு, பாண்டு, விஷபாகம், மந்திர பவுத்திரம், கிரந்தி, சுரம், பிளவை, கண்டமாலை, அடக் கரப்பான், கடிய குள்மாந்தை, கந்தர் பதந்திலை யெந்த ரோகமென்ற் சண்ட மாருதத்திலோடு பஞ்சு போல்ஞ்சும் சத்தியமாக அகஸ்திய முனி நிச்சயமாக உரைத்தார்.

நாகச் சுத்தி:-

காடி. தயில் கோமியம், நல்லெண்ணெய், எருக்கம் பால், வெள்ளாட்டுப் பால் இவை சமன் சேர்த்து வைத்துக் கொண்டு, நாகம், இப்பை நெய்யிலுருக்கிச் சாய்க்கச் சுத்தி. பெருவியாதி, கால், கை புண் குட்டம் ரோகத்தை ஒட்டிய ரோகம் எல்லாந் தீரும்.

கெருடக் கொடி, சதுமம், சித்திரமூலம் வேர்ப் பட்டை சமன இடித்து ~~அ~~ ஆள் வடிகட்டி வைத்துக் கொண்டு உதயத்தில் வெருகடி நாள் மூன்று நாள் சாப்பிடவும். உப்பு, புளி கத்திரிக்காய், உருந்து மீன் மாங்கிஷம் பன்றி மாங்கிஷம் இது வெல்லாம் நாள் என்பதுக்கும் ஆகாது. நாற்பது நாளைக்குப் பழைய சாதமாகாது. சுடு சாதம் சாப்பிடவும். நாற்பது நாளைக்கும் சுடு சாதம், எருக்கம் இலையில் சாப்பிடவும், நாற்பது நாளைக்கும் எருக்கம் மொட்டுப் ~~ப~~ தினமொன்று ரெண்டு மூன்று நாலு ஐந்து இந்த முறைக்கு நாற்பது நாளைக்கும் சாப்பிடவும். நாற்பது நாளைக்கு மேல் தவிர்த்து விட்டு மறு பிரயோகம். ஒருபடி நல்லெண்ணெயில் குருந்தொட்டிச் சாறு கால்படி விட்டு பதமாய்க் காய்ச்சி வைத்துக் கொண்டு சாதத்தில் விட்டுச் சாப்பிடவும். மூன்றுபது நாளைக்குள்ளாகப் புண் பொடிகள் வடவரிந்து ரெண்டு திரம் மூன்று தரம் மூன்று நாள் சாப்பிடவும். புண் ஆர்ந்து போனால் சாப்பிட வேண்டியதில்லை. நாற்பது நாளைக்கு மேல் விடச் சொன்னது எருக்கயிலையில் சாப்பாடும் பூச் சாப்பிட்டதும் தவிர்க்கவும். மறுபடி நாற்பது நாளைக்கு எண்ணை விட்டுச் சாப்பிடவும். பத்தியம் நாள் எண்பதுக்கு மேல் எந்த பதார்த்தங்களும் சாப்பிடவும்.

விஷத்துக்கு:-

காஞ்சிரம் பழச் சதை படி. 4, கவுதும்பைச் சாறு படி. உ, வெரியன் சாறு படி. 1/4 இவை மூன்றும் கூட்டிக் காய்ச்சி மிருகின பதமாய் வருகையில் நேர்வாளம் விராகனிடை 4, சாதிலிங்கம் விராகனிடை. உ, நாவி விராகனிடை. உ, அரிதாரம் விராகனிடை. உ, நிருவிசம் விராகனிடை. க, பசுவின் கோமியத்தில் நாலு சாமம் ஊறப் போடவும். நிரு விசம் விராகனிடை. உ, இவ்வளவும் பொடி செய்து அத்தப் பாகில் தூவிக் கிண்டி அரைக்கால்

படி நல்லெண்ணெயும் விட்டுக் கிண்டிக் கையிலொட்டாமல் பிரசின பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு சிறு புளியங் கொட்டை மருவாகிக் குளிகை பண்ணிக் கொடுக்கவும். இந்தக் குளம்பு ~~காச்சிச் சிரக்~~ காய்ச்சுகிறதுக்கு ஒரு சாதி விறகு கொண்டு எரிக்கவும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

விஷத்துக்கு:- (வேறு)

நேர்வாளம் சாணியில் அவிச்சு உடைச்சு நஞ்சு தள்ளின பருப்பு.9, நாருசு விராகன்.3, ரசம் விராகன்.க, இவை மூன்றும் வெத்திலைச் சாறு விட்ட ரைத்து குன்று மணிப் பிரகாரம் உருண்டை செய்து சகல விஷத்துக்கும் ஒரு உருண்டை வெத்திலையில் கொடுக்கவும்.

வேதிக்கு அகஸ்தீஸ்பரர் பச்சைக் குழம்பு:-

பேசிய மருந்தின் பேரே பெருங்காயம், கடுகிந்துப்பு
வீசிய ரசம் பொற்காரம் வியன் மனோசிலையுங் கூட்டு
ஆசு திப்பிலி வசனறிந் தகட்டரிதார மல்லால்
மாசிலாக் கருஞ்சீரகம் வகை வகை களஞ்சு வாங்கே.

வாங்கிடு களஞ்சி யொன்பான் நேர்வாளம் வாத்துப் பாதி
தாங்கிய பாதி பச்சை சமன் முளை போக்கி நக்கித்
தீங்கிலா மருந்து பத்துச் சேர நீ யரைக்கில் காந்தல்
ஓங்கிடில் மோருஞ் சேர்து மூன்று நீ அரைத்துக் கூட்டே.

சொக்கயன்:-

கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், வலம்புரிக்காய், கடல்பஞ்சிப் பட்டை கிளியறல் பட்டை இவ் வகைக்கு விராகனிடை.3, அகரப்பு கஸ்தூரி மஞ்சள், சடா மாஞ்சி அக்கிருகாரம், அதிமதுரம், புரசம் விரை, செ(ங்கொட்டை) பருப்பு இவ் வகைக்கு விராகனிடை.12 கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, குருசானி ஓமம், வெப்பாலையரிசி, கடுகுரோகணி, சமுத்திராப் பழம், கோஷ்டம், பூலாங் கிழங்கு, சிறுநாகப்பூ, தாளிசபத்திரி, விலாமிச்சம் வேர் இவ் வகைக்கு விராகனிடை.5, தேவதாரம் அரத்தை, மிளகு, செம்மரத்திக் கட்டை இவ் வகைக்கு விராகன்.4, இவ் வெல்லாம் ஒன்று யிடித்துச் சூரணம் பண்ணி வடி கட்டிக் கொண்டு வடி கட்டின பொடியை விளாங்காய் போலே கிளி கட்டி வைத்துக் கொள்ளவும். எண்ணெய் படி.6 தாளியில் விட்டு நுரையறக் காய்ச்சிக் கீழே இறக்கி வைத்துக் கொண்டு கிளி கட்டின மருந்தை எண்ணெயிலே போட்டு பதனமாக வைத்துக் கொண்டு முழுகி வரவும். இந்த எண்ணெயில் தீரும் வியாதி பீனிசம் மண்டை குலை, செவிச் குலை, கபாலக் குத்து தலையிடி, கன்ன குலை, உடம்பிலே எந்த வாய் வென்னப் பட்டதும், சுர மென்னப்பட்டதும், சிலேற்பனம் வாம்ம், பித்தம் இந்த வகைக் கெல்லாம் உற்பனமாக யிருக்கும்.

தாம்பிர பற்பம்:-

கருவேலம் பிசின் விராகன்.உ, கோஷ்டம் விராகன்.உ, லலம் விராகன்.உ, நெல்லி விராகன்.உ, கடுக்காய் விராகன்.உ, தானிக்காய் விராகன்.உ, மரமஞ்சள் விராகன்.உ, சற்ளி தேவதாரம் விராகன்.6, ஆவாரம் விரை விராகன்.40 இவ் வெல்லாம் வெயிலிலே வைத்து இடித்துச் சூரணம் பண்ணி வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து இந்தச் சூரணத்தில் பற்பம் அரைப்பணவிடை கால் பணவிடை சரீர பலம் வியாதி பலமறிந்து கொடுக்கவும். பத்தியம் புளி, புகை குரூர பண்டந் தவிர்க்கவும்.

சுகமான கிரகம்:-

சாறுவேளை வேர் பலம்.60, சிற்றாமுட்டி வேர் பலம்.12, பேராமுட்டி வேர் பலம்.12, நீர்வள்ளிக் கிழங்கு பலம்.40, கரிப்பாலை வேர்

பலம்.40, திருநாமப்பாலை பலம்.40, முசுமுசுக்கை வேர் பலம்.40 இவை யெல்லா மிடித்து பன்னிரு கலந் தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிப் பிசைந்து சக்கை யெல்லா மெடுத்துப் போட்டு அதில் போடுகிற விபரம் பனமுயு சர்க்கரை பலம்.40, ஆமணக் கெண்ணை முக்குறுணி பசுவின் நெய், முக்குறுணி கடைத் திரவியம், ஏலம், லவங்கம், சாதிபத்திரி, சிறுநாகப்பு, கொம்பரக்கு, அதிமதுரம், முந்திரிகைப் பழம், சீரகம், கருஞ்சீரகம், சிறுதேக்கு, திரிகடுகு, திப்பிலி மூலம், அரத்தை, கோஷ்டம், கோரைக்கிழங்கு, இந்துப்பு, சந்தனம், தேவதாரம், கூகைநீர், கற்கடகசிங்கி சிறு செண்பகப்பூ, கொத்தமல்லி, அகில் தக்கோலம், ஆதண்டைக் கிழங்கு, குமலாதண்டை வேர், பொடுதலை கருப்பம் வேர், செங்கழுநீர்க் கிழங்கு அாசம் வேர் பூ, நாவல் பூ, நாவல் வேர், ஓரிலைத் தாமரை இலுப்பைப் பூ இவை வகைக்கு பலம்.4, இடித்து வஸ்திர காயம் பண்ணிக் காய்கிற எண்ணையிலே போட்டு மெழுகு பதமாயிறக்கிக் கொள்ளவும். இந்த எண்ணை உள்ளுக்குக் கொள்ளவும். இதில் தீரும் வியாதி மேகம்.21, நீர்ச் சிறுப்பு; கால் கை முடக்கம் வயிற்று வலி, சோகை பாண்டு, வயற்றிலுள்ள வியாதியள்; சுரோணித வாதம், மொரு வகைக்கும் வாதம்.80, பயித்தியம்.40, சிலேற்பனம்.20, சூலை.18, குட்டம்.7, அந்திலட்டி.4, வள்ளை அருவை.8, மூலம்.8, யேர்ளிச் சூலை.6, விஷபாகம்.20, அழுகாமாலை.4, கண்டமாலை.6, நரம்புச் சிலந்தி.72, புளிசம்.18 இதக்கு அபானம் பசுவின் பால், கடுக்காய், தானிக்காய், நெல்லிப்பருப்பு, நேர்வாளம், வெங்காயம், கெந்தகம் இவை சமன் கட்டிக் கொள்ளவும்.

கெந்தகத் தயிலம்:- 13.12.63.

கெந்தகம் சீலையிலே பரப்பி உருட்டி விளக்கெண்ணையில் தோய்த்துத் தீக் கொளுத்தி எண்ணையிற் பிடிக்கத் தயிலம் விழும். அதைப் பொரி மாவிலாகுதல் தின்னவும். புண் குடோரந் தீரும். விஷந் தீரும்.

(வேறு)

நெய் உழக்கு முருங்கைப் பூ முருங்கையிலை, கோரோசினை குங்குமப்பூ, நெய்யிலாய்ச்சித் தலைக்கிட்டு முழுகவும்.

மூலை சுரக்க:- கடுகு உழக்கு, சுக்கு உழக்கு, மிளகு உழக்கு பொடியாக்கி தண்ணீர் வார்த்தரைத்துக் குழம்பாய்க் காய்ச்சித் தினம் நெய்யில் பத்து நாள் கொள்ளவும்.

சுகமான கிருதம்:-

நெய் படி.க, விளக்கெண்ணை படி.க, பால் படி.க, காட்டு மருந்து, திருநரம்பாலை வேர் பலம்.11/8, கரிப்பாலை வேர் பலம்.11/8, நீர் வள்ளிக் கிழங்கு பலம்.11/8, மொசுமொசுக்கை வேர் பலம்.11/8, சாறணை வேர் பலம்.2½ சித்தாமுட்டி வேர் பலம்.5/8, பொடுதலை பலம்.2, நைவேளை வேர் பலம்.2, கோத்தொட்டி பலம்.உ, கருப்பம் வேர் பலம்.உ, நாவல் வேர் பலம்.உ, குமலா தண்டை வேர் பலம்.உ, கரிப்பாலை வேர் பலம்.உ, கோரைக்கிழங்கு பலம்.உ, இது வெல்லாம் நாலு மரக்கால் தண்ணீரில் கசாயமிட்டு வந்த வைத்து நாலு படி ஒன்று படியாகக் காய்ச்சவும். அந்தக் கசாயமும் எண்ணையும் ஒன்றாய் விடவும். அதின் பேரிலே கடைச் சரக்கு ஏலம், லவங்கம், சாதிபத்திரி, நாகப்பூ, கொம்பரக்கு, அதிமதுரம், முந்திரிப் பழம், சீரகம், கருஞ்சீரகம், சிறுதேக்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், அரத்தை, இந்துப்பு, கோஷ்டம், சர்க்கரை, சந்தனம், தேவதாரம், கூகை நீர், கற்கடகசிங்கி, சிறு செண்பகப்பூ, கொத்தமல்லி, அகில் தக்கோலம், இவை வகைக்கு களஞ்சு.உ இந்த மருந்தெல்லா மிடித்துத் தூள் பண்ணி வடி கொண்டு நெய்யில் கலந்து அடுப்பில் வைத்து சிறுகக் காய்ச்சி வெய்யிலில் ஒன்று நாள் வைத்து அப்பால் நாலா நாள் மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும். தினசரி வெடி தேய் ஒரு கரண்டி நெய் கொள்ளவும். இதில் தீரும் வியாதி மேகம், நீர் செறுப்பு, கால் கை முடக்கம், வாதம், வயற்று வலி, வயற்றுக் கடுப்புச், சோகை பாண்டு, வயற்றிலுள்ள வியாதியும்,

வாயுக்கள் சலமான ரோகமுந் தீரும். தப்பாது. கை கண்டது. பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்.

மலட்டு வலிக்கு வயற்றுக் கட்டிக்கு :-

இந்துப்பு கூ விராகன்.உ, காயம் விராகன்.உ, வாளம் விராகன்.உ, புளி விளாங்காய் மருவாதி புளியில் வெண்ணெயும் அந்த மருவாதி வரிக் கும்மட்டிப் பழம். 20 சாறு பிழிந்து அந்தச் சாற்றில் புளிக் கரைத்து வெண்ணெயும் போட்டுக் காய்ச்சி பதமான பிறகு இறக்கி முந்திய மூன்று மருந்தும் பொடி பண்ணித் தூவிக் கிளறிச் செப்புச் சிமிழிலடைத்துக் கொண்டு மதி சுண்டைக்காய் பிரமாணங் கொடுக்கவும்.

உன்மத்தத்துக்கு :-

சிவந்த நாயுருவி, வச்சிர வல்லி, சிவந்தது ரெண்டுஞ் சிறுக நறுக்கி வெவ்வேறே தட்டில் வைத்து மேலே சீலை மூடி வெய்யிலில் வைத்து உள்ள மிருக்கச் சேரக் கருக வறுத்து சயிந்தலவணம் பலம்.10, கல்லுப்பு பலம்.10; பொன்னிறமாய் வறுத்துத் தூள் பண்ணி நாலுஞ் சமனாகக் கலந்து வெருகடி தூள் பசுவின் தயிரில் ரெண்டு நேரமுங் கொள்ளவும். துவரைப் பருப்புச் சாறும். நிதானம் நீர் மோராம். புகை, புளி யாகாது. மண்டலங் கொள்ளவும்.

அமுர்த சர்க்கரை :-

1. சீந்தி தண்டு தோலுரித்துச் சிறுக நறுக்கித் தானிடித்து
சார்ந்த நீரில் தான் போட்டுத் தானே புளிந்து வடி கொண்டு
காய்ந்த பானை தனில் வார்த்துக் காத்துப் படாமலொரு சாமம்
கூந்தல் மாதே நீரிறுத்துக் கட்டைரடியிற் கற்கமிதே.

2. அடியில் கற்கந்தனை யெடுத்து அடலாய்ச் சட்டி தனில் போட்டு
கடிய வெய்யில் தன்னில் வைத்துக் காய்ந்த பின்பு ஒரு படிக்குக்
கொடிய முந்திரி நற்கோலங் கோஷ்ட மதுரந் திரிகடுகு
கடுக நெல்லி காஞ்சொறி காட்டில முக்கிர வேருடனே.

3. ஏலம் பூனைக் காலி விரை யியல்பாஞ் சூடன் சீரகமும்
கோலஞ் செய்யுஞ் சந்தனமுங் குங்குமப் பட்டை சாதிக்காய்
சீலம் பெரிய அரேணுகமும் சிறுநாகப்பூத் தான் கூட்டி
வாலகடங் கண் மானனையீர் மாதே மருந்து தனைக் கூட்டே.

4. கூட்டே தாளிச பத்திரியுங் கொண்டே யொவ்வொன்றிரு களஞ்சு
நாட்டே நீர் வள்ளி யஞ்சு நன்றாய் நிலப்பனை யஞ்சு பலம்
சூட்டே விலாம் பிச்சம் பலமொன்று சொன்னே நெருஞ்சி ஒரு பலமாம்
பாட்டே வெட்டி வேர் பலமாம் பதமாந் தாமரை யல்லியுமே.

5. பதமாந் தாமரைக் கிழங்கு தன்னை பரிவா யோர் பலந்தான் கூட்டி
விதமா யிடித்துத் தூள் பண்ணி வேறே பொடியைத் தான் வைத்து
சுகமா மூன்றின் பொடி நாழி தேன் சேர்ம் கண்ட மருந்தொல்படியும்
விதமாஞ் சீனியொரு படியும் மியல்பாய்க் கூட்டி மருந்து கொள்ளே.

6. கொள்ளே மருந்து இவ்வகையும் கூட்டி வகைக்கோர் வெருகடி தான்
தள்ளே பசுவின் நெய்யதனில் சுகமாய்க் குழைத்து இருபது நாள்
உள்ளே. கொள்ளும் பேச வியாதி யெல்லாம் ஓடி ஒளிந்து போய் விடுங்காண்
தன்று மேக மிப்புகையும் தரணியறியுஞ் சொன்னேமே.

7. கண்டது கடுப்பு உஷ்ணத் தகைபடும் நீர் சிறப்பு
மண்டிய செல்வடைப்பு மூத்திரப் பாண்டு பாசங்
கண்டித நீர்க் கடுப்பு சுகரிடும் இருமல் மூலம்

8. நீரது அடைக்கும் வாய்வு நெரிப்பென எரியுங் கை கால்
பாரது பவுத்திர ரோகம் பக்கத்திலண்ட வாய்வு
பேரது வெளும்புருக்கி பெரும்பாடு லேபனங்கள்
வாரி கொங்கை மாதே மாங்கிஷ அடைப்பும் போமே.

9. சாத்திரப்படியே அமிர்த சர்க்கரை தன்னைக் கொண்டால்
மூத்திரக் கிரிச்சங் கிராந்தல் முகமெல்லா மெரிவும் காச்சல்
சூத்திரத் தோஷம் பல்லி சூனிய வகைகளெல்லாம்
மாத்திரைப் போதிராமல் வருந்தியே போகுங் குண்டாய்.

10. பத்தியம் பசுவின் பால் நெய் பரிவுள்ள அவரை நெய்த் தோல்
முத்திய துவரை முட்டை முருங்கையின் பிஞ்சு கூட்டு, பத்தியாய் பசுவின்
மோரும் பாக்கிலை புளியுமாகா, நித்திய புணர்ச்சி வேண்டும் நிலை பெற உரைக்க
நாலே.

<u>சவுரியார் குழம்பு:-</u>

அரிதாரம் மனோசிலை, ரசம் இவை மூன்றும் ஒரு நாழிகை அரைக்கவும். கடுகு, கருஞ்சீரகம், திப்பிலி இவை ஆறும் ரெண்டு நாழிகை அரைக்கவும். பெருங்காயம் இந்துப்பு பொரிகாரம் இவை ஒன்பதும் மூன்று நாழிகை அரைக்கவும். சுத்தி பண்ணின நேர்வாளப் பருப்பு கழஞ்சு 9 அதில் பாதிப் பருப்பு வறுத்து ஒன்றாய்ச் சேர்த்து ஒரு சாம மரைக்கவும். நன்மெய்க் குழம்பு போலே வரும். அந்தக் குழம்பை வழித்து சிமிழில் வைத்துக் கொள்ளவும். அந்த குழம்பிலே கொஞ்சம் தண்ணீரைத் தெளித்து அரைத்து மெல்லிய சீலையில் தடவிக் காய வைத்து திரியாய்த் திரித்துக் கொள்ளவும். இதில் தீரும் வியாதி பீனிசம், மண்டை நோவு, ஒருத்தலை வலி, பல்க் கட்டுச் சன்னி, முகசன்னி, கபால சன்னி அசாத்தியம், திரிதோஷம், விஷம், அடக்கம் இவைகளுக்கு எல்லாம் எருக்கங் குழலில் இந்தத் திரிப் புகையை நாசியிலேற்றவும். இந்த வியாதிகளெல்லாம் தீரும். குழம்புக்குத் தீரும் வியாதி சன்னி பதின்மூன்றுக்கும் இஞ்சிச் சாறு, தேன் முலைப்பால் வெள்வெங்காயத் தயிலம், பஞ்சமூலக் கசாயம் இந்த அநுபானங்களில் ஒவ்வொரு பணவிடை மூன்று நாளிடவும். குன்மம் எட்டுக்கும் இஞ்சிச் சாறு, சுக்கு கசாயத்தில் ×××× ஒரு பணவிடை கொடுக்கவும். தாப சுரம் அறுதாவுக்கும் வெல்லத்தில் கொடுக்கவும். வாத சுரத்துக்கு நொச்சியிலைச் சாற்றில் ஒரு பணவிடை கொடுக்கவும். பித்த சுரத்துக்கு கொத்தமல்லிக் கசாயத்தில் ஒரு பணவிடை கொடுக்கவும். சேற்பன சுரத்துக்கு திப்பிலிக் கசாயத்தில் ஒரு பணவிடை கொடுக்கவும். குளிர் மாறலுக்கு இஞ்சிச் சாற்றில் ஒரு பணவிடை கொடுக்கவும். வெட்டைக்கு அகத்தியிலைச் சாற்றில் ஒரு பணவிடை கொடுக்கவும். காமாலை ஆறு வகைக்கும் எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு பணவிடை கொடுக்கவும். ஆறாத புண்ணுக் கெல்லாம் பசுவின் பாலில் ஒரு பணவிடை கொடுக்கவும். தொந்த ரோக முதலான ஆறாத புண்ணுக் கெல்லாம் அந்த திரி சீலையில் வேப்பெண்ணை நல்லெண்ணை தடவி அந்த புண்ணில் போடவும். மற்ற அறியாத வியாதிக் கெல்லாம் திரிகடுகுப் பொடியிலொரு பணவிடை கொடுக்கவும்.

நீர்ச் சிறுப்பு கிரிசனத்துக்கு புளிச்சக் காடியிலொரு பணவிடை கொடுக்கவும். வயற்றுக் கடுப்புக்கு அருக் கடுப்புக்கெல்லாம் வெள்ளாட்டுத் தயிரில் கொடுக்கவும். சுரக் கடுப்புக்கு வெள்ளாட்டுத் தயிரில் ஒரு பணவிடை கொடுக்கவும். சுர அதிசாரத்துக்குச் சாதிக்காய்ப் பொடியிலொரு பணவிடை கொடுக்கவும். சூலை பதினெட்டுக்கும் கருப்புக் கட்டியிலொரு பணவிடை கொடுக்கவும். கிருணி ஆறுக்கும் பசுவின் தயிரில் கொடுக்கவும். ஒருத்தலை வலி, மாறல் வலிக்கு ஒரு எள்ளத்தனை முலைப்பாலில் குழைத்து பொரிக் கணம் பள்ளத்தில் தடவவும். பேய் பிசாசுக்கும் விஷத்துக்கும் தண்ணீரில் விழுந்த பேருக்கும் சன்னிக்கும் ஆச்சார மயக்கத்துக்கும் நாலுக் கொண்ட பேருக்கும் ஒரு எள்ப் பிரமாணம் முலைப் பாலில் குழைத்துக் கண்ணிலஞ்சன மிடவும். கண்ணைக் கசக்காமல் கையுங் காலுங் கட்டிப் போடவும்: கண்ணில் கோரமானால் மருதம் பட்டை தட்டி முலைப் பாலில் ஊறப் போட்டுப் பஞ்சினா லடிக் கண்ணில்

போடவும். கிரந்திக்குக் கருப்புக் கட்டியிலொரு பலவிடை கொடுக்கவும். திராத பெண்ணுக்கு சம்பிரதாயம் கறிக் கொண்டு மூன்று நாள் செம்மறி யாட்டின் பாலில் ஒரு பலவிடை கொடுக்கவும். ஒன்பது நாள் கொடுக்க கட்டிக் கொள்ளும். இந்த அவுஷதங் கொடுத்தால் இளகின சரீரக் காரர் பயித்திய மெட்டை கடின சரீரக் காரருக்கு மிகுந்த கடினமா யெடுத்தால் ஒரு பிடி விலாம் பிச்சை வேர் நசுக்கி ஒரு படி தண்ணீரில் போட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி இறுத்துக் கொடுக்கவும்.

இருமலுக்கு புகை:-

எருக்கம் பால், சதிரக் கள்ளிப் பால், வெள்ளிய சீலையிலொட்டி உலர்த்தி பின்பு அரிதாரம் எலுமிச்சம் பழச் சாறும் வேலிப் பருத்திச் சாறும் விட்டரைத்து முன் சீலையிலொட்டி உலர்த்தி வெற்றிலையில் சுருட்டிப் புகை குடிக்கவும். பத்தியம் மோரும் சோறும், ஈர வெங்காயமும் சாப்பிடவும். மிஞ்சின கறிக்கு உப்பு வறுத்துப் போட்டுக் கொள்ளவும். எலி கடிக்கு எருக்கம் அரக்கம் பால் காசிடை சீலையிலொட்டி வெந்நீரில் ரெண்டு நாள் கலந்து கொடுக்கவும். மூன்று நாள் மறு பத்தியம். முருங்கைப் பிஞ்சு, முருங்கைக் கீரை, முளைக்கீரைத் தண்டு, கொடிக்கால், கத்திரிப் பிஞ்சாம். ஏழா நாள் ஏறப் போட்டு எட்டா நாள் கஞ்சி மிளகு தேய்த்த முழுகி உப்பு வறுத்துப் போட்டுக் கறிகாளே பத்து நாள் கூட்டவும். ***

வாந்தி விக்கல் சுரத்துக்கு:-

சேர்ந்த நன்று விளாத் தண்ணீர், செவியம், சுக்கு, விலாம்பிச்சம்
சார்ந்த ஏலம் அதிமதுரம் சமமும் கொத்தமல்லி வில்வம்
போந்த மதுவின் பாகாயுடன் பொடியாய் நசுக்கிக் கசாய மிடில்
வாந்தி விக்கல் சுரந் தீரும் வடிவேல் விரியாள் மருந்திதுவே.

அசுவச் சூரணம்:-

ஓமம் பலம்.க, ரத்த போளம் பலம்.[illegible], கருஞ்சோளம் பலம்.½, திப்பிலி பலம்.¼, சுக்கு பலம்.¼, கருஞ்சீரகம் பலம்.¼, கவளக் கட்டி பலம்.க, வெள்ளைவெங்காயம் பலம்.க, மஞ்சள் பலம்.க, சதகுப்பை பலம்.க, கசகசா பலம்.க, பெருங்காயம் விராகன்.உ, கல்லுப்பு படி.க, கண்டு சீயக்காய் பலம்.க, கடுக்காய் பலம்.க, கடுகுரோகணி பலம்.¼, பிரண்டை இடித்த சாள் பலம்.க, ஆனைப் பசி இடித்த சாள் பலம்.க, விழுதி இடித்த சாள் பலம்.க, இவை யெல்லாம் இடித்து சாள் பண்ணவும்.

மதுர குண்டலாதி லேகியம்:-

சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், சிறுகாஞ்சொறி வேர், ஆசித் தகரை வேர், சிறுபூளை வேர், நெருஞ்சி வேர், சிறுகீரை வேர், மிளகு, தக்காளி வேர், தூதுவளை வேர், சாறணை வேர் வகைக்கு பலம்.க, சங்கம் வேர் பலம்.50, கண்டங் கத்திரி வேர் பலம்.25, செவியம் பலம்.25, விஷ மூலம் வகைக்கு பலம்.க, பறங்கிப் பட்டை பலம்.க, திப்பிலி மூலம் பலம்.உ, ஒரு பானையில் போட்டு எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு ஒரு வள்ளமாகக் காய்ச்சி வடித்து பழைய நல்ல வெல்லம் பலம்.50 போட்டுக் காய்ச்சிப் பாகு பதத்தில் இதில் கற்கம் திப்பிலி பலம்.20, தவக்கீரி பலம்.4, ஏலம் பலம்.உ, லவங்கம் பலம்.உ, கடுக்காய் பலம்.உ, தான்றிக்காய் பலம்.உ, நெல்லிக்காய் பலம்.உ, பறங்கிப் பட்டை பலம்.உ, கற்கடகசிங்கி பலம்.உ, மிளகு பலம்.௪, சுக்கு பலம்.௪ இவை யெல்லா மிடித்து வஸ்திர காயம் பண்ணி பானையில் போட்டு தேன் படி.க, விட்டுக் கிண்டி யிட்டுக் கலசத்தில் வைத்துக் கொண்டு காலமே சாயங்காலம் ரெண்டு நேரமும் கொள்ளவும். காசம்.௪, சயம்.௬, ஈளை இருமல் இளைப்பு; குன்மம்,

வாதத்தில் பிறந்த வியாதி சிலேற்றுமம் 96-ம் தீரும்.

குன்ம முதலான சகல வாய்வுக்கு:-

பிரண்டை பலம்.க, பெருமரத்துப் பட்டையில் வைத்துக் கட்டிச் சட்டியில் போட்டு நாலு படி தண்ணீர் விட்டு வேக வைத்து நிழலுணத்தி வைக்கிறது. ஊமச்சி சங்கு கொண்டு வந்து இடித்துக் குழைத்துக் கொண்டு முன் கசாயம் வைத்த பீமரத்துப் பட்டைச் சாற்றில் அரைத்து புடம் போட்டு எடுத்த பற்பம் பலம்.3, பஞ்ச லவணம் பலம்.5, திரிச் சாரம் பலம்.3, ஆக பலம்.8-க்கும் வகைக்கு பலம்.½ ஆள் பலம் பலம்.4, ஆக பலம்.8 கல்வத்தில் போட்டு அரைக்க சித்திரமூலம் வேரும் பாலரசம் பட்டையுங் கூடப் போட்டு கசாயம் வைத்து இந்தக் கசாயத்தில் ஒன்பது நாளரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலது உலர்த்தி வைத்துக் கொண்டு அநுபானம் விதம் பாலரசம் பட்டை கசாயமும் சவுட்டுப்புத் தண்ணீரும் சமன் கொண்டு ஒரு குளிகை அரைத்துக் கொடுக்கவும். சகல வாய்வுக்கும், கடுத்த கசாயங்களிலேயும் மண்டலஞ் செய்விக்கவும்.. சகல வாய்வுந் தீரும்.

மேகபஞ்சாமிர்த யெண்ணெ:-

ஆமணக்கெண்ணெ படி.1½, ரச கற்பூரம் விராகன்.4, நேர்வாளக் கொட்டை. 40 நேர்வாளஞ் சுத்தி பண்ணி நசுக்கி வாங்கிப் போட்டு ரச கற்பூரமுங் கூட்டிப் பொடி பண்ணி எண்ணெயில் போட்டுச் சிறு கொதியிட்டு காலமே தூட்டிடை கொள்ளவும். இதுக்குப் பத்தியம் உப்பு,. புளி பசுவின் தயிர் பசுவின் பால் பசுவின் நெய், முருங்கைப் பிஞ்சு, அரைக்கீரை, சிறுகீரை, துவரைப் பருப்பு ஆகும். கடின வியாதிக்கு புளி, புகை தவிர்க்கவும். கடுகு நல்லெண்ணெ பிறகு கிரந்திப் பண்டந் தவிர்க்கவும். கிரந்தி சூலை, கால், கை பிடிப்புக் குன்மம் வயிற்று வலி சுடி விஷம் திமிரம் கனப்புந் தீரும்.

சூதக் குரு:-

சூதம் விராகனிடை.10, குழி யம்மியிலிட்டு சிவனார் கரந்தைச் சாறு விட்டு மூன்று நாழிகை அரைக்கவும். அப்பால் கட்டுக் கொடியிலையைக் கொண்டு வந்து அரைத்துக் கிண்ணத்தில் போட்டுக் கொண்டு ஒரு அண்டத்தை உடைத்து வெள்ளைக் கருவை அதிலே விட்டு விராகன் எடை அதில் மதில் போட்டுப் பிசறி வைக்கச் ஜலமாம். அந்த ஜலத்தைச் சூதத்தில் விட்டு அஞ்சு நாழிகை அரைக்கவும். அப்பால் சவுந்திர பாண்டி யிலைச் சாற்றிலே மூன்று நாழிகை அரைக்கவும். அரைத்து உலர விட்டுப் பணம் போலே பேர்த்து உள்ளே யிருக்கிற தெல்லாம் போக்கிப் போட்டு அதுக்குள் அரைத்த மருந்தைச் செலுத்தி மேலே அண்டத்தோடு கொண்டு மூடி ஐந்து சீலை மண் செய்து உலர விட்டு இருபது எருவில் புடம் போடவும் பற்பமாம். அதை எடுத்துக் கொண்டு சுக்கு திப்பிலி, மிளகு, வெதுப்பிப் பொடி செய்த தூள் வெருகடிச் சூரணத்தில் ஒரு பணவிடை பற்பஞ் சேர்த்துத் தேனில் குழைத்துக் கொடுக்கவும். இந்தப் படி ஐந்து நாள் அந்தி விடிவேறு கொடுக்கவும். இடமனுக்கு மிந்தப்படி கொடுக்கவும். கரப்பான் சூலை, கபால சூலை விப்புருதி பவுத்திரம் கண்டமாலை, அரையாப்பு, இது முதலான வியாதிக் கெல்லாம் கருப்புக் கட்டியாகுதல் சர்க்கரையாகுதல் ஐந்து நாள் பத்து நாள் போது கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் உப்பு, பாசிப் பயறு, பசுவின் பால் முளைக் கீரைத் தண்டு, முருங்கைப் பிஞ்சு கூட்டிக் கொள்ளவும். இந்தப் படி நாலு நாளைக் கொடுக்கால் பத்து முழுக்கு முழுகவும். நாற்பது நாள் அப பத்தியங் காக்கவும்..

தளசெந்தூரம்:-

ரசம் விராகன்.10, அரிதாரம் விராகனிடை.10, கெந்தகம் விராகனிடை.3, தகரைச் சாறுமுதல், பொற்றலைக் கரியாந்தகரைச் சாறுமுதல் விட்டு மூன்று நாள் ஒவ்வொரு சாமமரைத்து வில்லை செய்து உலர விட்டு அண்டத்தின் கருவை யெடுத்துப் போட்டு அந்த அண்டத்தில் செலுத்தி மேலும் அண்டத்தோடு கொண்டு மூடி ஒன்பது சீலை மண் செய்து

காய வைத்து முன் படி மணல் கூடு குவித்து அதின் மேலே அண்டக் குகை வைத்து மேலும் முன் படி மணல் குவித்து நாவு மரக்கால் ஓட்டெருவை அதின் மேலே குவித்து ஐம்பது எருமை முறித்துப் போட்டு தீ மூட்டவும். இது காத்தொதுக்கில் போடவும். மூன்று நாள் பிரிந்து ஆற விட்டு ஆபங் கொண்டு எடுத்துக் கொள்ளவும். தா செந்தூரம் எந்த வியாதிக்கும் அநுபானமறிந்து அரைப் பணவிடையைச் சேர்த்துக் கொடுக்கவும். உப்புக் கூட்டிக் கொள்ளவும்.

<u>வாய்வுக்கு மருந்துப் பொடி:-</u>

1. கோஷ்டமுடனதி விடையம் மதுரம் ஓமம் கொத்தமல்லி வாய் விளங்கம் சிராம்பு
சுக்கு
திட்டமுடன் சிறுநாகம் திப்பிலியின் மூலம் சிறு தேக்கு சித்தரத்தை வெந்தயம் நற்
சீனம்
முட்டை யரி பிளவுடனே அரத்தை நாகம் மூவர் கடுக்காய் தான்றி நெல்லிக்காயும்
இட்டமுடன் வளையுப்பு ரேகணியு மிந்து யிருவகையாஞ் சீரகமும் யியல்பதாகப்
பட்டதொரு மருபாசைப் பட்டை தாளிசை யதின் பத்திரியும் வகை வகைக்கு
பலமிரையுங் கொள்ளே.
2. வைத்ததொரு மருந்ததனைப் பதமாக யிடித்து பாகமுடன் சீலை வடி கொண்ட
தையும் பின்பு
தொகுத்த வெட்கடி மருந்து சப்பதனில் குழப்பி சுருதியுடன் கொண்டதற் பின்
தொடுத்து வினையகலும்
வகுத்து வலி யெரிச்சலொடு வாய்ற லினித்தல் வருத்த மிகு மயிர்ச்சியொடு பயித்
திய உஷ்ணமும்
மிகுத்த தொரு சிரசிப்பு யெரச்சல் விருப்பமான மேவிய தோரில் வினையு
மிரண்டொடுங்குந்தானே.

<u>விரேசனக் கிருட்டி:-</u>

3. கவுரி மேதி மல மருகை நிமதம் திரி காஞ்சுரம் பசும் பாலில் சாம மெரி
தெவரி தாமென மெனவி வாள சுத்திய தெரியாடி யிது செப்பிர் தவறிடாமலி
ஒன்றிரண்டினிடை தாக்கு மூலிகை சிறு குறிஞ்சி வரியாகு மடி நீரில்லை விரேசன
கீறிட்டி யிது வாகுமே.

குமரியைப் பிளந்து நடுவே வாளம் வைத்து மூடி கட்டி மேதி மலத்தில் போட்டு ரெண்டு சாமம் எரித்து சம்புளச் சாற்றில் கழுவி உலர்த்தின நேர்வாளப் பருப்பு பலம்.க, சிறு. குறிஞ்சா வேர்ப் பட்டை உலர்த்தினது பலம்.உ, அரைக்க விபரம். சிறு வரிக்குமட்டிச் காய், நடுப் பகமாய்க் கொண்டு வந்து அந்தச் சாறு விட்டரைத்து பின்பு மருந்தெல்லா முப்பது விராகன் கூடுதல் ஒரு படி குமட்டிக்காய்ச் சாற்றில் வேக வைத்து மெழுகு பதத்தில் குளிகை உருட்டிக் கொள்ளவும். இந்த விரேசன மாத்திரையில் தீரும் வியாதி மகோதரம், வெப்புப் பார்வை, பெருவயிறு பாண்டு, காமாலை சோபை, கரப்பான் வாத சுரம், பயித்திய பித்தம் குடல் வாதம், வயற்றுக் கிருமி, மலக் கட்டு, பித்த சோபை கடி விஷங்கள் பாம்புகடி இது வெல்லாந் தீரும்.

<u>பறங்கிப் பட்டைச் சூரணம்:-</u>

சங்கம் வேர், சங்குங் குப்பி வேர், நன்னாரி வேர், நிலப்பனைக் கிழங்கு, அமுக்கிலாம் வேர் வகைக்கு பலம்.க, திரிகடுகு, திரிபலை, லவங்கப் பத்திரி, சன்ன லவங்கப் பட்டை, தாளிசை பத்திரி, கார்போகரிசி, வெப்பாலரிசி, சித்திரமூலம், வாய் விளங்கம், அரத்தை, சிறு தேக்கு, செவியம், திப்பிலி மூலம், கொத்தமல்லி, கருஞ்சீரகம், நல்ல சீரகம், சடாமாஞ்சி, கோஷ்டம், அதிமதுரம், ஏலம் வகைக்கு பலம்.க., இந்த மருந்தெல்லாம் நின்ற நிறை பறங்கிப் பட்டை இது இரண்டும் நின்ற நிறை சர்க்கரை இது வெல்லா யிடித்து வஸ்திர காயம் பண்ணி பிறகு சர்க்கரை கலந்து பசுவின் நெய் விட்டு பாவகம் பண்ணி வைத்துக் கொண்டு காலத்தாலே வெருகடிப் பிரமாணங் கொள்ளவும்.

திரிப்புகை:-16.12.63.

ரசம், வெள்ளைப் பாஷாணம், நத்தம், சிருசு, அரிதாரம், காரீயம், கடுகு, வெள்ளைக் குங்கிலியம் வகைக்கு களஞ்சு.க, எருக்கங் கரி களஞ்சு.16, புகையிலைச் சாறு விட்டரைத்துத் திரி கூட்டிப் புகை பிடிக்கவும். வியாதி கண்டு ஏழு பொழுது ஒன்பது பொழுது புகை பிடிப்பிக்கவும். புகை பிடிக்கு முன் மோருஞ் சோறு உப்புங் கூட்டிச் சாப்பிட்டுக் கொண்டு புகை பிடிக்கவும். பாகற்காய், புளி கூட்டிச் சமைத்துங் கூட்டிக் கொள்ளவும்.

சித்தா_முட்டி_எண்ணை:-

நல்லெண்ணை, விளக்கெண்ணை, இலுப்பெண்ணை, புன்கெண்ணை, வேப்பெண்ணை, வகைக்கு படி.க, பசுவின் பால் படி நாலு, எலுமிச்சம் பழச் சாறு.படி மூன்று, சித்தா முட்டி சமூலம் பலம்.முப்பத்திரண்டு எட்டு வள்ளந் தண்ணீர் விட்டு ரெண்டு வள்ளமாகக் காய்ச்சிக் கொண்டு மிளகு பலம் நாலு யெட்டுப் படி தண்ணீர் விட்டு ரெண்டு படியாகக் காய்ச்சி ரெண்டு கசாயமும் ஒரு தாழிச் சட்டியில் வைத்து அதில் எண்ணை பால் பழச் சாறுங் கூட விட்டு அடுப்பேத்தி இதில் கற்கம் சுக்கு, மிளகு, திப்பிலி, வாய் விளங்கம், கோஷ்டம், அதிமதுரம், அரத்தை, சதகுப்பை, மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கடுகு ரோகணி, லவங்கம், தேவதாரம், பெருங்காயம், சுகை நீர், செவ்வள்ளிக் கொடி, யேலம், சந்தனம் வகைக்கு விராகனிடை நாலு இடித்து வஸ்திர காயம் பண்ணி பால் விட்டரைத்து கசாயம் எண்ணையில் கூட்டிக் கலந்து மூன்று நாள் சிறு சொரிவிட்டு நாலா நாள் மெழுகு பதத்தில் வடித்து தினசரி ஒரு காசிடை உள்ளுக்கு வாங்கி மூக்கில் நசியம் விட்டு மேலுக்குந் தலைவையிட்டு தலைக்குத் தேய்த்து சீயக்காயிட்டு முழுகவும். இதில் தீரும் வியாதி நலகாசம், பித்த காசம், மண்டை வியாதி, மண்டை குலை, முகவாத சன்னி, ஒருத்தலை வலி, மூக்கு நீர்ப் பாச்சல், கன்ன குலை, நாய் வாதம், நாசியடைப்பு, பதின்மூன்று வகை சன்னியும் தீரும். இதுக்குப் பத்தியம் கார்ப்பு, புளிப்பு, கிறந்தி பண்டம் தவிர்க்கவும்.

கற்பூர_சூரணம்:-

1. அரிய யேலந் திரிகடுகு அப்பத்தை மூலம் சாதிக்காய்
 மூரிய குடன் கற்பூரம் பேனும் வில்வப் பொரியுடனே
 உரிய தாளிசபத்திரியும் உத்தம் கிரும்பு சமன் கூட்டி
 தெரிய வெட்கடி தேன் தனிலே தின்று கற்பரச் சூரணமே.

2. காட்டுக் கறளை பதினறு கடிய வேலி அதில் பாதி
 நாட்டில் சுக்கு அதில்ப் பாதி நல்ல மிளகு அதில் பாதி
 கூட்டி யிடித்துப் பொடி செய்து கொடிய தேனில் கொள்வீராய்
 ஒட்டித் துரத்துங் காச ரோகம் ஒரு மண்டலத்தில் ஒளிந்திடுமே.

கெந்தகச்_சத்து:-

உத்தாமணிச் சாறு, குப்பை மேனிச் சாறு, சித்திர மூல யிலைச் சாறு இடித்து வெவ்வேறு சாறு பிழிந்து ஒரு கனிசமாய் விட்டு வெள்ளைச் சீலை ஒரு சாணில் பிடித்து நிழலுலர்த்தி உள்ளீரத்தில் எடுத்து ஒரு விராகனிடை கெந்தகம் பொடி பண்ணி சீலையில் நால் திரியாய்த் திரிச்சு அரை உழக்கு விளக்கெண்ணை யிளாறப் போட்டு பின்பு வத்தி யெடுத்து பத்து வச்சு நிதானமாய் எண்ணை விட்டு சத்து வாங்கவும். பத்தி வெந்த பக்குவத்தில் எடுத்து வைத்துக் கொண்டு----பி----வெத்திலையில் தடவி மடிச்சுக் கொடுக்கவும். இப்படி அந்தி விடிஞ்சு ஆறு நாள் கொள்ளவும். பத்தியந் துவரைப் பருப்பு, மிளகு, சீரகம், கருவேப்பிலை, வெந்தயம் பசுவின் நெய் பசுவின் பால் ஆகும். ~~கத்தரிக்காய்~~ மற்றது தவிர்க்கவும். யேழாநாள் விளக்கெண்ணை தேய்த்து அரப்பிட்டு முழுகவும்.

கெந்தக மெழுகு:-

கெந்தக சுத்தி ஊறப் போட்டுக் கொண்டு நிழலிலுலர்த்தி எடுத்துக் கொண்டு அடுப்பில் அடி உரந்த-----சட்டி வைத்து அதில் கெந்தகம் பலம்.க, வைத்து நன்றாயுருக விட்டு வெள்ளாட்டுக் கொழுப்பு உருக்கின நெய் அரை உழக்குக் கொஞ்சமாய் விட்டு நன்றாகக் கடைந்து மறுபடி மணத்தக்காளிச் சாறு அரை உழக்குச் சிறுகச் சிறுக விட்டு மத்திச்சு கத்தாழை அடிவேர் அரைத்த பால் அரை உழக்குச் சிறுக சிறுக விட்டு மத்திச்சு வெண்ணெய் போலே மத்திச்சு மெழுகு போலே திரண்ட பதத்தில் எடுத்துச் சிமிழில் வைத்துப் பொரி மாவில் ஒரு பண்விடை சாப்பிடவும். இப்படி அந்தி விடிஞ்சு ஒரு நாள் சாப்பிட எண்பது வாதமும் பதினெட்டுச் சூலையும் தீரும்.

சவுபாக்கிய சுண்டி:-

சுக்கு பலம்.25, இக்குச் சுத்தி கோமயம் சாட்டறணைச் சாறு ஆடாதோடைச் சாறு கொன்றைச் சாறு, நாவலேளச் சாறு, சுக் இந்த வகைச் சாற்றில் பாவனை பண்ணிக் திரு-----க்கு, முத்தக்காசு, மிளகு, திப்பிலி, சீரகம், பேறுகம், கருஞ்சீரகம், யவட்சாரம், செவியம், சிறுநாகப்பூ, ஓமம், காியான், மோடி, வசம்பு, சத்தி சாரம், எவட்சாரம், பெருங்காயம், அபத்தை, சந்தனம், முந்திரிப்பழம், பேரீச்சம் பழம், சாதிக்காய், சாதி பத்திரி, தக்கோலம் வகைக்கு பலம்.4, சீனிச் சர்க்கரை பலம்.25 சூரணம் பண்ணி அந்தி விடிஞ்சு ரெண்டு நேரமும் கொள்ளவும். (சன்னி பதின்மூன்றுக்கும் முடிவிலே)

மூலத்துக்கு:-

வெள்ளைக் கொவுரி விதை யொட்டு யிலை ஊசி யிலை நாய்க் கடுகு யிலை அபக்கம் பால் விட்டரைத்து உருண்டை பண்ணிக் கொண்டு குளிர்ந்த தண்ணீரிலரைத்துப் போடவும்!

சூத மாத்திரை:-

சூதம் விராகனிடை.உ, வெத்திலை.எ, கல்வத்திலிட்டு நன்றாய் அரைக்கவும். பச்சை நெல்லிமா ரெண்டு எலுமிச்சங் காயளவு போட்டு குப்பை மேனி மணத்தக்காளி துளசி எலுமிச்சம் பழச்சாறு, செம்பருத்திச் சாறு விட்டு நன்று அரைத்து ஒரு பாக்களவு முப்பது மாத்திரை செய்து புடம் வைத்து, இச்சா பத்தியமாய்ச் சாப்பிடவும்.

சந்தனாதி எண்ணெ:-

பொன்னாங்கண்ணிச் சாறு, மொசுமொசுக்கைச் சாறு, சிறுகீரைச் சாறு நெய்ச் சட்டிச் சாறு வல்லாரைச் சாறு, பழம் பாசிச் சாறு கீழா நெல்லிச் சாறு, தாமரை வளையச் சாறு, திருநாமம் பாலைச் சாறு வகைக்கு படி.½, இளநீர் படி.½, பால் படி.க, நல்லெண்ணை படி.க, கற்கம் பெருஞ்சீரகம் செம்பகப்பூ, சன்ன லவங்கப் பட்டை, சிறுநாகப்பூ, கஸ்தூரி மஞ்சள், கார் போகரிசி, கொத்தமல்லி, யேலம் அதிமதுரம், கோஷ்டம், வால் மிளகு, வகைக்கு விராகனிடை.க, பச்சிலை கச்சோலம் கிளியூறல் பட்டை, கொட்டைச் சாந்து வகைக்கு விராகனிடை.3, வெம்பாடம் பட்டை விராகனிடை.3, சந்தனம் பலம்.5, யெண்ணெ யெரிக்கவும். இதுக்கு மேன் பொடி குங்குமப்பூ விராகனிடை.¼, கோரோசனை விராகனிடை.¼, பச்சைக் கற்பூரம் விராகனிடை.¼; புனுகு சட்டம் விராகனிடை.¼, பொடி பண்ணிப் போடவும்.

சந்தனாதி மாத்திரை:--

1. சீரான சிறுகீரை பொன்னாங்கண்ணி செயலர்ல் நன்னாரி வேர் சமயக் கட்டி
   பேரான மதுரமொடு யிருசீரம் யேலம் பேசரிய சந்தனஞ் சர்க்கரை நீங்

காரான கோரோசினை வேருக்குச் சமமாய்க் கலக்காக நிதம்மே கோவையிலைச் சாறு
பேரான காளியிலைச் சாறு விட்டு யிதம் பெறவே யரைத்துமே குளிகை கட்டே.

2. கட்டியதோர் குளிகை தன்னைக் பரணியிலே யிட்டு காலமே அனுபானத்தோடே கொள்ள
வெட்டியே செயிக்குமே பித்தம் வாந்தி மேலான அரோசியங்கள் வெள்ளோக்காளம்.
தட்டெடுத்துப் போகும் சுரங்கள் பாஷாண வேகம் தளராத செந்நீரத்தின் வேகமெல்லாம்
பெட்டியிலே வைத்ததனம் போலே யாகும் பேரான சந்தனாதிக் குளிகை தானே.

3. . . சிறுகீரை வேர், பொன்னாங்காணிதவேர், நன்னாரி வேர், அதிமதுரம், சீரகம், பெருஞ்சீரகம், ஏலம், சந்தனத்தூள், கசை நீர், கோரோசினை வகைக்கு விராகனிடை கடமனத்தக்காளி கோவையிலைச் சாறு விட்டு அரைத்து சின்னத் தா விளங்காய் பிரமாணம் உருண்டை பண்ணவும். அனுபான மறிந்து கொடுக்கவும்.

கண்டாதி லேகியம் :- *Incomplete*

1. பாரப்பா கண்டாதி லேகியத்தைப் பாடுறேன் புலத்தியனே பண்பாய்க் கேளு
நாரப்பா வில்லாமல் விளைந்த விஞ்சி தன்னை நலமாகத் தோல் போக்கி வில்லைபோல் நறுக்கி
நேரப்பா பதினஞ்சு பலந்தானிஞ்சி நிறுத்தங்கே சிவக்கவே நறு நெய்யில் வறுத்து
சீரப்பா பொடி செய்து சீலை வடி கொண்டு சித்திர மேல் மருந்தப்பா செப்புறேனே
2. அப்பா கேள் திரிகடுகு சித்தரத்தை செவியம் அதிமதுரம் சிறு தேக்கு வாய் விளங்க
மொப்பான திரிபலையுங் கொத்தமல்லியோடு ஒங்கி வளர் சி நாகந் தாளிச மேல பத்திரி
தப்பாத லவங்கப் பட்டை பத்திரியும் தானி நெல்லுப் பொரி யிவைகள் வகைக்கு முக்களஞ்சு
விப்பாரிதி சாதிக்காய் பத்திரி கிராம்பு வியாலான யதிவிடையம் வகைக்கு ரெண்டு களஞ்சே
3. களஞ்சாக மருந்தெல்லாம் நறுக்கியே நொறுக்கி காய வைத்துத் தூளாக்கி வஸ்திரகாயம் பண்ணி
தளஞ்சியாய்ச் சீனி யொரு பலந்தான் கூட்டித் தனி யிஞ்சிப் பொடி கலந்து சாற்றக் கேளு
வளஞ்சியமாய் நல்ல வெல்ல மஞ்சு பலம் பாகாய் வரும் பருவம் பொடி தூவி வளமாகக் கிண்டு
உளஞ்சியமாய் நறுந் தேனெய் வகைக் காலாக்காக வுறவாக்கக் கிண்டிடவும் லேகியமா முன்னே.
44. பரம்பரையாய் வருகின்ற கெந்த தாளி பறந்தோட நெய்யை யான் பகரக் கேளு
வரம் போல் வருத்த விடும் புன்னை யாற்று மாச்சரிய நெய்யிருட வான்மையப்பா
உரம் பெறவே நறு நெய்யும் (மேல் முடிவு எழுதப்படவில்லை) .

பிறளி என்னை :-

1. வாய்க் கடங்காப் பிறளி பல்களைக்கு யென்னை வகையாகச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
நோய்க் கடங்கா வேரண்டத் தயிலமடா நாழி நலுக்குமுடன வூரி வேர்த் தோலி தான்
வீக்கடங்கா நறு களஞ்சி மஞ்சளுடன் கடுகு வெந்தயமும் வெள்ளுள்ளி சீரகம் ரெண்டோமம்
பேய்க் கடங்கா மிளகு கடுக்காய் ரேனி வசம்பு பெருங்காயம் வகை யொன்று களஞ்சி ரெண்டே.
2. ரவ்விரண்டு களஞ்சாக யிடித்துத் தூளாய். நலம் பெறவே யென்னைக்குள் போட்டுக் காய்ச்சு
செவ்விதாய்ச் சிவந்து வரும் பதம் பாத்திறக்கி திறத்துடனே கரகத்தி னென்னை கடுகொன்றாய்
யவ்விய மில்லாமலே வடித்து வைத்து ஆறிய பின் மூன்று நாள் பிள்ளைகளுக்கப்பா
தவ்வியே கறண்டி யொன்று தினந் தினந் தேனேற்றி சாந்தகம்பின் நாகயினிக் குழமை கொடுதானே.
3. தானென்ற குழமை யென்னச் சித்திரப் பாலாண்ட தனி மதுரஞ் சீரகமும் தன்னீரிலாட்டி
மானென்ற பிள்ளைகளுக் கல்வண்ண மருந்து மாந்தமொடு கிரணி கணை பிறளியொட்டு மொனியும்

தேனென்ற பத்தியந் தாளப்பு மூதலாகச் சிறப்புக் குறைபு முதல் செய்த வுடல் தெளியும்
தேனென்ற வெண்ணைக்கு வெகு குணங்கள் நன்று விரும்பியதை வைத்து வுண்ண விகற்ப மில்லைப் பாரே.

<u>தாளிச பத்திரி சூரணம்</u>:-

4. செப்புறேன் தாளிச பத்திரி வகை தானப்பா திறமாக நாற்பதுவே களஞ்சு விட்டு
செப்புறேன் சீனி யந்த யிடைக்கிடை தான் கூட்டு திரிகடுகு திரிபலையுஞ் சீரக மிரண்டேலஞ்
செப்புறேன் சாதிக்காய் புத்திரி கிராம்பு சிறு தேக்கு அதிமதுரஞ் சி நாகப்பூவும்
செப்புறே இலவங்கப் பட்டை பத்திரியுஞ் செவியமொடு வாய் விளங்கஞ் சித்தரத் தை கூட்டே.

55. கூட்டடா வால் மிளகு வோம மிரண்டு கோட்டம் கோரோசினை தெசாபுரம் அக்கிறாக் காரம்
தீட்டடா கொத்தமல்லி முந்திரி பேரீந்தஞ் செய்பரிய கல்கயுந் தானிறுங் கூட்டு
மூட்டடா நிலப்பனை வேரமுக்கிறு நன்னாரி/முத்தக்காசுலாமிச்சு வெட்டி வேரப்பா
நாட்டடா அதி கண்டங் காரியுட வேரும் நல்ல நெய்தல் கிழங்குடனே நெற் பொரியும் நாட்டே.

6. நாட்டு மிந்த மருந்து வகை நாற்பத்தொம்பால் நலமாக வகைக்கொரு களஞ்சு மாகக்
கூட்டு மிவைப் புத கற்றி வெற்றி காய் வைத்து முற வீடி பொடி வடியுங் கொண்டு பின்பு சீனிக்
காட்டு வொன்றாய்க் கலந்ததின் பின் புதுக் கரகத்திட்டுக் கைக் கடங்க வெரு கடி தானிரு போது தின்று
பூட்டுவது தேனிஞ்சிச் சாறுமப்பால் புகழ் வரு மாதளம் பழத்திற் சாற்றிற் போ மே.

7. போமப்பா காச வகை தொண்ணூற்றாறும் பொல்லாத காமாலை யாறுமாகும்
போமப்பா பல ரூட்சை தாகம் சோகம் பொருமலொடு யீளை வலி யிருமல் போகும்
போமப்பா வாந்தி யரோசிப்புத் தாகம் பூண்ட குன்மம் நெஞ்செரிப்புத் தேகக் காந்தல்
போமப்பா பித்த வெட்டை தாது நஷ்டம் புகைச்சலொடு கண் மயக்கம் புண் பொடிகள் போமே.

8. புண் பொடிகள் சிரங்குடனே கரப்பான் போகும் புண்ணில் வெந்த கெந்த தாளி போகும்
புண் பொடிகள் உலகருங் குஷ்டம் போகும் போம் பெரிய வாய்வு வெப்பத் தாறும் போகும்
புண் பொடியாய் நோய் போகப் பத்தியத்தைக் கேளு புகும் துவரை முளைத் தவரை அவலை சமூலம்
புண் பொடியாம் வெள்ளாட்டுப் பாலிதற்கு பிறியம் பொல்லாத மாங்கிழங்கள் புளி கைப்புந் தள்ளே.

9. பத்தியந் துவரை நெய் பாலாம் பூட்டாத் வருதலையின் பிஞ்சுமாகும்
பூக்காய் பத்திரியாகும் அவலையப்பா நாட்டக் கேள் புளி கைப்பு மோர் குக்கூத் புகையுந் தள்ளு
நச்சு விடும் வாய் வான பதார்த்தந் தள்ளு ஆட்டிறச்சி மீன் வகைகள் உலர்ந்தாக் கூட்டு
அப்பனே மற்றொன்று மாகாது சொன்னேன் தீட்டு முன்னே பாய்ந்து விடும் நோய் களோடும் தீராத வினை தீர்க்கும் சிவதை பராபரையே.

கக. <u>திப்பிலாதி லேகியம்</u>:-

1. கூட்டு லேகியந் தானப்பா தொந்திப்பு சயங்கள் தீர
நாட்டு திப்பிலி களஞ்சு நாற்பத்தஞ் சேர
கூட்டு சித்தரத்தை தாலும் ஓர் முப்பது களஞ்சு
தீட்டு நாற் கொத்தமல்லி பதின் களஞ் சென்னச் சேரே.

2. சேரடா மிளகு சுக்கு செவியம் திப்பிலியின் மூலம்
சேரடா மதுரம் நெல்லி சீரக மிரண்டோடேலம்
சேரடா நயக்கு மூலம் சிறு தேக்கு கூக நீரம்
சேரடா அமுக்கிலாம் வேர் குறோசாணி திரிந்து கூட்டே.

3. திரிந்த வால்மிளகு தாளிச பத்திரி கடுக்காய் சேரு
பொருந்தவே வகைக்கு அஞ்சு களஞ்சன்பாய்க் கட்டிப் பின்பு
மருந்தின் வகைக்கு மூன்று களஞ்சு வகையாய்க் கேளு
விரிந்திலவங்கப் பட்டை பத்திரி விளம்பிறேமே.

4. விளம்பிறேம் கிராம்பு சாதிக்காய் பத்திரி யிவை தானஞ்சு
வளம் பெறக் காய வைத்து யிடித்த தாள் வடியுங் கட்டி
பளம் பெறுங் கண்டங் காரி சாதியுங் கரிசாலை பாரு
ளம் பெற வகைக்குளக்குப் பொடி வடி கொண்டு சேரே.

5. சேரவே படி நறுந் தேன் காச்சியே மதனில் தேனில்
வளர் பல மருந்து தானே வாளுடன் தாவிக் கிண்டு
சீர் கண்டு நறு நெய்யுங் கால் படியிய் விட்டுக் கிளறும் போது
பார் திப்பிலாதி லேகியம் பாக்குப் பிரமானஞ் செய்யே.

6. பிரமாணம் உருண்டை செய்து பின்பொரு போதருந்த
பிரமான மண்டலந்தான் பிசகாமலப்பா யாகில்
பிரமாணம் வியாதி வாத சிலேற்பனம் பித்தத்தோடு பிரமாணம்
பணைப்புத் தொந்தம் பித்தறந் தனையும் போமே.

7. தானென்ற பத்தியங் கேள் தன்னைப் புளி கசப்புத்
தானென்ற தயிர் மோரோடு புகையிலை வரம்பாய்த் தள்ளு
தானென்ற நறு நெய் பாலுந் துவரையு மவரைப் பிஞ்சுந்
தானென்ற முருங்கைச் சாறும் வாதலைப் பிஞ்சுமாமே.

8. மேக மிருபதுக்கும் மகர் தத்துவச் சூரணம்:-

அமுக்கிருக் கிழங்கு நன்னி முட்டான் கிழங்கு, தாமரைக் கிழங்கு, நெய்தல் கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு, சத்தி சாறணைக் கிழங்கு, கோரைக் கிழங்கு, நெருஞ்சி வேர், வெட்டி வேர், விலாம்பிச்சம் வேர், கீளாநெல்லி வேர், சிறுபூளை வேர், பூனைக் காஞ்சொரி வேர், தாமரை கேசரம், செண்பக விரை, நீர் முள்ளி விரை நீர்க் கடம்பு விரை ஆவாரை பஞ்சகம் சித்திரமூலம் வேர் வகை ஒன்றுக்கு பலம்.க, சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், கருஞ்சீரகம், ஏலம், லவங்கப் பத்திரி, லவங்கப் பட்டை, பூலாங் கிழங்கு, அகில் கட்டை, சோம்பு, வால் மிளகு, கசகசா சந்தனக் கட்டை கொத்தமல்லி, பேரீச்சம் பழம், முந்திரிப் பழம், செண்பகப் பூ, சாதி பத்திரி, கிராம்பு, சிறுநாகப்பூ, சாதிக்காய், கறை நீர், தேத்தாங் கொட்டை கஸ்தூரி மஞ்சள், கல்நார், கல்மதம் இவ் வகைக்கு பலம்.க, இந்தக் கடைச் சரக்கு சமன் சீனி சர்க்கரை இந்தக் கடைச் சரக்கும் சீந்தி சர்க்கரையும் ரெண்டும் ஒன்றாய்க் கூட்டிப் பார்க்க பலம்.54 ஆகும். நிலப்பனைக் கிழங்கு பலம்.54 இவ் வெடைக்கு ரணம் பன்னிரு சீனி சர்க்கரை பலம்.108 கலந்து கொடுக்கவும். இதற்கு தீரும் வியாதி வெள்ளைக் கடுப்பு, ரெத்தக் கடுப்பு, இருபது மேகம் கல்லடைப்பு, மது மேகமுங் குணமாம். காலை மே தேன் கூட்டிச் சாப்பிடவும். ~~[illegible]~~ ராத்திரிக்கு சுப நெய்யில் கொள்ளவும்.

<u>சவுபாக்கிய ~~சுண்டி~~ சி ண்டி:-</u>

இஞ்சி பலம்.20, தண்ணீரில் ஊறப் போட்டு எடுத்து உலர்த்தி மறுநாள் கோமூத்திரத்தில் ஊறப் போட்டு சிறுக நறுக்கிச் சுண்ணாம்புத் தண்ணீர் 30 நாழிகை ஊறப் போட்டுப் பிறகு எடுத்து முசுமுசுக்கைச் சாற்றில் ஊறப் போட்டு மூன்று நாள் மறுநாள் நொச்சிச் சாற்றில் ஊறப் போடவும். இஞ்சி கிடையாவிட்டால் சுக்குப் பிறனி சீவிப் போட்டு இந்தப் படி பண்ணவும். பிறகு நிலவலத்திச் சூரணம்: பன்னி வைத்துக் கொண்டு இதில் கற்கம் சுக்கு, லவங்கப் பட்டை, ஏலம், நாகப்பூ, திப்பிலி, கிராம்பு, கருஞ்சீரகம்

மிளகு, வாய் விளங்கம், திப்பிலி மூலம், சித்திரமூலம், ஓமம் வகைக்கு பலம்.உ, சிறு தேக்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், வில்வ வேர், கொத்த மல்லி, அரத்தை வகைக்கு பலம்.6 இது வெல்லம் இடித்துச் சூரணம் பண்ணி முந்தின சூரணத்தோடே கலந்து வைத்துக் கொண்டு பசுவின் பால் மரக்கால்.க, தண்ணீர் படி.3, தண்ணீரும் பாலும் கலந்த காய்ச்சி நாலிலொன்றான வாறே சர்க்கரை பலம் 100 போட்டுத் துளாவிக் காய்ச்சி திப்பி போக வடிகட்டித் திரும்பி அடியில் வைத்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் தொட்டால் கம்பி போலே வரும். சூரணங் கொட்டிக் கிளறி இறக்கி தேன் படி.1½ நெய் படி.3/4, விட்டுக் கிளறி வைத்துக் கொள்ளவும். தினசரி நேரத்துக்கு விராகன்.உ, கொள்ளவும். ரெண்டு நேரமுங் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி வாய்வு அடிபடும் கிருமிக் கழிச்சல், இருமல் கால் முகம் வீக்கம், அஸ்தி சுரம், உள்க் காச்சல், மேக வெட்டை வலி குன்மம் சோகை காமாலை இவை யெல்லாந் தீரும். பத்தியமாய் வில்லாக் கறி கூட்டவும்.

<u>சகாதேவி எண்ணெ:-</u>

நல்லெண்ணெ படி.க, நெய்ச் சட்டி சமூலமுந் தலைத்து வடி கட்டின சாறு படி.க, இரண்டுங் கலந்து இதில் கற்கம் ஏலம், லவங்கப் பட்டை, அதிமதுரங் கோஷ்டம், செண்பகப்பூ, நெய்தல் கிழங்கு, வெட்டி வேர், விலாமிச்ச வேர், நன்னாரி வேர், முத்தக்காசு, சந்தனம் வகைக்கு பலம்.1/8 இந்த பதினொரு வகை மருந்தும் நெய்ச் சட்டிச் சாறு விட்டரைத்து எண்ணெயில் கலக்கி ஒரு நாள் சூரிய புடமிட்டு மறுநாள் எரித்து மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும். ஒன்றை விட்டொரு நாள் தலைக்குத் தேய்த்து முழுகவும். இப்படி எட்டு நாள் முழுகவும். அப்புறம் எட்டு நாளைக் கொருக்கால் முழுகவும். இதுக்குத் தீரும் வியாதி காசம், க்ஷயம், உள்க் காச்சல், இருமல் வருஉஷ்ண மேகம், மூக்கு லேசருய் விழுகிறது. ரெத்த பீனிசம், சீப் பீனிசம், நீர்ப் பீனிசம், சீருய்ப் பீனிசம் முகம் மிசிவு, துக்கிறதும் மூக்குப் பரப்பும் மூக்குப் புண்ணும் விழுகிறதும் இதுகளெல் லாந் தீரும். ~~உதைய மூர்த்தி வித்தை~~ இது உதைய மூர்த்தி வித்தை. சூசிகா வாய்வு, கிருமியுந் தீரும். பத்தியம் கார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும். உப்பு, பருப்பு அரைக் கீரையாம்.

<u>ஏலாதிச் சூரணம்:-</u>

ஏலம், சடாமஞ்சி, லவங்கம், சுக்கு, திப்பிலி, முத்தக்காசு, கற்பூரம், கொத்தமல்லி, போச்சம் பழம், சாதிப் பத்திரி, இலுப்பைப் பூ, வெட்டி வெர், விலாமிச்சம் வேர், முந்திரிப் பழம், தாமரை வளையம், சந்தனம், கோஷ்டம், குங்குமப் பட்டை, காட்டெருமைப் பால், சாதிக்காய், செப்பு நெருஞ்சி, வேர், சாறணை வேர், நிலப்பனைக் கிழங்கு, நிலவேம்பு, அமுக்கிறுங் கிழங்கு, சந்தித் தண்டு இது வெல்லாம் ஒரு நிறையாகச் சமன் கட்டிச் சூரணம் பண்ணி இதுக் குச் சமன் சீனிச் சக்கரை கலந்து வைத்துக் கொண்டு பசுவின் பாலில் கொட்டைப் பாக்களவு சூரணங் குழைத்துச் சாப்பிடவும். பசுவின் நெய்யாகுதல் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி பாண்டு, வரட்சை மூளை, இருமல், சித்திரைப்பு, பயித்தியம், பித்தம், வாயாலெடுக்கிறது, கெற்ப வாய்வு, கடி விட்டங்கள், படு தாமரைப் புண் பின்னையும் மனேக உஷ்ட வியாதிகளெல்லாந் தீரும். கைப்பு தவிர்க்கவும். மற்ற தெல்லாங் கூட்டவும்.

<u>திப்பிலாதி லேகியம்:-</u>

திப்பிலி பலம்.க, சுக்கு பலம்.½, சீரகம் பலம்.½, மிளகு பலம்.½, ஓமம் பலம்.½, கொத்தமல்லி பலம்.½, கண்டு பறங்கி பலம்.½, செவியம்

பலம். ½ அரத்தை பலம். ½ பறங்கிப் பட்டை பலம். ½ பிரப்பன் கிழங்கு பலம். ½ கற்கடக சிங்கி பலம். ¼ அதிமதுரம் பலம். ½ அக்கிலாக் காரம் பலம். ½ கோஷ்டம் பலம். ¼, சாதிக்காய் பலம். ¼, சன்ன லவங்கப் பட்டை பலம். ½ லவங்கப் பத்திரி பலம். ¼ ஏலம் பலம். ¼, நிலப்பனைக் கிழங்கு பலம். ½ கோரைக் கிழங்கு பலம். ½ பூமிச் சர்க்கரைக் கிழங்கு பலம். ½ சித்திர மூலம் வேர் பட்டை பலம். ½ கடுக்காய் பலம். ½ தானிக்காய் பலம். ½ நெல்லிக்காய் பலம். ½ வெட்டி வேர் பலம். ½ விலாமிச்சம் வேர் பலம். ½ முந்திரிப் பழம் பலம். ½ சர்க்கரை பலம். 6½ தேன் படி. ¼, நெய் படி. ¼ இவையெல்லாம் சூரணம் பண்ணி நெய் காய வைத்துச் சர்க்கரையை போட்டுச் சூரணமுங் கொட்டிக் கிளறித் தேன் விட்டுக் கிளறி லேகியம் பண்ணி வைத்துக் கொண்டு நேரம் ஒன்றுக்கு களஞ்சுவாக இரண்டு நேரமுங் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி அஸ்தி சுரம், பலயீனம், கை கால் பிடிப்பு, அக்கினி மந்தம் வயிற்றில் எரிவு, உடம்பில், கிமிருமி, அதிசாரம், உஷ்ண வாய்வு தலை சுற்று மயக்கம், பித்த ரோகம், வாத ரோகம், சகல ரோகமுந் தீரும்.

<u>பிப்பிலாதி லேகியம்</u>:-

திப்பிலி பலம். உ, ஏலம், லவங்கம், தாளிச பத்திரி, சாதிக்காய், சாதிப் பத்திரி; லவங்கப் பட்டை; லவங்கப் பத்திரி, சுக்கு, மிளகு, சீரகம் கருஞ்சீரகம், திப்பிலி மூலம், கல்லு பறங்கி, செவியம், அரத்தை, கற்கடக சிங்கி, அக்கிலாக் காரம், கோஷ்டம், அதிமதுரம், வால் மிளகு, கொத்தமல்லி, வாய் விளங்கம், சரச்சீர சோம்பு, ஓமம், சிறு நாகப்பூ; வெட்டி வேர், விலாமிச்சம் வேர், வில்வ வேர், முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், சடாமாஞ்சி, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், நிலப்பனைக் கிழங்கு, சிவனார் வேம்பு; நன்னாரி வேர், அமுக்கிலாங் கிழங்கு வகைக்கு விராகனிடை. உ; பறங்கிப் பட்டை, பிரப்பங் கிழங்கு, சித்திரமூலம் வகைக்கு விராகன். 5; ரேணுகம் சித்தரத்தை, கோரைக் கிழங்கு, ஏலவ ஊ, சீந்திக் கொடி, வெள்ளறுகு, வெள்ளைச் சாறணை வேர் விஷ்ணு காந்தி, வெண்தாமரை, ஞிவதி வேர்ப் பட்டை வகைக்கு விராகனிடை. உ, இவையெல்லா மிடித்துச் சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு நெய் படி. ¼; பசுவின் நெய் காய வைத்துச் சர்க்கரை சேர்க்க, கூடப் போட்டுச் சூரணங் கொட்டிக் கிளறி தேன் படி. ½ கூட விட்டுக் கிளறி லேகியமாய் எடுத்துக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி க்ஷயவிஷ வாதம், குன்மம், மூலம், பித்தம் பயித்திய காமாலை, சூலை உடம்பு வலி கை, கால், குடைச்சல் கட்டு வறட்சி, சூலை, பசி மந்தம், அரோசிகம், மயக்கம், அதிசாரம், ரெத்த பித்தம் இவையெல்லாம் தீரும். நேரம் ஒன்றுக்கு ஒன்றரை களஞ்சு லேகியம் சாப்பிடவும். பத்தியம் புளிப்பு, புகை, கிரந்திப் பண்டங்கள் இவையெல்லாம் தள்ளவும்.

<u>கிரந்தி வெட்டைக்கு எண்ணெய்</u>:-

வர்த்தா த்திர விளக்கெண்ணெய் படி. ஒ, வெள்ளை பலம். 4, கருங்கோரகனி பலம். 1 ஏமம் பலம். க, கருஞ்சீரகம் பலம். க, பறங்கிப் பட்டை பலம். 4, சிலந்தி நாயகம் இலை பலம். க, சாதி சமூலம் பலம். 4, சட்டித் தகரை சமூலம் பலம். க துளசி முருங்கை பலம். க, பிரமியப் பூண்டுச் சாறு படி. ½, பளம் பாசி ஒரு பிடி, கரு நொச்சிக் கொழுந்து ஒரு பிடி, முசுமுசுக்கை வேர் பலம். க, நெருஞ்சட்டி வேர் பலம். க, சங்கம் வேர் பலம். க, சித்தகரை வேர் பலம். க, நன்னாரி வேர் பலம். க, முடக்கொத்தான் இலை ஒரு பிடி, நிலவாகை சமூலம் பலம். 4. செங்கத் தாரிப் பட்டை பலம். க, இண்டங் கொழுந்து பலம். க, வெள்ளறுகு பலம். க, கொடி வேலி வேர்ப் பட்டை பலம். க, பற்படாகம் பலம். ½, கடுக்காய் பலம். க, இவை மட்டுங் கூட்டி இடித்துச் சூரணம் பண்ணி எண்ணெயில் போட்டு எரித்துப் பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு தினம் ஒரு சங்கு எண்ணெய் கொள்ளவும். வேதியாம். வேதியான பிறகு

Incomplete

உடம்புக்கு வெந்நீர் விட்டுக் குளிச்சுப் போட்டு உப்பில்லாமல் வெந்நீருஞ் சோறும் சாப்பிடவும். இப்படி மூன்று நாளைக்கு சாப்பிட்டு மூன்று நாள் மீறி பத்தியம் பிடிக்கவும். இச்சா பத்தியமாயிருந்த பிறகு ஒரு முறைக்கு (மேல் தொடர்ச்சி அடுத்த ஏடு யில் இல்லை).

<u>லகுபூதிகா தயிலம்</u>:-

ஆயில் பட்டை பலம்.16, சித்தாமுட்டி, நன்னாரி வேர், அமுக்கிலாங் கிழங்கு, புங்கம் பட்டை, பெருமரத்துப் பட்டை, செம்முள்ளி வேர், நல்ல வேளை வேர், இது வகைக்கு பலம்.4, கட்டி இடித்து ஒரு பானையில் போட்டுத் தாளிப் பதக்குத் தண்ணீர் வார்த்து ரெண்டு நாள் ரெண்டு சாமம் காய்ச்சி நாழியான வாறே வடித்து அதில் இரு நாழி நல்லெண்ணை விட்டு பசுவின் பால் இரு நாழியுங் கலந்து காயச்சே இதில் கற்கம் செம்பக அரும்பு மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், வாய் விளங்கம், நாகேசுரம், கோஷ்டம், ஏலம், சடாமஞ்சி, கற்கடக சிங்கி, திப்பிலி மூலம், சுக்கு, மந்திஉட்டி, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, கோரைக் கிழங்கு, வெட்டி வேர், கடுகுரோகணி, தம்பராஉட்டகம், தாமரைக் கிழங்கு, தாமரைப் பூ வகைக்கு விராகன்.க; இது வெல்லா மிடித்துக் கலந்து காய்ச்சிப் பதததிலிறக்கி வடித்து தயிலம் தலையில் தேய்க்கவும். நசியம் பண்ணவும், இதுக்குத் தீரும் வியாதி பீனிச வாய்வு, சிரோ ரோகங்கள், நேத்திர ரோகம், காது கேளாதது, பாரிச சூலை இது வெல்லாந் தீரும். பத்தியம் புளி, புகை தவிர்க்கவும்.

<u>வில்வாதி லேகியம்</u>:-

வில்வ வேர் பலம்.30, சித்தா முட்டி வேர் பலம்.15, இது நன்றாய்ச் சீவி ஒரு பானையில் போட்டு எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு பதக்காகக் காய்ச்சி வடித்துக் கொண்டு இதில் பழைய வெல்லம் பலம்.60, கசாயத்தில் போட்டுக் கரைத்து வடி கட்டிக் காய்ச்சிப் பாகு பதத்தில் போடுகிற கற்கம் சுக்கு பலம்.3, திப்பிலி பலம்.உ, மிளகு பலம்.க, செவியம் பலம்.க, தாளிச பத்திரி பலம்.க; பெருநாகப்பூ பலம்.½, திப்பிலி மூலம் பலம்.½, சீரகம் பலம்.½, சித்திரமூலம் பலம்.½, லவங்கப் பட்டை பலம்.½ இது வெல்லாம் சூரணம் பண்ணி பாகில் கொட்டிக் கிளறிப் பக்குவமான பின்பு ஒரு நாழி தேன் விட்டுக் கிளறி வைத்துக் கொள்ளவும். நேரத்துக்கு ரெண்டு விராகனிடை லேகியங் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி பயித்திய வாய்வு காமாலை மார் நோவு வயறு நோவு, கிறுகிறு வாய்வு, நீர்க் கொருத்திறது, பாண்டு, காமாலை இது வெல்லாந் தீரும். பத்தியம் புளி, புகை தவிர்க்கவும்.

<u>குன்ம குடோரி</u>:-

சாதிக்காய், சாதிப்பத்திரி, திப்பிலி மூலம், அக்கலாக் காரம், அதிமதுரம், கடுகுரோகணி, வாய் விளங்கம், கொத்தமல்லி, தம்பராஉட்டகம், கசகசா, சதகுப்பை, வகைக்கு விராகன்.க, பிடா லவணம், சயிந்து லவணம், வளையலுப்பு, பெருங்காயம், ஓமம், மிளகு, சுக்கு, சாசுவே வகைக்கு விராகன்.உ, வெள்ளைப் பூண்டு கட்டி.க, இது வெல்லாஞ் சூரணம் பண்ணி வடி கட்டி இந்தச் சூரணம் ஒரு பங்கும் பிறவ்டைச் சூரணம் கால் பங்குமாக நிறுத்துச் சேர்த்து முத்தின தேங்கா யுடைத்து அரைத்து ஒரு வள்ளத் தண்ணீர் விட்டுப் பிசைந்து வடிகட்டிக் கொண்டு இந்தப் பாலை ஒரு சட்டியில் வார்த்து அடுப்பில் வைத்து அஞ்சு விறகாலே எரியிட்டு ஒன்றரைப் படியான சமயத்தில் சூரணம் போட்டுக் கிளறி எரிய விட்டு சூரணம் போட்டுக் கிளறி எரிய விட்டு ஒன்றரைப் படியான சமயத்தில் மாங்காயளவு வெல்லம் பொடி பண்ணிப் போட்டு முக்கால் படியான சமயத்தில் எலுமிச்சங் காயளவு பசு வெண்ணை போட்டு இறக்கி ஆற விட்டு வடகப் பிரமாணம் உருண்டை

பண்ணிக் காலமே ஒரு உருண்டை வெந்நீரில் கொள்ளவும். இப்படி ஒரு மண்டலங் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி எட்டு வகை குன்மமுந் தீரும். இதற்குப் பத்தியமும் பசுவின் நெய்யும் பால், மோர், சம்பாவரிசி, பச்சையரிசி, பச்சைப் பருப்பு, மாவும். புளி புகை மற்றப் பதார்த்தம் விடவும்.

சிவனார் வேம்பு லேகியம்:-

சிவனார் வேம்பு பலம்.30, நசுக்கி ஒரு பானையில் போட்டு எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு ஒரு வள்ளமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு இதில் நல்ல வெல்லம் பலம்.30, போட்டுக் கரைத்து வடி கட்டிக் காய்ச்சி பாகு பதத்தில் இதில் போடுகிற கற்கம் சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், சீரகம், ஏலம், கார்போகரிசி, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், அதிமதுரம், வகைக்கு பலம்.க, நச்சு விரை, கருஞ் சீரகம், வெப்பாலை யரிசி, வாலுளுவை யரிசி, லவங்கந் தாளிச பத்திரி, லவங்கப் பத்திரி, சாதிக்காய், நிலப்பனைக் கிழங்கு, நன்னாரி வேர், சாதிபத்திரி, வெட்டி வேர், முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், வில்வ வேர், ஆவாரை, சிறு குறிஞ்சா வேர், சங்கங் குப்பி வேர் வகைக்கு பலம்.½, விழுதி வேர் பலம்.½, இவை யெல்லா மிடித்துச் சூரணம் பண்ணிப் பாகில் போட்டுக் கிளறித் தேன் படி.½, நெய் படி.½, விட்டுக் கிளறி வைத்துக் கொள்ளவும். நேரத்துக்கு விராகன்.உ, லேகியம் ரெண்டு நேரமுங் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி சகல வண்டு கடி, மட்டம்.18, பெரு வியாதி, விஷ கரப்பான், பெர்ரி கரப்பான், சூலை வாய்வு, கட்டுச் சூலை, கை கால் பிடிப்பு, மேக வாய்வு, பாண்டு ரோகம், வாத பித்தம், சேத்துமத்தில் பிறந்த ரோகமெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் புளி, புகை, கிரந்திப் பண்டங்கள் தவிர்க்கவும்.

சவுபாக்கிய சுண்டி:-

சுக்கு பலம்.100, சர்க்கரை பலம்.100, லவங்கம், முத்தக்காசு, மிளகு, திப்பிலி, சீரகம், ரேணுகம், கருஞ்சீரகம், செங்கழுநீர்க் கோஷ்டம், செவியம், சிறுநாகப்பூ, அசமதாகம், கரியாந்தகரைப் பொடி, வசம்பு, சத்திச் சாரம், யவச் சாரம், பெருங்காயம், அரத்தை, சந்தனம், முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், சாதிக்காய், சாதிப்பத்திரி, தக்கோலம் இவை வகைக்கு பலம்.க இடித்துச் சூரணம் செய்து சர்க்கரை கூட்டிக் கலந்து கொண்டு வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ளவும். இப்படி ஒரு மண்டலம் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி உஷ்ணம், அடிக்கடி வெள்ளை விழுகிறது, ரெத்தக் கடுப்பு, அஸ்தி சுரம், எரும்பருக்கி, நீர்க் கடுப்பு, மூலக் கிராணி இவை தீரும்.

சுக்குப் பாவினை பண்ணுகிற விபரம்:-

பசுவின் கோமூத்திரம் ஒரு நாள் சாட்டரணைச் சாற்றிலொரு நாள், நாயுருவிச் சாற்றிலொரு நாள், ஆடாதோடைச் சாற்றிலொரு நாள் கொன்றையிலைச் சாற்றிலொரு நாள் தூதுவளைச் சாற்றிலொரு நாள் இந்தப்படி பாவினை பண்ணிக் கொள்ளவும்.

அமுர்த சஞ்சீவி லேகியம்:-

கேளப்பா திரிகடுகு மதுர மோமம் செடியான வாய் விளங்கம் நாக்கு மூலம்
கேளப்பா கற்பூரம் குங்குமப்பூ கிருபையுடன் சீரகந் கோரோசினை கஸ்தூரி
கேளப்பா சாதிக்காய் பத்திரி கிராம்பு செடியாய் வகையொன்று பலந்தானென்று
கேளப்பா மிள வற்பாய்ச் சூரணித்து கிருபையுடன் சொல்லக் குவளத்தின் பூவே.

பூவதனை நிறுவனத்திச் சூரணித்து பூட்டடா சட்சமதாகச் சீனி காலாய்
பூவதனை சேகரித்த சூரணந்தான் புகழு மரித சர்க்கரைக்கு நாயக் கொள்ளாய்

ப்பாவை தனில் கலந்து கொண்டு பதனம் பண்ணு படுப்பாவி மேக சலம் பறந்து போகும்.
ஆவரை லேகியமாய்ச் சொல்லக் கேளு அப்பனே தாளை விழுதுச் சாறு வாங்கே.

வாங்கியே படி நாலு புளிச் சட்டிக்குள் வாரப்பா இளநீரில் படி நாலு
தேங்கியே ரெண்டு மொன்றாய்க் கசாயஞ் செய்யச் செப்புகிறேன் புது விஞ்சி பலந் தாரென்று
ஓங்கியே சிறு புக்கால் பலந்தாரென்று தாங்கியே நன்னாரி பலந் தாரென் சாதக்மாய் ஏலம் பலந் தாரென்றே.

ஒன்றாக யிது வெல்லா மிடித்துப் போட்டு ஒரு படியாய்க் குறுகிய பின் அதிலே கேளு
நன்றாகச் சீனி பலம் நாலு போடு ரச பாகம் வரு நேரம் தன்னிலே தான்
வென்றதொரு அமிர்த சஞ்சீவி தன்னை மேவி யவரைப் படியளந்து அதிலே போடு
கண்டான் ஆவின் நெய் படியால் வாடு கலங்காதே நெயிற் பாதி தேனிற் கொட்டே.

கொட்டிய பின் மெழுகு பதந் தன்னிலே தான் கூஜா பீங்கானில் வடித்து வைப்பாய்
வெட்டினே தேகத்துள் நோய்களெல்லாம் விடையு மிட்டு விடைய மிட்டுச் சோதித்தே தான்
யட்டியாய்ச் சொல்வதிந்த அமிர்த லேகியம் அப்பனே ஆருக்கும் சொல்லவில் உல
மட்டில்லா வயித்தியந்தான் சாஸ்திரமும் சொன்னேன் மார்க்க மில்லா ஸ்திரத்துக் காவ்வா வாரே.

வல்லாரை நெய் :-

வல்லாரைச் சாறு படி.½, பசுவின் பால் படி.½, நெய் படி.க, பருத்திக் கொட்டைப் பால் படி.½ இதில் கற்கம் சுக்கு விராகன்.க, சீரகம் விராகன்.க, சாதிக்காய் விராகன்.க, மிளகு விராகன்.உ, சன்ன லவங்கப் பட்டை விராகன்.உ, அதிமதுரம் விராகன்.க, ஏலம் விராகன்.உ, கிராம்பு விராகன்.க, சாதிபத்திரி விராகன்.½, குங்குமப்பூ விராகன்.¼, கோரோசினை விராகன்.½ கஸ்தூரி பணவிடை.க, முந்திரிப் பழம் விராகன்.க, பேரீச்சம் பழம் விராகன்.உ, சீனி சர்க்கரை விராகன்.உ, பறங்கிப் பட்டை பலம்.க இது வெல்லா மிடித்து வஸ்திர காயம் பண்ணிப் போட்டு பதத்தில் வடிக்கவும். சீனி சர்க்கரையும் பனங் கல்கண்டும் விராகன்.உ, வடித்த பிறகு போட்டுக் கொள்ளவும். அந்தி விடிஞ்சு ஒரு கரண்டி கொள்ளவும். இதனால் தீரும் வியாதி வெள்ளை விழுகிறதும், மேகம்.21-ம் தீரும். பிள்ளை இல்லாதவருக்கு பிள்ளை உண்டாம். இச்சா பத்தியம்.

நேத்திர வியாதிக்கு என்னை :-

செவ்விளநீர் படி.உ, பசுவின் பால் படி.½, நல்லெண்ணை படி.¼, நெய் படி.½, விளக்கெண்ணை படி.¼, பழம் பாசிச் சாறு படி.¼, கரியாந்தகரைச் சாறு படி.¼, மிளகு பலம்.உ இது ஒன்று சேர்த்து மிளகு பொடி பண்ணிப் போட்டு பொங்காமல் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி முழுகவும். நேத்திர வாய்வு, வெள்ளெழுத்து முதலானதும் தீரும். நாற்பது வயதுக்கு மேல் பட்டவருக்கு முழுகிறதுக்கு மணல் பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

பறங்கிப் பட்டைச் சூரணம் :-

பறங்கிப் பட்டை பலம்.16, சித்தரத்தை பலம்.உ, தானிக்காய், சாதிக்காய், கடுக்காய், லவங்கப் பட்டை, சன்ன லவங்கப் பட்டை, சிறுநாகப்பூ, மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், வகைக்கு பலம்.க, கருங் குங்கிலியம், வெள்ளைக் குங்கிலியம், அதிமதுரம், கோஷ்டம், அக்கிலாக் காரம், ஏலம், தாளிச பத்திரி, லவங்கப் பத்திரி, சாதிப் பத்திரி, சீரகம் வகைக்கு பலம்.½, மிளகு, வால் மிளகு, பேரரத்தை, கருஞ்சீரகம் கசகசா வகைக்கு பலம்.க, திப்பிலி பலம்.உ, பிரப்பங் கிழங்கு பலம்.உ, பூவரசம் பிஞ்சு பலம்.உ இது சரி வரக் கூட்டி சிறுக நசுக்கி

இதுக்குச் சாறு வகை சங்கங் குப்பிச் சாறு, கிரந்தி, நாயகம், முசுமுசுக்கை, கஞ்சாங் கோரை, வெள்ளறுகு, கோங்கு புவரசு, அவுரி நாயுருவி, செந்நாயுருவி, தக்காளி மணத்தக்காளி, கரிசலாங் கண்ணி, பொன்னாங்கண்ணி, ஆத்தப் பசரி, ஆடாதோடை, சனிவியிலை, இந்த வகைச் சாற்றில் வகைக்கொரு நாழுறி ஆத்தி ஆத்தி இந்தப்படி சாறெல்லாம் வறி ஆறின பிறகு உணர்த்தி இடித்துச் சூரணம் வடி கட்டிச் சர்க்கரை பலம்.25 கூட்டிக் கலந்து வைத்துக் கொண்டு அந்தி சந்தி வெருகடிப் பிரமாணம் கொண்டு வரவும். இதுக்குத் தீரும் வியாதி அக்கரணம், பறங்கிரணம், கிரந்திரணம், சூலை ரணம், சூளி விழுந்த ரணம், மேகரணம், கால் கைப் பிடிப்பு, முடக்கம், வெரி சூலை, முக்கிலானி வாயிலானி முக்கு யிடிவு யிசிப்பு 18 கிரந்தி 18, வலி சூலை, குதிரைச் சூலை, சூலைக் குட்டு, சூலைக் கழல், சூலை லிங்கம், சூலை இழுப்பு, பக்க சூலை, பரிமை சூலை, பக்க இழுப்பு, நரம்பு இழுப்பு, வங்கு சூலை, யிசிவு சூலை, கிரி சூலை, மேகம்.24, உஷ்ணம், சாமண்டி சூலை இவை யெல்லாம் ஒரு மண்டலம் அரை மண்டலம் பார்த்துச் சாப்பிடச் சகல வியாதியும் குன்மமுந் தீரும். பத்தியம் காக்கவும். (. ஏடு இல்லை

<u>மண்டூர வடகம்:-</u> 17.12.63.

தாணிக் கரி உலையிலிட்டு அதி ஆயிரம் வருஷம் சென்ற இட்டத்தைக் காய்ச்சிக் கோமூத்திரத்தில் முப்பத்திரண்டு தரம் தோய்க்கச் சுத்தியாம். பின்பு ஆளையாட்டி இடித்துப் பசுவின் மோரிலே ஊறப் போட்டு எடுத்துக் கொடிவேலி சீமையிலை, பலாசிலை, நொச்சியிலை, பிரண்டை, கரந்தை கருவேப்பிலை, சாறணை சங்கம் பட்டை, கள்ளி, முளையான மாதளம் பழம் வகைக்கு பலம்.உ, இடித்துத் தயிரில் கலந்து கெசபுடம் வைத்து எடுத்து வேப்பம் பட்டை, சீந்தில் பேய்ப்புடல், கோரைக் கிழங்கு, கண்டங் கத்திரி இவை ஐந்தும் பல மிடித்து ஒரு பானையில் போட்டு பதக்குத் தண்ணீர் வார்த்து மண்டூரத்தை காளாந்திரமாகக் கட்டி சட்டி கொண்டு மூடி ரெண்டு நாழிகை எரியிட்டு எடுக்கச் சுத்தியாம். இனிக் கற்கம் நல்ல சீரகம் பலம்.10, மிளகு பலம்.5, திப்பிலி பலம்.5, கடுக்காய் பலம்.20, கல்லுப்பு பலம்.க, இந்துப்பு பலம்.க, பொட்டிலுப்பு பலம்.க, வளையலுப்பு பலம்.க, எவச்சாரம் பலம்.க, வெங்காரம் அதிவிடைய வசம்பு, தேவதாரம், தானிக்காய், வகைக்கு பலம்.க, சுக்கு கூடின பலம்.50, சுத்தி பண்ணின மண்டூரம் பலம்.100 இவை யெல்லாம் அரைக்கிற. வல்லாரை, புளியாரை, நீர்முள்ளி, கரிசலாங் கண்ணி, வாதமடக்கி இஞ்சிப் பழம் பிழிச்சாறு கூட்டி இந்தச் சாற்றிலே மருந்து நேக அரைத்துக் கொட்டைப் பாக்களவு வடகம் பண்ணி உலர்த்தி ஒரு வடகம் அநுபானம் தேனில் கொள்ளப் பயித்திய பாண்டு, வீக்க பாண்டு, சுவாச பாண்டு, பிரமேகம், பயித்திய வாய்வு, காமாலை வயத்தில் கீறிப் பூச்சி மகோதர வாய்வு, பிறங்கால், பிறங்கை அதைப்பு சிறுநீர் ரெத்தம் மஞ்சள் தண்ணீர் சுண்ணாம்புத் தண்ணீர் மோர் போலே இறங்கல் முதலானதுந் தீரும். வாதத்துக்கு கடுக்காய் பொடியும் வெல்லமும் விளக் கெண்ணையும் கூட்டிக் கொள்ளத் தீரும். பயித்தியத்துக்கு கடுக்காய்ப் பொடியும், சர்க்கரையும் நெய்யுங் கூட்டிக் கொள்ளத் தீரும். சிலேற்பனத்துக்கு கடுக்காய்ப் பொடி, திப்பிலியுந் தேனும் கூட்டிக் கொள்ளத் தீரும்.

<u>சவுபாக்கிய சுண்டி:-</u>

சித்தா முட்டி, பேராமுட்டி, நல்ல முள்ளி, கண்டங் கத்திரி, சிறுகாஞ்சொறி வேர், நன்னாரி வேர், சீந்திக் கொடி, அமுக்கிறங் கிழங்கு, நாவல், முக்காவளை ஆயில் பட்டை வகைக்கு பலம்.10, லீதங் கூட்டி இடித்து நாலு வுள்ளத் தண்ணீர் வார்த்து ரெண்டு படியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு பசுவின் பால் படி.உ, சர்க்கரை பலம்.20 போட்டுக் கொதிக்கையில் கற்கம் புரை வாங்கின யிஞ்சி பலம்.100 பாலில் சுத்தி பண்ணி கடலை போலே நறுக்கிப் பாகில் போடவும். சித்திர மூலம் பலம்.க, கடுக்காய் பலம்.க, தான்றிக்காய் பலம்.க, நெல்லி வத்தல் பலம்.க, சதகுப்பை பலம்.க, காயம் பலம்.க, கரிசிலாங் கண்ணிப் பொடி பலம்.உ,

திப்பிலி பலம்.உ, மிளகு பலம்.உ, ஓமம் பலம்.உ, கொத்தமல்லி பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, சீரகம் பலம்.½ இவ்வெல்லாம் வறுத்து இடித்து பாகு பக்குவத்தில் சூரணம் போட்டுக் கிளறி இறக்கித் தேன் படி.க, விட்டுக் கிளறிக் கடுக்காய் மது வாதிக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி குசிகா வாய்வு, குசிகா சன்னி, குசிகா சுரம், குசிகா கிருணி வாய்வு சயித்தியம் அக்கினி மந்தம் இது வெல்லாந் தீரும்.

தாளிச வட்கம்:-

தாளிசபத்திரி பலம்.½, மிளகு பலம்.¼, செவியம் திப்பிலி, லவங்கப் பட்டை சுக்கு, லவங்கம், லவங்கப் பத்திரி, ஏலம், சதகுப்பை, ஓமம், கடுக்காய், நெல்லி வத்தல், தானிக்காய், சிறு நாகப்பூ வகைக்கு பலம்.¼, விலாம்பிச்ச வேர் பலம்.½ ஆக வகை 16-ம் இடித்துச் சூரணம் பண்ணி ஒரு சட்டியிலே ஒரு படி பசுவின் பால் விட்டு அதில் மூன்று விராகனிடை பச்சைப் பயறு முடிந்து போட்டு சட்டி வாய்க்கு வேடு கட்டி சூரணத்தில் சர்க்கரை பலம்.5 கலந்து ஒட்டு மேலே வைத்துச் சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து கமலாக்கினி யெரித்து பால் வத்தின பதத்திலிறக்கித் தாம்பளத்தில் போட்டு பிசைந்து கொண்டு கைக்குப் பசுவின் நெய் தொட்டுக் கொண்டு நேரமும் நேரத்துக்கு ஒரு உருண்டை சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி சயம், சத்தி சுரம், அக்கினி மந்தம், சத்தி அரோசிகம், குன்மம், வறக்காமாலை, சோபை குருப்பை பாண்டு, பாரிச வாய்வு, மயக்கம் தலை நடுக்கல் கிறுணி இருமல் உப்பிசம் இது தீரும்.

அளிஞ்சித் தயிலம்:-

Incomplete

1. கொள்ளவே யின்னமொரு சேதி கேளு கூறன் அளிஞ்சி வேர் கொன்றை வேரும்
 வெள்ளெருக்கம் வேருடனே சித்திர மூலம் வெண் புரசம் வேருடனே சிவனார் வேம்பு
 மெள்ளவே காஞ்சொறி புரசம் வேரும் வெண்நொச்சி வேருடனே வில்வ வேரும்
 கள்ளவே அகிலோடு தேவதாரம் கழறுகின்ற சந்தனமும் கருஞ்சூரை வேரே.
2. வேரான மருதோன்றி சங்கம் வேரும் வேம்பின் வேர் சூரக் கள்ளி வேருங் கூட
 தாரான தேத்தான் வேர் வசம்புமாகும் தான் வகையாய் வெவ்வேறாய்த் தரித் தலத்தி
 சீரான பாலை தனிலிட்டு மூடிச் சிறக்கவே குழித் தயிலம் சிறப்பாய் வாங்கி
 பார் தனிலே வெவ்வேறே தயிலம் வாங்கி புன்னை புங்கம் வேர்த் தயிலம் படி தான் வாங்கே.
3. வாங்கியே வகையொன்றுக் கரைப்படியாம் வீதம் வாகான பாண்டத்திலொன்றாய் (முடிவில்லை)

வெறிப் பயித்தியத்துக்கு:-

வெளிமான் கொம்பு, பன்றிக் கொம்பு நல்லக்கி முலைப்பால் விட்டு ருத்திராட்சமுங் கொம்பும் உரைத்து மூன்று நாள்க் கொடுக்கவும். இதின் பிறகு ஏலரிசியும், நல்ல சீரகமும் எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும். மேலுந் தலைக்கு ஊற்றவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். பின்பு நாகப்பச்சி பலம்.க, கழுதைப் பாலிலரைத்து சர்க்கரை கூட்டி அந்தப் பாலில் கரைத்து மூன்று நாள் கொடுக்கவும். பிறகு அரைப்படி நல்லெண்ணெய் காலமே சரவாங்கமு முழுக்கிப் பிடித்து பொழுது விழ எலுமிச்சம் பழச் சாறு விட்டுச் சீயக்காய் தேய்த்து ஒம்பது குடந் தண்ணீர் விடவும். இப்படி முப்பது நாள் முழுக வார்க்கவும். இது கை கண்டது.

மூர்த்த சர்க்கரை சூரணம்:-

விலாமிச்சம் வேர், அமுக்கிலாம் வேர், இருவேலி வேர், நெருஞ்சி வேர், செப்பு நெருஞ்சி வேர், நன்னாரி வேர், முத்தக்காசு, தாமரை வளையம், இதின் பூ உலர்ந்த ஆவாரை வேர்ப் பட்டிட இதின் பூ இதின் கொழுந்து இதின் விரை அட்டை விரை, அத்தி விரை, பரவை சமன் கூட்டி ஒரு கூறு இதுவுடனே சீரகம் கருஞ்சீரகம்

தாளிச பத்திரி, கோஷ்டம் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், அசமதாகம், யேலம், ரேணுகம், முந்திரிப் பழம், குங்குமப்பூ, நாகப்பூ, சாதிக்காய், சந்தனம், கற்பூரம், அதிமதுரம், கற்கடகசிங்கி இவை சமன் கூட்டி ஒரு கூறு சந்தித் தண்டு மேல் தோலுரித்துப் போட்டு உலர்த்தி யிடித்து சீலை வடி கொண்டு பொடி ஒரு கூறு முன் சொன்ன வேம்பு விரையும் இந்தப்படி சூரணம் பண்ணிக் கடைச் சரக்கு சூரணம் பண்ணி ஆகக் கூறு சரியாகக் கூட்டி இதுக்குச் சமனாய்ச் சர்க்கரை கலந்து வைத்துக் கொண்டு இந்தச் சூரணம் காலை சாயமான பேருக்கு தேனில் வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இளைத்த சரீரத்துக்கு நெய்யிலே அந்தப்படி கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி காமாலை, பாண்டு ரோகம், க்ஷயம், ரத்த பித்தம், கால் கை எரிப்பு பிரமியம், நீர்க் கடுப்பு, உடம்புக் கடுப்பு, இவை யெல்லாந் தீரும். கை கண்டது. பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். கிரந்திப் பண்டங்கள் தவிர்க்கவும்.

காமாலை பாண்டுவுக்கு நெய்த் தயிலம்:-

பல மரைக்கிட்ட மரப்பொடி யல்லவே கழுந்தமே யெலுமிச்சஞ் சாற்றில்
யிலகவே யரைத்து உருட்டியே பின்பு யெருவினில் புடமுமே வைத்துக்
கலவு சூரணஞ் செய் காசெடை தேனிற் கொண்டிடச் சகல பாண்டுவும் போம்
அலகில்லாக் காமாலை அனேகமே யேகும் அரிவையே யிது அரிந்திடுமே.

நெய்த் தயிலம்:-

பசுவின் நெய் படி.உ, கரிசிலாங் கண்ணிச் சாறு படி.உ, முலைப்பால் படி.$\frac{1}{4}$, தேத்தான் விரை விராகன்.3, முலைப் பாலிலரைத்து கூடக் கலந்து காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடிக்கிற போது கலசத்தில் போடுகிற சரக்கு குங்குமப்பூ விராகன்.$1\frac{1}{2}$, கோரோசினை விராகன்.$1\frac{1}{2}$, பச்சைக் கற்பூரம் விராகன்.$1\frac{1}{2}$, புனுகு விராகன்.3/8 இது நாலும் பொடி பண்ணி கலசத்தில் போட்டுத் தயிலம் வடிக்கவும். தயிலம் தலைக்கு தேய்த்துச் சீயக்காய் ஆவது பச்சைப் பயறு ஆவது தேய்த்து வென்னீரில் முழுகவும்.

அஷ்ட குன்மத்துக்கு கொடிவேலிக் குழம்பு:-

கொடிவேலிச் சாறு படி.க, சாறணைச் சாறு படி.க, வேலிப் பருத்திச் சாறு படி.க, இந்த மூன்று வகைச் சாறும் பிழிந்து வடித்துக் கொண்டு ஆறக் காய்ச்சி இதில் கற்கம் கற்கடகசிங்கி, இந்துப்பு, க்ஷாரம் சீனிக்காரம் சவுக்காரம், காந்தம் இது வகைக்கு களஞ்சு.க, சுக்கு பலம்.$\frac{1}{2}$, மிளகு பலம்.$\frac{1}{2}$, வெள்ளுள்ளி பலம்.க இவை யெல்லா மிடித்துச் சூரணம் பண்ணி முன் சொன்ன கஷாயத்தில் போட்டு எரித்துப் பதமான பிறகு இறக்கிக் கொண்டு புன்னைக் காயளவு தேனில்க் கொள்ளத் தீரும் வியாதி குன்ம மெல்லாந் தீரும். சந்தேகமில்லை. கை கண்டது.

கலைக் கொம்பு பற்பம்:-

கலைமான் கொம்பு சுத்தி பொன்னாங்கண்ணிச் சாறு சிறுகீரைச் சாறு, முசுமுசுக்கைச் சாறு, கையாந்தகரைச் சாறு, வெள்ளைச் சாட்டரணைச் சாறு, வேளைச் சாறு பசுவின் பால் ஒவ்வொரு சாற்றில் ஒவ்வொரு நாளூறப் போட்டு அதின் பிறகு சிறுகீரை அரைத்துக் கொம்புக்குப் பசிக் கீழ் மேல் மூடி ஓட்டில் வைத்து கெசபுடம் போடவும். ஆறின் பிறகு எடுத்துக் கரியாந்தகரைச் சாற்றிலரைத்து வில்லை பண்ணி உலர்த்தி ஒரு புடம் போடவும். சிறுகீரைச் சாற்றிலொரு புடம். குமரிச் சாற்றில் மூன்று புடம் போடவும். பொன்னாங்கண்ணிச் சாற்றில் ரெண்டு புடம். முசுமுசுக்கைச் சாற்றில் ஒரு புடம் பசுவின் பாலில் ரெண்டு புடம் அதின் பிறகு பற்பத்தை எடுத்துக் கொடுக்கும் அனுபானம் மதுமேகத்துக்கு ஆவின் நெய் கனமேகத்துக்கு கொத்தமல்லிக் கஷாயத்தில் தயிர் மேகத்துக்கு வெண்ணையில் நீர்க் கட்டுக்கு வெள்ளரி விரை அரைத்து நெருஞ்சி வேர்க் கஷாயத்தில் இந்தப் பற்பங் கூட்டிக் கொள்ளவும்.

<u>அப்பிரக செந்தூரம்:-</u>

1. அப்பிரகமாம் செந்தூரத்தின் மகிமை தன்னை ஆயி அறிவாள் மற்றோர் அறிய மாட்டார்
அப்புறவாம் காய சித்தி காய சித்தி சொல்லுகிறேன் பொன் சிவப்பு கருப்பு வெள்ளை
இப் புவியில் நிறம் நாலு சாதி நாலு யிதிலறிந்து வெகு கருப்பு வியாதிக்காகும்
தப்பாமல் மழலையிலிட்டு சிவக்கக் காய்ச்சி தனியாளின் பாலிலே தோய்த்திடாயே.

2. தோய்த்திடு நீ ரெண்டு விதம் சிறுகீரை தலங்கு பொன்னாங்காணி ரெண்டு தோய்த்த தோய்த்து
மாய்த்திடிக்க மூன்றிலே நாள் மூன்றாறி வர்க்காக வெடுத்து ரவி தனிலுலர்த்தி
சாய்த்திடு நீ புளிப் பைக்குள் மருந்தில் பாதி சரி பாதி நெய் விட்டுத் தோய்த்துக் கையால்
தோய்த்திடு நீ பழங்காடி ஊளி காளிக்குள் தோய்த்து நன்றாய்த் தெளிய வைத்து யறுத்துப் பாரே.

3. இறுத்துப் பார் வெண்ணை யொவ்வா யெருக்கம் பால் விட்டேழு நாள் முறை முறையாய் ஊறித் தீர்ந்து
மசித் தெடுத்துக் கல்வத்திலாட்டிக் கொண்டு மடக்கி விட்டுக் காட்டெருவில் புடத்தைப் போடு
சிவந் தெடுத்துப் புடம் போட்டு கொடி முள்ளங்கி செங்குமரி நாயுருவி கொளிஞ்சி யிஞ்சி
கவத்தம மால்க் கிழங்கு கருணைக் கிழங்கு கடுங்கதலிக் கிழங்கு பொன்னாங்காணி தானே.

4. காணியுடன் சாறணைத்தை மந்தக்காளி கரிப் பிரண்டை நீர் முள்ளி தொட்டைக் கரந்தை
ஊணும் அம்மான் பச்சிலை கச்சந்திருய் யொவ்வொரு சாறு புடமா மூன்று ஒங்க வாங்கி
ஊறுவத்தை அடக்கி அம்மை தனைப் பசித்து அப்பனே ஆல் விழுது கசாயந் தன்னில்
தோணவே யரைத் தெடுத்துப் புடத்தில் போடு சொல்லரிது செந்தூரஞ் சுருக்கத் தானே.

5. தானென்ற செந்தூரம் அனுபானத்தில் தவறாமல் பணவிடை மண்டலந்தான் கொள்ள
தானென்ற அறிவுமுண்டாக்கும் நன்றாக தந்த மெல்லாம் முறுக்கு மேறும்
ஊனென்ற தசை நரம்பு முறுக்கு மேறி ஒளியாங் கண்ணொளியாகும் உண்டாகுமாகும்
தானென்ற வெல்லாமாம் பத்தியமோ யில்லை செல்வ மிக வுண்டாகும் தின்ற பேர்க்கு.

6. தின்ற வர்க்குக் காலனு நிறைஞ்சி நிற்பான் தேன் மொழியாள் அனுபோகந் தினமும் வேண்டும்
பொன்றவர்க்குச் க்ஷய ஜன்மம் குட்டங் குலை பொல்லாத மேகமொடு சகல நோயே
வெந்திடும் பொய்யல்ல நிசமுண்ணும் போது வேகமெழில் கோசலந் தயிர் நெய் சாகத்தில்
ஒன்ற வரைத் தெடுத்துப் புடத்தைப் போடு கோபமில்லை உமையவன் தன் விந்து தானே.

7. தானென்ற பூசையது சொல்லக் கேளு தாரணியில் மெய்ப் பொருளாங் குருத்தைப் பாரு
வேனென்ற மதி தனக்குப் பூசை விதமான வஸ்து சுத்தி விதமாய் வைத்து
கோனென்ற அன்னமுடன் பல் காரங்கள் குறையாத தீபமுடன் தூபமேற்றி
ஏனென்ற மணி யோசை அர்ச்சனையும் இதமாக வாலையைத் தான் ஏற்ற நன்றே.

8. என்றெனவே பூசையது மறந்த சீஷன் யிகத்திலே தோஷமும் வந்து யேறிக் கொள்ளும்
உன்றெனவே விழுமை கொள்ளும் பித்தங் கொள்ளும் உத்த யப்பிற சண்டாள கர்மமாகும்
நன்றெனவே ஓமமுடன் அர்ச்சனையுஞ் செய்ய நலமான தோஷமது இல்லை இல்லை
மன்றெனவே தாயும் எனக்குச் சொன்னாள் மதி பூசை யென்று மருவிப்பாரே.

9. பாரெந்த உடலுக்குள் ரோகமெல்லாம் பறந்து விடும் நரை திரை யுளற்றுப் போகும்
வானென்ற முக காந்தி லெட்சுமியும் வாலை யென்ற தேகமது காந்தி காணும்
ஊனென்ற தேகத்தில் ரோகமற்று உருமாறி உந்தனுக்குக் காணுஞ் சோதி
ஆரென்ற எந்தனுக்கு நந்தியுந் தேவி அருள் கொடுத்தாள் செந்தூரம் அமைந்த வாறே.

10. வாறென்ற வாலையைத் தான் பூசை பண்ணி மருவியே செந்தூரப் படித்திக் கொண்டு
தேனென்ற மண்டலத்தில் ஆவின் நெய்யும் தீர்த்திடவே செந்தூரங் கொள்ள நன்று
மாறெனவே யொன் மனையுங் காய சித்தி மாயை யென்ற வல் வினையும் போகும்
போகும்
ஊறெனவே தேகமதில் உளாற்றலில்லை உமையவள் தன் உடல் விந்து நாதந்தானே.

11. தானென்ற விந்துவைத் தான் செந்தூரம் பண்ண சாற்றுறேன் புலத்தியனே அப்பா கேளு
வானென்ற கும்பமக்குடந்தை வாங்கி வன்மான நவ கோணம் யிட்டு நன்றாய்
கோனென்ற உத்தரீயக் காவி சாத்தி ஓட்டு முன்னே ற்பமிட்டு யிருந்து கொண்டு
தேனென்ற புலத்தியனே தீட்சை வந்தோன் செய்தவனே பூசை யினிச் செப்பக் கேளே.

12. கேளப்பா செந்தூர மார்க மட்டும் கிருபையுட நற்சினையும் பூசை செய்து
ஆளப்பா பூசை விட்டால் செந்தூரமாகா அருமை மெத்த யீளையுட சோபையா
கும்
தாளப்பா பூசித்து செந்தூரம் வாங்கித் தானுண்ணும் அநுபானம் சொல்லக் கேளு
மாளப்பா சித்துளியுங் கார்போகங் கூட்டி வளமாகச் சம பாகம் சூரணமே செய்யே

13. செய்யப்பா வெருகடி தான் யெடுத்துக் கொண்டு திறமான செந்தூரம் பணந்தான்
தாக்கி
வையப்பா தேனோடு நெய்யுங் கூட்டி மண்டலமே உண்டு வர வரிசையாக தச்சுப்-
நய்யப்பா ரோக மெத்தனையோ அரியேன் நாட்டிலுள்ள ரோகமது நடுங்கிப் போகுட
உய்யப்பா இதின் பெருமை சித்தர் காரீர் உமையவள் தானின் றெடுத்த நாதமாமே

14. ஆமப்பா புலத்தியனே கற்பஞ் சொல்வோம் ஆருந் தான் சொல்லார்கள் ஆதி
கற்பம்
தாமென்ற கிளி மூக்கள் கிழங்கு வாங்கித் தனிப்படவே சூரணமாய்ச் செய்து கொண்டு
ஆமென்ற அமுரியிலே பணந்தான் தாக்கு உத்தமனே வெருகடி தான் சூரணந்தானப்பா
ஓமென்ற வருஷ மொன்று உண்டு தேறு ஒகோகோ உகங்கள் தனை அரிந்தினே.

மேல் ஏடுகள் இல்லை. மேல் வேறு நூல் சுர சாஸ்திரம்.

Incomplete

சுர சாஸ்திரம்: வாத சுர குண பாடம்:-

1. வாத சுரங் குளிர் நடுக்கல் தலையே சுற்றல் வாய் உலர்த்தல் யிருமலுடன் குடைந்து கூசல்
தாது திகழ் சந்துகள் தோள் பட்டை சென்னி சருவாங்கமும் முளைத்தல்ல லது நோவாம்
போத மல சலஞ் சிறுத்தல் களிதல் மானே பொருந்து மிவை வாத சுரமது நாள்த்
தோஷம்
மீது கழிந் தறிவுணர்ந்தோர் மருந்து செய்தார் விதமாகு மென நடுவா யீசன் சொன்
னார்.

2. நடுக்குந் தியக்கும் பிற் சாய்ந்து நடுக்குந் தலையு மிக நோவாம்
கடுக்குங் கை கால் முரி நிமிருங் கன்னுந் தோளுங் கடுத்திருக்கும்
திடுக்கிட்டு தடுவாய் நீராந் திம்ப வரிய மேற் சுவாசம்
வடுக் கொள் விசியாய் வாய் சுவக்கும் மானே மிடறு புகைந்திடுமே.

3. பிடரிம் புகைந்து நாக்குலரும் மேலாந் தலையை நெரித்தல்தாங்
கடிய நாக்கு நெஞ்சது தான் கனத்தே யிருக்கு மஞ்சனிக்கும்.
முடிய தித்திப்பு உண்டாகும் மோதாய் வாத சுரந் தனக்குப்
படியின் மீதே சிவனுரைத்த படியே தான் மந்திரி பகவான்.

4. வாத சுரத்தின் குணங் கேள்ர் வந்து குளிர்தல் பயப்படுத்தல்
சீத யிடுத்துத் தனுக் கெறிதல் சிவந்த ரோமஞ் சிலில் பேறில்
வாதங் கொண்டு தலை நோவாம் வயறது ளையு மலங் கடுக்கும்
பாத முளைந்து நீர்ப் பகும் பகர்வோங் கை கால் வெதும்பி விடும்.

5. விடாதே கை கால் கீழ் முதுகு பிடித்தே யிறண்டு விலாப்புறமும்
தொடாதே நோவா முடலதுவுந் தொட்டால் புண் போலே நோவுண்டா
மடாதே மிகவு மருண்டுருண்டு மனந்தல் மிகவு முண்டாகு
மெடாதே யன்ன பானத்து யிது தான் என்கிறமென
~~பானமது~~ யிது
சொல்லே.

6. நடுக்கலும் பிதத்தலும் நயந்த கூதல
மிடுப்புடன் சந்துகள் நெற்றி நோதல
மடுத் தடுத்திரு மலண்டாகு மென்று பின்
வருத்த வார் வாதனுஞ் சுரத்தின் வன்மையே.

7. வாத சுரத்தின் குணங் கேளாய் வயிறு பொருமி மலங் கட்டிப்
போர்த ---இமயிர் சிலிர்க்குப் ப நாவுலரு முகங் கருக்கும்
பார்தங் குழைந்த வுடல் வலித்துப் பருக்கத் திமிரித் தந்தின வர்சித்
தாகம் வற்றி உக்கமர்ந் தாக மெடுக்குந் தவருமே.

8. காயமெல்லாம் வலிக்கு மிகக் கனக்கு மெரி வெடுக்குங்
கண்டுதி யுண்டு கடு சுருகி யறப்புலர்ந்து வாய்வொடு மல சலம் விடாது விடில் கருக்கும்
வந்து வந்து குளிரு முகம் மண்டலமுங் கருக்கும் தீயதி பிரண்டாகுந் தீவன முண்டாகா
சிறிது பகல் வெதும்பு மயிர் சிலிர்க்குந் தாகிக்கு மாய வயறது பொருமும் வாத சுர மென்றே
வால் மீசர்தின் குணத்தை வகுத்துச் சொல்வார்.

9. வாத சுரத்தின் குணமதனை வகுத்த வண்ண முரைத்திடவே
சீத சுரமாய் வந்திட்டுச் சிந்தை கலங்கும் மெய் களரும்
பாதந் தன்னில் வருஞ் சுரமும் பணிந்தே யசந்து விடு மெனவே
பேதித் துலகுதனைப் படைக்கும் பெரிய முனிவர் கூறுவார்.

10. கூறும் வாத சுர மதனின் குணமே தென்னில் முகங் கருக்கும்
முடி முதுகு முலர்ந்திருக்கு முடக்ன மிகுந்து தாகிக்கும்
மாறும் மயிர்க் கால் கூச்சிட்டு மலத்தை யிறுக்கும் வாய் கவக்கும்
சீறு மிகுதி யதிதாகந் தின மேல் வச்சை குளிர் நடுக்கல்.

11. நடுக்கு மயக்கு முரி நிமிடு நலமாய்க் காய்ந்தி மிநாந்து நொந்து
பட மேல் முட்டுத் தடை கடுக்கும் பானி சிவந்து யசந்த வரும்
டைல் சேர் வயது மொழு மொலென்று கூப்பிட்டே மலங் கருக்கும்
மடமா மயிலே யிருமவண்டாம் வாத சுரத்தின் மருந்தை கேளே.

12. நிந்த முத்த நில வேம் நிகரா மல்லி பேராமல்லி
சித்தர் சீந்தி விலாமிச்சு சிறிய வழுதலை வேர்க் கொம்பு
அத்தா யிலைகள் சரி கூட்டி அப்பு நாலு படி விட்டு
கொத்தாய்க் காய்ச்சிக் கண்டிட்டுக் கொடுப்பீரின்னங் கேள் மருந்தே.

13. யின்னந் திராய் வேர் முந்திரிகை யிசங்கு கூவளை நன்னாரி
சின்னச் சீந்தி சிறு மூலந் திப்பிலி சுக்குச் செவியமும்
பின்னை நாரம் நாலிலிட்டுப் பெருக்க காய்ச்சிப் படியாவல்
முன்னங் கற்க மேலப் போட்டு மூன்று நாளே குடி சித்தம்.

14. சித்தாமுட்டி பேராமுட்டி சித்திர மூலஞ் செந்தொட்டி
அத்தர் முன்னை பாதிரியும் முத்தக் கூவளை பெருவாகை
முத்தப் பெருங் குமிள் வேர்க் கொம்பு முயங்கு மாவின் பால் விட்டு
யொத்தே விளாவிக் காய்ச்சி யத்தை யுகந்தே நாளை விடு மன்றே.

15. அன்றே யமுத மிளாயிச்சு மரிய மதுர முத்தமொடு கொன்றே கொத்தமல்லியுடன்
குன்று தாங்கி காஞ்சொரி பொன்முப் படாகம் நிலவேம்பு புனலில் காச்சி
சன்றுயெட்டொன்றுயக் கன்றுயக் கண்டு சர்க்கரையுங் கலந்து கொடுக்கும் வகை கேளே.

16. கேளே மல்லிகை பேராமல்லி கிளர்ந்த அரியு மேரண்டந் ரு
தேளே சுக்கு வாய் விளங்கஞ் செல்லும் வகை தானிரு களஞ்சு

காளாய்க் கமந்த நால விட்டுக் காய்ச்சிக் கூற் படியானதற்
பின் ருளே குடிக்க வரிசியத பொரிச்சுக் காச்சில் நன்ருச்சே.

17. சேவகன் புடு செந்தொட்டி சிறிய தேக்கு வேர்க் கொம்பு
சீவச் சீந்தி திரிமூலஞ் சிவதை முத்தம் ரோகணியும்
மீவாய் வகைக்கு யிரு கள்ஞ்சு யிலங்கு முத்தம் நால விட்டு
தீய் தகனெரித்த வுள்க்காக்சித் திப்பிலி யிட்டுக் கொடு நன்றே.

18. நன்ருய் முத்தம் நன்னாரி நல்ல வசுத உல வல்லரை
பொன்ருச் சந்தி சித்தா முட்டி புகல் காஞ்சொரி வேர்க் கொம்பு
யின்றே வகைக்கு யிரு கள்ஞ்சு யிலங்கு முதக நால விட்டு
யொன்றய்க் காய்ச்சி யுள்க்கா யுன்றும் படி நாள் மூன்மே.

19. ஆடாதோடை நிம்பல குமரிய முந்திரி காஞ்சோரி
நீடுந் திரிபலை (மேல் எசய ஏடு யில்லை)

Incomplete

<u>பித்த சுர குணம்:-</u>

33. வத்தி மேல் வெதுத்தப் பித்தம் மயக்கிடுஞ் சோபமாகும்
பத்திய் தலை நோவுண்டாம் பகலடலிரவு காயும்
முத்திய நற்ற தென்ன மொப்புடன் அளமே வற்றும்
முத்த தோரனை வெருப்பு முள்ளத்தில் பித்த காச்சல்.

34. பித்தத்தில் வெதுப்பி பத்திற் பெருத்திருங் குளிர்ச்சி தாகம்
மொத்தடன் இளிச்சல் வாந்தி யுடம்பெலாம் வீக்கமாகும்
முத்த நற் சுரங்கள் நீர்கள் முதலிவை யனேக முண்டாம்
கைத்தறிற் பித்தம் வந்த காய்ந்த மேவட்டக் காலே.

35. தாகமும் வீக்கமும் தந்த நித்திரை வாருடன் வளிமும் வாந்தி பண்ணிடும்
மீருடன் வாயுலர்ந்திருக்கு மென்னவே ஆறு மப்படி தன்மந்திரி யறைகுவார்.

36. பித்த சுரத்தின் குணங் கேளாய் பிதற்றம் வெருவாய் நித்திரை போம்
முத்த மலம் போம் பொய் மிக்வே யுரைக்குஞ் சி நீர் சிவந்த விழும்
சித்தி யெடுக்கு மூர்ச்சை வரும் தாக மெடுக்க முடல் வறட்சி
மெத்த வெடுக்கும் பல்க் கடிக்கும் விக்க லெடுக்கு மறிவீரே.

37. அறிவீரோ பித்த சுர மாறற் சேவீர் அதி தாகத்தொடு நாவு மடிக்கடி தாறுலருஞ்
சிளியார் போல் மதி மயங்கிம் வாய் கசக்கும் பிதற்றுஞ் சிவந்திருக்கும் விக்களுட
விருமல் சிலதுண்டாங்
குறியாத மூர்ச்சை வரும் வாந்தி பண்ணும் வெருவுங் குதித் தோடும் சந்தர்ப்பம்
சொள்ளை கொள்ளுந்
தறி போல வெளுந்திருக்கு தங்கிருக்கு முடன் படுக்கும் தனித் தனியே வேற்று மிக
மலந் தள்ளி விடுந் தானே.

38. பித்த சுரங் கஞ்சி தண்ணீர் வெறுத்தல் வார்த்தை பிதத்தல் அண்ட மூடு வாதல் தாகர்
தாப
மெத்த வளரிக்கையுடன் மூர்ச்சை நாக்கு மிக வுலர்தல் மிக்கக் காய்தல் கசப்புத்
தோன்றல்
சித்த முறக் குளிர்ச்சியே விரும்பல் மஞ்சள் செய்கை யென வரோசித்தல் நகக்
கண் காந்த
லித்தனையுஞ் செய்யில பித்தமாகும் மேலா நாள் மருந்தெனப் பின் தோன்றச்
சொல்வோம்.

39. பித்த சுரத்தின் குணங் கேளீர் பிதற்றம் வெதுப்பு முடலயற்றம்
மெத்தத் தண்ணீர் தான் வேண்டு மிகவு மயரு நாவுலரும்
மொத்த சிறுநீர் மலந் தாகம் மொழி சேர் நயனஞ் சிவப்பாகும்
மெத்தப் பிறமை முகங் கடுக்கு மிடரும் புன்குமிளங் கொடியே.

40. கொடிதா யுள்ளங் கொதிப் பெய்திக் கொண்டதாக மிக மண்டிக்..
கடிதாய் மெய்யுங் கனல் வடி வாயக் கன்றுங் கையுங் கால் தாளும்
வடிவேர் மஞ்சள் நிறமாகும் வாயு நாவுங் கசந்திருக்குந் தடி
அடி போலிடையா யன நடையாய் சொன்னோம் பித்த சுரக் குணமே.

41. ஊற்ற பித்தங் கோபித்தால் உள்ள மழற்றிக் கொதிப் பெய்தி.
நீத்த மேனி மஞ்சளிக்கு நித்தம் வேற்று நீர்ப் பாயும்.
மீத்தலோடு பிதற்றியிடு மெருமே மூர்ச்சை சத்தியதாய்
முத்த வாயுங் கசப்பிருடு திமிற்குந் தலை யென்றுரைதினரே.

42. தலையு முடம்புந் திமிருண்டாந் தன் கை யிரண்டுந் தட்டிச் சிரித்து.
மலைய வெதும்பும் நீர் தேடு மடங்கிக் கிடவாதே யழற்றும்
பலகால் பிதற்றும் படி மீதில் பாரிலுள்ளோர் தனைப் பிணங்குள்
சிலையை பொருவு நுதலாளே தெரிந்தே சொல்வார் வால் மீகர்.

43. பித்த சுரத்தின் குணங் கேளீர் பிறமை பிருந்தி சந்தாபம்
மத்த மல சல மஞ்சள் நீரும் வாந்தி யெடுக்கும் வாயுலரும்
மத்த வேர்வை யுளற்றலும் அதிக தாகம் மதிசாரம்
நித்திரை யில்லை முக மூக்கு நிறமோர் மஞ்சள் மிக மிகுக்கும்.

44. மின்னித் தோன்று முடம் பெங்கும் மேலே குறுந்த பதார்த்தங்கள்
பன்னீர்ச் செம்பு பனி நீரும் பகர்ந்தோம் பூச வேண்டி வரும்
முன்னி யுழற்று முடல் வேற்றும் முகடன முண்டாய் மூர்ச்சை வரும்
பின் ஊனச் சிரசிலிடி யுண்டாம் பித்த சுரத்தின் மருந்தை சொல்வாம்.

45. முத்தக் காசு நிலவேம்பு முதிய சுக்கு யிருவேலி
பத்தம் பட்டாகந்தி ராயுடனே பகர் காஞ்சொறி ரோகணியும்
பெற்ற வகைகள் சரி கட்டிப் பிணங்கும் புனலும் நாலொன்றாய்
வத்தக் காச்சித் தேன் விட்டு வளமாய்க் குடிநீர் வகை தானே.

46. தானே கரும்பு சதாவேரி சந்தனங் கானி நன்னாரி
தேனே தின்னக் சிறு பயற் சீந்தி சுக்கு விலாம்பிச்சு
மானே நரம் நாலொன்றாய் மறுகக் காய்ச்சி வத்திய பின்
தேனே கண்டு சர்க்கரையும் திருந்தக் கலந்திடு தெள்ளமுதே.

47. காணுங் கடுக்காய் ரோகணியும் கன மிளகு கொன்றை வேர்
வேணும் வெப்பால் பெருங் குமிழும் விளங்குந் திப்பிலி முந்திரியுந்
சேணு முத்தம் பற்படாகஞ் சேர்ப்பாய் நாரம் நாலொன்றாய்
பூணுவங் கண்டு சக்கரையும் புகத்தே கொடு நீ யொன்றுநுதலே.

48. நலமி முத்த முந்திரிகை நண்ணிய வாடா தோடை புடோல்
மதனேர் சீந்தி பற்படாக மயனக் கன்னின சலமூலமுடன்
நாரம் நாலி லொன்றாய் திரிகடுகுத் தாளே மேல்த் தாவி மதி மறிநுதல்
மானே ம கூடு மன்ன மத்தங் கசாய வகை கேளே..

49. கேளாய் நெய்தற் கிழங்குடனே கிளை சேர் வெட்டி விலாம்பிச்சு
தாளா முத்த முந்திரிகை தரு முதிர் கூந்தல் நன்னாரி
நாளே இலுப்பை யிருவேலி நல்ல சந்தனம் பற்படாகம்
காளாய் கமந்த நாலொன்றாய்க் கண்டு சுக்கு மேற் பொடியே.

50. யேத்த கொன்றைப் பழத்துடனே யெதிராம் போகணி முந்திரிகை
பெத்த காளைப் பற்படாகம் பேய்ப் புடல் முன்னை கலங் கொம்பு
சேர்த்த மாத்திரை களஞ்சு சேர்ப்பீர் நார மெட்டொன்றாய்
யாற்த்தக் கண்டு மேற் பொடிதான் அளவிலாவி மாதே கொடுப்பீரே.

51. மாதே வட்டத் திருப்பியின் வேர் பழுத்துங் கொன்றை முந்திரிகை
கோதாய்க் கூவிளை ரோகணியுங் கொடிய மிளகு யிந்துப்பு
மீதாய ப்பு நாலிலொன்று மிரு தேன் விட்டு விளாவி யொன்றாய்
போதப் பெருகுங் கஞ்சியது பொருந்தக் கொள்வாய் புனமயிலே.

52. மயிலே கூவிளை சிறு பயறு மலை முட் பேராமுட்டி யதங்
கயல் பொரு சுக்குக் கற்கண்டு கமுந்தம் விட்டுக் காச்சியதை
அயலே யிசைத்த அரிசியிட்டு யனலே யெரித்த ஆற்றியபின்
குயிலே நீ கொடு கொண்டக்கால் கொடிய சுரத்தின் கோபம் போமே.

53. போமே சீந்தி வேர்க் கொம்பு பொருந்த மதுர மிருவேலி
தாமே சந்தஞ் சதாவேரி தவறு முத்தங் கொத்தமல்லி
ஆமே வகைக் கொன்றிரு களஞ்சு அதம் ரெட்டி யனல் வத்தி
நாமே யிசைந்தக் கொண்டக்கால் நடுங்கும் பித்த சுர மன்றே.

54. அன்றே கமலவள்ளியுடன் அதிமதுரம் நன்னாரி
சென்றே செங்கழுநீர்க் கிழங்கு திப்பிலி மூலம் வேர்க் கொம்பு
பொன்று யிலுப்பைப் பவுடனே புகல்வோம் வகைக் கொன்றிரு களஞ்சு
நன்றாய் நாரம் நாழு விட்டு நலமாய்க் காய்ச்சிக் கொடு முத்தே.

55. முத்தக் காசு பற்படாகம் முதிர்ந்த வேலி யிலாம்பிச்சு
அத்த சுக்கு சந்தனம் மூமசுப் முந்திரி யதிமதுரம்
மொத்த வுதக நாழுவிட்டு நிசமாகத் தானுளக்காக்கி
(2, 3 அடிகள் பாட்டில் இல்லை)

56. முத்த களப்பினிய தேனிரண்டு காசிடை தான் கூட்டிற்
சொற் பெரிய பித்த மறுஞ் சொன்னேன் முத்தே.

57. முத்த முடனிதல தினக் கிழங்கு சீந்தி
முந்திரிகைப் பழத்துடன் நன்னாரி வேரும்
பத்த மிருவேலி கெந்தம் பற்படாகம் பன்னிரண்டு காசிடையே பரிந்த கூட்டி
வைத்த யிரு நாழி நீருளக்காய்க் கொள்ள வருத்தி யிடும் பித்த சுரமாறுஞ் சொன்னேன்
பத்தியுடன் கொள்வதற்கே உண்மை யென்று பரம முனி யுரைத்த படி பாராய் சித்தம்.

58. சித்த முட்டி பேய்ப்புடோல் முத்தக் காசு திரிபலை யோடதி மதுரம் பற்படாகம்
வைத்த பனிரெண்டு காசிடையே கூட்டி வருந்தி யிரு நாழி நீரெட்டொன்றுக்கிச்
சுத்த தேன் காசிடையுங் கூட்டிக் கொள்ளச் சொற் பெரிய பித்த சுரம் தோன்றிடாது
முத்த முனியுரைத்தபடி சொன்னேம் கண்டீர் முறை யறிந்து செயிற் சுரங்கள் முறியுங் கண்டாய்.

வேகமும் வய்து தானும் வெவெட்டொரு பத்தாயிரந் தான்
யேகுமா யிருந்து கொண்டு யிரதியைப் பூசை பண்ணே.

31. பூசையை மறந்து விட்டால் பொய்யல்லோ வாச்சதெல்லாம்
பூசையும் யோகம் பார்த்து புகள் பட மூலம் பார்த்து
தேசமே திரிந்து தோறும் திருட்டெல்லா முனிக் கண்டு
வாசமே யிருந்து கொண்டு வாலையைத் துதிக்க நன்று நீ
நீசமாம் ஆதியும் வந்து நிச்சயஞ் சொல்லுவாளே.

32. சொல்லுவாள் வாத வித்தை சூட்சமா யுள்ளே சென்று
வெல்லுவாள் ஞான மார்க்கம் வேதங்கள் மூலந் தன்னை
அல்லுவா ளக்குத் தாய்தான் அரனிட பாகஞ் சேர்ந்தாள்
வெல்லுவாள் வாழ்க்கை தன்னை விரும்பிட மகனும் போமே.

33. போகவே காய் சித்தி பொருந்தவே சொல்லக் கேளு
ஆகவே சுத்தி செய்து அரட்ட வீந்த பாகம்
தாகவே கெந்தகந் தான் தானது சமனாய்க் கூட்டிப்
பாகவே சமனிற் பாதி பரிவொடு தாள மென்றே.

34. என்றெனத் தாள பாகம் தமுற சிலையுங் கூட்டி
உன்டெனச் சீலைக்குப் பாகம் உருக்கிய லிங்கங் கூட்டி
நன்றெனச் செய்நீர் தன்னால் நாள் மூன்று அரைத்து நீயும்
மென்றென முட்ட தன்னை மிகப் பட அரைத்துக் கொள்ளே.

35. கொள்ளப்பா முட்டை தன்னைக் கொடு சீலை யேழு செய்து
யெள்ளப்பா தாளி தன்னில் நால் விரல் மணலையிட்டு
துள்ளப்பா முட்டை தன்னை தகை படப் பதித்துக் கொண்டு
கள்ளப்பா சட்டி மூடிக் கடுகு மண் யேழு செய்யே.

36. செய்து நீ யடுப்பிலேத்தி தேவியைப் பூசை செய்து
நய்யவே மனோன்மணி பானம் நாயகி பதத்தைப் போற்றி
உய்யவே நீர் வானக்கு உகந்துடன் பூசை பண்ணி
சய்யென் அடுப்பில் தீயைக் கடிகை தான் முப்பதென்றே.

37. யென்றென யெரிப்புத் தானும் யெரிபடக் கடிகை பத்து
நன்றெனத் தீபந் தானும் நல்கியே கமலம் பத்தும்
கன்டெனக் காடாக்கினிக் கடிகை தான் புத்து மூன்றல்
உன்டெனச் செந்தூரத்தை உருகபடக் குளிர ஆற்றே.

38. ஆற்றியே யெடுக்கும் போது அஉட்டமா வயிரவன் தான்
தோன்றிய கணேசன் நர்க்கை சுக சண்டி கேசன் காளி
பாத்திய பாத்திரங்கள் பலவகை பூசை செய்து
யேத்திய செந்தூ ரத்தை யுயல்புட னெடுத்துக் கொள்ளே.

39. கொள்ளப்பா செந்தூ ரந்தான் ஒரு குன்றி அனுபானத்தில்
மெள்ளவே மண்டலந் தான் மிகட வருந்தும் போது
தள்ளவே அமுர்த வல்லித் தோல் தனைப் போக்கி நீயும்
கள்ளவே நிழலுலத்திக் கடிய சூரணமே பண்ணே.

40, பண்ணியே அதிலோர் நாழி பரிவுட னெடுத்துக் கொண்டு
யென்னவே குண்டி அசுகம் யித்துடன் கொண்டாயானால்
தன்னவே சட்டை யெல்லாந் தள தளந்துரிந்து போகும்
கன்னவே சித்த னென்பார் கண்டற்கு யிடையே யாவ்வான்.

41. ஆவனே ப்த்தியங்கள் ஆவினெய் பாலதாகும்
தாவெனப் போகம் விட்டுத் தனிக் குகை பார்த்துக் கொண்டு
யெவனே யெமன் தாமும் யேல் தான் தொளிலே செய்வான்
சேவனே யாவான் கண்டாய் சிந்தையும் வேறதாமே.

42. தாமெனும் யிதுவே கொண்டால் தனிப்பட அனுபானத்தில்
போமென வியாதி யெல்லாம் புகழ் படத் தீருங் கண்டாய்
கோமென முனிவர் தாமுங் கொடியதோர் கண்டருக்கு
ஆமென வகுத்துச் சொன்னார் அறிந்து பாருல்த்தோரே.

முற்றும்.

<u>காரீய்ய செந்தூரம்</u>:-

காரீய்யம் வேண்டியது உருக்கி கத்தாழம் வேர்ச் சார் பழச்சார் பழங் காடி கோமியம் நல்லெண்ணை எருக்கம் பழுப்புச் சாறு மோரு, ஒவ்வொன்றில் மூனறு தரம் உருக்கிச் சாய்க்கச் சுத்தியாம். சுத்தியான காரீய்யத்திலே பலம்.5, நாலா காச்சு வெடியுப்பு பலம்.5, தட்டச் சட்டியிலே போட்டு அடுப்பில் வைத்து வேளைச் சார் படி கூட விட்டுக் காடாக்கினியா யெரித்து வறுக்கவும். வெடியுப்பு உருக்குப் பதத்திலே வெந்து ஒரு சாமத்தில் கை விடாமல் இருப்புக் கரண்டியில் வறுக்கப் பற்பம் மஞ்சள் நிறம் போல வாகும். பின்பே ஆவாரம் ஆவாரம் பட்டை பலம்.4, அத்தி வேர்ப் பட்டை பலம்.உ, வெவ்வேறே சிறுகச் சிறுக நறுக்கி மாறி மாறி வறுக்கவும். நாலு சாமம் கை விடாமல் வறுக்க மாதளம் பூ நிறம் காணும். அந்தப் பக்குவத்தில் அடுப்பா விட்டு விக்கினேசுபரனைப் பூசை பண்ணி யெடுத்துக் கொள்ளவும். சீரகச் சூரணமும் சந்தி சர்க்கரையும் சமனாய்க் கலந்து வைத்துக் கொண்டு நெல்லிக்காய்யளவு பசுவின் வெண்ணையில் வெருகடி சூரணமும பணவிடை செந்தூரமுங் கூட்டிக் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி மேகத்தினால் வந்த வியாதி இருபதுந் தீரும். சய்த்துக்கு யிஞ்சிச் சாற்றில் தேன் கூட்டிக் கொடுக்கவும்.

<u>அரப்பொடி</u>:-

1. அரப்பொடி கெந்தி சேராயடவுடன் கல்வத்திட்டு
உறப் பனர் நவிக் கிழங்குச் சாற்றில் புகட்டரை ரெண்டு சாமம்
விரவுடன் காசு போலே வில்லை செய்துலத்தி நன்றாய்
உறவுடன் சட்டியிட்டு உலை மூடி ரெண்டு மூட்டே.

2. மூடியே சீலை செய்து மூத் தீயும் சாமம் ரெண்டு
நாடியே குளிர ஆற்றி நலமுடன் பூசை செய்து
வோடியே திரியாதப்பா மயங்கியே திரிய வேண்டாம்
தேடியே அனுபானத்தில் தீர்ந்திடு மனேக நோயே.

3. ~~வறக் காமாலைக்கு [illegible] தயிலம்~~:-

அரைப் பொடியை அரைத்து பேயன் பழத்தில் வைத்து முழுங்க வறக் காமாலை தீரும்.

<u>நீர்க் குண்டித் தயிலம்</u>:-

நொச்சிச் சாறு பசுவின் பால், நல்லெண்ணை, முருங்கை வேர்ச் சாறு, தழுதாழைச் சாறு, பொன்னாங்காணிச் சாறு, மாவிலிங்கு வேர்..க கசாயம், புளி யிலைச் சூறு, விடத் தேர் சித்தா மணக்கம் வேர்க் கசாயம்,. ஆடாதோடை யிலைச் சாறு சந்திக் கசாயம் கச்சி வேரிலைச் சாறு வேப்பம் பட்டைக் கசாயம் சாறணைச் சாறு கத்தாளைச் சாறு சித்தா முட்டி பேராமுட்டி மருள்க் கிழங்கு, அமுக்கிறக் கசாயம், தண்ணீர் விட்டான் சாறு, செம்முள்ளி யிலைச் சாறு இந்தச் சாறும் சேரக் கசாயமுங் கூட்டி இதற்குக் கற்கம் திரிகடுகு, திரிபலை, முதுக் காசு, ம மனித் தக்காளி விரை, மஞ்சள், மரமஞ்சட்ள, வாய் விளங்கம், கொடிவேலி, திப்பிலி, மூலம், வசம்பு, சாதிக்காய், சாதிப் பத்திரி, விலாம்பிச்சை, சிறு தேக்கு, மந்திட்டி, காட்டாத்திப் பூ, ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, பட்டை, நாகப்பூ கஸ்திரி மஞ்சள், கருஞ்சீரகம், சீரகம், மதுரம், சடாமஞ்சி, அரத்தை, வெந்தயம், கமுகு ரோக்னி, சந்தனம், கோரோசனை, நன்னாரி தகரம் ஒவ்வொன்று நாழிக்கு களஞ்சு கூட்டி அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து உள்ளுங் கொண்டு மேலு மிட்டு நசியம் பண்ணவும்.

இதுக்குத் தீரும் வியாதி ஒரு புறமாறுஞ் சந்து வாதம், சிரோ வாய்வு, விப்புருதி, கபால சூலை, ஒன்பது வகைப் பீனிசமுந் தீரும்.

இதவும் மெகு நீர்க் குண்டித் தயிலம்:-

நொச்சிச் சாறு, வெள்ளாட்டுப் பால், நல்லெண்ணெய், ஒரொருபடி நாழி, திரிகடுகு, திரிபலை, அரத்தை, ~~கஸ்தூரி~~ கஸ்தூரி மஞ்சள், சீரகம், கருஞ்சீரகம், சாறணை வேர், சதகுப்பை, முருங்கை வேர்ப் பட்டை, வாய் விளங்கம், ஏலம், கோட்டம், கடுகு ரோகணி, அமுக்கிறா வேர், தகரம், அதில் கட்டை (அல்லது) செம்புடிளச்சங் கட்டை இவை ஒரொரு நாழிக்குக் களஞ்சு அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துச் சுருவாங் கமு மிட்டு நசியம் பண்ணி மேலும் பிடிப்பிக்கவும். இதற்கு கருத்துக் மேற்பட்ட வியாதி யெல்லாந் தீரும். சுவாச காசம் பீனிசம் ஒன்பதுந் தீரும்.

பூதிகா தயிலம்:-

ஆய்ப்பட்டை தலா.க, கொன்றை வேர் பலம்.உ, சுண்டை வேர். சாறணை வேர் சித்திர மூலம் வேர், என்னடிகு கொள்ளு வேர், சந்திக் கொடி வேர், வேலிப் பருத்தி வேர், சித்த கத்திரி வேர், அவிரி வேர், பொருமி வேர்; காட்டு முருங்கை வேர், நொச்சி வேர், களச்சி வேர், நிலக் கடம்பு வேர், சவுரிக் கொத்து வேர், வெள்ளைக் குன்றி வேர், வட்டக் கிலுகிலுப்பை வேர், நிலப்ப- நிலவாகை வேர், வேளை வேர், முட்டை வேர், சிறுகாஞ்சொறி வேர், செப்பு நெருஞ்சி வேர், சிறு பூளை வேர், அளச வேர், மலைதாங்கி வேர், பேராமுட்டி வேர், வக்கணப் பட்டை, பெருமரப் பட்டை, நிலாவாரை வேர், கண்டங் கத்திரி வேர், ஆவாரை வேர்; முட் கொஞ்சி வேர், மாவிலிங்கம் பட்டை, வெப்பம் பட்டை, முக்குருந்தம் பட்டை, பெருந் தாத்திப் பட்டை, முன்னை வேர், பிரண்டை வேர், ஆகாசக் கெருடன் கிழங்கு, பனங் கோவைக் கிழங்கு, பழுபாகல் கிழங்கு, அப்பக் கோவைக் கிழங்கு, நன்னாரி வேர், எருக்கம் வேர், முக்குறட்டை வேர், சாறணை வேர் இவை யெல்லாம் வகைக்கு ரெண்டு பலமாக இடித்துக் கலத் தண்ணீர் விட்டுக் கசாயம் எட்டி லொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு கையாந்தகரைச் சாறு படி.க, பொன்னாங்காணிச் சாறு படி.க, ஒரிலைத் தாமரைச் சாறு, வாத மடக்கிச் சாறு, நொச்சிச் சாறு கரு நொச்சி சாறு, வேலிப் பருத்திச் சாறு, சாறணைச் சாறு, குப்பை மேனிச் சாறு எருக்கம் பழுப்புச் சாறு, அகத்திப் பூப்புச் சாறு, யிலைக் கள்ளிச் சாறு, முசுமுசுக்கை? முரியிலைச் சாறு, ஆதண்டை யிலைச் சாறு, நீர் மேல் நெருப்புச் சாறு, செருப்படிச் சாறு, கத்தாளம் வேர்ச் சாறு, குன்டு மணி சார யிலைச் சாறு, அமுக்கிராங் கிழங்குச் சாறு மேற்கண்ட யிலைச் சாறு, ஆவாரை சாறு, சித்தாமணக்குச் சாறு இவை வகைக்கு ஒவ்வொரு படி எருக்கம் பால் படி.க, வெள்ளாட்டுப் பால் படி.4, பசுவின் பால் படி.4, வெள்ளாட்டுக் கோமியம் படி.உ, பசுவின் கோமியம் படி.4, எருமைக் கோமியம் படி.4, கழுதைப் பால் படி.க, கருங் கோழி முட்டை தண்ணீர் படி.க, நல்லெண்ணை படி.4, வேப்பெண்ணை படி.4, புன்னெண்ணை படி.4, யிலுப்பெண்ணை படி.4, கடுகெண்ணை படி.உ, இளநீர் படி.உ, வெள்ளை வெங்காயத் தயிலம் படி.உ, சந்தனத் தண்ணீர் படி.உ, அகில் தண்ணீர் படி.உ, தேவதாரத் தண்ணீர் படி.உ, இவை யெல்லாம் ஒன்றாய்க் கலந்து வேடு கட்டி மூன்று நாள் சூரிய புடம் பண்ணி பனிப் புடமும் வைக்கவும். பின்பு விநாயக பூசை பண்ணி அடுப்பில் வைத்து மந்தாக்கினியாக மூன்று விறகு மாம் எரிக்க

இவைக்குக் கண்ட மருந்து திரிகடுகு, திப்பிலி மூலம், கண்டு பாரங்கி, தாளிச பத்திரி, சாதிக்காய், வாய் விளங்கம், சடாமஞ்சி, அதிமதுரம், அக்கிராக் காரம், கோட்டம், அதிவிடையம், மஞ்சள், மரமஞ்சள், லவங்கப் பட்டை; லவங்கப் பத்திரி, தாளிச பத்திரி, சாதிப் பத்திரி, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், குரசாணி ஓமம், கொத்தமல்லி, பெருநாகப்பூ, சிறு நாகப்பூ, சன்னி நாயகம், கடுகு ரோகணி, கடுகு, வெளிச்சப் பிசின், அரத்தை, லவங்கம், தேவதாரம், யேலம், விளாவரிசி, இந்துப்பு, வசம்பு, பாம்புக் கண்டம், மஞ்சிட்டி, நாகமட்டி, செந்சந்தனம் இலுப்பைப் பூ, செவியம், தாமரை வளையம், சதகுப்பை, முத்தக் காசு, பெருங் குரும்பை, அதிவிடையம் வெள்ளி லோத்திரம் முடவாட்டுக் கால் கொட்டிக் கிழங்கு, பெருங் குமிழம் வேர் இவை யெல்லாம் வகைக்கு அரைப் பல மிடித்துச் சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி நீர் சுவறின பின்பு போட்டுக் கடுகு திரளக் காச்சிப் பதத்தில் இறக்கி எண்ணெயைப் புது ரெட்டாகுதல் கம்பிளியாகுதல் பிழிந்து மட்டிப் பால் சாம்பிராணி, பூலாத்திக் கற்பூரம், பச்சைக் கற்பூரம், ஏலம், தாளிச பத்திரி இவை பொடி செய்து போட்டு வாசனை தானிய புடம் அரை மண்டலம் வைத்து பின்பு எடுத்து தலை முழுகி வரத் தலை வியாதி என்னப் பட்டது சகல சன்னியும், செவிடு இவை யெல்லாந் தீரும். முகசில் நிறத்த சல் பீனிசமும், சகல பீனிசமும் தீரும். உள்ளுக்குக் கொள்ளச் சகல வாய்வுந் தீரும்.

லெகுபூதிகா தயிலம்:-

ஆய்ப் பட்டை பலம்.45, முக்குருந்தம் பட்டை பலம்.25, நொச்சி வேர் பலம்.6, வேலிப் பருத்தி வேர் பலம்.3, காட்டு முருங்கைப் பட்டை பலம்.3, முத்து தரத்தி வேர்ப் பேட்டை பலம்.3, வேளை வேர் பலம்.3, சாறணை வேர் பலம்.3, சித்தா மணக்கம் வேர் பலம்.3, சிறு குறிஞ்சா, பெருங் குறிஞ்சா, கண்டங் கத்திரி ஆவாரை, சித்தாமுட்டி, பேராமுட்டி, நாயுருவி, வாதமடக்கி யிவ்வகை வேர் வகைக்கு பலம். ஒரு பலமாக இடித்துப் போட்டுக் கலத் தண்ணீர் வார்த்து யெட்டிலொன்றாய்க் காச்சி நொச்சிச் சாறு உத்தாமணிச் சாறு, வாத மடக்கிச் சாறு, சாறட்டைச் சாறு, கோவைச் சாறு, கையாந்தகரைச் சாறு, பொன்னாங்காணிச் சாறு, முசுமுசுக்கைச் சாறு, சங்கம் வேர்ப் பட்டை சாறு, பெரு மரப் பட்டைச் சாறு இவை வகைக்கு

படி.½, வெள்ளாட்டுக் கோமியம் படி.க, பசுவின் கோமியம் படி.க, எருமைக் கோமியம் படிக, வெள்ளாட்டுப் பால் படி.க, பசுவின் பால் படி.க, இளநீர் படி.க, சந்தனத் தண்ணீர் படி.க, இவை யெல்லாங் கூட்டி மந்தாக்கினியாக மூன்று நாளெரித்து இனிக் கடைச் சரக்கு திரிபலை யதிமதுரம், முத்தக்காசு, தாளிச பத்திரி, நல்ல சந்தனம், தேவதாரம், அகில் இவை வகைக்கு பலம் ஒரு அட்டிடையாகச் சூரணம் பண்ணி எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து சித்திர மூல வேர் பலம்.½, கசாயம் வைத்து ஒரு படி கசாயம் கூட விட்டு நாலு வகை என்ணெயும் நாலு படி கூட விடவும். மூன்று நாள் சூரிய புடம் வைத்துப் பின்பு மந்தாக்கினியாக எரியிட்டு தயிலம் பக்குவமா இறக்கி வடித்துக் கொண்டு வாசனை கட்டிக் கால் மண்டலம் தானிய புடம் வைத்து என்னை படி.க, விட்டு தேய்த்துக் கொள்ளவும். சகல சன்னியும் முக சன்னி பனிசம் இவை யெல்லாந் தீரும்.

6

பிரங்கா மலக தயிலம்:-

கையாந்தகரைச் சாறு படி.க, நெல்லிக்காய்ச் சாறு படி.க, பசுவின் நெய் படி.க, சித்தாமணக்கெண்ணை படி.க, இவை யெல்லாம் ஒரு நாள் சூரிய புடம் வைத்து பின்பு மந்தாக்கினியாக எரியிட்டு கடைச் சரக்கு கடுக்காய் பலம்.½; தானிக்காய் பலம்.½, சாதிக்காய் பலம்.½, கோஷ்டம் பலம்.½, அதிமதுரம் பலம்.½, தாளிச பத்திரி பலம்.½, சிறுநாகப்பூ பலம்.½, சதகுப்பை பலம்.½, மிளகு பலம்.½, திப்பிலி பலம்.½, அதிமதுரம் பலம்.½, நல்ல சந்தனம் பலம்.½, அகில் சந்தனம் பலம்.½, தேவதாரம் பலம்.½ இவை யெல்லாம் சூரணம் பண்ணிக் கடப் போட்டு பதத்தி லிறக்கி பின்பு என்னை வடித்து பச்சைக் கற்பூரம் விராகன்.க, மெழுகு விராகன்.உ, சாம்பிராணி விராகன்.உ, மட்டிப் பால் விராகன்:4 இவை பொடி பண்ணிப் போட்டு வாசனை கட்டி மூன்று நாள் தானிய புடத்தில் வைத்துத் தலைக்குத் தேய்த்து முழுகவும்: கண்ணெரிச்சல் புகைச்சல் கை கால்முத்தி முன்ட வறட்சி இவை யெல்லாந் தீரும்.

நீற் முண்டித் தயிலம்:-

நொச்சி வேர்ப் பட்டை பலம்.10, கருவேலம் பட்டை, வெள் வேலம் பட்டை, இலுப்பை வேர் பட்டை, மாவிலிங்கம் பட்டை, சித்திர மூலம் வேர், திருகு கள்ளி வேர்ப் பட்டை இலைக் கள்ளி வேர்ப் பட்டை, மருக்காரை வேர், நீர் முள்ளி வேர், சாறணை வேர், சங்கம் வேர், முத்தக்காசு, எருமைப் பாச்சான் கொடி, எருக்கம் வேர், நீலி வேர் இவை வகைக்கு ஒரு பலம் நச்சிக்குலத் தண்ணீர் விட்டு எட்டி லொன்றாய்க் காச்சி நொச்சிச் சாறு தூதாளைச் சாறு உத்தா மணிச் சாறு, பொடுதலைச் சாறு, அகத்திச் சாறு, யெருக்கம் பூப்புச் சாறு, நீர் முள்ளிச் சாறு முரி முரியிலைச் சாறு, பாவட்டைச் சாறு, வேப்பிலைச் சாறு, முடக் கொத்தான் சாறு, நெட்டைப் பேய் மிரட்டிச் சாறு இவை வகைக்கு அரைப்படி கூட்டவும்.

கடை மருந்து கருஞ் சீரகம், பெருங்காயம், சுக்கு, வசம்பு, மிளகு, மஞ்சள், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, மரமஞ்சள், தாளிச பத்திரி வகைக்கு ஒவ்வொரு அட்டிடை இடித்துச் சூரணம் பண்ணிக் கடப் போட்டுக் கசாயத்தில் மந்தாக்கினியாக மூன்று நாள் எரியிட்டு நல்லெண்ணெ யொரு படி வேப்பெண்ணை படி.க, நெய் படி.க, சித்தா மணக்கெண்ணை படி.க, விட்டுக் காச்சு தயிலம் பக்குவத்தி லிறக்கி வடித்துக் கொள்ளவும். தலைக்கும் உடம்புக்கும் பிடிக்கவும். சன்னி வாய்வு, வாதம் எனப் பட்டது இவை யெல்லாந் தீரும்.

சூசிகா வாய்வு தயிலம்:-

எருக்கம் பால் நாழி, வெள்ளாட்டுப் பால் நாழி, கோமியம், நொச்சிச் சாறு நாழி, வெலிப் பருத்தி யிலைச் சாறு நாழி, எலுமிச்சம் பழச் சாறு படி.½, திரிகடுகு பலம்.¼, கடுகுரோகணி பலம்.½, வாய் விளங்கம் பலம்.½, ஓமம் பலம்.¼, என்னை படி.உ, இவை யெல்லாங் கூட்டி விட்டு தயிலம் பக்குவத்தி லிறக்கி வடித்துக் கொள்ளவும். உடம்புக்குந் தலைக்கு பிடிப்பிக்கச் சகல சன்னியும் வாய்வுந் தீரும்.

கற்பூர பிறங்காதித் தயிலம்:-

கையாந்தகரைச் சாறு படி.க, வெற்றிலைச் சாறு படி.க, மிளகு பலம்.½, ஓமம் பலம்.½, கடுகு பலம்.½, வெந்தயம் ½, திப்பிலி பலம்.½, திப்பிலி மூலம் பலம்.½, நாகணம் பூலாங் கிழங்கு, கார்போகரிசி, சிறு மூன்னை வரிசி, ஏலரிசி, வாலுளுவை யரிசி, செண்பக மொட்டு வெட்டி வேர், விலாமிச்சம் வேர், கருஞ்சீரகம், நல்ல சீரகம், நல்ல சந்தனம், லவங்கம், சாதிப் பத்திரி, பச்சைக் கற்பூரம், புழுகு கோரோசனை, குங்குமப்பூ இவை சம பாகம் எல்லா மிடித்துச் சூரணம் பண்ணி என்னை படி.உ இவை யெல்லாங் கூட விட்டு வரிக்கன் சட்டியில் விட்டு மூன்று நாள் சூரிய புடம் வைத்துப் பின்பு தலைக்கு நாலு நாளைக் கொருக்க கால்த் தேய்த்து உசிரம் பட்டை யிட்டு முழுகவும். முகக்கடைப்பான் மண்டைக் கரப்பான், பிரந்தி, நீர்ப் பாய்ச்சல்; பீனிசம், வெள்ளைப் பட்டதெல்லாந் தீரும்.

Please refer to copy No 2. for pages 151 to _

<u>பீனிச ரோகத்துக்குத் தயிலம்:-</u>

எள்ளெண்ணெய் நாழி, வெள்ளைச் சாறு நாழி, நொச்சிச் சாறு நாழி, மிளகு, தக்காளிச் சாறு நாழி, கையாந்தகரைச் சாறு நாழி, இவைக்கு கூட்டு மருந்து: அபினி விராகன்.6 பேய்ப்பீர்க்கு சாறு நாழி, கராட்டுப் பால் சமூல், சாதிக்காய், சாதிபத்திரி, தாளிச பத்திரி, அக்கிராக், காரம், சயிந்த லவணம், சத்தி சாரம், யவச்சாரம், குங்குமப்பூ, கஸ்தூரி, கல்நார், வெட்டி வேர், விலாமிச்ச வேர், அகில் கட்டை, சாம்பிராணி இவை சமன் சேர்த்து இடித்துச் சூரணம் போட்டு மிருது பக்குவத்திலிறக்கவும். நசியம் பண்ணவும். தலைக்குத் தேய்க்கவும்.

<u>மண்டை நோவுக்கு:-</u>

சிறுகள் கொழுந்து ஒரு பிடி, இலுப்பைப் புண்ணாக்கு பலம்.3, வங்காளப் பச்சி விராகன்.5, அரிதாரம் விராகன்.5, வெள்ளைப் பாஷாணம் விராகன்.2½, குந்திருக்கம் பலம்.க இது வெல்லாம் பொடிக் மேற்கண்ட தயிலத்தில் காய்ச்சிப் பதத்திலிறக்கவும். தலைக்கிட்டு முழுகவும். (உளசக) எடு இல்லை.

<u>வெருகெண்ணெ:-</u>

வெருகன் கிழங்கு பலம்.40 சித்தா முட்டி வேர் பலம்.5, விடத்தலை காந்தி பலம்.உ, அமுக்கிராம் வேர், சிந்தில் தண்டு, சிறுகாஞ்சொறி வேர், நொச்சி வேர், கண்டங்கத்திரி வேர், வில்வப் பத்திரி வேர், கோரைக் கிழங்கு, பற்படாகம் உத்தாமணி, பேய்ப்புடல் வகை பலம்.க இடித்து முக்குணி காடி விட்டு குடியாகக் காய்ச்சிக் கொண்டு இதில் கடைத் திரவியம் அதிமதுரம், கோஷ்டம், சிறு தேக்கு, அரக்கு, அரத்தை, சுக்கு, சீரகம், வெந்தயம், சிராம்பு, ஏலம், மரமஞ்சள், திரிபாலை, வெட்டி வேர், சந்தனம், நிலவேம்பு, கொத்தமல்லி, வாய் விளங்கம், விலாமிச்ச வேர், ரேணுகம் இவை வகைக்கு மூன்று காசிடை நாழி பசுவின் பாலிலரைத்து கரைத்து நல்லெண்ணெய் படி:4, விட்டு ஒரு நாள் ஊற வைத்து எரித்து மறு நாள் பதத்தில் வடித்து உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூசவும். நாலு நாளைக்கொருக்கால் முழுகவும். இதுக்குத் தீரும் வியாதி அஸ்தி சுரம். பழைய சுரம், அந்திர தேகம் இவையெல்லாந் தீரும்.

<u>(வேறு) தயிலம்:-</u>

சித்தா முட்டி வேர் பலம்.16; அமுக்கிராம் வேர் பலம்.16 இது ரெண்டும் இடித்து பெட்டு வள்ளத் தண்ணீரில் போட்டு ரெண்டு வள்ளமாகக் காய்ச்சி வடி கொண்டு பனிரெண்டு காசு பலத்தில் அரக்கு பலம்,16, நாலு வள்ள தண்ணீர் வார்த்து ஒரு வள்ளமாகக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்; வெருகன் கிழங்கு பலம்.16, நாலு வள்ளம் மோரு விட்டு ஒரு வள்ளமாகக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இவையெல்லாம் கூடக் கலந்து ஒரு வள்ளம் நல்லெண்ணெய் விட்டு தயிர் வடி கட்டின தண்ணீர் நாலு வள்ளம் இத்துடனே கலந்து இதில் கடைத் திரவியம் அமுக்கிராம் வேர், சித்தா முட்டி வேர், சித்தரத்தை, அல்லிக் கிழங்கு, செங்கழுநீர்க் கோஷ்டம், கோரைக் கிழங்கு, நல்ல சந்தனம், செம்புளிச்சான் செரு சதகுப்பை, அரக்கு, மஞ்சிட்டி, அதிமதுரம், விலாமிச்சை வேர், நன்னாரி வேர், சுக்கு, மிளகு, திப்பிலி ஒரொன்று மூன்று காசிடையாக வாங்கி தயிர் நீர் வார்த்து அரைத்து இந்தக் கஷாயத்தில் கலந்து மூன்று நாள்க் காய்ச்சி பதத்தில் வடித்து நாலிய புடத்தில் வைத்து ரெண்டு காசிடை எண்ணெ நாலு காசிடை பசுவின் பால் காய்ச்சினதில் கலந்து உள்ளுக்கு நாலு நாழிகைக்கு மேல் உடம்புக்கு பிடிப்பித்து ஒரு சாமம் ஊற விட்டு பிறகு அடைத்துப் போடவும். எட்டு நாளையில் ரெண்டு தரம் முழுகவும். பலமறிந்து முழுகவும். இதில் தீரும் வியாதி உடம்பு உலர்ச போறது, சுர மெலிப் பட்ட வியாதி எல்லாந் தீரும்.

<u>மேரெண்ணெ:-</u>

வெருகன் கிழங்கு, சித்தாமுட்டி வேர், சிறுகாஞ்சொறி வேர், பெருங்கரந்தை வேர், சீதேவி, செங்கழுநீர் அளி, நொச்சி இவை பேரரொன்று பத்துப் பலம் இடித்து ஒரு முடாவில் போட்டு ஆறு வள்ளத் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடித்து மெழுகு பலம்.க, இடித்து நாலு படி தண்ணீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு முந்தின கஷாயமும் கூட்டிக் கலந்து ரெண்டு படி எண்ணெயும் பத்து மோரும் விட்டு இதில் கற்கம் வெப்பாலை யரிசி, அதிவிடயம், கோரைக் கிழங்கு, அரத்தை, அதிமதுரம், கோஷ்டம், கருவேம்பு, வாய் விளங்கம், மரமஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலி வேர், அமுக்கிராம், லவங்கம், கடுகுரோகணி, கஸ்தூரி மஞ்சள், அகில் சந்தனம், சதகுப்பை, செவ்வல்லிக் கொடி, பச்சிலை, கச்சோலம், நற்கோலம், சிறுதேக்கு, திப்பிலி மூலம், செவியம், ஒரொன்று விராகனிடை ரெண்டு கூட்டி மோரிலரைத்துச் சேரக் கலந்து நாலு நாள் சிறு கொதி விட்டு வேக வைத்து ஐந்தா நாள் வடித்து வைத்துக் கொண்டு உள்ளுக்குக் கொடுத்து மேல் தலை உடம்புக்கும் இடவும். இதுக்குத் தீரும் வியாதி நாலா நாள் மாறல், பதினைந்து நாள் வார சுரம், ஆறு மாதம் ஒரு வருஷம் விடாத சுரம், பழங்காச்சல், அமித சுரம் அசீரண சுரம்; சில் வீக்கம், மாறல், காச்சல், அஸ்தி சுரம் சகலமும் தீரும். இது கை கண்டது.

<u>சிறுத தயிலம்:-</u>

தண்ணீர் படாத மோர் படி.4, எண்ணெ படி.க; விட்டு சித்தா முட்டி வேர்த் தோல் சுக்கு, கோஷ்டம், பொன் மிளகு, மஞ்சள், முசட்டை, அதிமதுரம், இந்துப்பு,

தேவதாரம், நன்னாரி வேர், மாகாளிக் கிழங்கு, சீந்திக் கிழங்கு, பெருங் குரும்பைச் சந்தனம், விலாமிச்சி, தகரம், சிறுகீரை, தீர்கோலம், சாதிக்காய், ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, திப்பிலி மூலம், சாரணை வேர், ஒவ்வொன்று ஒரு காசிடையாக வாங்கி, மோரில்ரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து உடம்புக்கு மட்டுத் தலைக்கு மிட இதில் தீரும் வியாதி விடாச் சுரம், காய்சல், குளிர், காய்சல், சன்னிக் காய்சல், தாப சுரம், பித்த சுரம், வாத விஷ சுரம் இது வெல்லாந்தீரும்.

விப்புருதிக்கு:-

உளவித் தண்டு கொண்டு வந்த இடித்த வெள்ளாட்டின் பாலில் பிசைந்து மூன்று நேரம் கொடுக்கவும். இந்தப் படி சத்தி சாறணைக் கிழங்கு, வெள்ளாட்டின் பாலில் மூன்று நாள் கொடுக்கவும். வெள்ளறுகு சாதம் மூன்று நாள் கொடுக்கவும். இந்தப் படிக்கு பெரிய ஆவிரம் கால் அப்படி, அந்தப் படி வெள்ளாட்டுப் பாலில் மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் மூன்று நாள் இருக்கவும்.

கிரந்தி_எண்ணை:-

வெத்திலை களச்சி யிலை, பிரண்டை, கத்தாளை மடல் விடத்தலை காந்தி, சிறுபீளை, வெள்ளைச் சாறணை, ஈர வெங்காயம், சேப்பு நெருஞ்சி வகைக்கு மொன்றுக்கு சாறு படி ஒன்று விளக்கெண்ணை படி.க, தீ வாயில் வைத்து கல்லைக் கொதியிட்டு பிறகு சுத்தம் தாரிசு காசுக் கட்டி, களிப் பாக்கு பறங்கிப் பட்டை வகைக்கு ஒன்றுக்கு விராகனிடை ஒன்று கூட்டி எண்ணெயில் போட்டு மெழுகு பதமான போது இறக்கி நேரத்துக்கு மூன்று கரண்டி கொடுத்த வயமு கழிய விட்டு மிளகு நீரும், சாதமும் கொடுக்கவும். மற்ற நாள் நேரம் ஒரு கரண்டி ஒரு கட்டிடை அரை மண்டலம் கொடுக்கவும். பத்தியம் காரப்பு, புளிப்புத் தவிர்க்கவும். கிரந்திப் பண்டம் ஆகாது. இதற்கு உடன்னம் பிரமியம், வாய்வு தீரும்.

(வேறு)

கிரந்தி_எண்ணை:-

விளக்கெண்ணை படி.க, மிறகன் கிழங்கு பலம்.½, சீந்தில், மிளகு, கடுகு, வெள்ளுள்ளி ஈருள்ளி வகைக்குபலம்.½, கரு நொச்சிச் சாறு படி.½ இது வெல்லாம் கூட்டி விட்டு மெழுகு பதத்தில் வடித்து விருயக புசை பண்ணி எண்ணெ சாப்பிடவும். எண்ணெயில் அநுபானம் மிளகு நீர் சேர்த்துக் கொள்ளவும். மறுநாள் சகல பிரயோகமும் கட்டிக் கொள்ளவும். இப்படி மூன்று நாள் சாப்பிடவும். ஏழாம் நாள் இந்த எண்ணை தானே தேய்த்து முழுகவும். இதற்குத் தீரும் வியாதி கிரந்தி வேள், பிரமியம், சூலை, மேகத்தில் பிறந்த வியாதி யெல்லாந் தீரும்.

கிரந்தி சூலைக்கு_எண்ணை:-

தழுதாளை, பறமியிலை, ஆடாதோடை இலை, கரு நொச்சி யிலை, சிறிய செருப்படி யிலை, கோழிய வரையிலை, தவசி முருங்கை யிலை, நரைத் தழை எருக்கிலை, சங்கன் குப்பி, கோவையிலை, சிவ்வி யிலை, சிறியிலை, கிரந்தி, நாயகம், முடக் கொத்தானிலை, சிறுகீரை வேர், சிறு தொறட்டி யிலை, வெள்ளைச் சாறணை பொடி தழை, கரிசலாங் கண்ணி, களச்சி யிலை, குளத்திப் பட்டை, பருத்கலாந் தழை, இவை வகை ஒன்றுக்கு சாறு படி.½, ஈர வெங்காயம் படி.க, சிறு கொறட்டைக் கிழங்கு, சீவி பொடி ஒரு பத்து, எருமைச் சந் தழைச் சாறு படி.½ பசுவின் பால் படி.½, இதற்கு கடைத் திரவியம் சுக்கு, கடுகுரோகணி, கருஞ்சீரகம் பலம்.¼, சீரகம் பலம்.½, அரத்தை, சதகுப்பை, வெந்தயம், சடாமஞ்சி, மாசிக்காய், முந்திரிப் பழம், பேரிச்சம் பழம், அதிமதுரம், கிரந்தித் தகரம், காதிக்காய், சாதிப் பத்திரி, மல்லிகை, வாய் விளங்கம், மிளகு வகை ஒன்றுக்கு விராகனிடை.க, கடுக்காய் தானிக்காய்.4, மிறகன் கிழங்கு பலம்.¼, காசுக் கட்டி பலம்.¼, களிப் பாக்கு பலம்.¼ இவை யெல்லா மிடித்து சூர்ணம் பண்ணவும். விளக் கெண்ணை படி.க, இதில் போட்டு எரித்துப் பதத்தில் வடி கட்டி விருயக புசை பண்ணி வைத்துக் கொண்டு மூன்று நாள் சாப்பிடவும். மறு பத்தியம் மூன்று நாள் காக்கவும். இதற்கு தீரும் வியாதி கிரந்தி சூலை வாதம், கரப்பான், சுறவாக்கி வாதம், கிரந்தியில் பிள்ளை பிறந்த செத்தப் போச்சு, வெட்டை மேல் வயதில் வலி, இப்படி மேகத்தில் பிறந்த வியாதி யெல்லாந் தீரும். மறு பத்தியம் பசுவின் பால் உப்பில்லாமல் கூட்டவும். ஏழாம் நாள் அப்பியங்க ஸ்நானம் பண்ணி வறுத்த வரை ஆனம் கூட்டவும். கிரந்திப் பண்டந் தவிர்க்கவும்.

கிரந்திக்கு_சூரியப்_புடத்_தைலம்:-

சாதிக்காய் விராகன்.க, சாதிப் பத்திரி விராகன்.½, கருங் குங்கிலியம் விராகன்.4, கருஞ்சீரகம் விராகன்.4, ஈர வெங்காயம் படி.க, நல்ல களிப் பாக்கு பலம்.க, இந்த மட்டும் ஈர் வெங்காயந் தவிர இடித்து சூர்ணம் பண்ணி வெங்காயம் அரிஞ்சு வறுத்தா த்தின ஆமணக்கெண்ணை படி.க, ஆகாசக் கெருடன் கிழங்கு அரிஞ்சு இதுகளெல்லாம் எண்ணையில் போட்டுச் சூரிய புடம் ஆறு நாள் வைத்து ஏழாம் நாள் ஒன்றுக்கு அடிக்கவும். எட்டு நாளில் ஒருக்கால் பத்து நாளில் ஒருக்கால் ஒன்பது நாளில் ஒருக்கால் பதினஞ்சு நாளில் லொருக்கால். இப்படிச் சாப்பிடவும். அன்றைக்கு உப்புப் புளி தவிர்க்கவும். மறுநாள் கூட்டவும். இப்படி முப்பது நாள் கொடுக்கவும். இதற்கு மேக வெட்டை கிரந்தி பிரமியம் வெள்ளை முதலாய்த் தீரும்.

கிரந்தி சூலை, ஊருத புண்ணுக்கு எண்ணெய்:- 24.12.63.

செங்கத்தாரி வேர், அமுக்கலாம் வேர், முள்ளி வேர், ஆவாரை வேர், சங்கம் வேர், சங்கன் குப்பி, வேர், கண்டங்கத்திரி வேர், கருநொச்சி வேர், கொடிவேலி வேர் இவை வகை ஒன்றுக்கு பலம்.½, கடைத் திரவியம் சூதம், தத்தம், சரு, இந்துப்பு வளையலுப்பு, சதகுப்பை, கடுகுரோகணி, கசகசா, வாய் விளங்கம் ஆக வகை ஒன்றுக்கு பலம்.½, வேர் வகை நிழலிலுலர்த்திச் சூரணம் பண்ணிக் கடைச் சரக்கு நத்தம், தாரிசு, வளையலுப்பு, இந்துப்பு வகைகளைப் பொடி பண்ணி கடைச் சரக்கு வஸ்திர காயம் பண்ணிக் கலந்து ரெண்டு வகையும் வெவ்வேறே வைத்துக் கொண்டு சித்தா மணக்கு, புச்சைக் கொட்டை யத்தின எண்ணெய் படி. ரெண்டு நல்லெண்ணெய் படி ரெண்டு நல்லெண்ணெய் ஒரு கலயம் விளக்கெண்ணெய் ஒரு கலயம், ரெண்டையும் அடுப்பில் வைத்து எரித்து எண்ணெய் நுரை கண்ட வாறே ரெண்டு வகைச் சூரணமும் நாலாகப் பகுந்து நல்லெண்ணெயில் ரெண்டு பங்கு ஆமணக்கெண்ணெயில் ரெண்டு பங்கு போட்டுப் பொங்காமல் கிளறிப் பதத்தில் இறக்கி ஈர வெங்காயம் படி.க, நறுக்கி ரெண்டாய்ப் பகுந்து ரெண்டு கலயத்திலும் போட்டு ரெண்டையும் நாலைந்து நாள் சூரியப் புடம் வைத்து எடுத்துக் கொண்டு வியாதிக்காரன் சவிக்கிழமை அப்பியங்க ஸ்நானம் பண்ணி ஞாயிற்றுக் கிழமை முதல் கொண்டு நல்லெண்ணெய் ஏழு நாள் விளக்கெண்ணெய் ஏழு நாள் 14 நாள் கொள்ளவும். பத்தியம் கார்ப்பு, புளிப்புத் தவிர்க்கவும். பசுவின் பாலும் சோறும் உண்ணவும். இல்லாதவன் வெண்ணும் சாதமும் உண்ணவும். தாம்பூல மாகும் பகையில்லையாகாது. மேலே ரணங் கண்டால் இந்த எண்ணெய் கடுகெடுத்துத் தடவ கொடியில் ரணங் கண்டால் கடுக்காய் உரைத்துத் தடவ நாலுக்கு நாள் எண்ணெய் எரிச்சுக் கொள்ளவும். கிரந்திக்குப்பிளைந்த நாள் சேராத பண்டம் சேர்க்கவும்.

கிரந்தி எண்ணெய்:-

நல்லெண்ணெய் படி.க, கருநொச்சிச் சாறு படி.க, சங்கங் குப்பிச் சாறு படி.க, செங்கத்தாரி வேர்ப் பட்டை, ஆமக்கிலாம் வேர், சங்கம் வேர், சங்கன் குப்பி வேர், நத்தம், அருசி, நெல்லிக்காய்க் கெந்தகம் வகைக்கு விராகனிடை.4 கூட்டி எண்ணெயில் போட்டு எரித்து பதத்தில் வடித்து தின்சரி காசிடை உள்ளுக்கு கொள்ளவும். இதில் தீரும் வியாதி கிரந்தி மேக சூலை தீரும். இச்சா பத்தியம். விளக்கெண்ணெய் விட்டுப் பன்னிரல் மூன்று நாள் சாப்பிட்டு மூன்று நாள் மறு பத்தியம் காக்கவும். ஏழாம் நாள் சகல பிரயோகமுங் கூட்டவும். கிரந்தி சூலை மேகத்தில் பிறந்த வியாதி யெல்லாந் தீரும்.

பறங்கிப் பட்டை ரசாயனம்:-

ஏலம், சீரகம், அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, வாய் விளங்கம், சிற தேக்கு, ஓமம், கருஞ்சீரகம், தாளிச பத்திரி, சன்ன கேசரி, சாதிக்காய், சாதி பத்திரி, லவங்கம், கோஷ்டம், திப்பிலி மூலம், கெந்தகம், கருங் குங்கிலியம், ஆக வகை ஒன்றுக்கு விராகனிடை.உ, பறங்கிப் பட்டை சேர்.உ, அமுக்கிறாம் வேர், சங்கம் வேர், வெள்ளறுகு, சூன்னாத்திப் பட்டை, சிவனார் வேம்பு இந்த வெட்டு மருந் தெல்லாம் உலர்த்தி இடித்து வடி கொண்டு கடைச் சரக்குச் சூரணம் பண்ணி வடி கொண்டு ரெண்டு சூரணமும் கலந்து சர்க்கரை பலம்.5, நெய் படி.¼, தேன் படி.¼, கூட விட்டுப் பிசறிக் கொண்டு விளங்க பூசை பண்ணி அந்தி விடியல் ரெண்டு நேரமும் வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இதற்கு தீரும் வியாதி மேகம்.21, இருமல் கிரந்தி மேகத்தில் பிறந்த வியாதி யெல்லாந் தீரும். பத்தியம் துவரைப் பருப்பு வைத்துக் கொள்ளவும். பசுவின் நெய் முருங்கைக்காய் பிஞ்சி கூட்டவும்.

கெந்தக ரசாயனம்:-

நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்.உ, நெய்யிருக்கிப் பசுவின் பாலில் சாய்க்கவும். ஏழு தரம் சாய்க்கவும். அதின் பிறகு பறங்கிப் பட்டை பலம்.8, பாக்குப் போலே சீவிநு செங்கழுநீர்க் கோஷ்டம் பலம்.உ, கருஞ்சீரகம் பலம்.க, சாதிக்காய் விராகனிடை.உ, சாதிப் பத்திரி விராகனிடை.உ, கோரோசினை விராகனிடை.உ, லம் விராகனிடை.உ, கிராம்பு விராகனிடை.உ, இந்த ஏழு வகை மருந்தும் வேலிப் பருத்திச் சாற்றில்அரைத்து பறங்கிப் பட்டையில் பிசறிப் புட்டு அவிக்கிற வபரம் ஒரு பானையிலே சித்திர மூலம் வேர், சங்கம் வேர், சங்கன் குப்பி வேர், செங்கத்தாரிப் பட்டை, மிளகரணைப் புட்டை, சதிரக் கள்ளி இது சமானம் பண்ணி ஒரு பானையில் போட்டு மருந்து மறையத் தண்ணீர் விட்டு மூன்று சாமம் ஒரு விறகா யெரித்து அந்தப் புட்டை எடுத்து உலத்தி வஸ்திர காயம் பண்ணிக் கெந்தகமும் வஸ்திர காயம் பண்ணிக் கூடக் கலந்து இதற்கு அநுபானம் பருத்த உடம்புக்கு வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ளவும். இளைத்த உடம்புக்கு நெய்யில் கொள்ளவும். அரை மண்டலங் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி கிரந்தி.20, மேகம்.20, அரையாப்பு சூலைக் கட்டு, வாய்ப் பிளவை ரண வயித்திய மெல்லாந் தீரும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். துவரைப் பருப்பு முருங்கைக் காய் பிஞ்சி பசுவின் பால் நெய் வெண்ணெய் கூட்டவும். கடைச் சரக்கு பத்து விராகனிடை திட்டம் கூட்டவும்.

கெந்தக சூரணம்:-

கெந்தகம் பலம்.3, திப்பிலி பலம்.½, நிலையாவாரை பலம்.½, சுணப்பன் விரை பலம்.½, சித்திர மூலம் பலம்.½, ஏலம் பலம்.½ இவை யெல்லா மிடித்து வஸ்திர காயம் பண்ணி அநுபானம் வெந்நீரில் வெருகடி பிரமாணம் ரெண்டு நேரமும் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி கிரந்தி சூலை, குட்டம்; மூல வியாதி கடி விடங்கள் வாய்வு, சிரங்குகள் இவை யெல்லாந் தீரும். காச்சுப்புக் கூட்டவும்.

சிலந்திக்கு:-

சிலந்திக்கு:-

பத்த தேத்தாங் கொட்டை, எருக்கம் பாலிலரைத்துப் போடவும். வாழைத் தோல் சுட்டுப் பொட்டு சுரையோடு சுட்டுப் போடவும்.

அரையாப்புக்குப் பத்து:-

பாகல் நமையும், விசம்பும், வெள்ளியும் அரைத்துக் கட்டவும், இரக்குப் பொட்டலம் விராகரணப் பட்டை, சங்கம் குப்பி வேர்ப் பட்டை, சித்திர மூலம், வேர்ப் பட்டை இது மூன்றும் நருக்கி எல்லாம் கலசத்தில் போட்டு நல்லெண்ணை விட்டு வறுத்துச் சீலையில் பொட்டணம் பிடிக்க ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தரம் பிடிக்கவும். வாங்கிப் போம்.

சூரணம்:-

தாளிச பத்திரி விராகனிடை.க, மிளகு விராகனிடை.உ, சுக்கு விராகன்.3, திப்பிலி விராகன்.4, ஏலம் விராகன்.2½, சீகை நீர் விராகன்.5, சன்ன லவங்கப் பட்டை விராகன்.2½ இந்தப்படி கூட்டிச் சூரணம் பண்ணிச் சர்க்கரை கலந்து தேனில் கொள்ளவும். இதனால் தீரும் வியாதி இருமல் அரோசிகம், மேகம், நெஞ்சு நோவு, பாண்டு சுரம், அதிசாரம், முக வாதம் இதுகள் தீரும்.

அரையாப்பு வீக்கத்துக்கு:-

ரசத்தைச் முறித்த வாழைக்காயைப் பிளந்து அந்த காயிலே தடவிக் கட்டவும். வீக்கம் வாங்கும். சித்திர மூலம் வேர்ப் பட்டை அரைத்துக் கட்டவும். எது வாங்கியிருந் தால் வாங்கிப் போம். நாள்ப் பட்டு இருந்தால் உடைத்து போம்.

*உளருய என்னுள்ள எடு இல்லை.

புக்கக் குட்டுக்கு, பயித்தியக் குட்டுக்கு:-

வேர்ப்பிக்கு, நாய் வேளையிலே உருவிப் போட்டு கழுவும் இடித்த ஒரு படி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

நாய் வேளை சமூலம் இடித்து ஒரும் திப்பிலி, வெள்ளி பொடிப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

உடைன குட்டுக்கு:-

சத்திக் கொழுந்து நல்ல சீரகம் வேர்ப் பட்டை சர்க்கரை பசுவின் வெண்ணை யும் கொடுக்கவும். குப்பை மேனி, ஈர வெங்காயம், விளக்கெண்ணெயில் பொரித்துக் கொடுக்கவும்.

சகல களிச்சலுக்கு சூரணம்:-

அத்திப் பட்டை, ஆவாரை வேர்ப் பட்டை, வேலம் பட்டை, அரிசி விரை, இளநீர்ப் பட்டை, ஆதண்டை வேர்ப் பட்டை, கட்டுக் கொடி வேர், மாவு வேர்ப் பட்டை, நாவல் வேர்ப் பட்டை, நல்ல மாகாளிக் கிழங்கு, பொருமி விரை, சிறுபீளை சமூலம், விஷ்ணு வேர்ப் பட்டை கருவேப்பிலை, ஆடு தின்னாப் பாளை, சமூலம், கொன்னைப் பட்டை, பிரமிபாய் பலம்.¼, மத்த 17-வகையும் வகைக்கு பலம்க, இவை உலத்தி இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு பின்பு கடைச் சர க்குச் சாதிக்காய் லவங்கம் சமுத்திராப் பழம், கொத்தமல்லிகை, வாய் விளங்கம், சாதிலிங்கம் விராகன்.க, சுக்கு, மிளகு, வெந்தயம், நீரடிக்கு சலமடக்கி அரக்கு, காசுக் கட்டி பலம்.க, மற்ற வகை ஒன்றுக்கு விராகனிடை.உ வாங்கி இடித்துச் சூரணம் பண்ணிக் கூடக் கலந்து வாயி குவிந்த சட்டியிலிட்டுப் புளியஞ்சிராய்த் தணல் பண்ணிச் சட்டி யில் போட்டு மருந்து இருக்கிற சட்டியில் மெல்லிய சீலை வேடு கட்டி அந்தத் தீயில் குங்கிலியம் போட்டுக் கவிழ்த்துச் சாணி பூசிப் புகை பிடித்து எடுத்துக் கொண்டு இதற்கு அநுபானம் தேனுவது சர்க்கரை யாவது தயிராவது வெருகடிப் பிரமாணம் ரெண்டு நேரமும் எலுமிச்சங் காய் மிரவாசி தின்று விரவும். சோதினை நேரம் ஒரு தரம் குறையும். பத்தியம் பசுவின் பால், நல்லெண்ணை, புளிக்கு காணப் பருப்பு, வாழைக்காய், வெள்ளாட்டுக் கறி கூட்டிக் கொள்ளவும். தாபமானால் வில்வைக் காய்.20 உரலிலிடித்து ரெண்டு வள்ளு நீர் விட்டு ஒரு வள்ளமாகக் காய்ச்சி வடித்துப் பின்பு அரைப் படி தயிலமாகக் காய்ச்சி எருமைத் தயிரில் மூன்று நாள்க் கொள்ளவும்.

வெகு சலக் கழிச்சலுக்கு:-

சன்டை வித்து, ஆவரை வித்து வேர், மின்டை யோகு, வேலம் பிசின்,
மோரில் குழைத்து முண்டிடக் காவேரி நீரை மரிக்கும்.
ஆவாரை கொண்ட நாவல் அழகிய பூவை யேந்தி
மேவிய மருதந் தோலும் நற் சூரணமும் சேர்த்து
பூவரி குழலாய் தேனில் பொருந்திடக் கொள்வீராகில்
காவேரி நீரும் வத்திக் கடல்களும் சுவறமன்றே.

சலக் கழிச்சலுக்கு:-

ஆவாரை அரிசி ஒரு எலுமிச்சங் காயளவு அரைத்து எருமைத் தயிரும் வெண்ணெயும் குழப்பிக் கொடுக்கவும். அத்திப் பட்டை ஆவாரம் பட்டையும் காயும் பொன் முசுட்டை இவை சமானம் பண்ணி இடித்துக் குணி நீர் விட்டு இரு நாழியாக காய்ச்சி வடித்து உண்ணும் போது சர்க்கரையும் எண்ணெயும் கட்ட உள்ளத் தீரும்.

(வேறு)

வேப்பம் பிசின் விளாம் பிசின், வெள்வேலம் பிசின், ஆவாரம் பிசின், நேத்தாம் கொட்டை இவை கட்டிப் பொடி செய்து ஏழு கஞ்சி புளிச்ச மோரில் கொடுக்கவும்.

அமிர்த சர்க்கரை ரசாயனம்:-

சந்தி முத்தின கொடி முள் கைப் பெருமம் கொண்டு வந்து பட்டை நன்னிச் சிறுக நறுக்கி நல்ல பிடித்தத் தண்ணீர் விட்டுப் பிசைந்து அரி தோந்து போட்டு அந்த தண்ணீரை புறப் பானையிலே சீலை வடி கொண்டால் அடியிலே சக்கு நீர் போலே யிருக்கும். தண்ணீர் தெளியத் தெளிய வடித்துப் போட்டு வெண்மையாக அடியிலே யிருக்கிறதை எடுத்து உலர்த்திப் புதுக் கலசத்தில் வைத்துக் கொள்ளவும். இதுக்குச் சர்க்கரை வாங்கிற அளவு எப்படி என்றால் ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி ஓமம், சீரகம், நாகப்ப, தாமரைத் தாது தாமரை வளையம், கற்பூரம் சந்தனம், செஞ்சந்தனம், கோஷ்டம், நிலப்பனைக் கிழங்கு, ரேணுகம், முந்திரிப் பழம், குக்கிலியும், திரிகடுகு, நெல்லிப் பருப்பு, அதிமதுரம், நெற் பொரிஅமுக்கிலாம் வேர், நீர் வள்ளிக் கிழங்கு, நெருஞ்சிக் காய், கர்கடக சிங்கி, சாதிக்காய், தர்கோலம், இவை சரி கட்டிச் சூரணம் பண்ணிச் சீலை வடி கொண்டு இந்தச் சூரணத்துக்கு இரட்டிப்பு சந்தி மாக் கலந்து இரண்டு விராகனிடை மூன்று விராகனிடை அப்பாலம் சர்க்கரை குறிஞ்சித் தேனுங் கூட்டி ஆள் பலமறிந்து சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி உள் மாந்தை, ரெத்த பித்தம் சுவாசம் நெஞ்சுக் கிறகிறப்பு.20, நீரழிவும் இருபது பிரமியம் மூத்திரக் கிரச்சி கை காலுடம் பொிப்பு இவை யெல்லாந் தீரும்.

கழ்ப் பாண்ட கிருதம்: செந்தூரம்:-

பூசணிக்காய் விரை வாங்கிப் போட்டுத் தகடு தகடாக நறுக்கி உலர்த்தி இடித்துத் சாறு பருத்தி வைத்துக் கொண்டு சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, பச்சிலை மூலம்.¼, அதிவிடையம் பலம்.¼, ஏலம் பலம்.½, லவங்கப் பட்டை பலம்.½, சரகம் பலம்.க, மிளகு பலம்.க, கொத்தமல்லி பலம்.¼, அதிமதுரம் பலம்.¼, கோட்டம் பலம்.¼, சுகைநீர் பலம்.¼, தேவதாரம் பலம்.¼, நிலவேம்பு பலம்.¼ இவை யெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணிப் பழைய சட்டி காய வைத்து பசுவின் நெய் ஒரு படி விட்டு கழ்ப் பாண்ட சூரணம் போட்டுச் சிவக்க வறுத்துப் பின்பே கடைத் திரவிய சூரணம் போட்டுக் கலந்து நன்றாச் சாரித்து வைத்துக் கொண்டு நேரம் ஒன்றுக்கு விராகனிடை கொள்ள இப்படி இரண்டு நேரமும் கொள்ளவும். பத்தியம் துவரைப் பருப்பு, மிளகு நீர் பசுவின் பால், நெய் கூட்டவும். இதற்கு தீரும் வியாதி உடம்பு எரிப்பு, ஆராட்டம் இருமல் உள் மாந்தை, விக்கல், சுவாச காசம், ரத்த பித்தம், ஈளை இளைப்பு, உப்பிசம், சோகை காமாலை, பயித்திய காமாலை பாண்டுரோகம், மூல ரோகம், அக்கரம், உட்காச்சல், சகல மயக்கம், தலைவலி, குன்மம், அத்தி சுரம், பயித்திய வியாதி, தபனம், சகல கிருமிகள் சூலை பிரமியம் ரசம் சித்திரம் இவை யெல்லாந் தீரும்.

இஞ்சி லேகியம்:-

இஞ்சி பலம்.10 அவைத்து ரெண்டு வள்ள நீர் விட்டுரெண்டு படியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு பழைய வெல்லம் பலம்.10, போட்டுக் கரைத்து அடுப்பில் வைத்து சுக்கு பலம்.½, மிளகு ½, திப்பிலி பலம்.க, தெசாவரம் பலம்.½, திப்பிலி மூலம் பலம்.½, கர்கடக சிங்கி பலம்.½, பருத்திக் கொட்டைப் பருப்பு பலம்.¼, சாதிபத்திரி பலம்.1/8, ஏலம் விராகன்.க, கடுகு ரோகணி விராகன்.க, குரோசானி ஓமம் விராகன்.க, ஓமம் விராகன்.3, சதகுப்பை விராகன்.க லவங்கம் விராகன்.க, சீரகம் பலம்.½, லவங்கப் பட்டை பலம்.¼, குங்குமம் விராகன்.க, இவை யெல்லாம் சூரணம் பண்ணி பாகு பதமான போது போட்டுக் கிளறி முன்பு கொதியிட விட்டு இறக்கி ஆற விட்டு பின்பு அரப்படி தேன் விட்டுக் கிளறித் தாளிய புடத்தில் வைத்து எட்டா நாள் எடுத்து தினம் ரெண்டு காசிடை கொள்ளவும். பத்தியம் வாழைக் கச்சல், பிரண்டைத் துவையல் மோர், தயிர் கூட்டவும். இதற்குத் தீரும் வியாதி குன்மம் பதினெட்டு பெரு வயறு கவிசை வெப்புப் பாளை, அரவை கிருணி மூல வாய்வு எண்பத்து நாலு வாதம், உடல் வாதம், விடவாதம், காமாலை பாண்டு, சோபை, அக்கினி மந்தம் பித்த ரோகங்கள், சன்னி, சயித்தியங்கள் மல பெத்தம் ஆமைக்கட்டுகள் இவை தீரும்.

பிறக்காமலகத் தயிலம்:-

எண்ணெய் படி.உ, தயிர் மேல் தண்ணீர் படி.உ, இளநீர் படி.உ, பொன்னங்காணிச் சாறு படி.உ, நெல்லிக்காய்ச் சாறு படி.உ, கையாந்தகரைச் சாறு படி.உ, முசுமுசுக்கைச் சாறு படி.உ, தாழை விழுதச் சாறு படி.உ, தழுதாழை, நொச்சி கசாயம் பண்ணினது படி.உ, செம்புளிச் சார் சீராம், விலாமிச்சம் வேர் கசாயம் பண்ணினது படி.உ, மரமஞ்சள், கோட்டம், அக்கலாக் காரம், அதிமதுரம் ஏலம், திப்பிலி, வாய்விளங்கம் வகைக்கு விராகன்.உ, இது வெல்லாங் கூட்டி எரித்துப் பதத்தில் வடித்து முழுக நேத்திர வாய்வு தலை வலி, பிடரி கனப்பு, கண் வலி, கண்ணெரிச்சல், பனிச்சல் பித்தப் புகைச்சல் இது வெல்லாந் தீரும்.

லகு விடை முட்டித் தயிலம்:-

எட்டிப் பழச் சாறு படி.க, எட்டிப் பட்டைச் சாறு படி.க, எட்டித் தழைச் சாறு படி.க, சித்திர மூலச் சாறு படி.க, வேலிப் பருத்திச் சாறு படி.க, தழு

தழைச் சாறு படி.க, நப்பாலைச் சாறு படி.க, காட்டு முருங்கைப் பட்டைச் சாறு படி.க, ஊமத்தஞ் சாறு படி.க, அமுக்கிராச் சாறு படி.க, எருக்கந் தழைச் சாறு படி.க, எருக்கம் பால் படி.உ, புன்னின் பால் படி. வெள்ளாட்டுப் பால் படி.4, அஞ்சென்னையும் வகைக்கு படி.க, இதில் கடைச் சரக்கு தம்பரூஷ்டகம் பலம்.5¼, கோஷ்டம் பலம்.க, அதிமதுரம் பலம்.க, இந்துப்பு பலம்.க, வலம்புரிக்காய் பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, வெள்ளுள்ளி பலம்.க, ஓமம் பலம்.க, இவை இளவறுப் பாய் வறுத்துச் சூரணம் பண்ணிக் கஷாயமும் எண்ணெயும் விட்டு ஒரு நாள் காச்சவும். பால் விட்டொரு நாள் காச்சவும். எண்ணெய் விட்டொரு நாள் காச்சிய பின்பு சூரணம் போட்டுக் காச்சி மெழுகு பதத்தில் வடித்து விளைக பூசை பண்ணித் தானிய புடத்தில் வைத்து எடுத்து உள்ளுக்கு ஒரு விராகனிடையும் உடம்புக்கு சிரசு மட்டும் தலைக்கு பிடித்து நசியம் பண்ணவும். இதுக்குச் சகல சன்னி யென்னப் பட்டது சகல வாத மென்னப் பட்டது சகல வலிப்பு என்னப் பட்டதுந் தீரும். கைகண்டது.

<u>பீனிசத்துக்கு நெய்:-</u>

புன்னின் நெய் படி.க, ஏலம் பலம்.க, குங்குமப்பூ பலம்.½, சாதிக்காய் விராகன்.4, லவங்கம் விராகன்.உ, கோரோசனை விராகன்.உ, இது வெல்லாம் கட்டி அரைத்து நெய்யில் போட்டு யெரித்து வடித்து யெட்டு நாளைக்கு ரெண்டு தரம் முழுகி வரவும். சீயக்காய் போட்டு முழுகவும். நாசியில் நசியம் பண்ணவும். இந்தப்படி நெய்யால் பண்ணச் சகல பீனிசமுந் தீரும்.

<u>தலை வலி சல தோஷத்துக்குத் திரி:-</u>

சாதிலிங்கம் விராகன்.2½, எலுமிச்சம் பழம்.10, பச்சைக் கற்பூரம் பணவிடை.க, கோரோசனை விராகன்.உ, காயம் விராகன்.4இது வெல்லாம் எலுமிச்சம் பழச் சாற்றி லரைத்து வெள்ளைச் சீலையில் திரட்டித் திரியாக்கி நிழலுலர்த்தி எடுத்துப் புகை பிடிக்கவும். பதினெட்டுப் பீனிசமுந் தீரும்.

<u>வேறு திரி:-</u>

சீரகம், தேத்தாங் கொட்டை, திப்பிலி, மிளகு, சுக்கு, பாரிய மஞ்சள் ஓமம், பரிமளச் சந்தனத்தூள், நேர் நாள் குங்குமப்பூ, நேரிய பச்சிலா பிடிக் கரமே புகையை மூக்கில் கவிட கொருத்திக் காட்டப் பீனிசஞ் சல தோஷங்கள் பிளையாந் தலை நோக்காடு ஊனியாய் வந்த சன்னி அதிர்ந்திடும் நேத்திர ரோகம் மேனியும் வருத்த மன்றி விளங்கிய சுகமுண்டாமே.

<u>நசியம்:-</u>

வெள்ளைச் சாறணை வேர், வசம்பு, சுக்கு, மிளகு இவை சிறு நீரிலரைத்து சிறு நீரில் நசியம் பண்ணவும். தலைவலி, பீனிசம், சன்னி, மந்தார பீனிசம் அப்ப பீனிசம் இவை யெல்லாந் தீரும்.

(வேறு)

பாகலிலை செவ்வியுருவித் தழை, வசம்பு, திப்பிலி சுக்கு, மிளகு, சிறுநீர் விட்டரைத்து நசியம் பண்ணவும். மகிழம் விரை முலைப் பாலில் தேய்த்து நசியம் பண்ணவும். நோவு தீரும்.

(வேறு)

கொடி வேலி வேர் பெரு மருந்து வேர் எலுமிச்சங் காயளவு அரைத்துக் காடியும் நல்லெண்ணெயுங் கலந்து நசியம் பண்ணவும். தலைவலி ஒருத் தலைவலி இது தீரும்.

<u>பழுவரைக்கு மருந்து.</u>

சுக்கு, மிளகு, திப்பிலி, அரத்தை, கண்டங்கத்திரி, சிறுதேக்கு, சடாமஞ்சி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இந்துப்பு, சர்வளை வேர், கண்டங்கத்திரி வேர், சிறுகாஞ்சொறி வேர் இவை சரி சமன் கூட்டி சூரணம் பண்ணித் தேனில் கொள்ளவும் பழுவரை தீரும்.

<u>பித்தத்துக்கு:-</u>

தேத்தாம் பழச் சாறு சீலையிலோட்டிக் காய வைத்து வேண்டிய போது சந்த சீலையைக் கிழித்து வெந்நீரில் கரைத்துக் கொடுக்கப் பித்த வாயாலெடுக்கும். ஒரு படி கடலை தண்ணீரி லூறப் போட்டு வெடியா லெடுத்து வடித்து மூன்று எலுமிச்சம் பழம் பிழிந்து சர்க்கரை போட்டு மூன்று நாள் கொடுக்க வயிற்றாலே போம். ஒருக்காலும் வராது.

<u>சிந்தாமணி லேகியம்:-</u>

கரியாந்தகரைச் சாறு படி.¼, பொடி தழைச் சாறு படி.¼, நிலவாகைச் சாறு படி.¼, நீர்முள்ளிச் சாறு படி.¼, அனிஞ்சிச் சாறு படி.¼, நொச்சிச் சாறு படி.¼, ஆடாதோடைச் சாறு படி.¼, பனியிலைச் சாறு படி.¼, பிறமியிலைச் சாறு படி.¼, முடக் கொத்தான் சாறு படி.¼ காட்டா மணக்குச் சாறு படி.¼, வெதுப்படக்கி படக்கிச் சாறு படி.¼, எலுமிச்சம் பழச் சாறு படி.¼ இதில் கடைச் சரக்கு மிளகு, கொத்தமல்லி, அசமதாகம், சீரகம், கருஞ்சீரகம், அதிமதுரம், கோஷ்டம் சுக்கு, தேசாவரம் ஆக வகை ஒன்றுக்கு விராகனிடை.5, வெள்ளுள்ளி பலம்.க,

காந்தம் விராகன்.3, கிட்டம் பலம்.க, கடுக்காய் பலம்.க, ஏலம் விராகனிடை.5, சாதிக்காய் விராகனிடை.க, கிராம்பு விராகனிடை.உ, லவங்கப் பட்டை பலம்.க, சித்தரத்தை விராகனிடை.5, பேய்ப்புடல் பலம்.உ, நெல்லி முள்ளி பலம்.உ, இது வெல்லா மிடித்து அரைத்து லேகியமாய்க் கிண்டி முன் பலம் சர்க்கரையும் கால் படி தேனுங் கூட விட்டு ரெண்டு நேரமுங் கொட்டைப் பாக்கு மருவாதி தேனில் கொள்ளவும் பித்த பாண்டு, பித்த குன்மம், ஏழு வகைக் காமாலை வறக் காமாலை மஞ்சக் காமாலை, வாத கரப்பான், இவை தீரும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>அகஸ்தியர் குக்குடாதிச் சூரணம்:</u>

சீனப் பாக்கெனுஞ் சிறந்த கருங் கோழியுமன் தானெக்கக் கூட்டுஞ் சமன் கேள்ர் மாவு---யேப் பட்டை யிரு நாலு பலம் பாங்காகவே சீவி, யிட்ட முடனே குப்பிச் சாப்பிச சாறிட்டூறி கட்டாய் நிழலுலத்தியே யெடுத்து நேர் விளங்கவே தான் பழகாத சட்டியினில் பதனமாய் வளமான அரிதாரங் கெந்தகமும் அதின் சாதிலிங்க முடன் பொரி கார முன்றேமம் பூவையே. பெரிதான செய்ய துரிசு ரத்தமு செரிசாதிக்காய்ப் பூ துய்ய தொரு சாரமைந்து தோராமல் மொய் குழவீர் முச்சரகமுடனே முதிருங் குருசானி அச்சீரவின் கடுகு ரோகணியும் மிச்சையுடன் குக்கில் விளவித்தம் கொடுவேலி வேர் தோலும் நற் கருகு வெந்தயமும் நார் மதமும் நற் கோலரிசி வகையாறும். மடல வன மஞ்சும் பெரிய தொரு சோமவுள்ளி பேதையே உரிதான முப்பாலை நாகப்பு முதிருஞ் சிவதையடன் தப்பாமலோர் பலமாய்த் தான் வாங்கி செப்பக் கேள் பட்டையுடன் கூட்டிப் பாங்காகவே யிடித்து பெட்டைக் கருங் கோழி தனைப் பிடித்து வந்து சட்டமுடன் கால் தலை ரோமங் களைந்து குடல் பிடுங்கி மேல் மருந்து சேரவ யிட்டு நூல் கொண்டு தைத்து ஒரு தாளியிலே தக்கோசலங் குமினி அத்தி விடை காணச் சாறு யினையே சுத்த மில்லாச் சித்திர மூலச் சாறு சிறு தும்பை நொச்சி கள்ளி முத்தின நாய் வேளை முதடி தல மித்தனையம் ஒரொன்று சார் நாழி ஒன் படத் தாளியிலே நீர் சார விட்டு நிகழ்த்தக் கேள் பாரதவன் கோனிய பட்டா வேடு கட்டி குக்குடத்தைப் பேனியதின் மேல்ப் பிலத்து வைத்து காமல் சட்டி தனைக் கவுழ்த்துத் தகமல் மண் பூசி வெட்டி ஒரு விறகாம் மேல்லெரித்து இட்டமுடன் நாலேழு நாழியும் நன்ருக வெந்திறக்கி சலமுடன் குக்குடத்தைச் சேர்த் தெடுத்து கோலமுடன் எலும்புதனைப் போக்கி நிழலுலத்தி யிடித்து தலர்ம் புகழ் சூரணத்தைத் தோத்திரமாய் கால மந்தி சந்தி வெருகடியும் நாற்பது நாள் தேனிலிரு மத்தும் புளிப் புகையை மாற்றி விம் பத்தியங் கேள் வெள்ளாடு முயல் மேவு கவுதாரி உள்ளான் சிவக்காடை ஊர்க் குருவி தள்ளாதே திருக்கை சுறுவுடனே வேதளிவுறல யிரையுடன் விரித்து வந்த நெத்திலியும் வெள்ளெலியும் வருத்த துவரைப் பருப்புடனே அ தளங்காய் சுண்டைக்காய் அவரை முருங்கை அதின் பிஞ்சும் கவுரில்லா கீரை சிறுகீரை கிளருஞ் சுரைக் கொழுந்து நேரே கதளி நெரும் பிஞ்சு தேரவே ஆவின் நெய் வார்த் தருந்திவா என்றும் அனல் தீர ஆமணக்கின் மேவிய நெய் என்றும் முழுகி வா ஒவியமே குட்டம் பதினெட்டுஞ் சூலை நடுக்குந் துடைக் கடுப்பு முட்டிய மூக்கு கட்டி விடு சூலை படு தாமரை கள் குசிகா வாயுவடன், கால் தலைகள் மேல் சொறிவு காமாலை சாலவே வெடித்திடு கிரந்திகளும் மேகம் வகையும் தடித்த பவுத்திரப் புண் தாகமுடன் நடுக்கமொடு குன்ம வகை ப்லீகையும் குலைமுட்டி நீராமை வர்ம யௌத் தோன்றும் வயறு வலி நன்மை யில்லா மண்டை யிடி அண்ட வலி மார்பிலெயும் ஆணி வகை கண்ட மிடு பாத வெடி காதடைத்தல் உண்டதிலே மூலம் பிளித் தேப்பமொடு மொடெனவே களியும் வால கிறுணி வகையாகும் சாலவே யீளையிளைப்பு யிருமலுடன் விட்டு வகைகளும் பொலும முடன் ரத்த பித்தம் நீளவே கண்டித்த கெண்டை கவசையுடன் வெப்பு பாவை மிண்டித்த ரோக மெல்லாம் விட்டோடும் தென்டிரையில் குருமுனிவன் சொன்னதொரு குக்குடத்தின் சூரணத்தை நெறமையுடன செய்வீர் நினைந்து. ராமஜெயம்.

<u>காலாக்கினி சூரணம்:-</u>

கல்லுப்பு படி.க, ஓமம் படி.க, வசம்பு பலம்.க, கருகு பலம்.க, காட்டு முருங்கைப் பட்டை பலம்.15, சென்னாயுருவி பலம்.15, கத்தாளஞ் சருகு பலம்.15, ஆய்ப் பட்டை பலம்.15, எருக்கம் வேர் புலம்.15 இவை ஒரு பானையில் முருங்கைப் பட்டை வைத்து உப்பு இடவும். பின்பு எருக்கம் வேர்ப் பட்டை வைத்து ஓம மிடவும். பின்பு கத்தாழஞ் சருகு வைத்து சுக்கு இடவும். பின்பு நாயுருவி வைத்து வசம்பு இடவும். அதின் பேரில் ஆய்ப் பட்டை வைக்கவும். இப்படி முறையாக வைத்துச் சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து முப்பது நாழிகை அவியாமல் எரியவிட்டுச் சித்திரச் சீதளமாய் ஆறவிட்டு எடுத்து இடித்துச் சூரணம் பணி ஒரு நேரம் துட்டிடை தின்று வெந்நீர் குடிக்கவும். இதில் தீரும் வியாதி அஉட்ட குன்மம், உதிர வியாதி, குட்டம் எனப் பட்டது எண்பத்து நாலு வாய்வு சன்னி சயித்தியங்கள் அக்கினி மாந்தியம் உப்பிசங் காமா காமாலைஅருவை இவை தீரும். இச்சா பத்தியம்.

<u>வடவாக்கினிச் சூரணம்:-</u>

அரத்தை, சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், குருசாணி, ஓமம், பெருங்காயம், வெள்ளுள்ளி, கடுரோகணி, தெசாவரம், திப்பிலி மூலம், செவியம், கண்டு பரங்கி, சாதிக்காய், வாய் விளங்கும், ஏலம், சீரகம், சயிந்த லவணம், கடுக்காய், நெல்லி வத்தல், தானிக்காய் இவை சமன் கூட்டி இடித்து வஸ்திர காயம் பண்ணி சூரணத்துக்குச் சரி பங்கு நல்ல வெல்லமாவது பனை வெல்லமாவது கூடக் கலந்து மத்திச் முள்ளிக்காய் மதியாரித் தின்னவும். இதில் தீரும் வியாதி அசரணம் இருமல் இரைப்பு உப்பிசம், கோழை, உள்ச் சுரம், காமாலை பாண்டுவம், அக்கினி மாந்தம், வாய்வு, அரோசிகம் இவை யெல்லாந் தீரும்.

ஏலாதி_சூரணம்:-

ஏலம், அதிமதுரம், இலுப்பைப்பூ, சீரகம், கருஞ்சீரகம், முந்திரிப் பழம், சீந்தி சர்க்கரை, நன்னாரி வேர், சுக்கு, திப்பிலி, மிளகு, நெல்ப் பொரி, கோஷ்டம், நிலப்பனைக் கிழங்கு, அமுக்கிராங் கிழங்கு, கோரைக் கிழங்கு, நெல்லி வத்தல், தாளிச பத்திரி, லவங்கப் பத்திரி, நிலவேம்பு, கொத்தமல்லி, நற்பாலை வேர், பாலிரு கிழங்கு சுகை நர் வெட்டி வேர், விலாமிச்ச வேர், நல்ல சந்தனம், செம்பின்ச்சஞ் செருக்காசல் கஸ்தூரி, குங்குமப்பூ, சடா மஞ்சி, தக்கோலம், வசம்பு, சாதிக்காய், நெருஞ்சி வேர், பூனைக் காலி விரை, நாகேசுரம், இலவம் பிசின் முசுமுசுக்கை, இவை சரி மானங் கூட்டி உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி சரி சர்க்கரை கூட்டிக் கலந்து மூன்று காசிடை தேனில் கொள்ள இதில் தீரும் வியாதி இருமல், உள்ச் சுரம், அஸ்தி சுரம், மகா தாபம் இளிப்ப, மல பெத்தம், சகல வாய்வு, வாந்தி அரோசிகம், வானர் அக்கினி மாந்தியம், உஷ்ண வியாதி, சுவாச காசம் இவை தீரும்.

---------- --

வச்சிர_கிருமிக்_கபாடம்:

சாதிலிங்கம் விராகனிடை.க, எலுமிச்சம் பழச் சாற்றி லூறப் போட்டு வெய்யி லில் வைத்து உலத்தி பின்பு வெங்காரம் விராகனிடை.க, பொரிச்சுக் கொள்ளவம். கடைத் திரவியம் சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், சாதிப் பத்திரி, லவங் கம், குடப் பாலை, விரை நர் முள்ளி, அதிவிடையம், காசுக் கட்டி, புளியம் விரைத் தோடு ஆவாரம் விரை, கருவேலம் பிசின், காட்டிலவம் பிசின் ஓமம், கருஞ்சரகம், நல்ல சீரகம், மாதளம் பிஞ்சு இவை வகைக்கு விராகனிடை.உ, இலை மருந்து விராகனிடை.4 இவை யெல்லாங் குடப் பாலைப் பட்டைச் சாற்றிலரைக்கவும். கோரைக் கிழங்குச் சாற்றில ரக்கவும். மலை தாங்சி வேர்ச் சாத்திலரைக்கவும். வாழைப் பூச் சாற்றிலரைக்கவும். மாதளங் காய்ச சாற்றிலரைக்கவும். தென் ம் பாலைச் சாற்றிலரைக்கவும். கருவேலம் பட்டைச் சாற்றிலரைக்கவும். வறப்பலான் சாற்றிலரைக்கவும். சுக்குச் சாற்றி லரைக்கவும். இந்தப் படி அரைத்துச் சுண்டைக்காய் மருவாதி உருண்டை பண்ணிக் கொள்ளவும். இவைக்கு அநுபானம்:

பசிவெண்டு கழிந்தாலும் இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும். வாய் கொண்டு ஆரோசிகமாய்க் கழிந்தால் தேனில் கொடுக்கவும். ரெத்தத்துக்கு பெரு மரப் பட்டைச் சாற்றில் தயிருங் கூட்டிக் கொடுக்கவும். சுரத்தின் மேல்க் கழிந்தால் தயிர்த் தண்ணீரில் கொடுக்கவும். வெள் ளெடுப்பாய்க் கழிந்தால் சுக்கு, நெல்லிப் பட்டைச் சாற்றில் கொடுக்கவும். மோரில் கொடுக்கவும். பத்தியம் வாழைக் கச் சல் எருமைத் தயிருங் கூட்டிக் கொள்ளவும். இதில் சலக் கழிச்சலும் சகல கிருமியுந் தீரும்.

கெந்தகத்_தயிலம்:-

குப்பை மேனித் தழை, கொடி வேலித் தழை, வேலிப் பருத்தித் தழை, மூன்றும் சாறு பிழிந்து வெள்ளிய துணியில் பிறட்டி காயப் போட்டு கெந்தகம் நுணுக் கிச் காய்ந்த சீலையில் பரப்பித் திரி பண்ணி விளக் கெண்ணெயில் பிறட்டிநெருப்பு பொருத்திக் கையில் பிடித்துக் கொண்டு கீழே பங்கானில் எண்ணை வைத்துக் கொண்டு ஆந்த எண்ணெயை மொண்டு மொண்டு திரியில் வார்க்கத் திரி யெண்ணை அந்தப் பங்கானில் விழும்படி வார்க்கவும். இப்படித் திரி முடியு மட்டும் வார்க் கவும். இந்தத் தயிலம் வெற்றிலையில் பொரி மாவில் கொள்ளவும். மந்தார காசம் தீரும்.

பூதிகா_தயிலம்:-

1. அப்பனே பதிகா தயிலந் தன்னை அடவாகச் சொல்லுகிறேன் மருந்து கேளு யிப்புவியில் ஆயில் தோலெட்டுத் தூக்கி யிதமான புங்கு தூக்கு
   தப்பிலா தண்டை ரெண்டு நொச்சி தாக்கான பாதிரித் தோல் சிறுகாஞ் சொறி
   துப்பறவே காளாத்தி கொன்னை வேருந் தோராத பிரண்டை ஆத்தி வேரே.
2. வேரப்பா விம்மூலம் ரெண்டுங் கூட்டி விதமான யிருமுள்ளி சாறட்டை ரெண்டும்
   பாரப்பா முளகுருனை குப்பை மேனி பாங்கான முண்டலியும் வேளை தானும்
   சேரப்பா நில உகாய் மருக்காரை வேர் சிறப்பான சுக்கரத்தை மரீசங் கூட்டி
   நேரப்பா வகைக் கரைத் தூக்கே ஆக நிறுத்திடித்துக் கல நீரில் கசாயம் போடே.
3. போட்ட பின்பு யெட்டி லொன்று யிறுத்துக் கொண்டு போரானதில தயிலம் பதக்கு விட்டு----கோஷ்டம் சீரம் குக்னி சேர்த்த வளமான கற்கம் வகை வசம்பு ஓமம்
   நாட்டு சிறு நாகப்பூ விளங்கு தேக்கு நலக் களமும் மஞ்சள் பெரு நாகப்பூ
   கூட்டும் வகை கிரந்திகமும் குப்பை சிங்கி ஞாமுடைய சாம்பிராணி பச்சிலையு மாமே.
4. ஆகுமடா தக்கோலம் காயம் பூண்டு அடவான கடுகேலம் யிவைகளெல்லாம்
   பாகமடா வகை வகைக்கு பலந்தானென்று பதறுதே யிடித் தரித்துத் தயிலத் திட்டு

வேக முள்ளி வள்ளியிட்டுப் பதத்தில் வாங்கி விநயகனைப் போற்றி செய்த முருகக் கேசு
பேசுமடா குசிகா வாய்வு சன்னி யிதின் பெருமையினமுந் தான் விரித்துச் சொல்வேன்.

5. சொல்லரிய எண்பத்த நாலு வாதம் தோராத சிரோ வாய்வு கபால சூலை
வல்லிருள் போல் வந்த அய்யம் சன்னி வாய்வு வளர்தெழுந்த கபால பிணிகள் மத்தும்
தென்னுமதி தன் மந்திரி சொன்ன நீதி செயமான புதிகா தயிலந் தன்னை
வல்லவரா விதை பறித்த சொல்வரால் மகத்தான ரோக மெல்லாம் மாறிப் போமே.

<u>சகல சூலை மேகத்துக்குச் செருங் - கொட்டை வடகம்:-</u>

சித்திர மூலம் பெருங்காயம் ஓமம், திப்பிலி, தெசாவரம், சுக்கு, மிளகு, கண்டு பறங்கி, கர்கடக சிங்கி, செவியம், கடுக்காய், தானி காய், நெல்லி வற்றல், ஏலரிசி, லவங்கம், லவங்கப் பத்திரி, முடிவாளம் வேரு அதிவிடயம், பாவட்டை வேர், வேப்பம் வேர், கோரைக் கிழங்கு, புளியம் வேர், அமுக்கிரான் கிழங்கு, ஆவாரம் விரை, வேப்பம் விரை வகைக்கு சமன் சூரணம் ஒரு பங்கு செருங்கொட்டை ரெண்டு பங்கு வெலம் மூன் பங்கு இவை யெல்லா மிடித்து முள்ளிக்காய் மருவாதி பன்னிரெண்டு நேரந் தின்னவும். இதில் தீரும் வியாதி ஆசன கண்டமாலை, ஐந்து வகைச் சூலை, முப்பது வகைக் காசம், ஐந்து வகைச் கடியம், நாலு திர வியாதி நாலு வகை மகோதரம் மூன்று வகைச்கல் லோத்தரம் ஆறு வகை மேக வியாதி இது வெல்லாம் தீரும். கிரந்திப் பண்டம், புளி இது தவிர்க்கவும்.

<u>மூலத்துக்கு வடகம்:-</u>

செவியம் பலம்.க, திப்பிலி பலம்.உ, மிளகு பலம்., சுக்கு பலம்.8, மலைதாங்கி வேர் பலம்.16, கருணைக் கிழங்கு பலம்.31, பனைவெல்லம்.25 போட்டு பாகு காய்ச்சிச் சூரணத்தைப் போட்டுச் கிளறி தானிக்காய் மருவாதி தின்னவும். இதில் மூல மென்னப் பட்டது எல்லாம் தீரும்.

<u>பேய்க் குமட்டிக் குளம்பு:-</u>

பேய்க் குமட்டிச் சாறு விராகனிடை.4, அகத்தியிலைச் சாறு விராகனிடை.உ, நொச்சி யிலைச் சாறு விராகனிடை.க, விளக்கெண்ணை படி.ச, கடுக்காய்ப் பொடி சுத்தியான நேர்வாளம் அரைக்கசு ஏலமிச்சங் காயளவு, சீரகம், கருஞ்சீரகம், வகைக்கு பலம்.¼ இவை கூட்டிக் காய்ச்சி எண்ணை பழைய கலசத்தில் வைத்துக் கொண்டு காலமே ஒரு பணவிடை கொள்ள அகுவை கவுசை மேற் கவுசை கழ்க் கவுசை, வெப்புப் பாவை, உள்மூலம் பிறமூலம் பச்ச வாய்வு இவை யெல்லாந் தீரும். கை கண்டது.

<u>குசிகா வாய்வு சன்னிக்குச் சவுபாக்கிய சுண்டி:-</u>

பென் சுக்கு மரிவர் யிருக்கும் அந்தச் சுக்கு பெரிய பலத்தில்.32, பலமும் நன்றாய்த் தேச்சுப் போட்டு சுண்ணாம்பு தண்ணீரில் ஊறப் போட்டு எடுத்து உலத்திப் பின்பு சீவிப் போட்டுச் சிறுதுச் சிறுக நறுக்கி வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒரு நாளுறப் போட்டு உணர்த்தவும் பின்பு பசுவின் மூத்திரத்தில் ஒரு நாளுறப் போட்டு இந்தப் படி சுத்தி பண்ணிச் சங்கிலைச் சாற்றில் கரு நொச்சிச் சாற்றில் கரிப்பான் சாற்றில் தரத்திப் பழச் சாற்றில் முன் சொன்னபடி தப்பாமல் சுத்தி பண்ணிக் கொண்டு வளர்விலக சூரணம் மலை தாங்கி வேர், வில்வ வேர், சித்திர மூலம் வேர், நஞ்சறுப்டான் வேர் பிறண்ட வேர், கருநொச்சி வேர், சீற்றமை வேர், பெரு மருந்து வேர், எருக்கம் வேர் அமுக்கிரான் கிழங்கு மிளகரணைப் பட்டை, மருள் கிழங்கு, பெருமுள்ளி வேர், கண்டங்கத்திரி வேர், கண்டத் திரவியம், லவங்கம், சித்திர மூலம், சும்பராட்டகம் கொத்தமல்லி, குடிப் பாலை விரை, கண்டு பரங்கி தெசாவரம், திப்பிலி மூலம், தக்கோலம், கோரோசனம், தேவதாரம், சாதிக்காய், அதிமதுரம், தாளிச பத்திரி கருத்த அகில் கட்டை கோஷ்டம், அவினி மருந்து, வெப்பாலை அரிசி, அரேணுகம், சிறு நாகப்பூ, லவங்கப் பட்டை, சடாமஞ்சி இலைப்பம் பூ, நில் அஞ்சனக் கல், கிராஞ்சிலைக் கல், வெள்ளை ஆவைத் திப்பிலி, மராச்சி நிலப்பனைக் கிழங்கு, மைசாட்சு குக்குலம், கஸ்தூரி மஞ்சள், சங்கு பற்பம், லோக பற்பம், சொர்ண பற்பம், இவை வகைக்குச் சின்னப் பலத்தில் பலம்.க, ஆக/ கடைத் திரவியம் சூரணம் பண்ணிக் காட்டு மூலிகை சூரணம் பசுவின் பால் படி.16, சர்க்கரை பலம்.50 தயிர் படி.4, தண்ணீர் படி.4, இவை மூன்றும் கூட்டி விட்டுக் காய்ச்சி சர்க்கரை போட்டுக் பாகு பதமான வாறே முன் வகைச் சூரணத்தையும் சிறுகச் சிறுகப் போட்டுக் கிளறவும். பின்பு பலங் காய் மதியாதி உருண்டை பதினம் பண்ணிக் கொண்டு விநயக பூசை பண்ணி எடுத்துக் கொண்டு அநுபானம் பசுவின் நெய்யில் அல்லது தேனிலாவது கடுக்காய் மரியாதி தின்னவும். பத்தியம் புளித் தவிர்க்கவும். கிரந்திப் பண்டம் தவிர்க்கவும். இதில் தீரும் வியாதி குசிகா வாய்வில் வந்த சன்னி, சுரோணித வாய்வு, யோனி சூலை, கிராணிகள் பாண்டுவம், சோகை, உதிர சூலை குன்மம், சகல கிராணிகள் திரிதோஷக் கிராணிகள் ரெத்த சோகம், மூத்திரக் கிரிச்சிகள் இருபத்தொரு வகை மத்த முண்டான குதக வாய்வில் பிறந்த வியாதிகளெல்லாந் தீரும். நச்சுப்புக் கூட்டவும். வாதம் என்னப் பட்டது சன்னி என்னப் பட்டது பித்தம் என்னப் பட்டது வாய்வு சேற்றுமம் இரைப்பு, உப்பிசம், உழலை பெரும்பாடு இருமல் இளைப்பு, அஸ்தி மெலிவு தாபம் மற்றுமுண்டான வியாதிகளெல்லாந் தீரும்.

<u>ஏரி குன்மத்துக்கு லேகியம்:-</u>

அதிமதுரம், ஏலம், சுக்கு, மிளகு வகைக்கு பலம்.க, பறங்கிப்பட்டை உனத்திச்

சூரணம் பண்ணிது சா ள் படி.க, பசுவின் நெய் படி.க. அதிலே இந்த சூ ள் போட்டு நல்ல வெல்லம் பலம் உ போட்டு மெழுகு பதமாக இறக்கிப் புளிக்காய் மரியாதி தின்னவும். எரி குன்மந் தீரும்.

வயறு கடுப்புக்கு:-

பருத்திப் பிஞ்சு, சாதிக்காய், கிராம்பு, வசுவாசி, அசமதாகம் இது ஐந்தும் ஒரு நிறை முருந்தம் பலம் சரி கூட்டி அரைத்து தேனில் கொள்ளவும். இதில் கடுப்பு ரத்தம் சகலமுந் தீரும்.

அதிசார மெள்ளப் பட்டது கிருணி பெள்ளப்பட்டதுக்கு வடகம்:-

சாதிலிங்கம், நாபி, சாதிக்காய், லவங்கம், குடப்பாலை விரை, நெருஞ்சி முள் அதிவிடையம், காட்டிலவம் பிசின், காட்டாத்திப்பூ இவை சமன் அவினி மருந்து மாதளங்காய் வாழைக் காயிலடை சாதிக்காய் மாடை யிடை அதிவிடையம் விராகனிடை.க சுக்கு மாடையிடை, மிளகு மாடையிடை, திப்பிலி மாடையிடை, ஒருசாலி ஓம மாமையிடை, சமம் விராகனிடை.க, வெள்ளி விராகனிடை.க, காட்டிலவம் பிசின் விராகனிடை.க, இவை யெல்லாங் காயிலடைத்துப் புடமிட்டு எடுத்து வாழைப்பூச் சாறு விட்டு அரைத்து அடையாகத் தட்டிச் சட்டி காய வைத்து வெண்ணெ போட்டு உருக விட்டு மருந்தைப் போட்டு வேக விட்டு எடுத்து அரைத்துத் தேத்தாள் கொட்டையில் பருக்கக் குளிகை பண்ணி உலர்த்தி வைத்துக் கொண்டு அநுபானம் கழ்காய் நெல்லி வறுத்த கசாயத்தில் குளிகையிடவும். வாழைப் பச் சாற்றிலிடவும். உதியம் பட்டை நவ்வல் பட்டை, நெல்லிப் பட்டை, முள்ளிலவம் பிசிபட்டை, கருவேலம் பட்டை ஐந்து வகைக் கசாயத்திலிடவும். சகல கழிச்சலுங் கிருணியுந் தீரும்.

விரோசனத்துக்கு குளிகை:-

சாதிலிங்கம், வெங்காரம், சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு, இந்துப்பு, கல்லுப்பு, திகடை, பெருங்காயம் வாய் விளங்கம், அகமதாகம் இவை சமன் சுத்தி பண்ணின நேர்வாளம் சமபாகம் இந்த இருவகையும் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்துக் குண்டு மணிப் பிரமாணம் குளிகை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு நல்ல வெல்லம் ஒரு காசிடை கூட்டி ஒரு குளிகை இள வெந்நீரில் கொடுக்கவும். வயறு கழியும். நெல்லங் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி புஞ்சு குன்மம், சயரோகம், பாண்டு ரோகம், காமாலை, அக்ரணம், மூல ரோகம் சுவாசகாசம் அருவை மகோதரம், பித்தம் சகல ரோகத்துக்கு சிறு புழு மேச்சலுக்கு கிரக மண்ட ரோகத்துக்கு இவைக் கநுபானம் திரிகடுகு பொடி பண்ணி வெருகடிப் பிரமாணம் ஒரு குளிகை யிஞ்சிச் சாறும் கூட்டி மூன்று நாள் கொடுக்கவும். திமிர் மந்தாக்கினி வெள்ளோக்காளம் இப்படிக் கொத்த வியாதிகளுக்கு வெந்நீராகுதல் வெல்லத்தில் யிஞ்சிச் சாத்திலாகுதல் ஒரு குளிகை யிடவும்.

இப்படி மூன்று நாள் கொடுக்கவும். தி சிறுகீரையில் நேர்வாளம் வேக வைக்கவும்.

பாவிலைக் கடுக்காய்:-

கடுக்காய் நாழி புளிச்சக் காடியிலாறப் போட்டு மூன்று நாளுந்திறிப் போட்டு மறுபடி காடி விட்டு ஊற்றின் பிறகு இறுத்துப் போட்டு இப்படி மூன்றுவரை ஊறப் போட்டு எடுத்துப் பார்த்தால் கடுக்காய் குழப்பாயிருக்கும். பொட்டியும் மூடியும் போலே அமைத்து விரை வாங்கிப் போட்டு வெய்யிலே உலர வைத்து நன்றாய் உலர்ந்த பிறகு கடுக்காயை நிறுத்துப் பார்த்துக் கடுக்காயிடைக்குப் பாதி கல்லுப்பு யிரு நாழி புளிச்ச மோரில் கலைந்து கொண்டு அந்தக் கடுக்காயை ஒரு சட்டியிலிட்டு அடுப்பிலே வைத்து மோர் தெளிச்சு வறுக்க அந்த இரு நாழி மோருஞ் சுவற மட்டும் வறுத்துப் பின்பு எடுத்துக் கொண்டு கற்கம் சுக்கு திப்பிலி, மிளகு, ஓமம், சித்தரத்தை வாய்விளங்கம், தெசாவரம், அத்தித் திப்பிலி, அக்கிராக்காரம், செவியம், திப்பிலி மூலம், மரமஞ்சள், கருஞ்சீரகம், காார்போக அரிசி, மிளகு வேர், இந்துப்பு வளையலுப்பு, வெடியுப்பு அட்டுப்பு நவச்சாரம், சத்தி சாரம், தேவதாரம், கிராம்பு, வெங்காரம், வெள்ளை அரிசி, கடுகுரோகணி, தாளிச பத்திரி சங்கம் வேர், சிறு தேக்கு கொடிவேலி, பெருங்காயம் இவை வகைக்கு பலம்.½, பெருங்காயந் தவிர யிவை யெல்லா மிடித்து வடி கட்டிப் பெருங்காயத்தைப் பொரித்துப் பொடி பண்ணி சூரணத்திலே சேர்த்துக் கொண்டு மூன்று விரல் கொண்டது கடுக்காயில் சாவித் சாவிப் பிசறி அதிலே எலுமிச்சம் பழச் சாறு படி.க, இஞ்சிச் சாறு படி.க, அந்தக் கடுக்காயில் விட்டுக் கிளறிக் கிளறிச் சூரிய புடமாய் மூன்று நாள் வைத்துப் பின்பு எடுத்துக் கணபதி பூசை பண்ணிக் காலமே ஒரு மூடி சாயங் காலம் ஒரு மூடி சாப்பிடவும். இந்தப் படி இருப்பது நாள் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி நரிக் காசம், விறக் காசம், மந்தார காசம், சுயம், சுர காசம், உன்மாந்தம், ரமாந்தை, காச சுவாசம், பல மூல வாய்வு, அக்கினி மந்தம், அருவை அசரணம் வெப்புப் பாவை, மூத்திர நீர்ப் பாச்சல் இது வெல்லாந் தீரும்.

வல்லாதி சிறந்த:-

செங்கொட்டை பலம்.50, சுண்ணாம்புத் தண்ணீரில் நாலு நாழிகை தோலேந் திரம் கட்டி எரிக்க கடுக்காய் கசாயத்தில் டோளேந்திரம் கட்டி நாலு நாழிகை எரித்து எடுத்துச் சாலில் யிட்டு நாலு வள்ளத் தண்ணீர் விட்டு ரெண்டு படியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு தேன் படி.1/8 பால் படி.3/8, கூட விட்டு

கொதிக்க விட்டு சுக்கு, திப்பிலி, மிளகு, அரத்தை, சடாமஞ்சி, சீரகம், கொன்றைப் பட்டை, தகரை விரை, மஞ்சள், கோஷ்டம், வசம்பு, முருக்கப் பட்டை இது வகைக்கு பலம்.க, சித்திர மூலம் பலம்.உ, யா— பலம்.உ, வெள்ளரி பலம்.உ, இவை யெல்லாம் சூரணம் பண்ணிச் சர்க்கரை பலம்.10, கூடப் போட்டு கருக்காய் மருவாதிக் கொள்ளப் பசு குலே, பதினெட்டுக் கிரந்தி எண்பத்து ரெண்டு வாய்வு இது வெல்லாந் தீரும்.

இஞ்சிக் குழம்பு:-

இஞ்சிச் சாறு நாழி வெல்லம் பலம்.3, இரு நாழி நீரில் கரைத்த மாதளம் பழச் சாறு நாழி விட்டு மூன்று நாள் மூப்போலே எரித்து நாலா நாள் மேற்பொடி ஏலம், லவங்கம், பச்சிலே கச்சோலம், திரிகடுகு, திரிபாலே, வசம்பு, வாய் விளங்கம், சித் திப்பிலி மூலம், சீரகம் இரண்டு வகையும் இவை ஒரொன்று பன்னிரு களஞ்சு கொண்டு பொடி பண்ணித் தூவிக் குழம்பு பதத்திலே இறக்கவும். இவை நேர்த்துக்குக் களிப் பாக்களவு குழம்பு கொள்ள அசன தீபனம் பசியுண்டாம். மனசு அருவருப்புத் தீரும். வீக்கம் வத்தம் வயறு வலி சத்தி குன்மம் இருமல் இளைப்புத் தீரும். குன்ம வாய்வுக்கு களிக் கிண்டித் தின்னவும்.

மாவிலிங்கம் வேர்ப் பட்டை முருக்கை வேர்ப் பட்டை சாட்டிறணை வேர் வெள்ளைப் பூண்டு.20, சித்திர மூலம் பாக்களவு பெருங்காயம் விராகனிடை.க, எல்லாம் பால் வாத்தரைத்துப் பசுவின் பால் படி.க, இதில் போட்டுக் கரண்டியாலே துளாவிக் கிளறிப் பதத்தில் வரச்சே ஒரு கரண்டி விட்டுக் கிராத் திரண்டு களியாம். அந்தப் பதத் தில் வைத்துக் கொண்டு அந்தி சந்தி பாக்களவு கொள்ளவும். பத்தியம் உப்புக் கூட்ட லாம். பசுவின் பால் கூட்டவும். அவரை மிளகு உள்ளி கூட்டவும். வலி முதல் நீங்கும்.

சகல வாய்வுக்கும்:-

கோதம்பை அரிசி படி.½, கல்லுப்பு உழக்கு, பெருங்காயம் பலம்.½, மம் பலம்.½, மிளகு உழக்கு இம்மட்டும் பொடி செய்து கோதம்பை அரிசி திரிகையில் அரைத்து மாவாக்கி எல்லாம் ஒரு சட்டியில் போட்டு சதிரக் கள்ளிப் பால் ஒரு படி வார்த்துப் பிசைந்து தேங்காய் போலே ஒன்றுகத் திரட்டி காட்டெரு ஒரு கூடை கொண்டு வந்து பரப்பி நடுவே இந்த உருண்டையை வைத்து மேலும் எருமுட்டையாலே மூடி வேகப் பண்ணி புகை அடங்கின உடனே எடுத்தால் உருண்டையாகத் தானே யிருக்கும். அதை ஒரு சட்டியிலே எடுத்து வைத்து ஆற விட்டு அம்மியிலே பொடி செய்து கலசத்தில் வைத்துக் கொண்டு மூவிரலுக் கொண்ட மாத்திரம் அள்ளிப் பசுவின் மோரிலே குடிக்கவும். வெந்நீரிலேயும் குடிக்கவும். வலியினம் பசியில்லாமலருக்கிற வாய்வு முட்டு வாய்வு, சகல வாய்வுக்கும் வெந்நீரில் கொடுக்கவும். புளி மாங்கிடாம் வாய்வுப் பண்டம் ஆகாது, துவரை கரை, சுண்டைக்காய் பிஞ்சு வத்தல் மிளகு, வெள்ளைப் பூண்டு கூட்டலாம். அனல் கண்டால் பசுவின் பால் கூட்டவும். வயறு வலி வயிறு பிசிவு தீரும்.

சத்தி குன்ம வாய்வுக்குச் சூரணம்:-

சதிரக் கள்ளி அண்டு துண்டாய் நறுக்கி பலம்.10, ஆடு தின்னாப் பாளை பலம்.10 கல்லுப்பு உழக்கு ஒரு பிள்ளைப் பானையில் போட்டுச் சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்து பூசிக் காட்டெருவில் புடம் போட்டு தன்னாறலாய் ஆறின வாறே எடுத்துப் பார்க்க வெந்து கரிபோலே இருக்கும். அதைப் பொடி செய்து சட்டியில் வைத்துப் பிறகு ஓமம் வெள்ளைப் பூண்டு திப்பிலி மிளகு, கடுகு, வெந்தயம், சீரகம், கருஞ்சீரகம், கம்பிப் பிசின், அரத்தை, சதகுப்பை, மரமஞ்சள், வசம்பு, வாய் விளங்கம், நாய்க் கடுகு, திப்பிலி மூலம், கடுக்காய், தான்றிக்காய் ஆகக் காரும் வகை ஒன்றுக்கு பலம்.½ இம்மட்டுஞ் சத்தே பொய்வறை கொண்டு உரலில் இடித்துச் சீலை வடி கொண்டு முன் மருந்துடனே கூடக் கலந்து பெருங்காயம் பலம்.½ விட்டுத் தணலில் வைத்து விராட்டி வெதுப்பி எடுத்துக்கூடக் கூட்டி பிசைந்து வைத்துக் கொண்டு மூவிரலுக் கொண்ட மாத்திரம் அள்ளி வெந்நீரில் கொள்ளவும். சகல வாய்வு வயிறு வலியும் தீரும். இப்படி பண்ணிக் கொள்ளவும். புளியும் மாங்கிடாமும் கசப்பும் ஆகாது.

வாயிலே ரெத்தம் விழுகிறதுக்கு:-

சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், சீரகம் வகைக்கு பலம்.½ நரிப் பயத்தங் கொடி பேய்ப்புடல் காஞ்சொறி வேர், சித்தாமுட்டி வேர், முசுமுசுக்கை வேர், விலா மிச்சை வேர் கோரைக் கிழங்கு இம் மட்டும் வகைக்கு அரைப்படி கொண்டு வந்து எல்லாம் இடித்துச் சிறுக அள்ளிப் போட்டுக் காய்ச்சி அந்தி சந்தி.8 நாள் கொடுக்கவும். பத்திய மாக நடக்கவும். பால் கூட்டலாம்.

கண் புகைச்சலுக்கு:-

கண்ணிலுள்ள வியாதிக் கெல்லாம் எண்ணெய் பண்ணி முழுகவும்.

ஆரை பொன்னாங்காணி சிறுகீரை கத்தாள மடல் முசுமுசுக்கை தாழம், விழுதி, சித்தாமுட்டி, குதிரை வாலி, நரிப் பயத்தங் கொடி மூலா வேர்ப் பட்டை, நன்னாரி வேர், சீந்திக் கொடி தண்ணி முட்டி பழம் பாசி இம் மட்டும் சாறு படி.க, சாதிக் காய், சாதிப் பத்திரி கிராம்பு, ஏலம், லவங்கப் பட்டை, அதிமதுரம், கோஷ்டம், செண்பகப்பூ; சீரகம் வகைக்கு விராகனிடை.க, கோரோசினை விராகனிடை.க, சனி சர்க்கரை பலம்.½ இம் மட்டும் அரைத்து நல்லெண்ணை யாகிலும் விளக் கெண்ணை யாகிலும் ரெண்டு படிஒரு படி வார்த்து எரித்து வைத்துக் கொண்டு முழுகவும்.

ஊசிலப் பொடி, சீயக்காய் புச்சைப் பயறு முழுகவும். பித்தம், கண் புகைச்சல் மயக்கம் மதி மயக்கம் தீரும்.

சுருக்கு வாதத்துக்குத் தேங்காய் நெய் பண்ணவும்:-

முத்தின தேங்காயாக ஏழு காய் உடைத்துத் திருவிப் பதிபடாகத் சாள் நாழி கூடப் போட்டுப் பிசைந்து சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து எரிய விட்டுத் துளாவிக் காச்சிக் கையிலே பிசைந்து புளிந்து கொள்ளவும். அந்த நெய்யை மார்புக்கு மேல் நோக்கித் தலை முகம் கூடத் தடவவும். சக்கையைப் புளியம் பொரும்பு நெருப்பில்போட்டு மூடிப் புகை காட்டவும். 3 நாள் தடவி புகை இந்தப் படி காட்டவும். முகம் கோணல் வாய் மூக்கு அற்புத வாதம் நீக்கும்.

ஈளை இருமலுக்குத் தயிலம்:-

சித்தா மணக்கெண்ணை படி. ½, பசுவின் பால் நெய் படி. ½, பூமி சர்க்கரை வேர் பலம். ௨, ஆன்டு மாறின கொம்பு பாகல் வேர்ப் பட்டை பலம். ௧, அரைத்துப் பதமாகக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும். காதுப் படாமல் வைத்துக் கொள்ளவும். இது கை கண்டது.

வயத்தில் கிட்டக்கிற வியாதிக்கெல்லாம் மருந்து:-

கடுக்காய் வெள்ளர் வாத்துரைத்து ஒரு பாக்களவு எடுத்து ரஸ்தாளிப் பழத்தில் நடுவே வைத்துப் பனியில் வைத்து காலமே சிறுகச் சிறுகப் பிட்டு முழுங்கவும். இப்படி பத்து நாளைக்குத் தின்னவும். கண்டிப்புச் சுரைந்து விழுந்த விழும் முந்தி எந்த வெல்லுமாவது தின்று பின்பு பழம் முழுங்கவும். பத்தியமாக நடக்கவும். உப்புச் கூட்டவும். புளி மாங்கிஷம் ஆகாது. இதுக்கு அருவை நமுவை மேற்கவிசை பக்கக் கவிசை காரமுண்டகள் கூர்முண்டகள் வெட்டு வலி மகோதரம் தீரும்.

வயித்து வலி குன்மம் திரட்டி எல்லா வாய்வுக்கும் மருந்து:-

மிளகு. படி. ½ கோழிய பட்டிலே போட்டு நன்கு தேய்த்து வைத்துக் கொண்டு பரும் பாக்களவு கொள்ளவும். உப்பு, புளி மாங்கிஷம் ஆகாது. வாய்வுப் பண்டமாகாது. அவரை, மிளகு, வெள்ளைப் பூண்டு கூட்டலாம். உப்பில்லாமல் கூட்டினால் மெத்த நல்லது. அல்லது வறுத்துச் சுத்த கூட்டிக் கொள்ளவும். இது கை கண்டது.

குன்ம வலிக்குத் தயிலம்:-

ஆதண்டை வேர் சமூலமும் கண்டங்கத்திரி, ஈர வெங்காயம் சமூலமும் வகைக்கு ஒரு படி. காய நசுக்கி வாடின பிறகு பானையிலடைத்து ஒட்டகத்தின் லத்தி குறணி கூடப் போட்டுத் தயில மிறக்கிப் பொரியரிசி மாவில் ஒரு அட்டெடை குத்தி உள்முக்குக் கொள்ளவும். பத்து நாள் பதியக் கறி கூட்டவும். உப்பு ஆகாது.

குதிரை வாதத்துக்கு லேகியம்:-

வெள்ளைப் பூண்டு பலம். 10, சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம் சத்தியஉடாரம், யவட்சாரம், லவணம் ஐந்து வகையும் கிரந்தித் தகரம், சீரகம், கருஞ்சீரகம், சதகுப்பை, கொத்தமல்லி, ஓமம், கொடுவேலி வேர் வகைக்கு பலம். ¼ எல்ல மரைத்துச் சட்டியில் போட்டுப் பசுவின் நெய் படி. 1/8, விளக்கெண்ணை படி. 1/ , கூட விட்டு வேகப் பண்ணி வைத்து இறக்கச்சே கடுகு பலம். ¼, ஏலக்காய் பலம். ¼, பொடி செய்து போட்டுக் கிளறி பாக்களவு கொள்ளவும். 20 நாள் கொள்ளவும் தீரும்.

காது மந்தம் நீர்ப் பீனிசம் தலை வலி, கபால சூலைக்குத் தயிலம்:-

நொச்சியிலைச் சாறு நாழி. 8, ஆதண்டை இலைச் சாறு நாழி, வெத்திலை யிலைச் சாறு நாழி, கையான் தகரைச் சாறு நாழி, எருக்கம் பழுப்புச் சாறு நாழி, ஆயில் பட்டை காயம் வேப்பெண்ணை படி. ½, நல்லெண்ணை படி. ½, பெருங்காயம் பலம். ½ வெள்ளைப் பூண்டு பலம். 3, அதிமதுரம் பலம். ½, பச்சிலைச் சாறு விட்டரைத்து பசுவின் பால் படி. ௧, கூட விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் சத்து முதிர வடித்து கலசத்தில் விட்டு ஒடு போட்டு மூடி வேடு கட்டி வைத்து தலைக்கு ரெண்டு அட்டெடை. தேய்த்து ஒரு நாள் இருக்க விட்டு மறு நாள் இலுப்பைக் கட்டி தேய்த்து முழுகவும். இப்படி நாலு மூன்று முழுக்கு முழுகவும். கைப்பு, புளிப்பு விடவும். இது கை கண்டது.

ஒருத் தலை வலிக்கு நசியம்:-

இலுப்பைப் புண்ணாக்கும் நல்ல வேளையிலையும் கூட்டி நசுக்கி ஒரு காசிடை சாறு நசியம் விடவும்.

நடுக்கல் காச்சலுக்கு:- அரிதாரம் குன்றி மணி அத்தனை கன்னம்பு தாழை விரை அத்தினை அம்மியில் வைத்து ஊமத்தை யிலைச் சாறு விட்டரைத்து வழித்து வெத்திலையில் தடவி ரெட்டைப் பாக்குடனே மென்று சாறு உள்ளுக்கு இறக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். அரிசி வறுத்துக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். அரிதாரமும் எருக்கிலை கொழுந்தும் கூட்டி 3 நாள் மென்று இறக்கவும். இது கை கண்டது.

<u>பெரு வயறு நீர்க் கோர்வைக்கு லேகியம்:-</u> 26.12.63.

கல்லுப்பு நாழி, இந்துப்பு நாழி, சீனக் காரம் பலம் 1/4, நவச்சாரம் பலம் 1/2, செங்கொட்டை 100 வெள்ளைப் பாஷாணம் ராகன் 1/2, பெருங்காயம் விராகனிடை.3, கெந்தகம் விராகனிடை.3, கிராம்பு விராகனிடை.உ, கருஞ்சீரகம் பலம் 1/2, மிளகு பலம்.4, வெள்ளைப் பண்டு பலம்.3, வசம்பு பலம்.க, கஸ்தூரி மஞ்சள் பொடி உழக்கு 1/2 இது வெல்லாம் பேய்க் கொமட்டிக் காய் விரை போக்கிச் சாறு கொண்டு சதுரக் கள்ளிப் பால் உரி வெள்ளாட்டுக் கோமயம் நாழி விட்டு அரைத்துச் சிறு பானையில் போட்டு சீலை மண் சுத்தி ஒரு மண்டலம் முழங்கால் மட்டும் எருவில் புதைத்து எடுத்து ஒரு தட்டு---போலே வில்லை பண்ணி நேரத்துக்கு ஒரு வில்லை தின்ன வரவும். பத்தியம் அரிசி வறுத்து வெள்ளாட்டுப் பாலில் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். தீரும் வியாதி மேல்க் கவிசை கழ்க் கவிசை பெரு வயறு நீர்க் கோர்வை இது தீரும்.

<u>அஷ்ட கிரனிக்கு:-</u>

ஒருத் தலை, வெள்ளைப் பண்டு பத்துப் பண்டு உரித்துக் கொண்டு ஒரு விராகனிடை அவின் மருந்து கொண்டு வந்து ஒரு பணவிடை அபினியில் ஒவ்வொரு பண்டு பண்டுலே வைத்து சட்டியிலே போட்டு பசுவின் நெய் விட்டு ஆலாம் பழம் போலே சிவக்க வெந்த பின் பிறகு அம்மியில் நடத்தி குன்டுமணிப் பிரமானம் உருண்டை பண்ணி எருமைத் தயிரில் பாதி உருண்டை கொடுக்கவும். பத்தியம் தயிரும் சோறும் சாப்பிடவும்.

<u>பாண்டு ரோகத்துக்கு லேகியம்:-</u>

சித்திர மூலம் பலம்.5, சிறகன்ர வேர்ப் பட்டை பலம்.5, கடுகுரோகணி பலம்.க, ஓமம் பலம்.5, கடுகு பலம்.5, மிளகு பலம்.3, சுக்கு பலம்.3, திப்பிலி பலம்.3, நேர்வாளம் பலம் 1/2 ரசம் விராகனிடை.உ, வெத்திலைச் சாத்தில் முறிக்கவும்.

நெல்லிக்காய் கெந்தகம் விராகனிடை.உ, புளியிலையில் வேக வைக்கிறது. நல்லுப்பு படி.க, வெத்திலை.50, இந்த மருந் தெல்லா மிடித்துத் தூள் பண்ணி நாரத்தங்காய்.5 பேய்க் கொமட்டிக் காய்.5, இரண்டு காயும் கிண்ணி கிண்ணி வாய்க் கொண்டு இந்தத் தூ வெல்லாம் திணிச்சு ஒரு காயிலே ரசம் அடைச்சு முத்தக் காயெல் லாம் சுத்தி வைத்து நாறத்தங்காயை வைத்து சிறு பானையிலடக்கி மேல்ச் சட்டி மூடி சீலை மண் செய்து முழங்கால் மட்டு எருவில் புதைத்து நாற்பத்து மூன்று நாளெடுத்து கரும் குவளை அரிசி அரைப்படி வறுத்து அரைத்துப் பானையில் போட்டுப் பிசைந்து வைத்துக் கொண்டு கொட்டைப் பாக்கு மாத்திரம் தினம் கொள்ளவும். தீரும் வலி குன்மம், சத்தி குன்மம், காச்சல், கென்டை, அருவை உள்க் கோவை, பிறக் கோவை, கவிசை பாண்டு ரோகம் தீரும்.

<u>கண்டமாலை கன்ன விப்புருதி கள்ள வியாதிக் கெல்லாம் மருந்து:-</u>

எருக்கம் பூ அவைத்துச் சாறு படி.க, இதை வெயிலிலே வெதம்ப வைத்து மறுபடி ஒரு விறகாக எரியிட்டுக் காச்சினால் கம்பிப் பிசின் போலே வரும். அந்தப் பதத்தில் சத்தம், தூரி, கெந்தகம், பொன்னரி தாரம், சவுக்காரம், சீனக்காரம் இது சமன் கூட்டி பலம் 1/8 வீதம் அரைத்துப் போட்டுக் குழம்பாய் வர போது இறக்கி வைத்து ஒரு பணவிடை உள்ளே கொண்டு வக்கத்திலே பெருங்காயம் அரைத்துத் தடவவும். அதின் மேல் குழம்பு சீலையில் தடவிப் போடவும் தீரும்.

<u>திமிர் வாதத்துக்கு என்னை:-</u>

நல்லெண்ணை படி.க, குழலா தண்டை வேர்ப் பட்டை பலம்.5 வெள்ளைப் பண்டு பலம்.க, வசம்பு பலம் 1/2 இது இடித்து எண்ணையில்ப் போட்டு சூரிய புடம் வைத்து உடம்புக்கு விட்டுப் பிடிக்கவும். தலைக்கு நாய் நாணக்கொடிக்காலி தேய்த்து முழுகவும். தீரும். காது கேக்கும். புச்சை மீன் புளி ஆகாது. உப்புத் தவிர்க்கவும். திருக்கை சுறு உப்புக் கண்டம் கூட்டவும்.

<u>விடத்துக்குத் தயிலம்:-</u>

பூவம் பழத் தோல், வேப்பெண்ணை சுத்தி வறுத்து பலம்.க, இரதம் விராகனிடை.க, தூரி விராகனிடை.க, சத்தம் விராகனிடை.க, நேர்வாளம் பலம் 1/2 இது வெல்லாம் வேப்பெண்ணை வார்த்தரைத்துச் சிமிழில் வைத்துக் கொண்டு விடத்துக்கு சிறு பயறளவு வெத்திலையில் கொடுக்கவும். ஒரு சாமம் விடாம லரைத்துக் கடையவுந் தீரும். கை கண்டது.

<u>ராம பானத் தயிலம்:-</u>

செவ்வி பதினென்றம் தாற் குழலே வாயு வெகுவும் மின்னிலத்தில் வாதங்களென்ப தவம் பன்னிய தோர் சூலையுடன் குன்மம் அடரும் கும்ப கண்டம் வாலையிலே சாய்ந்து வளர் பித்தம் பாலருந்தும் மாந்தமொடு போராமல் மாதர் வயித்து வலி சேர்ந்த தொரு விப்புருதி கேத்சமமே யந்திடவே ஆதிய ரசரைத்த ஆனந்த அக்கெண்ணை நீதியி மூல் வேதனியம் பிளர் சாதியினல் யிம்பமுடன் பாடி யிருந்த வடி---யை அன்ப முடன் கும்ப முனியம்பிஞல் அம்புவியில் சாறட்டை பேய் மிரட்டி சாத்தரிய பேய்த் தம்பை வேரும் சொல்லும் பேய்ச்சுரையின் வேரும் அமிஞ்சில் கூறிய தோர் பேயின் புடலும் பிரமியிலை எட்டியிலை ஆயும் அவுடிர அமுக்கிருய் தோய வரு தொடையிலை யிண்டு சுகமான ஆதன்ட கூடும் வரி கோருமத்தை தேடும் புலி தட்க்கி அனன் புகழ் சதிரக் களியுடன் எருக்கிலை யின் வேரு மிரு வகையாம் வன்மை தவிரா வட்டக் கிலுகிலுப்பை வாய்த்த குறட்டை சிவை

விட்ட விடத்தேரை வேளை வேர் வெட்டி கொடிவேலி நாரத்தை கரும் அளிச்சை
நாமேதி----எருதல சிவனர் வேம்பு முடுகவே பாயருவி கொன்றை பருத்தி
ப காய் வேரும் வேலிப் பருத்தியுடன் வெட்டி வேர் சாலவே பாதாள மூலிகை
ஒட்டை பாங்கான பேராமுட்டி வேத மணிக்கும் விளா வேரும் தெரிய செம்பரத்த
மேனி வேர் சந்தியுடன் வெள்ளருகு கும்பமுலை மாதே கொடு நொச்சில் இன்பமுடன்
கொம்மட்டி மாதளை கரும் யிலை வேரும் வன்மையுடன் சடைச்சி வேர் ஆகை
கதமாக்கும்---சிறந்த சத்தி சாரணையும் வாதத்தைத் போட்டும் வளர் சிவி
தெரிய---கண்ட கண்டம் கத்திரியும் நல்லதொரு சீர் குழலாய் நாயுருவி
வள்ளலுரைத் தட்டி வேங்கை உளலேரும் பச்சிலையுடன் பருத்த தொரு மாதே
பகரக் கேள்நீ நீர்ர தொரு சனக் காரத்துடனே செப்புஞ் சவுக்காரம் ஆன
வென் காரத்துடனே அரிதாரம் தேன் மொழியா யெவ் சாரதுடனேயே --ம் நவசாரம்
நவசாரம்சவ்வரமுடன் குக்கில் மலேசிலையும் கூறிய லவணம் இந்துப்புடன்
கடுகு புட மிளகு அந்தமுடன் சொன்ன அதிமதுரம் லவங்க மொடு லிங்கந் தரிசு
யிதத மர மஞ்சள் மங்கையர் கோரோசிளையும் கஸ்தூரி மஞ்சளுடன் இங்கிதமாந்
தேவதாரத்துடனே திப்பிலி பெருங்காயம் பாதகமாம் பூத கரப்பான்தால் விழியாய்
நல்ல பாம்புக் கண்டம் நாகப் பாம்பு நீங்கழுகு சொல்வ மயில் கொழுப்பும்
தோகையரே மெல்லியதோர் பச்சைப் பாம்புக் கருவும் பாங்கா மயிர் நகமும்
கச்சனியு மாதே கரு----உச்சிதமாம் கோளிக் காரத்துடனே கோ மூத்திரம்
கழுதை தான் வில்லா மூத்திரங்கள் தான் மூன்றும் வாளமுடன் சத மண்டலியும்
கத்த கம்பிளியும் ஆதரவா யென்னை வகை யஞ்சும் நீதியிலல் பழுத வராமலிது
பண்பாகவே கூட்டி மெழுகு பதத்தில் மிக வடித்து வன்மை யுள்ள மூத்த கரி முகனை
முன்னிறுத்திக் காய் கனிகளொருண்டை தான் படைத்த யியல்பாகச சாதித்த மத்தளஞ்
தாரை வளர் சின்னம் நாக சின்னம் குவத்தி முழங்க விமரதி அத் தலத்தில்
சாதிப் பிருமணர்க்குந் தாதபர தேசியர்க்கும் போதவழு. (அடுத்த ஏடு இல்லை)

<u>மேகத்துக்கு நெய்</u>:-

பொன்னாங்காணி, சிறுகீரை தன்னி மிட்டான் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, அப்பைக் கிழங்கு, நெருஞ்சி வேர், சத்தி சாரணை கிழங்கு, வெள்ளரி விரை சேப்பு நெருஞ்சி வேர், சரகம், வெப்பாலையரிசி, கல்நார், வெண்காரம், பேரிச்சம் பழம் முந்திரிப் பழம் பசுவின் நெய்யில் பண்ணவும்.

<u>சலக் கழிச்சலுக்கு</u>:-

மாதளம் ஒடும், வில்வ ஒடும், அபினியி லரைத்தப் பசுவின் வெண்ணையில் கொடுக்கவும். இது கை கண்டது.

<u>அரக் கென்னை</u>:-

அமுக்கிரான் கிழங்கு பலம்.20, பதக்குத் தண்ணீர் விட்டுக் காய்ச்சவும். அரக்கு பலம்.20 காய்ச்சி படி.க, நல்லெண்ணை படி.4, பசுவின் தயிர் வடி கட்டின தண்ணீர் படி.க, அரத்தை, அமுக்கிரா, கடுகுரோகணி, மஞ்சிட்டி, சந்தனம், செம்பினிச்சான் கட்டை, நன்னாரி வேர், கோஷ்டம், அதிமதுரம், தன்னி மிட்டான் கிழங்கு முத்தக்காசு, மருள்க் கிழங்கு, பவள மல்லி வேர், வெட்டி வேர், பேரிச்சம் பழம், முந்திரிப் பழம், புஞ்சாத்துப் பட்டை, வெள்ளைக் காக் கொட்டான் வேர், கருத் தக்காக் கொட்டான் வேர் வகைக்கு பலம்.க, இடித்துப் பொடி பண்ணிக் கசாயத்தில் கூட்டி வடித்துத் தலை முழுகி உடம்புக்கு நனைக்கவும். இதுக்கு உள்க் காச்சல் நாள்ப் பட்ட சுரங்கள் ஈளை, இருமல் வறட்சி இருமல் க்ஷயத்திருமல், சதளத்திலே சரீரத்திலே அனல் கண்ட பெருக்கு கை காலெரிவு தீரும். கை கண்டது.

<u>க்ஷயம், இருமல் மருந்துசிறந்தி மேல் இருமல் இவைக்கு மருந்து</u>:-

சுண்டைக்காய், சாதிப் பத்திரி, கிராம்பு, குரசாணி ஓமம், கடுகுரோகணி, சாத்திர வேதி, நீர் வள்ளிக் கொடி, சீரகம், வெள்ப்பாலை அரிசி, கொத்த மல்லி, அதிமதுரம், கோஷ்டம், கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி, பேய்ப் புடல், கஸ்தூரி மஞ்சள், அக்கிரு காரம், முசுமுசுக்கை, சித்தா முட்டி கொத்தான் அம் விரலி நெய்ச் சட்டி, கத்தாள் மடல், சீந்தி தண்டு விலாமிச்சை வேர், ஆடாதோடை வேர் பவள குறுந்தலை தேத்தான் கொட்டை, சர்க்கரை நெய்யில் கொள்ளவும். (இது செய்முறை சொல்லப் படவில்லை) ஏழு நாள் கொடுக்கவும். மாந்தம் பித்தம், இருமல், சுவாசம் மேலிளைப்பு க்ஷயம் இப்படி அனேகம் இருமல் தீரும்.

<u>வெகு நாள் பட்ட சுரத்துக் கெல்லாம் தயிலம்</u>:-

கொம்பரக்கு பலம்.6, கோஷ்டம், அரத்தை, அரேணுகம், சடா மஞ்சி, கடுக்காய், தானிக்காய் பெருங்கும்பை நெல்லி முள்ளி அமுக்கிரான் கிழங்கு, சந்தனம், கோரைக் கிழங்கு, வெட்டி வேர், விலாமிச்ச வேர், கடைச் மருந்து வகைக்கு பலம்.¼, வெட்டு மருந்து வகைக்கு ஒரு பிடி கசாயம் வைத்து இறுத்துக் கொண்டு அரக்குக் காய்ச்சி வடித்த பசுவின் தயிர் வடியிட்ட தண்ணீர் படி.க, நாச் சோத்து தண்ணீர் படி.க, நல்லெண்ணை படி.உ, பதமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு உள்ளுக்குக் கொடுத்துத் தலையும் முழுகி உடம்பெல்லாம் நனைக் கவும் தீரும். விடாச் சுரம், அஸ்தியிலே பற்றின் சுரம், உள்க் காச்சல், வெகு நாள் பட்ட சுர மெல்லாம் போகும்.

(வேறு)

சுக்கு பலம்.½, மிளகு பலம்.¼, அபினி விராகனிடை.½, புளியங் கொட்டைத் தோல் பலம்.½, முள்ளிலவம் பிசின் பலம்.½ எல்லாம் பொய் வறை கொண்டு பொடி பண்ணி வைத்துக் கொண்டு காசளவு பொடி எருமை வெண்ணெ எருமைத் தயிர், தேன் இதில் கொள்ளவும். அபினி சுத்தி பண்ணி எலுமிச்சம் பழச் சாறு காசளவு வார்த்து அபினி அதிலே சற்று நேரம் ஊற வைத்து திருத்திக் கொள்ளவும். பத்தியம் தயிர், மோர் உப்புக் கட்டவும்.

<u>மேகம், பிரமியம், சகல வீக்கத்துக்கு கசாயம்:-</u>

பறங்கிப்பட்டை பலம் உ, திப்ப வி.உ மிளகு வி,3, சக்கரை பலம் 5

பறங்கிப் புட்டை பலம்.உ, கெந்தகம் விராகனிடை.½, அமுக்கிலாம் வேர் பலம்.க, கொடிவேலி வேர் பலம்.க, சடாமஞ்சி விராகனிடை.ஙு,சாதிக்காய் விராகனிடை.3, சீரகம் விராகனிடை.3, சுக்கு விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ, மிளகு விராகனிடை.3, சர்க்கரை பலம்.5, கெந்தகம் பாலில் சுத்தி பண்ணவும். எல்லாம் சூரணம் பண்ணிக் கொண்டு. வெந்நீரில் பசுவின் நெய்யில் கொள்ளவும்.

<u>சோகைக்கு:-</u>

அருகம் புல்லு சுரைக் கொடியும் ஆனரசம் பிலைச் சருகும் நீ
மருமாத்த முன்ன மாமலையும் வரிசையுடனே நீர் முள்ளியும்
சிறுக நறுக்கி வைத்து மெள்ள சீராய்க் கசாயம் வைத்ததனே
சிறுகக் குடிக்க வீக்க மெல்லாம் திரண்டு உருண்டு ஓடுமே.

<u>வண்டு கடிக்கு:-</u>

அரத்தை பலம்.உ, அரப் பொடி பலம்.உ, கிட்டம் பலம்.உ, மிளகு பலம்.உ, திப்பிலி பலம்.உ; காந்தம் பலம்.ரு; வெள்ளைப் பூண்டு பலம்.4, கையாந்தகரைச் சாறு படி.உ, காட்டு மல்லிகைச் சாறு படி.உ, எலுமிச்சம் பழம்.20. தேன் படி.3/4, கூட்டிப் பண்ணவும்.

ஆயில் பட்டை, களாத்தி விரை, பாலை வேர், முசுட்டை வேர், விழுதி வேர், செங்கத்தாரி வேர், சிறுகிளா வேர், மிளகறணை வேர், அழிஞ்சிப் பட்டை, கருங் குறுவையரிசி படி.க இடித்துச் சதிரக் கள்ளியைப் பானையில் போட்டு தண்ணீர் விட்டு வேடு கட்டி பிட்டு சுட்டுத் தின்னவும். வண்டு கடி யெல்லாந் தீரும். வெட்டு வகை வேர் பட்டை எடுத்து இடித்த தூள் பாதியும் அரிசி மாப் பாதியும் கூட்டி பிட்டு வைத்து எட்டு நாள் தின்னவும். வண்டு கடி எல்லாந் தீரும். இது கை கண்டது.

<u>சிலேட்டும சுரத்துக்கும் சன்னிக்கும்:-</u>

ஆடாதோடை பீர்க்கு, கண்டங் கத்திரி, கடுகுரோகணி, வசம்பு, கசாயம் வைத்து திப்பிலி வறுத்துப் பொடி பண்ணி மேல் பொடி தூவித் தேன் காசளவு கலந்து கொடுக்க இருமல் சுரம் விடும். தழுதழை வேர் நிலவேம்பு, சுக்கு, திப்பிலி, ஓமம், வசம்பு, பேய்ப்புடல், பற்படாகம் இம் மட்டும் இடித்து வைத்து சிறுக அள்ளிப் போட்டுக் காச்சிக் கொடுக்கவும். மேலும் சுரம் விடும். இப்படி மூன்று நேரம், ஆறு நேரம் கசாயம் கொடுக்கவும். (வேறு)

<u>சோகை பாண்டுவுக்கு:-</u>

கடுகுரோகணி, கிட்டம், அரப்பொடி, ஜசிக் கர்ந்தம் இம்மட்டும் மட்டா யெடுத்துக் கையாந்த கரைச் சாறு விட்டரைத்துப் பாக்களவு உருண்டை பண்ணி நல்லெண்ணெயில் ஊற வைத்து சூரிய புடம் வைத்துக் கொண்டு ரெண்டு காலமும் கொடுக்கவும். பத்தியம் குருமுளி நெத் தொலி சுருதிருக்கை வெள்ள யெடுப்புக் கண்டம் கட்டலாம். 15-நாள் கொள்ளவும். உப்பு, புளி ஆகாது.

<u>விரை வாதத்துக்கு:-</u>

வெள்ளைப் பூண்டு பலம்.7, சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், சத்திய யவச்சாரம் இவச்சாரம், பச்சை லவணம், ஐந்தும், கிரந்தி தகரம், சீரகம், கருஞ்சீரகம், சதகுப்பை, கொத்தமல்லி, ஓமம், சித்திர மூலம், வகைக்கு விராகனிடை.உ, எல்லாம் அரைத்து விளக்கெண்ணெ. பசுவின் நெய் வார்த்துக் கிளறிப் பதமாகக் காய்ச்சிப் பிறகு எள்ளு வறுத்துப் பொடி செய்து போட்டுக் கிளறி வைத்துக் கொண்டு பாக்களவு தின்னவும். விரை வாத மெல்லாந் தீரும்.

<u>நீரடைப்புக்கு:-</u>

புங்கங் கொழுந்து ஒரு பிடியில் பாதி பச்சை பாதி வறுத்தும், சீரகம் உரியில் பாதி பச்சை பாதி வறுத்தும், அசமதாகம் உழக்கு பாதி பச்சை பாதி வறுத்தது வெண்காரம் களஞ்சு அதைப் பொரித்துக் கொண்டு எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து எலுமிச்சங் காயளவு உருண்டை பண்ணி நிழலுலத்தாக உலத்தி ஒரு நாளைக்கு மூன்று எலுமிச்சம் பழச் சாற வார்த்து உருண்டைக் கரைத்து ஆழாக்குப் பசுவின் நெய்யுடன் கரைத்து சனி சர்க்கரையும் போட்டுக் கொடுக்கவும். இதுக்கு ஆறு வகை வியாதியும் குணமாம். தன்மாங்கிஷம், சதை மாங்கிஷம், கல்லெரிப்பு மூத்திர பாறு மூத்திரக் கிரச்சை, நீரெரிப்பு சகலமுங் குணமாம்.

<u>கல்லடைப்புக்கு:-</u>

காறணை வேர், பன்னை வேர், சந்தனம், எலுமிச்சம் பழச் சாறு உழக்கு

உள்ளுக்கு கொடுக்க கல்லுத் தெறிச்சு விழும்.

<u>விடாத சுரத்துக்கு:-</u>

சிந்தாமுட்டி பேராமுட்டி, சீராவலை, கண்டங் கத்திரி, கறி முள்ளி சீந்தில் தண்டு, கோரைக் கிழங்கு, பற்படாகம், கஞ்சாக் கையாந்தகரை, நாரிசு, சுத்தம், சந்தனம், முள்ளிக் கொளிஞ்சி, சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், சித்திர மூலம், செவியம், சீரகம், கடுகுரோகணி, கொத்தமல்லி, கோஷ்டம், பெருங்காயம், கடுக்காய். எ. குடிநீர் வைத்து தேன் கலந்து கொடுக்க விடாச் சுரம் விட்டோடிப் போம்.

<u>பாண்டு ரோகம் விடபாகம் வீக்கத்துக்கு:-</u>

நெருஞ்சி, சாறணை, கோவை, புளியிலை, பிடிவிலை, சங்கம் வேர், விளம்பி பிரம்பிலி விக்கலை, செங்கத்தாரி, நர்முள்ளி, வேப்பம் பட்டை, பிரமியப் பூண்டு, நன்னாரி வேர், சுரைக் கொடி, மணலி மாமலை, முருங்கை வன்னெற்று ----வட்டத் திருப்பி சிறு குறிஞ்சா கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி, கிட்டம், இரு இரும்பு, மஞ்சள், அவுரி நிறையத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி வைத்துக் கொண்டு கொடுக்கவும். வீக்க மெள்ளப் பட்டதெல்லாம் தீரும்.

<u>வலத் சல மடைத்தால் கெற்பூனை மேல் நீரடைப்பு உதிரத் சாக்கால் மருந்து:-</u>

நீர் முள்ளி, கசாயத்தில் வெங்காரம் பொரித்துக் கரைத்துக் கொடுக்கவும். உத்தம தாளிச் சாறும், வெங்காரம், கடுகுரோகணி கலந்து கொடுக்கவும். சலம் மலம் விடும். பெருங்காயம் வெள்ளாட்டுப் பாலில் காச்சித் தின்னவும். நீர் விடும்.

(வேறு)

பூ உதிராத வாழைப் பிஞ்சும், ஈர வெங்காயம் படி. $\frac{1}{2}$ இரண்டும் தலைத்துப் பசுவின் பால் அரைப்படியில் பிசைந்து வடித்து அரைப் பலம், சீரகம், அரைத்துக் குடிக்க கெர்ப்பிணி மேல் வாற நர்க் கடுப்பு தீர்கும்.

<u>நீரடைப்புக்கு:-</u>

மூன்று படி நீச்சத் தண்ணீரில் காட்டெரு முட்டை சாம்பல் கரைத்து வைத்து மறுநாள் ஒரு படிக்கு இறுத்துக் குடிக்க உடம்பும் தீரும். சலம் விடும்.

<u>நீரடைப்புக்கு:-</u>

சங்கிலை ஈர வெங்காயம், பச்சை நெல்லும் மூன்றும் தலைத்துப் பிழிந்து கொடுக்க நீர்குட்டு விடும்.

(வேறு)

சேறை ஈர வெங்காயம் அரிஞ்சு பொன்னிறமாய் வறுத்து ஒரு படி தண்ணீர் விட்டு உழக்காய் காய்ச்சி வடித்து எலுமிச்சங் காயளவு பசு வெண்ணெய் கூட்டிக் குடிக்கத் தீரும். வேற சட்டியில் ஒரு பலம் பொட்டிலுப்பு உருக்கி படிநீர் விட்டு உழக்காய்க் காய்ச்சிக் காசிடை வெண்காரம் பொரித்துக் கலக்கிக் குடிக்க நீர்க் கட்டு விடும்.

(வேறு)

கோவைத் தண்டு முத்திரை சாணறுக்கிப் பச்சி பார்த்து தலைத்து அரைப்படி நீரில் பிழிந்து வடிகட்டி இடித்த காசிடை சர்க்கரை கூட்டிக் குடிக்கச் சலம் விடும். இது கைகண்டது.

<u>உடம்பு குட்டத்துக்கு:-</u>

மிளகு கசாயமும் வெண்ணெயும் வெந்தயக் கசாயமும் வெண்ணெயுங் கூட்டிக் குடிக்க உடம்பு விட்டு விடும். முருங்கைப் பட்டைச் சாறு படி. $\frac{1}{2}$; வெங்காயம் அரிஞ்சு போட்டுக் கொதிக்கச்சே திப்பிலிப் பொடி போட்டுஅரைக்கால் படி நெய் விட்டுக் காச்சிக் குடிக்க உடம்புக் குட்டம் வாய்வு போம்.

<u>வலம் சல மடைத்தால்:-</u>

கத்தாளஞ் சோறெடுத்துச் சட்டியில் போட்டுக் கடுக்காய் பொடி செய்து போடக் கரி கழுவின தண்ணீர் போல முறியும். ரெண்டு சேரை மிளகுப் புளியங் காய் மரிவாதி பழம் புளி கரைத்து விளக் கெண்ணெய் அரைக் கால் படி காச்சி விட்டு நாலு பலகரை சுட்டுக் கரைத்து வெங்காரம் பொரித்துக் கூட்டி விரோசனக் குளிகை கூட்டிக் கொடுக்க உடனே மலஜலம் விடும்.

(வேறு)

சீந்திக் கொடி தலைத்து விளாங்காய் மருவாதி சேரை ஈர வெங்காயம் அரிஞ்சு போட்டு வறுத்து தின்ன விளக் கெண்ணெயில் எரித்துக் கொடுக்க சலமலம் விடும்.

வேலிப் பருத்தி யிலை கசக்கி எலுமிச்சங்காய் மருவாதி சீலையில் பொட்டணங் கட்டி விளக்கில் காய்ச்சி அரைக்கால் படி விளக் கெண்ணெயில் பிழிந்து கொடுக்க மலஜலம் விடும்.

(வேறு)

பன்னி நெய் படி. க, சீரகம் படி. $\frac{1}{2}$, மஞ்சள் சாள் குழக்கு பிடி, ஒரு கொதி கொதிக்க விட்டு பதினஞ்சு நாளைக்கு குடிக்கவும். சோத்துக்கு வர்த்தன்னவும்.

<u>எலும்புருக்கிக்கு:-</u> பருத்தியிலை வேர் கருங் குறுவை யரிசியும் சரி கூட்டிப் பசுவின்

பாலில் அரைத்து கருங் குழவை அரிசிப் பொரி மாவில் பிசைந்து ஆட்டுக் கொழுப்பில் நெய்யில் பிசைந்த தின்னவும். எலும்புருக்கி தீரும்.

பக்க சூலைக்கு:-

உத்தாமணிச் சாறு, பருத்தியிலைச் சாறம் அதின் வேர் வகைக்கு ரெண்டு காசிடை பெருங்காயம் இந்துப்பு, கடுகுரோகணி, ஓமம், கடுகு, மிளகு, சுக்கு இவை யெல்லாம் உத்தாமணிச் சாறு வாத்தரைத்து விளக் கெண்ணெயில் எரித்து வேளைக்கு காசிடை குடிக்கப் பக்க சூலை தீரும். வேளைக்கு ஒரு பலம் வெள்ளைப் பூண்டு தின்னப் பக்க சூலை தீரும்.

(வேறு)

வயறு கழியாதிருந்தால் முத்தின கோவிளம் பட்டை தவைத்துக் காடியில் பிசைந்து ஒரு சேரை குடிக்க வயறு கழியும். பாம்புக் கிண்டமும் குங்கிலியமும் நேகப் பொடி செய்து யோனி வாயில் புகை பிடிக்க புகை பிறம் போகாமல் பிடிக்கவும் வலி நிற்கும்.

சூலைக்கு:-

முடக் கொத்தான் சாறு படி ½. நல்லெண்ணை படி ½, உள்ளி, வசம்பு, பெருங்காயம், திரிகடுகு இந்துப்பு, குங்கிலியும், தேவதாரம், சதகுப்பை இது வகைக்கு ஒரு காசிடை கூட்டி எரித்து வேளைக்கு காசிடை கொள்ளவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

(வேறு)

தேங்காய்ப் பாலில் ஒரு சேரை உள்ளிப் பூண்டு உரிச்சுப் போட்டு இரண்டு விராகனிடை பெருங்காயம் போட்டு இ கக் காய்ச்சி வேளைக்கு பாக்களவு தின்னவும். பக்க குன்மந் தீரும்,

(வேறு)

சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், நாய்க் கடுகு, வசம்பு, கொடிவேலி, அக்கிரகாரம், இந்துப்பு, கறியுப்பு, கருஞ்சீரகம், சாறணைக் கிழங்கு, பழைய புளி, கூட்டி இடித்துச் சூரணம் பண்ணி நெய்யில் கொள்ளவும். பக்க வாதந் தீரும்.

அரையில் கழிச்சலுக்கு:-

கரணைக் கிழங்கு, உள் தோண்டி சுரைக்காய்க் கெந்தகம் அடைத்து ஒரு முட்டை கொண்டு மூடிப் புடமிட்டு கிழங்கு கூட வறுத்து பொடி செய்து ஒரு காசிடை தேனிலிடவும். பத்தியம் பிடிக்கவும்.

(வேறு)

அபினி, சாதிக்காய், அதிவிடயம், புளியங் கொட்டைத் தோலு, நல்ல இலவம் பிசின், சமளுக உதியம் பட்டைச் சாறு வாத்தரைத்து அர தவிளங் காயளவு உருண்டை பண்ணி நன்ருய் பசுவின் பாலிலே ஒரு உருண்டை இடவும். கடுக்காய் சுட்டு அரைத்து நல்லெண்ணையில் குழப்பிக் கொடுக்கவும்.

தலைகடி விக்குத்திக்கு:-

நாபி, வெள்ளைப் பாஷாணம், கெவுரி பாஷாணம், நேர்வாளம், மிளகு பழம் இவை ஐந்து மருந்தும் பெருந் தும்பைச் சாறு வாத்தரைத்து கறிக் கட்டவும். இதுக்குப் புறகழலை வண்டு கடி பவுத்திரம் விஷம் இவை யெல்லாந் தீரும்.

கடியைக்கு:-

பசுவின் நெய், சதிரக் கள்ளிப் பால் மருக்காரை வேர், சாறடை வேர், மூக்குறட்டை வேர் இவை வகைக்கு ஒரு பாக்களவு அரைத்துக் கரைத்துக் காய்ச்சி பதத்தில் வடித்து ஆழாக்கு நெய் கொள்ளவும். வெந்நீர் வார்க்கவும்.

கடி விக்கத்துக்கு:-

ஊமத்தங் காயை அமுத்து அதில் உள்ளே விரையை வாங்கிச் சதிரக் கள்ளியை அமுத்து அதுக்குள்ளே வைத்து மூடி உமிக் காந்தலிலே சுட்டு பெருங்காயம், மிளகு கூடக் கூட்டி அரைத்துச் சுண்ணம்பும், விளக்கெண்ணையும் ஓட்டடையும் கூட்டிக் கலத்தோடு கல பிழைத்து கடிவக்கஞ் சொறிந்து மூன்று முறை தடவத் தீரும்.

சில் விஷத்துக்கு:-

கொன்றைத் தளிர், விளாம்பிசின், என்றுஉப்பு மஞ்சள் இவை சமன் கூட்டி அரைத்து பூசவும். கடின மீறும்.

நேர்வாளங் கொட்டை ஐம்பது கொட்டை யிலை வாங்கிப் போட்டு அரைத்து நாழி பசுவின் பாலில் கலக்கித் தினம் வெய்யிலில் வைக்கச் சுவறி மேலே தயிலம் நிற்கும். இந்தத் தயிலகடி தோன்றி யிடத்தில் தடவப் பட்டுப் போம். அடியில் கடுகெடுத்துக் குன்றிப் பிரமாணம் உருட்டி ஒரு உருண்டை சூடுந்த தண்ணீரில் கரைத்து குடிக்க வயறு கழியும். இதுக்கு மாத்து இள வெயில் வெந்நீரு மோரும், சோறுங் கொடுக்க நிற்கும்.

கழிவுக்குத்துக்கு:-

ந-----கோமியத்தில் பறட்டை யிலை அரைத்து வைத்து சீலை வடி கொண்டு இளையக் காய்ச்சி பாகு பதத்திலிறக்கி ஆற வைத்துப் பூசவும்.

அலரி வேர், செருப்படி வேர், நிலப்பனைக் கிழங்கு ஓட்டடை இவை கூட்டி அரைத்து மேலே தடவவும்.

<u>இருமல் தொண்டையில் கட்டி விழுகிறதுக்கு:-</u>

தேத்தான் கொட்டை சீவினது பலம்.க, சீரகம் பலம்.க, மிளகு பலம்.க, இது மூன்றும் தனித் தனியே நெய் குத்திப் பொன்னிறமாகக் கருகாமல் வறுத்து தேக அரைத்து நேரத்துக்குப் பாக்களவு கொடுக்கவும். பத்தியம் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>கால், கை அசந்து வரதுக்கு: பஞ்ச சுவாதத்துக்கு:-</u>

வெள்ளெருக்கம் பூ உலத்திப் பா‌னையிலடைத்து பாதாள எந்திரத்தில் தயில மிறக்கி அசந்த யிடத்திலிட்டுப் பிடிக்கவும் குணமாம்.

(வேறு)

பேய்க் கொமட்டிகாய்.உ, இடித்துச் சாறு வாங்கிக் கொண்டு இதுடனே மாகாணி சதிரக் கள்ளிப் பூரசும், மாகாணி விளக் கெண்ணெயும் இது மூன்றும் கூட்டித் தளாவி எரிக்கவும். இந்தச் சாறு முக்கால் வாசி சுவறினவுடனே கால்வாசி இருக்கையிலே நல்ல வெல்லம் பலம்.5 போட்டுக் காய்ச்சி வெல்லம் உருகின உடனே சுக்கு மேல் பிறணி சவிப் போட்டு இடித்துப் பொடி பலம்.5, , கடுக்காய்த் தூள் பலம்.5, யவட்சாரம் பலம்.உ, சாதிக்காய் பலம்.உ, கல்லுப்பு ஒரு சிறங்கை இது ஐந்தும் தூவி அடிப் பத்தாமல் கிண்டித் தளாவித் தூவி யெடுத்தால் குழம்பு பித்து விழுகிற பதத்திலும் சத்து இறுகி பித்து விழுகிற பதத்திலே எடுத்து விளக்கெண்ணெப் பதத்திலடைத்து வைத்து (மேல் உளஅய ஏடு இல்லை) க் கொள்ளவும்.

(முன் வந்துள்ள புஞ்சக வாதத்துக்கு மருந்து என்று தெரிகிறது)

-------இந்துப்பு பலம்.க, வெந்தயம் பலம்.ச, வெட்பாலரிசி பலம்.க, கல்நார் பலம்.க, கலமதம் பலம்.க, மிளகு பலம்.க, மாம்பிசின் பலம்.க, விளாம் பிசின் பலம்.க, முள்ளிலவம் பிசின் பலம்.க, இதுகளெல்லாம் பொடித் தனித் தனியே சுத்து வெச்செள வறுத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி வைதுக் கொண்டு இதுக்கு அநுபானம் அபினி மருந்து பலம்.க, சாதிலிங்கம் பலம்.க, இது இரண்டும் சுத்து வெசப் பிக் கொண்டு அரைத்து செந்தூரமாகப் பண்ணி இதிலே ஒரு பலமும் மூந்தின சூரணத் திலொரு பலமுங் கூட்டி ஒரு சாமமரைத்து சிமிழிலடைத்துக் கொண்டு ரெண்டு பணவிடை செந்தூரம் தேனில் கொடுக்கவும். இதுக்கு மூல வாய்வு, திசமூல வாய்வு, கிராணிக் களிச்சல் தீரும்.

<u>கிராணிக் களிச்சலுக்கு எண்ணை:-</u>

நல்லெண்ணை படி.க, வேப்பெண்ணை படி.க, எலுமிச்சம் பழச் சாறு படி.க, வெற்றிலைச் சா படி.க, ஆடாதோடைச் சாறு படி.க, காறணைச் சாறு படி.க, குப்பை மேனிச் சாறு படி வசம்பு, வெள்ளைப் பண்டு கூட்டி எரித்து கடுகு திரண்ட பதத்திலிறக்கி ரெண்டு நாளைக் கொடுககால் நாற்பது நாள் முழுகவும். நசியமும் விட வும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். முழுகும் போது நசியமும் விடவும். துவரம் பருப்பு அரைக்கரை புளிப்பு ஆகாது. நரம்பு பலிசந் தரும்.

<u>சொறி குட்டத்துக்கு:-</u>

மருதோன்றி, தாரி, துத்தம், பொன்னரிதாரம், வகைக்கு பலம்.½, நேர் வாளங் கொட்டை 12 நரெட்டிக் கொட்டை.12, நன்னாரி வேர், வியதி வேர், -- பிரம் வேர், மாவிலிங்க வேர், சங்கம் வேர், சாறணைக் கிழங்கு, எருக்கம் வேர் ஆக வேர் வகை.8 குமணக்கிலை எருக்கிலை ஊமத்தையிலை, செருப்படியிலை, பேய்ப் பீக்கிலை ஆகச் சாறு வகை.6, மருந்து பொடி செய்து கொதிக்க வைத்து பதத்தல் வடித்து கடுகு முறக வடித்து உள்ளுக்கு ரெண்டு பணவிடை கொண்டு மேலும் தயிலத்தில் சுத்து தேய்க்கவும்.

நல்லெண்ணை படி.க, வேர் வகைக்கு பலம்.க, சாறு வகைக்கு படி.½, கூட்டிக் காச்சவும். தயிலம். முன் சொன்ன வியாதி யெல்லாந் தீரும்.

<u>சத்தி குன்மத்துக்கு:-</u>

சிறு குறட்டைக் கிழங்கு, இள வெள்ளரிலன்ரத்துக் காசளவு முழுங்கவும். ரெண்டு நேரமும் மூன்று நாள் கொள்ளவும். ஒரு நாள் வியாதி அதிகம் எடுத்தால் அடங்கும். பத்தியம் கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். உப்புக் கூட்டவும். சத்தியும். வலியும் நிற்கும்.

<u>ரெத்த மூலக் கடுப்புக்கு:-</u>

சுக்கு பலம்.ச, மேல் தோலி சீவிப் போட்டு பழச் சாத்தில் அ ரைத்து அபினி விராகனிடை.½, போட்டரைத்து ஒரு உருண்டை வெல்லம் மெழுகு போல் காய்ச்சி இதில் விட்டு நல்லெண்ணை விட்டு சத்து மெழுகு பதத்தில் காச்சி அளவு கொடுக்க நிற்கும்.

<u>அண்ட வாதத்துக்கு:-</u>

சாறடைக் கிழங்கு, இந்துப்பு, தளுபடை சுக்கதுள்ளி
சீறு சித்திரத்தின் மூலி செம் பொன்னின் காரம் வாளம்
வீறதாய் வெந்தொன்றாய் யெண்ணெயில் விழுங்கு வீராய்
கூறிய கள்ளிப் பாலும் கூட்டண்ட வாதம் போமே.

<u>ஏறு ஓயாயறுக்கு:-</u>

சீனக் காரமும் இலுப்பை அரப்புக் கட்டியும் அரைத்துக் காய்ச்சிப் பிசைந்து மூன்று வடி கொண்டு கொடுக்கவும். வாய் திறவாதிருந்தால் நிலவத்தால் ஒரு பணவிடை

தேனில் மத்தி நசியம் பண்ணவும். வாய் திறக்கும். அப்போது உள்ளுக்கு கொடுக்கவும்.

__பீனிசத்துக்கு:-__

நல்லெண்ணை படி.1½, எலுமிச்சம் பழச் சாறு படி.க, சாத்திர வேதி விராகனிடை.உ, போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி மூன்று நாளைக் கொருக்கால் முழுகவும் சீயக்காய் சிக யிட்டு முழுகவும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். அஞ்சாறு முழுக்கில் குணமாம். சிறுப் பீனிசம் கபம் வடித்த பீனிச மெல்லாங் குணமாம். மலை வேப்பஞ் சாறு நேரத்துக்கு ஆழாக்குச் சாறு காலமேயும், மத்தியானமும் சாயங்காலமும் தலைக் கிலையிலே தேய்த்து ஆமணக்கு இலை போட்டுக் கட்டவும். இப்படி ரெண்டு நாள் கட்டவும். மூன்று நாள் அரப்பாவது சீயக்காயவது யிட்டு வெந்நீரில்முழுகிப் போடவும். இப்படி மூன்று முறை முழுகவும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

(வேறு)

குங்குமப்பூ விராகனிடை.க, சர்க்கரை விராகனிடை.உ, பசுவின் நெய்யில் நாசியில் கட்ட ரெத்த பீனிசம் நிற்கும்.

__அரையாப்புக்கு:-__

நல்லெண்ணை படி.௩, கிராவேர் பலம்.4, கொடுவேலி வேர் பலம்.உ, உள்ளி பலம்.உ, வசம்பு பலம்.௩, சாதிக்காய் விராகனிடை.உ, சாதிபத்திரி விராகனிடை.உ இவை இடித்து எண்ணையில் போட்டு மெழுகு பதத்திலிறக்கி வேளைக்கு அரைக் கரண்டி உள்ளுக்கு கொடுக்கவும். பத்தியம் உப்பு, பால் நெய் கருவாடு மிளகு கட்டவும். இது கை கண்டது. அரையாப்புத் தீரும்.

__விப்புருதிக்கு:-__

திருகு கள்ளி வேர், பெரு மருந்து வேர், அமுக்கிறு வேர், சங்கங் குப்பி வேர், பிறண்டை வேர், வேலிப் பருத்தி வேர், ஆதண்டை வேர், சுக்கு, மிளகு, வெள்ளுள்ளி, காயம், கருஞ்சீரகம். ஓமம், கடுக்காய், பூத கரப்பான், காந்தம், இந்துப்பு, இது சமன் வேப்பெண்ணை விளக்கெண்ணை சரி கட்டி நாழிக்கு ஒரு பலம் கூட்டி எரித்து எட்டு நாள் கொள்ளவும். விப்புருதி கூட்டோடே விழும்.

(வேறு)

நேர்வாளம் விராகனிடை.3, நஞ்சு வாங்கிப் போட்டு சீலையில் கட்டி தீயில் வாட்டி அத எடுத்து வெள்ளாட்டு பால் வாத்தரைத்துக் கலக்கிக் கொடுக்க விப்புருதி விழும்.

__பீனிசத்துக்கு:-__

ஈர உள்ளி நசியம் விடவும். மாதளம் பூ முலைப் பாலில் நசியம் விடவும். கைய்யாந்த கரை நசியம் பண்ணவும். வெள்ளைச் சாறடையிலையும், ஈர வெங்காயமும் நசியம் விடவும்.

__வயறு கடுப்புக்கு:-__

மாதளங் கொழுந்தும், நற்சரகமும், நெல்லி முள்ளி மூன்றும் சமன் கட்டி அரைத்து எருமைத் தயிரில் கொள்ளவும். வியறு கடுப்புத் தீரும்.

__ரெத்தக் கழிச்சலுக்கு:-__

வாழைப்பூ.க, அகத்திப் பட்டை பலம்.௩, முள்ளிலவம் பட்டை இது மூன்றும் புட்டவியலாக அவித்து சாறு வாங்கி இதில் அதிவிடையம், காசுக் கட்டி, சாதிக்காய், நற்சரகம், நெல்லிமுள்ளி, சுக்கு இவை வெதுப்பிப் பொடி பண்ணி, தூவுக் கொடுக்கவும்.

அதிவிடையம்.8, கிராம்பு காசிடை.க, காயம் விராகனிடை.௩, சிறு திப்பிலி விராகனிடை.௩, இலவம் பிசின் விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, மிளகு விராகனிடை.5, இவை பொடி பண்ணி இளவறுப்பாய் வறுத்து களச்சிப் பிரமாணம் நெய்யில் குழைத்து முழுங்கவும். வயறு கடுப்பு நிற்கும்.

குப்பாலை வேர் பாக்களவு அரைத்து மோரில் 3 நாள் கொடுக்கவும். சுக்கு சீவி உப்புத் தடவி சுட்டுத் தின்னவும். ஈர உள்ளியும் கருப்புக் கட்டியும் கொடுக்கவும். மணத்தக்காளிச் சாறு பாலிலே கொடுக்கவும். புளியங் கொட்டை வறுத்துத் தோல் வாங்கிப் பால் வாத்தரைத்து பசுவின் வெண்ணெயில் மூன்று நாள் கொடுக்கவும். பொன்னாங்காணி வேர் நாரத்தங்காயளவு அரைத்து நாழி நெய்யில் பதமாய்க் காய்ச்சி எடுத்துக் கொடுக்கவும்.

__விக்கலுக்கு:-__

சந்தனம், சர்க்கரை, நெல்பொரி, விலாம்பிச்சம் வேர் கூட்டி குடிநீர் கொடுக்க விக்கல் நிற்கும்.

(வேறு)

பசுவின் பால், நெற் பொரி, மாதளம் பழச் சாறு சர்க்கரை கலந்து கொள்ளத் தீரும் உப்பும், நெய்யும் குழப்பி முழுங்கவும்.

ஏலம் விராகனிடை.க, அரைத்து வெந்நீரில் கொள்ள நிற்கும். மாதளம் பழச் சாறு நெற்பொரி, திப்பிலி, சர்க்கரை தேனில் கொடுக்கவும். இதுகருக் கெல்லாம் விக்கல் நிற்கும்.

__நீர்க் கடுப்புக்கு:-__

செவ்விள நீரில் பத்துத் தேத்தாங் கொட்டை சீவி ஊறப் போட்டு ஏலம்,

ச்ர்க்கரை கூட்டி அரைத்துக் கொடுக்கவும். ந-நாள் கொள்ளவும்.

<u>வறட்சி இருமலுக்கு:-</u>

தேத்தாங். கொட்டை பலம்.க, பசுவின் நெய்யில் சிவக்க வறுத்து வெந்த பதத்திலரைத்து மிளகு பொடி உழக்கு கலந்து நெல்லிக்காய் மருவாதி கொள்ளவும். வறட்சி இருமல் சேற்மமம் உப்பிசம் இது தீரும்.

(வேறு)

தும்பைச் சாறு உழக்கு; கல்லுப்பு விராகனிடை.உ, வெண்காரம் பொரித்த விராகனிடை.½ பொடி பண்ணிப் போட்டு சாற்றில் குழப்பிக் கொடுக்க நாற்றெண்பது நாழிகை நரடைப்புத் தீரும். கொமக்கை. வேர், நற் சந்தனம், கலங் கொம்பு, சீரகம், ஈர வுள்ளி இவை கசாயம் வைத்து இறுத்து வெண்காரம் விராகனிடை.½ வெள்ளரி விரை விராகனிடை.உ, கசாயம் வாத்தரைத்துக் குழப்பி மூன்று நாள் கொள்ள நீர்கட்டு, மேகம், வெள்ளை நிற்கும்.

தேத்தாங் கொட்டை சீவி செவ்விள நீரில். வாத்தரைத்து எலுமிச்சம் பழச் சா விட்டுக் கொடுக்கவும்.

<u>வலஞ் சல மடைப்புக்கு:-</u>

கற்பூர வல்லியிலைச் சாறு ஊரி, விளக்கெண்ணெ உரியில் குழப்பிக் கொதிக்க வைத்துக் கொடுக்க ரெண்டு நாழிகையில் மலஞ் சலம் விடும்.

நாலு கடுக்கா அரைத்து உழக்கு விளக் கெண்ணெயில் குழப்பிக் கொதிக்க வைத்துக் கொடுக்க வலஞ் சலம் விடும்.

ஈரவுள்ளி ஒரு சிறங்கை பரிஞ்சு முடக் கொத்தான் ஒரு பிடி விளக்கெண்ணெ உழக்கில் வேகப் போட்டு எண்ணெயுங் கொடுத்துக் கடுகு தின்னவும் வலஞ் சலம் விடும்.

தேன் விராகனிடை.6, கழச்சி இலைச் சாறு விராகனிடை.க, வெள்ளைப் பூண்டு தயிலம் விராகனிடை.6 இது மூன்றுங் கூட்டிக் கொடுக்க ஐந்து நாழிகையில் வலஞ் சலம் விடும்.

பிறமி இலை கசாயம் வைத்து பிழிந்து விளக்கெண்ணெ விட்டு வெண்காரம் ½ பொரித்துப் போட்டுக் கொடுக்கவும் வலஞ் சலம் விடும்.

<u>குன்மத்துக்கு:-</u>

புரசம் பட்டை பலம்.20, இடித்துப் பதினாறு படி தண்ணீரில் போட்டு அரைக்கால க இறக்கி அரைக்கால் மாகாணிக் கசாயத்தில் திரிகடுகு பலம்.க, பொடி பண்ணி வெருகடி போட்டுக் கொள்ளவும். அந்தி, சந்தி ஏழு நாள் கொடுக்கவும். பத்தியம் எருமைப் பாலும் சோறும் முட்டி வெல்லமும் கொள்ளவும். சகல குன்மந் தீரும்.

<u>வயறு பிசிவுக்கு:-</u>

வெள்ளைச் சாறணை வேர், நெருஞ்சி வேர், கடுக்காய் இதில் கசாயம் வைத்து சீரகம், மிளகு, வெள்ளுள்ளி, திப்பிலி, கண்டந் திப்பிலி முடிஞ்சு போட்டுக் காய்ச்சி திரும்ப அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும்.

(வேறு)

திப்பிலி விராகனிடை.உ, பேரிச்சம் பழம் விராகனிடை.4½, ஏலரிசி விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.4½, லவங்கப் பத்திரி விராகனிடை.க, முந்திரிப் பழம் விராகனிடை.4, சன்ன லவங்கப் பட்டை விராகனிடை.க, இது எல்லாம் சூரணம் பண்ணி சர்க்கரை விராகனிடை.½ கலந்து தேனில் குழப்பிக் கொடுக்கவும். வயறு பிசிவு நிற்கும்.

<u>வெறி கொண்ட பித்தத்துக்கு:-</u>

பூளகம் அரைத்து ஒன்றரைப் பாக்களவு அதிமதுர மரைத்து ஒரு பாக்களவு ஆறு மாசம் ஒரு வருஷத்து க காடியில் ஒரு சிறங்கை காடியில் காலமே கொடுக்கவும்.

கழுதை பால் சேர்.1/8, இஞ்சிச் சாறு சேர்.1/8, சர்க்கரை கலந்து காலமே கொடுக்கவும்.

<u>பேதிக்கு:-</u>

ஐந்து எலுமிச்சம் பழம் காசு செம்பில் புளிஞ்சு அரை விராகனிடை துரிசு போட்டு ராத்திரியில் பனியில் வைத்துக் காலமே கொடுக்க வயறு கழியும். பேதியாகும். ஆஉல் பாலுஞ் சோறும் பச்சைப் பயறு போட்டுக் கஞ்சியாகிலும் குடிக்க நிற்கும். இதில் பேதியாகாவிட்டால் நீர் பீக்கங் காய்க் கூடு கொண்டு வந்து அந்தக் கூட்டைக் காடியை விட்டுக் காசு செம்பிலூற வைத்துப் பிசைந்து இறுத்துக் கொண்டு அந்த நீரைத் திரும்பக் காசு செம்பில் விட்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டு துரிசு விராகனிடை.½, போட்டு பனியில் வைத்துக் காலமே கொடுக்கவும். நன்னாரி வேர், முசுமுசுக்கை சீரகம், எருமைப் பால் வாத்துரைத்துச் சர்க்கரை கல்.நீர்.கொடுக்கவும். நல்ல வெல்லம் முட்டிக் கருப்புட்டி இவை ஒரொன்று ஒரு எடை புதுச் சட்டியில் வேறாகக் குறுணி தண்ணியாக்கக் கரைத்துத் தன்னிறுத்துக் கொண்டு வேறு வேறு குழம்பாகக் காய்ச்சிக் கொண்டு காள்வாயின் பால் ஒகைக்கு ஒரு விராகனிடை குழம்பு கூட்டி இப்படி மூன்று நாள்க் கொடுக்கவும். எப்புடிக் கொத்த பித்தமுந் தெளிந்து வெறியும் தெளியும். நெல்லிக்காய் சாறு நாழி,க கையாந்தகரைச் சாறு நாழி. பால் நாழி, அதிமதுரம் பலம்.க, எண்ணெ உரி

புகட்டி மெழுகு பதத்திலும் கருகிட்ட பதத்திலும் வடித்து முதல் நாள் தயிலம் தோய்த்து மற்று நாள் முழுகுவது. அப்போ செவியிலும் கண்ணிலும் மூக்கிலும் வார்த்துப் பயறும் பூலாயிலையும் அரைத்து முழுகவும். பயித்திய முள்ள தெல்லாம் தீரும்.

(வேறு)

நெருப்பிலே புதுச் சட்டி வைத்து ஐந்தாறு துளி தேன் விட்டு அதிலே வீராவிலை போட்டுக் கிண்டி அந்த ஆவியைப் பிடிக்கப் பித்த மிறங்கும்.

<u>பித்தம் பிதத்துகிறதுக்கு:-</u>

பருத்தி விரை, அதிமதுரம், பொடி செய்து எலுமிச்சம் பழச் சாற்றில் சாரித்து உச்சந் தலையில் பூசத் தீரும். நெல்லிக்காய்ச் சாறும், கையாந்தகரைச் சாறும், பொன்னாங்காணி தழுதாழை எலுமிச்சம் பழம் வகைக்கு சாறு நாழி நல்லெண்ணை நாழி, பசுவின் நெய் நாழி இவை சாரித்து ஏலம் பலம்.க, சாதிக்காய் பலம்.½, மிளகு பலம்.க, சுக்கு பலம்.½, மஞ்சள் பலம்.¼, பொடி செய்து கலந்து ஒரு விறகா பெரிய விட்டு வடித்து வேடு கட்டி ஒன்றை விட்டொரு நாள் ஆகிலும் நாய் நாளைக் கொருக்காலாகிலும் முழுகவும்.

<u>மேகத்துக்கு நெய்:-</u>

பசுவின் நெய் படி.உ, பால் படி.உ, நாலொன்றுகக் காய்ச்சி சம்பங் கிழங்கு தாழை விழுது ஆரை வேர் பொன்னாங்காணி சமூலமும் சிறுகீரை, சமூலமும் தண்ணீர் விட்டான் கிழங்கு, பனைவேர், பூமி சர்க்கரைக் கிழங்கு இது வகைக்கு சாறு படி.¼, ஏலம் விராகனிடை.4, லவங்கம் விராகனிடை.5, கருஞ்சீரகம் விராகனிடை.உ, அதிமதுரம் விராகனிடை.உ, கோஷ்டம் விராகனிடை.க, சிறுநாகப்பூ விராகனிடை.க, கொத்தமல்லி விராகனிடை.க, சூரணம் பண்ணி நெய் திரண்ட பதத்தில் சூரணம் போட்டு நெய் வடித்து சர்க்கரை படி.க, கூடப் போட்டு அந்தி, சந்தி ஒரு கரண்டி கொடுக்கவும். பத்தியம் சவரம் புருப்பு, மிளகு நீர் முருங்கைக்காய், இலை, அரைக்கீரை பசுவின் பால் நெய் கூட்டவும். மேகம் வறட்சி யிருமல் அஸ்தி சுரம் காசி முதலானதுந் தீரும்.

<u>பிரமியத்துக்கு:-</u>

வெள்ளைக் குன்றி யிலை பறித்து கொட்டைப் பாக்களவு வெள்ளாட்டுப் பாலில் 3 நாள் கொடுக்கவும். திட்டமாக நிற்கும். இது மலையாளன் சொன்னது.

<u>வெள்ளை விழுகிறதுக்கு:-</u>

எருக்கம்பூ காலமே மூன்று பூப் பறித்துத் தின்னவும். இப்படி ஏழு நாள் தின்ன வெள்ளை விழுகிறது நிற்கும். கத்தாழஞ் சோறு வாங்கிக் கழுவிப் போட்டு எடுத்து இதில் சர்க்கரையும் சீரகமும் பொடி பண்ணிப் பிசைந்து சுண்ணாம்புக் கல் புதுக் கலசத்தில் போட்டுத் தண்ணீர் வார்த்துப் பனியில் வைத்து அந்தத் தண்ணீர் யிறுத்து முந்தின மருந்து கலந்து ரெண்டு வேளையும் 3 நாள் கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

எலுமிச்சம் பழச் சாறு உழக்கு பசுவின் பால் உழக்கு கூட்டிக் கொடுக்கவும்.

கீழா நெல்லி அரைத்து மோரில் கலந்து பிசைந்து வடிகட்டிக் கொடுக்கவும்.

நல்ல அத்தியிலை சமூலம் அரைத்து நராகாரத் தெளிவில் பிசைந்து பிழிந்து கொடுக்கவும். இருவது வகைப் பிரமியமும் தீரும். பத்தியம் வெண்ணீருஞ் சோறும்.

முள்ளிலவம் பட்டை இடித்து சாறு நாழி, சீரகம் விராகனிடை.உ, பொடி பண்ணிப் போட்டுச் சர்க்கரை பலம்.½ போட்டுக் குழப்பி மூன்று பொழுது கொடுக்கவும் பத்தியம் புளி, புகை தவிர்க்கவும். புதுச் சட்டியில் அரைச் சேர் கல்க் கண்டு போட்டு கையாந்தகரை சாறும் அந்தக் கல்கண்டு மறை விட்டு வெய்யிலில் சூரிய புடமாக வைத்து நினைத்த வேளை யெல்லாம் தின்று வரவும். வெள்ளை விழுகிறது நிற்கும்.

<u>பிள்ளை விழ:-</u>

செவிகழுர் கிழங்கு அரைத்து தொப்புளில் தடவவும். பிள்ளை விழும். நல்ல அத்தியிலை வெந்நீர் வார்த்துப் பிசைந்து வடித்துக் கால்படி உள்ளுக்கு கொடுக்கவும். பிள்ளை விழும். உடனே கால் கழுவிப் போடவும். இல்லா விட்டால் குடல் விழும்.

<u>காதில் சீ விழுகிறதுக்கு:-</u>

பலகறை வசம்பு, வெள்ளைப் பண்டு, முருங்கைப் பட்டை, கடு. திண்ணுப் பாளை வேர், எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து வேப்பெண்ணையில் கலந்து எரித்து வடித்து காதில் குத்த காதிலுள்ள வியாதி யெல்லாந் தீரும். குதிரை லத்தியும் இஞ்சிச் சாறும் புளியவும். தயிரும் வேளை வேரும் உள்ளியும் நசுக்கிச் செவியில் பிழியவும்.

திப்பிலி, மூத்தக்காசு, சிறந்திடும் வசம்பு சுக்கு
ஒப்பில்லாப் பெரிய காயுமோங் குமிந்துப் போடுள்ளி
யிப்படி யெருக்கஞ் சாத்தில் அரைத்து நல்லெண்ணை வெந்து
ஒப்புடன் செவியில் வார்க்க ஓங்கு மெய்த் துயரம் போமே.

முள்ளியு முருங்கை வேரும் முருக்கெருக் கிலையும் வேரும்
கள்ளியும் வசம்பு நண்டு நிணமுடன் கலந்த வெண்ணை
தள்ளியும் டுடுக்க வேண்டாம் செவி தனில் நேரே காட்ட
வெள்ளியி லையைய கண்ணுய் விட்டிடுஞ் செவிநோய் தானே.

இலுப்பைச் சாறு.3/4, நல்லெண்ணை.3/4, அதிமதுரம் விராகனிடை.4, கூட்டி எரித்துக் காதில் குத்தி அடைக்கவும். பிறண்டைக் கிழங்கும் முத்தின புங்கம் பட்டை வசம்பு வெள்ளுள்ளி நல்லெண்ணையி லெரித்துக் காதில் குத்தச் சீ மாறும்.

சீப்ப் பாயிற காதுக்கு:-

புங்கம் பட்டை, நாவல் பட்டை, சித்தா முனக்கம் வேர், எருக்கிலைச் சாறு, உள்ளி, வசம்பு, நல்லெண்ணை கூட்டி எரித்து செவியிலிடவும். சீ மாறும். அரி மல்லிகை யிலையும் கோடக சாலை இலையும் புறுச் கொல்லி யிலையும் நல்லெண்ணெயில் எரித்துக் காதிலிட சீ மாறும்.

நீர்ப் பீனிசத்துக்கு:-

நல்லெண்ணை படி.க, வேப்பெண்ணை படி.க, எலுமிச்சம் பழச் சாறு ஆடாதோடைச் சாறு, வெத்திலைச் சாறு, சாட்டறணை யிலைச் சாறு, குப்பை மேனிச் சாறு வகைக்குச் சாறு படி.க, வசம்பு, வெள்ளைப் பூண்டு கூட்டிக் காய்ச்சி கடுகு திரண்ட பதத்தில் வடித்து ஒன்றை விட்டொரு நாள்முழுகவும். ரெண்டு வேளையும் நசியம் பண்ணவும். இந்தப் படி ஒரு மண்டலம் முழுகி நசியம் பண்ணவும்.

(வேறு)

நல்லெண்ணை படி.க, பேய்ப்புடல் சாறு படி.க, மிளகு பலம்.3, அபினி விராகனிடை.3, மிளகு பொடி பண்ணி எண்ணையில் போட்டுக் காய்ச்சித் தயிலம் பிறந்த வடிக்கிற பேர்து அபினி பொடி செய்து கலசத்தில் போட்டு வடித்து வைத்துத் தலைக் கிட்டு முழுகவும்.

பீனிசம் சுவாச காசம் இருமலுக்கு:-

ரசம், அரிதார்ரம், சாதிலிங்கம், நவச்சாரம், பசு மஞ்சள் சாறு வாத்தரைத்து சீலையிலூட்டி நாசியில் புகைக்க எல்லாப் பனிசமுந் தீரும்.

பிற விச்சுக்கு மருந்து:-

அடுத்தடுத் தெடுத்துக் குத்தி அதிகமாய் விரைந்து வேத்து
படுத்த நாத் தடுக்கிப் பேசிப் பல்லகது கிட்டி நெஞ்சு
மடுக்கவே கட்டிச் சரமங்கமும் பிறகே வீழல்
திடுக்கிடப் பிறவிச் சென்று செப்பலாஞ் செகத்துள்ளோரே.

முசுத்தை முட்டை புங்கம் முந்திரி க்கைக் கனி பேரிஞ்சு
பதித்தோர் வசம்பு மிளகுள்ளி பழகுஞ் சாந்து பசனிப்பு
குறித்தோ பசு முருத்த வித்து முதிர்ந்த கலையின் கொம்பதுவும்
நசிக்கக் கொடுக்க முலைப் பாலில் நன்யுந்த் தீரும் பிறவிச்சே.

இதக்கு உருண்டை:-

புன்றலுக் கீவ தன்னீர் புதிய தேன் முலைப்பால் சுக்கு
கன்றெரு சந்து கோஷ்டம் கடிய வெள்ளுள்ளி காந்தம்
சென்றெழு சிறப் பலப்பு தெளிவுடரைத்து கூட்டி
மனக் கெடக் கொத்துக் கெல்லர மருந்திது கொடுக்க நன்றே.

இதக்கு தயிலம் உள்ளுக்கு கொடுத்த நவத் சுவாறங்களிறு மிடவும் மருந்து:-

இரதம், கெந்தகம், வெள்ளுள்ளி யியல்பா மிளகு செங்கொட்டை,
சரச முறவேயா வெண்ணை தன்ளே டொக்க வழுத் தெடுத்து
வுறவே குத்தப் பிற விச்சுயுடனே குத்தி யுமை பண்ணிற்
கறவாதுடனே கலையே கொடுத்தித் தயில மிடே.

இதக்குத் தயிலம் காசிடை கொள் பிஞ்சிச் சாறு முலைப் பால் தேறடனே உள்ளே கொள்ளு தன் மூர்த்த வேம்பி னெண்ணெயுடனிட கலந்துனி தாளங்களிடவும் பொறுத்தலாகும் மென்னச் சட மேமி படாதிருப்ப தென்ன திற காதிறவுந் தான் கண்டீர்.

நீராமைக்கு:-

மார்பு கீழ் வயறு தாழும் வகை பட வீக்கமாக
நேரொத்த காயம் வத்தி நிறமது வெளுத்து நாளும்
நீர் வத்தித் தண்ணீர் தேடும் நினைவது பலவுங் கேள்க்கும்
வார் கூட்டு முலையாய் சொன்ன வயத்தில் நமமை போமே.

நீராமை பெருமை உதர தோஷங்களுக்கு எண்ணை:-

சுக்கு, மிளகு, திப்பிலியும், சோமசப்பு வெள்ளுள்ளியும்
தக்க டுக்காய் யிவையுடனே சாஸ்திர வேதிக் கிழங்குட நீர்
மிக்க தாக வேப்பெண்ணை நீமமல்க் குழம்பு போலெரித் தருந்த
தக்க மறவே அறமல் தோன்றுது தர தோஷமுமே.

பீனிசத்துக்குப் புகை:-

மதமத்தை சமூலம் பிடிங்கி வந்து காய் வேர் முதலரிந்து காயபட போட்டு இடித்து சூரணம் பண்ணி சுங்களிலே போட்டு புகை பிடிக்கவும். இத்துடனே புகையிலையும் கூட்டிக் குடிக்கலாம் இதுக்குத் தீரும் வியாதி சகல பனிசம் இருமல் மூக்காலே விழுகிறது இரைப்பு சுரம், தலை வலி இது முதலான வியாதி யெல்லாந் தீரும்.

வாய்வு குன்மத்துக்கு:- 27.12.63

அசனம் சொரிக்கிற போது கிளறி மிதந்து கொண்டேறி மார்பு குலையில் சொருகி வலித்துக் கொண்டிருக்கும். இதுக்கு நல்ல முத்தின தேங்காய் ரெண்டு திருகி பால் பிழிந்து அதை நாழிப் பாலாக நீர் வார்த்துப் பெருக்கி அத்துடன் மிளகு.3/4, அசமதாகம் 3/4, பெரிய சுக்குத் தேறு.2, பெரிய சாறடை வேர்.உ, வெள்ளுள்ளிப் பூண்டு.2, முருங்கைப் பட்டை.உ, பாக்களவு அரைத்துக் கரைத்துக் கிளறிக் காட்டவும். நீர் சுவறி நெய் புறப்பட்டவுடனே இறக்கி கிளறிக் கருக்காய் வைத்துக் கொண்டு இந்தக் கடுகு சிறு வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். செருப்படிச் சாறு உழக்குக் கூட்டிப் பண்ணவும்.

வயத்து வியாதி நவ குன்மத்துக்கு:-

பெருந் தும்பைச் சாறும் நற்சீரகமும் வறுத்துப் பொடியுங் கூட்டி உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்று நாளைக் கொடுக்கால் நாலு நாள் கொடுக்கவும். நவ குன்மந் தீரும்.

மூலத்துக்கு:-

சாதிலிங்கம் விராகனிடை.க, பசுவின் வெண்ணை யில ரைத்து மெல்லிய சீலையில் பிரட்டி பதினலாகக் கிழித்து ஏழு நாள் பதிவு புகை புளியந் தணலைக் கலையத்திலே யிட்டு ஆதனத்தில் வைத்துச் சலையாலே புகை போகாமல் சுற்றி ஆசனத்தில் புகை பிடிக்க மூலங் கரையும் பவுத்திரம் ஜீசனப் பிளவை தீரும்.

மூல மென்னப் பட்டதுக்கு:-

(நத்தை கொண்டு வந்த பச்சையுடன் சுதை வாங்கிக் கருங் கோழி வெள்ளீர் யிறகு வாங்கிப் போட்டு கறியாகச் சிறகச் சிறுக (மேல் அடுத்த ஏடு இல்லை)

வெகு மூத்திரத்துக்கு:-

நீர்முள்ளி விரையும் கல்நாருங் கூட்டிப் பத்து நாள் புன்னைக் காயளவு கொடுக்கவும் வெகு மூத்திரம் பிறமியம் சல மிருதியு மிறங்கும் இதுக்கு ஈரவுள்ளி, புன்னைக்கு கல்லுப்பு உரி, வேக வைத்து காலமே பாக்களவு தின்னவும். பழம் பாசி வேர் சூரணம் பண்ணி இள வெந்நீரில் கொடுக்கவும்.

மது மேகத்துக்கு:-

பறங்கிப் பட்டை பலம்.4, அதிமதுரம் பலம்.உ, மரமஞ்சள் பலம்.½, கஸ்தூரி மஞ்சள் பலம்.½ இது நாலும் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு ஏலம், லவங்கப் பட்டை கிராம்பு, செண்பகப்பூ, செங்கழனீர் கோஷ்டம் வகைக்கு பலம்.½, சூரணம் பண்ணி முந்தின சூரணம் ரெண்டு பங்கும் பிந்தின சூரணம் ஒரு பங்கும் கூட்டிப் புங்கம் பால் விட்டுப் பிசைந்து நல்லெண்ணை உழக்கு விட்டுப் பிசைந்து பார்க்கக் கம்பி நார் போலே ஆகும். வாழையிலை தொன்னை தைத்து அதுக்குள்ளே வைக்கவும். தேத்தாங் கொட்டை ஐந்து உருண்டை முழுங்கவும். ரெண்டு வேளையும் கொள்ளவும். பத்தியம் வாழைக்காய் முருங்கைக் காய் கூட்டவும். மது மேகம் உள் தெல்லாம் யிருபத்தொரு மேகமுந் தீரும். கைப்பு புளிப்பு விடவும்.

காது கேளாததுக்கு எண்ணை:-

பேய்ச் சுரை விரை இந்துப்பு நல்லெண்ணையில் கொதிக்க வைத்துச் செவியில் வார்க்கவும். நண்டு நிணமும் முருங்கை வேர் இலைக் கள்ளிச் சாறு எருக்கம் பழுப்புச் சாறு உள்ளி வசம்பு கூட்டி நல்லெண்ணையி லெரித்து செவியில் வார்க்கவும். சாறணைக் கிழங்கு உலர்த்திப் பொடி செய்து இரண்டு பங்கு அதிமதுரம் பொடி ஒரு பங்கும் கலந்து வாழைப் பதத்திலாவது சர்க்கரையிலாவது தேனிலாவது எட்டு நாள் உள்ளே கொள்ளவும் தீரும்.

தலைக்கு எண்ணை:-

சடைக் கத்தரி யிலைச் சாறு ரெண்டு பங்கும் அதிமதுரம் கோஷ்டம் அரைத்து பதத்தில் வடித்து முழுகவும். கரப்பான் தீரும். நெல்லிக்காய் கெந்தகம் விராகனிடை.உ, இலைக் கள்ளிச் சாறு வர்த்தரைத்துக் கொதியிட்டு அந்த விடம் உடம்பெல்லாம் பூசவும். இப்படி 3 நாள் பசவும். அசந்த விடம் அனல் வந்தால் உடம்பு எரி வெடுத்தால் இது பசாமல் விட்டு பிறகு வெள்ளுள்ளித் தயிலம் சாத்துப் பசி மறுநாள் வெந்நீர் விடவும், குளிக்கவும். வெது விட்டு வரவும். அசந்த வாதத்துக்கு இந்த தயிலம் விட்டுப் பிடித்து வரவும்.

அசந்த வாதத்துக்குப் பூச்சு:-

சதிரக் கள்ளிச் சாற்றில் மிளகு காய்ரைத்துக் குழப்பி அசந்த விடத்திலே பூசவும், அனல் வந்தால் மருந்தை விட்டுப் போட்டு வேது விடவும்.

மருந்தீட்டுக்கு:-

குதிரை முன்னங் கால் சிறகு எடுத்து தேத்தாங் கொட்டை பிரமாணம் அரைத்து கருகென்னை உழக்கு பழந் தண்ணீர் உழக்கு கரைத்து 3 நாள் கொடுக்கவும் எருமைத் தயிர் அறுபது நாழிகைத் தயிரில் சங்கம் பழச் சாறு படி.1/8, விட்டு அதிமதுரம் புளியங் கொட்டை அளவு அரைத்துக் குழப்பி 3 நாள் கொடுக்கவும். பிறண்டை அரிந்து பானையில் அரைப் பானை போட்டு முக்கால் பானை தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து வேடு கட்டி கடுகு முத்தின தேங்காய் ரெண்டு திருகி அதின் மேல் வைத்துச் சட்டி கொண்டு மூடி நாலு நாழிகை எரித்து எடுத்துத் தேங்காய் திருவலைப் புளிய நெய் விழும். அந்த நெய்யிலே வெள்ளைக் காக்கணம் வேர் விழுது பாக்களவு கடுகு

ரேர்கணி விழுது புளியங் கொட்டை அளவு இரண்டும் கலந்து கொடுக்கவும். வ்யம மிஞ்சியும் கழிந்தால் பாலுஞ் சோறும் உண்ணவும். அவுரிச் சாறு, துளசிச் சாறு, முனத்தக்காளி இலைச் சாறு சமன் கூட்டிச் சட்டி காய வைத்து ஒரு கறி மிளகு போட்டு வறுத்து எட்டக் கொட்டிக் கொண்டு அந்த சட்டியில் இந்தச் சாறு வத்தி நாழி உதி பாகாகிற வேளையில அந்த மிளகு பொடி செய்து அ.வி. 3 நாள் கொடுக்கவும். இதுக்கு மருந்திடு செங்க மாறி ஜமத்தம் சோகை, பாண்டு ரோகம் இதுகளெல்லாம் தீரும். மருந்து செரிக்கிற வேளையிலே மயக்கம் வரும். பயப்படாமல் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

(வேறு)

ஊமை பறங்கி வறச்சூலை ஓடிசை அத்திக்காய் பறங்கி
ஒழுங் கண்ணீர் முரசூலை ஒடும் புருதி மவுத்திர
தேமவாத சனி சூலை திருந்தும் கழுத்து மாலையுடன்
சீரிய கடிகை தலை சூலை சர கிரந்தி ஆண் புத்து
நாம கள்ளிப் புக்கமை நடுவிற் கிரந்தி லிங்க மதில்
நாடும் புத்தப் பெருவாதம் நன்மெய் முன்னுள் முழுகிய பின்
தாம ஏழலே புகைத்த பின்பு தண்ணீர் நாலு நாளிருக்க
தனியும் வியாதியும் பொன்றும் தானே கூட்டிக் கொள்ளீரே.

<u>புவனபதிக் குளிகை:-</u>

வாத சூலை கிரந்திகளை வருத்தும் புவனபதிக் குளிகை
மருவும் வெள்ளை அரைக் களஞ்சு வளரும் கெந்தக முரைக் களஞ்சு
சூதஞ் சாதிக்கா யாறு துருசு சுந்த மிரு களஞ்சு சோதிலிங்க மரிதாரம்
சொன்ன கல்நார் அரகளஞ்சு பேதம் கால் மதங் காரீயம் பின்பு காரம் பத்திரியம்
பெருகுங் குளி எருக்கங் கரியும் பிரியமாகப் பன்னிரண்டு
நாத மரத்தை பேரரத்தை நவில் வீரெண்டு பருத்தியிலை
நாற்கு சாத்திலே உருண்டை நன்மெய்ச் செய்யு முமையாளே.

இரதம் பலம்.3, சாதிலிங்கம் பலம்.உ, பொன்னரிதாரம் பலம்.உ, துருசு பலம்.க, நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்.க, கல்நார் பலம்.உ, கல்மதம் பலம்.உ, சூதம் பலம்.க, சித்தரத்தை பலம்.க, பேரரத்தை பலம்.க, சாதிக்காய் பலம்.3, காரீயம் பலம்.உ, வெள்ளைப் பாசாணம் பலம்.½, கிராம்பு பலம்.உ, எருக்கங் கரி பலம்.உ, கள்ளிக் கரி பலம்.உ, சாதிப் பத்திரி பலம்.உ இவ் வெல்லாம் கூட்டி பருத்தி யிலைச் சாறு வாத்தரைத்து உருண்டை பண்ணி ஏழு பொட்டணம் புகைத்து முழுகின பிறகு ஒரு பொட்டணம் புகைக்கவும். விளக்கெண்ணெ வார்த்து முழுகவும். எட்டு நாளைக்கும் பிறகு அந்தி சந்தி தண்ணீர்க்குள்ளே இருக்கவும். கைப்பு, புளிப்பு விடவும்.

<u>பவுத்திரத்துக்கு:-</u>

பொன்னரி தாரம், சாதிலிங்கம் இவை களஞ்சு கருவேலிலை பிடி கூட்டி அரைத்து நல்லெண்ணெயில் எரித்து புண்ணிலிடவும். ஒரு மாதம் பிராய் வேரும் பாவட்டை வேரும் எலுமிச்சங் காயளவு அரைத்து நெய்யி லெரித்து ஏழு நாள் கொடுக்க பவுத்திரமாறும்.

தேள் உழக்கு வளையிலொட்டுக் காரம் காசுக் கட்டி களிப் பாக்கு நாகாவுடு சதை கண்டங்கத்திரி முள் வாங்கிப் போய்டு பிட்டவியலாக அவிச்சு முன்னரைத்த மருந்து தடவி புண் வாயில் கட்டவும். மருந்து கட்டின பிறகு நாகப் பாம்பும் சிறு புள்ளடியும் கருங் குங்கிலியமுங் கூட்டி நல்லெண்ணெயில் பொரித்து அடையாகத் தட்டிப் புண் வாயில் கட்டவும். புறை சேர்ந்தேறும். துளசி அரைத்து நல்லெண்ணெயில் பொரித்து இடத் தீரும். இலைக் கள்ளி யிலை புட்டவியலாக அவித்துப் புண் வாயில் கட்டத் தீரும். வெண்காரம், சாதிக்காய், தேத்தான் கொட்டை மூன்றும் புங்கம் பால் வாத்தரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு முலைப்பால் வாத்தரைத்துப் பூசவும். பிரண்டை நருக்கி வேக வைத்து சாறு இடித்து செங்கல் காய்ச்சி போட்டு புகை காட்டவும்.

<u>பிள்ளை விழ:-</u>

ஒட்டரை பொடி செய்து இளநீரில் போட்டு வைத்து மத்த நாள் குடிக்க இப்படி 3 நாள் குடிக்க விழும்.

<u>புத்துக்கு:-</u>

தேங்காய்ப் பால்.உ, வெம்பாடம் பட்டை மருதம் பட்டை உள்ளி, வசம்பு, கடுக்காய், காசுக்கட்டி, களிப் பாக்கு, நாகப்பாம்பு, புங்கம் பால், சிறுபுள்ளடி ஒதியம் பட்டைச் சாறு இது வெல்லாந் தேங்காய்ப் பாலுடனே கூட்டி எடுத்துக் கடுகு திரண்டவுடனே வடித்துக் கோழி இறகு போட்டுத் தூவைத்து இடவும். லிங்கப் புத்துக் வாய்ப்புத்து அரைப்புத்து கண்டமாலை கால் புத்து இவை தீரும்.

<u>குவளை விப்புருதிக்கு:-</u>

தேங்காய் நெய்.3/4, வெம்பாடம் பட்டை, உள்ளி, வசம்பு, சீனக் காரம் பலவிடை, காசுக் கட்டி, களிப் பாக்கு நாகப் பாம்பு, புங்கம் பால் சிறு புள்ளடி இவை பொடி செய்து எண்ணெயில் போட்டு எரித்துக் கண்ணில் வார்க்கவும். எலுமிச்சங் காயிலரிசி யடைத்துச் சுட்டு முலைப் பாலில ரத்துக் கண்ணில் பிற வளையமாகப் பூசவும்.

வாய்ப் புண்ணுக்கு:- புழுச் சாக மருந்து: வலி நிற்கப் புண்ஆற மருந்து:-

கொடிவேலி வேர்ப் பட்டை தேன் வார்த்து மை போலே அரைத்து இறுக உருட்டி இந்த உருண்டைக்குச் சரி நல்ல வெல்லங் கூட்டி பிசைந்து உருட்டி வாயில் புண்ணிலே வைத்துப் புழுச் சாகும். வலியும். நிற்கும். புண்ணும் ஆறும்.

28.12.63. (வேறு)

சாதிலிங்கம் விராகனிடை.க, பசுவின் வெண்ணெயிலரைத்து மெல்லி சீலையிலூட்டி பதினலாகக் கிழித்து ஏழு நாள் பதினலு புகையும் புளியந் தணலைக் கலையத்திலிட்டு ஆசனத்தில் வைத்து சீலையாலே புகை போகாமல் சுத்தி ஆசனத்தில் புகை பிடிக்க மூலங் கரையும். பவுத்திரம் ஆசனப் பிளவை இதுகளெல்லாம் குணமாம்.

தாளிச மாதி வடகம்:-

அபின் மருந்து விராகனிடை.உ, கிராம்பு விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, சாதிப் பத்திரி விராகனிடை.க, அதிவிடயம் விராகனிடை.க, சீரகம் விராகனிடை.க, வெந்தயம் விராகனிடை.க, கோரைக் கிழங்கு விராகனிடை.க, குடசப் பாலை விராகனிடை.க, காட்டாத்திப் பூ விராகனிடை.க, குரசாணி ஓமம் விராகனிடை.க, அசமதாகம் விராகனிடை.க, கசகசா விராகனிடை.க, கீரைப் பருப்பு விராகனிடை.க, வில்வப் பழம் விராகனிடை.க, நீர்முள்ளி விராகனிடை.க, கழல் பருப்பு விராகனிடை.க, புளியங் கொட்டை தோல் விராகனிடை.உ, அபினி கோன்றைக் கிழங்கு பிசின் ரெண்டு வகை இது நாலும் வறுக்காமல் மத்த மருந்தெல்லாம் சாத்து வெச்சென வறுத்து பொடி பண்ணி தயிர் வார்த்து நேக அரைத்து மாதளங் காய் விரை வாங்கிப் போட்டு அதில் மருந்து அடைத்து சீலை சுத்தி அதில் மேல் சாணி விழலகத்து மை பூசி பத்து விரட்டியில் புடம் இடவும். சாணி கருகினவுடனே எடுத்துச் சாணி சீலை தள்ளிப் போட்டுக் காயட்னே கூட்டி அரைக்கவும். பிறகு அபினி மருந்து கூட்டி அரைக்கவும். நேக அரைத்துக் களச்சிக் கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலத்தி வைத்துக் கொண்டு ஒரு உருண்டை தேனில் தயிரில் அநுபான விசேஷத்திலிடவும். இதுக்கு உஷ்ணக் களிச்சலாதல் கடுப்பு சீதம் வயறு வலி இது முதலான களிச்சலெல்லாந் தீரும். பத்தியம் துவரக் கறி கூட்டவும்.

உஷ்ணம் சீதம் இதுக்கு:-

மாதளம் பழச் சாறு உழக்கு சர்க்கரை விராகனிடை.3, கிராம்பு பலம்.14 பூ வறுத்து பொடி பண்ணி கூட்டிக் குழப்பிக் கொடுக்கவும். அதிசாரக் களிச்சலும் குணமாம்.

(வேறு)

முருங்கை வேர் காசளவு மிளகு.30, வெள்ளுள்ளி பலம்:க அரைத்து நல்லெண்ணெயில் பிரட்டி முழுங்கவும் குணமாம்.

வாய்வுக்கு:-

பிண்ணாக்கு பிறண்டையும் வெள்ளுள்ளி திப்பிலி, மிளகு அரைத்து நல்லெண்ணெயில் முழுங்கவும். வாய்வு தீரும்.

சகல குலைக்கு:-

தாளிச பத்திரி பலம்.க, மிளகு விராகனிடை.8, சுக்கு விராகனிடை.6, திப்பிலி விராகனிடை.உ, தெசாபுரம் விராகனிடை.ரு, கூகை நீர் விராகனிடை.உ, லவங்கப் பட்டை விராகனிடை.உ, ஏலம் விராகனிடை.உ; இதுகள் கூட்டி இடித்துச் சூரணம் பண்ணி தின்னவும். வாய்வு குணமாம்.

உள்ளியுடன், காயமும் வெல்லங் கூட்டிச் சாறு காய்ச்சிக் குடிக்கவும்.

(வேறு)

சித்திர மூலப் பட்டை இடித்து வஸ்திர காயம் பண்ணி இந்தப் பொடி விராகனிடை. எழில் சாதிலிங்கம் விராகனிடை.1½, நேசுப் பொடி பண்ணி இதைப் பதினலு பங்கு பண்ணி சீலையில் பதினலு பொட்டணங் கட்டி ஏழு நாள் புளியந் தணலில் புகை போடவும்.

உள்நாக்கு மருந்து:-

ரசகற்பூரம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, விளங்கம் விராகனிடை.க, இதுக்கு பழைய வெல்லம் சமன் கூட்டி அரைத்து பதினலு உருண்டை பண்ணி ஏழு நாளைக்குப் பதினலு உருண்டை முழுங்கவும். உருண்டை பொரி மாவில் பிரட்டி வைத்துக் கொண்டு ரெண்டு நேரமும் முழுங்கவும். உருண்டை முழுங்கினவுடனே ரெண்டு நேரமும் புகை போடவும். வாயிலே தாக்கினால் உடனே மருந்தும் புகையும் விட்டு விடவும். ஒரு நாள் ஆறப் போட்டு மறுநாள் விளக்கெண்ணெய் யிட்டு உசிலம் பொடியிட்டு வெந்நீர் காய்ச்சி ஆததி முழுகவும். பிறகு ரெண்டு வேளையும் வெந்நீர் விட்டு வரவும். மூன்று நாளைக் கொருக்கால் தலை முழுகவும். இந்தப் படி தப்பாமல் பண்ணவும், பத்தியம் உப்பு, புளி விடிவிக்கவும். வெந்நீர் தண்ணியும் சோறும், இர வெங்காயமும் கூட்டவும். பசுவின் பால் கூட்டவும்.

(வேறு)

வேப்பெண்ணை படி.க, நல்லெண்ணெ படி.க, உள்ளி, வசம்பு, பூத கரப்பான் பட்டை, சாதிலிங்கம் விராகனிடை.க, காயம் விராகனிடை.க, நாரத்தம் வேர், எலுமிச்சம் வேர், மாவிலிங்கம் வேர் இது மூன்றும் ஒரு பங்கு இவை அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து செழு மலர்க் கொன்றை வேர் ஒரு பங்கும் கூட்டி துவைத்து ஒரு காசிடை உள்ளுக்கு கொண்டு தலைக்குத் தேய்த்து கீழே இறக்கவும். மகோதரமும் வாதமுந் தீரும். வக்கம் காணப் பட்டால் மிகுதி கொள்ளவும்.

வேறு:-

வெள்ளைக் காக்கை வேர், பூனைப் புடுக்கு வேர் விகைக்கப் பாக்களவு விழுது பிரமிச் சாறு உரி சதிரக் கள்ளிப் பால் சுக்கு, மிளகு, கடுகு, நெல்லி முள்ளி, பசுவின் நெய், உரியிலரைத்துக் கரைத்து எரித்துக் கற்கத்துடனே இறக்கி வைத்துக் கொண்டு பாக்களவு கொடுக்கவும்.

காமாலை பாண்டு சோகை வறண்ண வாய்வுக்கு:-

கிட்டம் பலம்.10, காந்தம் பலம்.5, அரப்பொடி பலம்.5, இது பொடி பட்டணிக் கலசத்தி லெடுத்து அந்தக் கலசத்தில் ரொம்ப கீளாநெல்லிச் சாறு விட்டு நிழலுலத்தி உலர்ந்த பிறகு மறுபடி பொடி பண்ணித் தேங்காய்க் குடுக்கையி லடைத்து ஒரு விராகனிடை தாள் தயிரிலாதல், பழச் சாத்திலாதல், நெய்யிலாதல் வெந்நீரிலாதல் கொள்ளவும். வாய்வு, காமாலை சோகை, பாண்டு சகல வாய்வுந் தீரும்.

குலைப் புண்ணுக்கு மாத்திரை:-

ரசம் விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.க, மாதளம் பட்டை விராகனிடை.க, ஆந்த தண்ணீர் விட்டரைத்துச் சாமம் பிரை யளவு மாத்திரை பண்ணி நிழலுலத்திப் புன்னெண்ணெயில் உரைத்து சீலையில் பிடித்துப் புண்ணில் போட்டுக் கோவையிலை அரசந் தளிர் வாட்டிக் கட்டவும். வெந்நீர் வார்த்துக் கழுவிப் போட்டுக் கட்டவும்.

சிறந்திப் புண்ணுக்கு:-

வெள்ளைக் கெவுரி, அரிதாரம், துத்தம், ஜரிச் முலைப்பால் விட்டரைத்து இறையளவு உருண்டை பண்ணி நிழலில் உலத்தி தண்ணீரிலுரைத்துப் புண்ணில் போடவும்.

ரசம் விராகனிடை.க, மிருதார் சிங்கி விராகனிடை.க, வெண்காரம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.¼, கார்ந்தம் விராகனிடை.10 சுத்தி பண்ணி விளக் கெண்ணெ வாத்தரைத்துப் புண்ணில் போடவும். சாதிலிங்கம் விராகனிடை.க பசுவின் வெண்ணெ போட்டுக் கலம் செம்பாலிளைத்துப் புண்ணில் போடவும்.

சோகைக்கு:-

அரப்பொடி.உ, காந்தம் பலம்.உ, கிட்டம் பலம்.உ, மிளகு பலம்.4, திப்பிலி பலம்.க, ஓமம் பலம்.க, சதகுப்பை பலம்.க, கருஞ்சீரகம், கடுக்காய்த் தோல் பலம்.க, அரத்தை பலம்.க, வெள்ளி பலம்.8, கையாந்தகரைச் சாறு காட்டு மல்லிகை அவுரி இலைச் சாறு விட்டரைத்து இருபது எலுமிச்சம் பழத்துக்குள்ளே அடைத்து சாம முக்குணி பானையில் போட்டுச் சாத்துக்குள்ளே பழத்தை வைத்துச் சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து பொங்கி வராமல் அடுப்பில் வைத்து சாறு சுவற எரிக்கவும். பதம் வாசனை குழம்பும் அப்போ இறக்கிச் சாங்கு சீதளமான பிறகு இருப்புக் கறண்டியாலே கடைந்து கலசத்தில் வைத்து நேரத்துக்கு கொட்டைப் பாக்களவு கொள்ளவும். பத்தியம் உப்பு, புளி பழஞ் சட்டி இருபது நாளைக்கு ஆகாது. துவரம் பருப்பு முளைக் கீரை, கொடி வழுதலம் பிஞ்சு மிளகு பொடி தூவி வெள்ளைப் புண்டு கூட்டிக் கொள்ளவும்.

வெள்ளைக்கு களிம்பு:-

வெள்ளைக் குங்கிலியம் பொடி பண்ணி வஸ்திர காயம் பண்ணின பொடியும் பசுவின் வெண்ணெயும் கூட்டிக் கூழ் போலே குழப்பிக் கறண்டியில சுற. சுறப்பி அடங்கக் காய்ச்சி தண்ணீர் ஊத்தவும். உடனே ரெண்டு கையிலுந் தேய்த்துக் கழுவவும். வெண்மை வெள்ளிக் காசு போலே இருக்கும். சிமிழில் வைத்துக் கொண்டு சீலையில் தடவி எந்தப் புண்ணுக்கும் போடவும் ஆம்.

வெள்ளைச் செவைக்கு முத்தக் களிம்பு:-

கிளிஞ்சி சுண்ணாம்பு விளக்கெண்ணெ வாத்தரைத்து சீலையில் தடவிப் போடத் தீரும்.

கறுத்த செவை:-

கிளிஞ்சி, சுண்ணாம்பு, நாவி விராகனிடை.4, திரிசு விராகனிடை.க, இது அரைத்துப் பேய்ப் பீர்க்கங் கரி விராகனிடை.உ, கம்பிளி சுட்ட கரி விராகனிடை.உ, கொட்டாங்கச்சிக் கரி விராகனிடை.உ இது வெல்லாஞ் சட்டி விளக்கெண்ணெ விட்டு நன்மெய் மை போலே அரைத்து சீலையில் தடவிப் போடச் சகல சிரணங்களுந் தீரும்.

சிறந்திப் புண்ணுக்கு:-

பழஞ் செருப்புச் சுட்ட கரியும் பழைய விளக்குமாறும் சுட்ட கரியும் மனிதர் முன் கை எலும்பும் போட்டுக் கலத்தில் செம்பு கொண்டிளைத்துச் சீலையில் தடவி போடத் தீரும்.

பெரு வயிற்றுக்கு:-

பேய்ப் பீர்க்கங்காய் இருபது விறகு வெக்கையிலே சுட்டுத் தோல் கருகினவுடனே எடுத்துத் துவைத்துப் பிழிந்து சீலை வடி கட்டிக் காய்ச்சி மிளகு பிடி பொடி செய்து

போட்டு பாகு போலே ஆனல் இறக்கி ஆற வைத்து அத்திக் காயளவு உருண்டை பண்ணிப் பாண்டத்தில் வைத்து 1/8 நல்லெண்ணெயில் தோய்த்து முழுங்கவும். பிறகு கீழு மேலும் போம். மெத்தக் கழிஞ்சால் மோருஞ் சோறும் கொடுக்கவும். பயப்படாமல் இப்படி மூன்று நாள் கொள்ளவும். மூன்று நாள் கழித்தால் கருணைக் கிழங்கு அரிந்து நாழி பச்சரிசியுடனே வேக வைத்துண்ணத் தீரும்.

கவிசைக்கு:-

வெள்ளாட்டுக் கோமியம் செம்மறி யாட்டுக் கோமியம் பசுவின் கோமியம் சதிரக் கள்ளிப் பால், கொட்டான் கிழங்குச் சாறு வகைக்குச் சாறு உழக்கு சட்டியில் விட்டு ரெண்டு நார்த்தங்கா சிறுகச் சிறுக நறுக்கிப் போட்டு ஒரு முத்தின தேங்காய் திருவிப் போட்டு மிளகு உழக்கு கடுகு உழக்கு, கல்லுப்பு உழக்கு இவை பொடி செய்து கூடப் போட்டு பிசறி வேடுகட்டி பகல் மாறு வெய்யிலிலே வைத்து மாறு எடுத்து வைத்து இந்தப் படி பத்து நாள் வெய்யலிலே வைத்து தினம் திறந்து கிண்டிக் கொடுத்து வேடு கட்டி வெய்யிலிலே வைக்கவும். பத்து நாளைக்கும் பிறகு மருந்து கொடுக்கிற போது கருப்புக் கட்டி தின்னக் கொடுத்து நார்த்தங்காய் கீற்றும் தேங்காய்க் கீற்றும் சத்தே தின்னக் கொடுக்கவும்: கவிசை கரைந்து போம்.

(வேறு)

இலவம் பட்டை பலம்.ஹ இடித்துக் கசாயம் வைத்து வடித்துக் கொண்டு முத்தக் காசுக் கிழங்கு மேல் புறணி சீவிப் போட்டு கிழங்கு அரைத்துக் கரைத்து கமுங் குங்கிலியம் ஒரு விராகனிடை பொடி பண்ணித் தூவிக் கொடுக்கவும். பத்தியம் கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். அவரைக கறி கூட்டவும். வாழைக் கச்சல் பூவு, பசுவின் பால் பாசிப் பயறு மிளகு சாறு நெல்லி முள்ளிச் சாறு கூட்டத் தீரும். ரத்தப் பிரமியம் மேக வாய்வுக் கருக்கிடைத்த மேகம் எரிப்புக் கடுப்பு எலும்புருக்கி பெரும்பாடு இவை தீரும்.

மகோதரம் பாண்டு வீக்கத்துக்கு:-

நேர்வாளம் வேண்டியது சாணியில் வேக வைத்து நஞ்சு தோல் போக்கிப் பிறகு திரிபாலைக் கசாயம் வைத்துப் புளிந்து கொண்டு அந்தக் கசாயத்தில் இந்த நேர்வாளம் கட்டி வேக வைத்து எடுத்து பசுவின் பாலில் துளாந்திரமாக வேக வைத்து உலத்தி வைத்துக் கொண்டு வெங்காரம் சாணியில் சுத்தி பண்ணினது விராகனிடை.க, பொரித்துக் கூட்டவும்.

சுக்கு மேல் புறணி சீவினது விராகனிடை.உ, மிளகு விராகனிடை.3, சுத்தி பண்ணின நேர்வாளம் விராகனிடை.4, கடுக்காய் பொடி வஸ்திர காயம் பண்ணினது விராகனிடை.8, கக விராகனிடை.18, நேகப் பொடி பண்ணி சிமிளில் அடைத்து பணவிடை பொடிஇள வென்னீரில் கொடுக்கவும். கழியாதிருந்தால் சுடு தண்ணீர் கொடுக்கவும். சீக்கிரமே கழியும். மாத்து மோருஞ் சோறும் கொடுக்கவும். மகோதரம் பாண்டு வீக்கம் விடபாகம் கரப்பான் வீக்கம் கண்டிப்பு இவைகளெல்லாந் தீரும். இது கை கண்டது.

குன்மம் பதினெட்டுக்கு:-

நாலு களஞ்சு அரப் பொடியும், நல்ல கெந்தகம் மிரு களஞ்சு சால ஒதமிரு களஞ்சு சுறமத்த குமரிச் சாறு தன்னில் ஏலங் குளலாய் யம்மி தன்னிலிசைவா யரைத்துங்கசு வாங்கி தாலத்துள்ளே வைத்தக் கால் தனலா யெரியுங் கண்டீரே.

கண்டித்த குன்மம் பிலிகைகுரும் கருத பித்தம் பாண்டுருவும்
உண்டாலருத புளித் தேக்கம் உத்த நோய்களு மோடிப் போம்
பண்டே பொல்லா மேனியும் போய் பார புமூடன் கண்டதிது
கண்டே சொன்னுனிவை யெல்லாங் நமக்குச் செய்யக் காரியமே.

வாய்வு குன்மத்தின் குணம் மருந்து:-

அசனஞ் செரிக்கிற போது திமிறி மிதந்து கொண்டேறி மார்க் குலையில் சொருகி வலித்துக் கொண்டிருக்கும்.

இதுக்கு:- நல்ல முத்தின தேங்காய் ரெண்டு திருவிப் பால் பிழிந்து அந்தப் பாலை நாழி பாலாகத் தண்ணீர் விட்டுப் பெருக்கி அதிலே மிளகு பலம்.3/4, அசமதாகம் பலம்.1/8, பெரிய சுக்குத் தேறு.உ, சாறணை வேர்.உ, வெள்ளைப் பூண்டு ரெண்டு முருங்கைப் பட்டை.உ, பாக்களவு அரைத்து.க கரைத்துக் கிளறிக் காச்சவும். நீர் சுவறி நெய் பிறப்பட்டவுடனே இறக்கிக் கிளறிக் கடுக்காய் வைத்துக் கொண்டு இந்தக் கடுகு வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். செருப்படிச் சாறு உழக்கு கூட்டிக் கொள்ளவும்.

வயிறு வலிக்கு:-

பேயத்திக்காய் பானையிலடைத்துத் தண்ணீர் வார்த்துச் சீலை வேடு கட்டி கருங் குறுவை அரிசியாகுதல் இறங்கு மிட்டா அரிசியாகுதல் மாவிடித்துப் பிட்டாகச் சுட்டுத் தின்னவும்.

வயுத்த வியாதி குன்மத்துக்கு:-

பெருந் தும்பைச் சாறும் நற்சீரகமும் வடித்துப் பொடியங் கூட்டி உள்ளே கொடுக்கவும். இப்படி மூன்று நாளைக் கொடுக்கால் நாலு நாள் கொடுக்கவும். கெர்ப்ப விப்புருதியுந் தீரும்.

வயறு வலி குன்மத்துக்கு:-

கல்லுப்பு, இந்துப்பு, விளாம்பழம்.5, நிலாவாரை சமூலமும் ஒரு பிடி

கல்லுப்பும் நாலு சிறங்கை இந்துப்பும் நாலு விராகனிடை விளாம்பழமும் வெய்யிலிலே உலர்த்தி நிழலுலர்த்தி ரெண்டையும் சூரணம் பண்ணி உப்பு பொடி செய்து கூடக் கூட்டி மூவிரல் கொண்டது கொள்ளவும், வயறு வலி தீரும்.

சத்தி குன்மத்துக்கு:-

இரதம், கெந்தகம், சத்தி யவட்சாரம், யவட்சாரம், ஊர்க் கடுகு, முருங்கை, வேர், கொடிவேலி வேர், கையாந்தகரை, அசமதாகம்.3 பலம் இந்துப்பு, சீரகம், வளையலவணம், வாய் விளங்கம், கடல் நுரை, திரிகடுகு சமன் கூட்டிப் பொடி செய்து எலுமிச்சம் பழச் சாத்தில் கிளறி அக்கினியிலே பதம் பண்ணி வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ளவும் தீரும்,

சத்தி குன்மம் மலட்டு வலிக்கு:-

உப்பு, மிளகு அரைத்து அடை சுட்டுத் தின்னவும். இப்படி மூன்று நாள் தின்னவும் நிற்கும். சிறு அவளம் பழம், 4, முருங்கைப்பூ. 4, தண்ணிமிட்டான் கிழங்கு பொடி. 3, நெருஞ்சிவேர் பலம். க, நிலப்பனைக் கிழங்கு பலம், க, நன்னாரி வேர் பலம். உ, அதிமதுரம் பலம். உ, ஏலம் பலம். க, இதெல்லாம் உலர்த்திப் பொடி செய்து நிறுத்துக் கொண்டு சீலை வடி யிட்டுப் பதக்கு பசுவின் பாலில் குழம்பாகக் காச்சவாறே பொடியைத் தூவி திரண்டு வருகிற போது நெய்; தேன்-சர்க்கரை வகைக்கு நாழி விட்டுக் கிளறித் தினம் காலமே தாளிக் கா. அளவு கொள்ளவும். கைப்பு, புளிப்பு விடவும். பெரும்பாடு பிறமியம் அத்தி சுதம் இது பொருந்தாச் வலிக்கு:-

வெள்ளைக் காக்கணம் வேர்; பூனைப் புடுக்கி வேர் வகைக்கு பாக்களவு விழுது பிறமிச் சாறு உரி, சதிரக் கள்ளிப் பால். 1/8, சுக்கு, மிளகு, கடுகு, நெல்லி முள்ளி தனிப் பசுவின் நெய் உரியில் அரைத்துக் கரைத்து சற்கத்துடனே இறக்கவும். பாக்களவு கொடுக்கவும்.

(வேறு). சுழிக்கு:-

அதிவிடையம், சாதிக்காய், குருசாணி, ஓமம், அபினியுடனே, கசகசா, தரிசி, மதி வல்லரிவை ஏழும் சமன் செய்து நச்சி வாகாய் வேப்பிலைச் சாற்றில் அரைத்து வளம் பெறவே பதிக வொரு வேப்பங் காயளவு உருண்டை செய்து கஞ்சா விரை வெப்பரிய நிழலுலர்த்தி பழுமுளகோர் நாளும் இதிலொரு தான குளிகை இளைத்தேறம் விட்டு இதமாதச் சோறு வெள்ளரிடக் களிச்சல் போமே.

போமே கொம்பனைப் படுவனுடன் பொல்லாவி சுளி பெருங் களிச்சல்
ஆமே ரத்தப் படுவனுந் தான் அவிழ்தங் கொண்டா லம் புவியில்
கோமேதகம் போலொளி மாதே கூறிச் செய்த முன் மருந்தால்
தாமே தாகஞ் சன்னியுடன் தனியும் சொன்னேம் தப்பாதே.

அபினி, கசகசா, குருசாணி, ஓமம், சாதிக்காய், கஞ்சாவிரை, அதிவிடையம், புழுங்கலரிசி இவை யேழும் சமன் கூட்டி வேப்பிலைச் சாறு வாத்தரைத்து அடி நாக்கில் தடவி வெள்ளரும் சோறும் கொடுக்கவும். படுவன் களிச்சல் என்னப் பட்டது தீரும்.

(வேறு).

கெந்தகம் பொடி செய்து கும்பக் கலசத்திலே பசுவின் பால் நாழி விட்டு சீலை வேடுகட்டி அதின் மேலே ரெண்டு பலம் கெந்தகப் பொடியை வைத்து மேல்ச் சட்டி கொண்டு மூடி எரிய விட அந்தக் கெந்தகம் முருகிப் பாலில் விழும். இந்தப் படி மூன்று பிரகாரம் சுத்தி பண்ணி அந்த சுத்தியான கெந்தகத்திலே சங்கிலைச் சாறு விட்டுச் சுவற வைத்து இந்தப் படி முப்பது நாளாற விட்டு எடுத்து துவரைப் பிர மாணம் அரைத்து உருண்டை பண்ணித் தினம் ஒரு உருண்டை கொள்ளச் செவ்வட்டை கடி தீரும். காத்துப் படாமலிருக்கவும். பத்தியம் பசுவின் நெய் ஆகும். மத்தொன்று மாகாது. இந்தப் படி ஒரு மண்டலங் கொள்ளவும்.

சர்வ சுரத்துக்கு சுரபபதி மாத்திரை:-

ரசம், கெந்தகம், அரிதாரம், கெவுரி பாஷாணம், வெள்ளைப் பாஷாணம், மடல் துத்தம் வெண்காரம், நேர்வாளம் இந்த எட்டு வகையும் சுத்தி பண்ணிச் சமன் கூட்டிப் பாகலிலைச் சாறு விட்டு நாலு சாமம் ஓயாம லரைத்துச் சிறு பயறளவு மாத்திரை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு தாப சுரத்துக்கு முலைப் பாலிலிடவும். சீத சுரத்துக்கு இஞ்சிச் சாத்திலிடவும். மூன்று நாள் மாறல் நாலு நாள் மாறல் இரண்டு வகைக்கும் சுக்கு நீரிலிடவும். குளிர் சுரத்துக்கு துளசி, கஞ்சாங் கோரை, வெண்நொச்சி இதிலொரு சாத்திலிடவும். பத்தியம். பத்தியம் பசுவின் பால், பழவரிசி, பாசிப் பயறு கூட்டிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். பேதி மட்டும் மீறில் ஆவாரை யிலைக் கசாயத்தில் நெல்லிப் பருப்பு அரைத்துக் கரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். கைப்பு, புளிப்பு சறவுதும் ஆகாது. சுரம் தீரும்.

சர்வ சுரத்துக்கு நேர் வாள மாத்திரை:-

நேர்வாளம் சுத்தி பண்ணின பருப்பு. 50, மிளகு 100, இது இரண்டும் வகையும் எலுமிச்சம் பழத்துக்குள்ளே அடைத்து மூன்று நாள் ஊற வைத்து எடுத்து இஞ்சிச் சாறு விட்டு அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை செய்து சகல சுரத்துக்கும் ஒரு நாளைக்கு ஒரு மாத்திரை நெய்யிலே குழைத்துக் கொடுக்கவும். ஒரு தரம் பேதியாகும். சறுவ சுரமுந் தீரும்.

(வேறு)

சுத்தி பண்ணின நேர்வாளப் பருப்பு விராகனிடை.1½, கடுகுரோகணி விராகனிடை.க இவை கூட்டி வரிக் கத்தாழஞ் சாற்றிலரைத்துக் குன்றி விரைப் பிரமாணம் குளிகை செய்து நிழலுலத்தி ஒரு உருண்டை இரண்டுண்டை கடுக்காய் களிப்பாக்கு கொத்தமல்லி கருவேப்பந் தண்டு கத்தாளஞ் சருகு இவை ஐந்தும் கசாய மிட்டு அந்தக் கசாயத் திலரைத்திட விரோசனமாகும். கடுக்காய், கடுகுரோகணி, சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், சிராம்பு, சுத்தியான சாதிலிங்கம் இந்த எட்டு வகையும் சமன் கூட்டி இந்த எட்டு வகையும் நின்றை நிறைக்கு சுத்தி பண்ணின நேர் வாளப் பருப்புங் கூட்டி இந்த ஒன்பது வகையும் தண்ணீர் விட்டரைத்து சுண்டைக் காயளவு உருண்டை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு உருண்டை பசுவின் நெய்யில் குழப்பி உள்ளுக்குக் கொடுக்கப் பேதியாகும். இதுக்கு மாத்து எருமை மோரும் சோறும். மிஞ்சினல் முருங்கையிலை உப்புப் போடாமல் வேக வைத்து இறுத்துக் கொடுக்க நிற்கும். சுரவ சுரமுந் தீரும்.

(வேறு)

பறங்கிப் பட்டை, பட்டையோ ரெட்டதாகும் பசுருஞ் செந்தகம் நாலதாகும்
சட்டமா மசுவலுமும் தளர் கொடிவேலி ரெண்டும்.
நட்டமாம் குலே மேகம் நயந் தனந் தீருந்தானே.
மட்டமா யிடித்து நெய்யும் மருவு சக்கரையும் பாதி

(வேறு)

வெள்ளைக் செவூரி அரிதாரம் வகைக்கு விராகனிடை.க, சுத்தம் விராகனிடை.1½, துருசு விராகனிடை.1½, பத்துக் கோதம்பை அரிசி முலைப்பால் வாத்தரைத்து உருண்டை பண்ணி நீரிலுரைத்திட முகத்தில் வீசின கிரந்தி புண்ணு தன்மாங்கிஷ்டம் இரண்டுக்கும் நீரிலரைத்திடத் தீரும்.

அரையாப்புக்கு என்னை : அரையாப்பு கண்டமாலை விப்புருதிக்கு :-

கிளர் செங்கத்தாரி முள்ளிக் கத்திரி யிலைக் கள்ளி சங்கு கொடிவேலி ஆக வகை 6-க்கு பட்டை. 6 வேளை குப்பை மேனி நத்தைச் சூரி கண்டங்கத்திரி குமிழம் ஆக வேர் வகை.5,. வட்டக் கிலுகிலுப்பை வட்டத் துத்தி பொன் முசுட்டை நெருஞ்சி வெள்ளைச் சாறனை இதள்படச் சமன் கூட்டிப் பொடி பண்ணி நல் லண்ணை சேர் கொதிக்க வைத்து அந்த தூள் போட்டுக் காய்ச்சி மூகு பதத்திலிறக்கி இறக்கிற போது துரிசு விராகனிடை. .க, மடல் சுத்தம் விராகனிடை.க, பொடி பண்ணி வேறே கலசத்தில் போட்டு யிறுத்து வைத்துக் கொண்டு இரண்டு நேரமும் நேரத்துக்கு ஒரு கரண்டி கொடுக்கவும். அடிக் கடுகு புண்ணில் போடவும். பத்தியம் புளி விடவும்.

(வேறு).

கொடிவேலி வேர் பலம்.8, வெள்ளள்ளி பலம்.8, பழைய வெல்லம் பலம்.8 சிறுகிளா வேர் பலம்.4, வேளைவேர் பலம்.ஈ வசம்பு விராகனிடை.க, வெள்ளை உள்ளி தவிரச் சூரணம் பண்ணி ஒரு படி எண்ணெயில் போட்டுக் காய்ச்சிக் கலந்து வருகிற பகுவத்தில் வெண்ணையில் பேரட்டுக் காய்ச்சிக் கலந்து வருகிற பக்குவத்தில் வெல்லம் கரைச்சு சேர்ந்து கொதிக்கச்சே வெள்ளள்ளி மூளை வாங்கிப் போட்டு சேர்ந்து வெந்த பிறகு எடுத்து வைத்துக் கொண்டு ஒரு நேரத்துக்குச் சிறு கரண்டி கொடுக்கவும். இப்படி இரண்டு நேரமுங் கடுகு கட்டும் ரெண்டும் கொடுக்கவும். கைப்பு, புளிப்பு விடவும். எந்தக் கண்டிப்புந் தீரும்.

அரையாப்புக்கு பத்து :-

சவுட்டு மண்ணும் தவிடு மண்ணும், எலுமிச்சம் பழச் சாற்றில் கொதிக்க வைத்து மூன்று நாள் வெத்திலை போட்டுக் கட்டவும். யிச்சிப் பால்ச் சலையி தாட்டிக் காய வைத்து மஞ்சள் சுத்திச் சுட்டு சுண்ணாம்பு கூட்டித் தேனில் குழைத்துப் போட்டவும்.

வறட்சி இருமலுக்கு :-

சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம் வகைக்கு பலம்.க சூரணம் பண்ணித் தேத்தாங் கொட்டை பலம்.4, நெய் வார்த்து சிவக்க வறுத்துப் பொடி பண்ணி நாலு சேர் நெய் ஒரு சேர் சர்க்கரையுங் கலந்து கொதிக்க வைத்து இந்தச் சூரணம் போட்டுக் கொதிக்க வைத்து இறக்கி நேரத்துக்கு கொட்டைப் பாக்களவு தின்னவும். புளியுங் கவிச்சும் விடவும்.

தாம்பிர பூபதி :-

தாம்பிர அரப்பொடி விராகனிடை.10, நாபி விராகனிடை.8, வெங்காரம் விராகனிடை.7, கெந்தகம் விராகனிடை.6,. அரிதாரம் விராகனிடை.5, சுத்தம் விராகனிடை.4, துரிசு விராகனிடை.3, நேர்வாளம் விராகனிடை.2, குப்பை மேனி, துளசி, தும்பை கையாந்தகரை, யிந்த நாலு சாரும் வார்த்து செஞ்சு சாமமரைத்துப் பாளையிலடைத்து தேனில் வெல்லத்தில் யிஞ்சிச் சாற்றில் கால் பணவிடை கொடுக்க சுரம் விஷ சுரம் தர்பசுரம், சுவாசம், உன்மாத்தை, க்ஷயரோகம், பொட்டைச் சன்னி சன்னி இது வெல்லாந் தீரும்.

சுரம் அதிசாரக் களிச்சலுக்கு :-

நெரை வேர் வெந்நீரில் கொடுக்கவும். கருவலங் கொழுந்து வெந்நீரில் கொடுக்கவும். சுக்கு வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும். வட்டத் திருப்பி அதிவிடையம், யிருவேலி இவை உரைத்து வெந்நீரில் பசுவின் மோரில் கொடுக்க ரெத்த அதிசாரமும் கிருணியும் நிற்கும். நாவல் விரை, சிரிகடுகு, இந்சப்பு இருவேலி வேர், மோரிலரைத்துக் கொடுக்க ரத்தக் களிச்சல் நிற்கும்.

(வேறு)

சிறுகீரை வேர், திப்பிலி மூலம், கழுநீரிலரைத்துத் தேன் கலந்து கொடுக்க சுரம் அதிசாரந் தீரும்.

(வேறு)

கண்டங்கத்திரி சமூலம் இவைத்து வெள்ளிய சீலையினை உளரப் பிடிப்பித்து உலர்த்தி இளநீரில் நனைத்து மூன்று நாளாறு பொழுது நசியம் பண்ணி முழிகண் குருடு தீரும்.

(வேறு)

கெந்தக சுத்தி:- கெந்தகம் பசுவின் நெய்யில் கரண்டியில் உருக்கி பாலில் சாய்த்துக் காய்ச்சு ரெண்டாவது சட்டியில் பால் விட்டு வேடு கட்டி அது மேல் கெந்தகம் வைத்து சட்டி கொண்டு மூடிப் புடமிட விழுந்தது ரெண்டு விசை உருக்கி பாலில் வார்க்க காய்ச்சின பின்பு மறுபடி வேடு கட்டிக் காய்ச்சத் தும்பைப் பூ நிறமாகும்.

(வேறு)

புரோசம் பஞ் சாத்தில் மூன்று நாள் மூன்று சாம மரைக்க எரியாது புகையாது. நல்ல சுத்தி.

(வேறு)

ரசம், கெந்தகம், சாதிலிங்கம், நாபி வாளம் சமன் கூட்டிக் கொடிவேலி கசாயத்திலரைத்து அந்தக் கசாயத்திலே தோளாந்திரமாக ஒரு நாள் எரித்து ஆறின வாறே கெண்டை மீன் பிச்சிலே ஒரு நாளரைத்துப் பிறகு கள்ளிப் பாலிலரைத்து உழுந்து பிரமாணம் குளிகை செய்து யிஞ்சிச் சாற்றிலிடச் சகல சுரங்களுந் தீரும். எருக்கம் வேர்க் கசாயத்திலிடச் சன்னி வாதமெல்லாம் தீரும்; பத்தியம் தயிரும் சாதமும் உண்பது தாகமானால் மோர் குடிப்பது.

(வேறு)

ரசம், கெந்தகம், நாபி, பொன்னரிதாரம்; வெண்காரம், நேர்வாளம் இந்த ஆறு வகையும் தனித் தனி சுத்தி பண்ணி சமன் கூட்டவும். சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, இந்த ஆறு வகையும் சமனாய் கூட்டி ஆகப் பன்னிரண்டு வகையும் சமன் கூட்டிக் கையாந்தகரைச் சாற்றிலே ஐந்து நாளரைத்து மிளகளவு உருண்டை பண்ணி பரணியில் வைத்துக் கொள்ளவும். வாதத்துக்கு இருபது நாள் இருபதுண்டை சுக்கு நீரிலிடவும். வயத்துப் பொருமலுக்கு இருபது நாள் இருபதுண்டை தேனிலிடவும். சிக்கிலப் பிரமேகத்துக்கு ஐந்து நாள் எலுமிச்சம் பழச் சாற்றிலிடவும். ஈளை, இருமல் நீர்ப்பிடிக்கும் ஏழு நாள் கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி நறுக்கி 27 மிளகு, திப்பிலி சூரணம் பண்ணிச் சூரணத்திலிடவும்.

<u>விரோசனத்துக்கு நாராச உருண்டை:-</u>

சுத்தி பண்ணின நேர்வாளங் கொட்டைப் பருப்பு விராகனிடை.8, சுக்கு விராகனிடை.3, மிளகு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.உ, வெண்காரம் விராகனிடை.க இந்த ஆறு வகையும் தண்ணீர் வாத்தரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை செய்து உலர்த்தி வைத்து விரோசனத்துக்கு ஒரு சிறங்கை குடித்த தண்ணீரில் கொடுக்கக் கழியும். வெந்நீர் கொடுக்க நிற்கும். இதுக்கு பெருவயறு அழல்வை நழுவை மேற்கவிசை; பக்கக் கவிசை, குன்மங் நீர்கட்டு வலஞ் சலம் கட்டும் நிற்கும்.

<u>நாராச ரச விரோசனம்:-</u>

நேர்வாளம் எருமைச் சாணத்தில் கொட்டைப் புடமாய் நஞ்சு போக்கு அப்பால் கத்தாளஞ் சோற்றில் புடமாக்கி கழுவி நிழலுலர்த்தி பருப்பு காசிடை.6, வெண்காரம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, கெந்தகம் நெய்யிற் சுத்தி பண்ணி விராகனிடை.க, இரதம் விராகனிடை.க, முருக்கிலைச் சாற்றி நேக வரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை செய்து சுக்கு வெதுப்பி பொடி செய்து வெல்லத்தில் மூன்று உருண்டை கொடுக்கவும்.

<u>அப்பிரக செந்தூரம்:-</u>

மிளகறணை வேர் கோஷ்டம், அமுக்குரா சீந்தி சர்க்கரை, வெந்தயம், இலவம் பிசின் ஈறவு கிழங்காவது திருநாமப் பாலையாவது நிலப்பனை நெருஞ்சில் விரை நீர்முள்ளி விரை வாழைக் கிழங்கு தண்ணி மிட்டான், அசமதாகம், உலந்த எள், கொத்தமல்லி, அதிமதுரம், நாகவலை, கச்சோலம், மருக்காரை, சாதிக்காய், இந்துப்பு ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, நாகப்பூ, சாறணை வேர் அத்தித் திப்பிலி, முந்திரிப்பழம் சிறுதேக்கு, சதகுப்பை, சற்கடகசிங்கி, சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம், கொடிவேலி வேர், இலவம் வேர், தாமரை விரை, பூனைக்காலி விரை இது வகைக்கு விராகனிடை.உ கூட்டிப் பொடி பண்ணி இதுக்குச் சரி பாதி கஞ்சாப் பொடியாகிலும் கரிசிலாங் கண்ணிச் சூரணமானாலும் சரி கூட்டி கலந்து இதுக்குச் சரி சர்க்கரை கூட்டி வேண்டின மாத்திரம் நெய்யும் தேனும் விட்டு நாலு காசிடை உருண்டை பண்ணி வைக்கவும்; அல்லது லேகியமாக வைக்கவும். காமியருக்கும் வரிய விர்த்தி தம்பனம். வசியம் மிகவும் சுகத்தைக் கொடுக்கும். இளைச்சவன் வந்தனை யுண்டாம். சயம் சுவாச காசம், அதிசாரம், மூலக் கிராணி பிறமேக ரத்த பித்தம் தீபனம் சவ்விர வியாதி காம கவித்து விலாச முண்டாம் நரை மாறும். ராச யோக்கியம். குருவுண்டாகவும்.

<u>விளாம்பழச் சூரணம்:-</u>

மேவிய உப்பு நேரே விளாம்பழம் சமனாய்த் தாக்கி
தாக்கியே யிடித்து நன்றாய்ச் சமத்தாகச் சூரணித்து

ஒவியக் கடுக்காயோடு உற்பட நிலத் தாவுரரை
ஆவிய வகை யிதொன்று அவ்வகு பலந்தான் கூட்டே.

கூட்டிய மூதரத்தோடு குலவிய மதரம் கோஉட்டம்
மூட்டு நல வங்கப் பத்திரி மருவிய. நாகப்பூவும்
நீட்டு தாளிச்சயும் புத்திரி. நோ நல் லவங்கப் பட்டை
ஆட்டு சீரகத்திலேடு அதுவசு பலந்தாள் கூட்டே.

தானென் யிடித்து நன்றாய் தன்மையாயிச் சூரணித்து
காவென்ற பலத்தின் அங் கலந்தசு சமுளுய்த் தூக்கி
வேனென்ற வெள்ளீரோடு விரவியே கொடுத்தாயாளுல்
வேனென்ற கிருமி யெல்லாம் மாண்டு போம் பாரு. பாரே.

பாரு ந. சத்தி குன்மம் பலசத்தி நின்று போகும்
தாரு. நீ யெரித்த குன்மம் சமித்திடும் உதிரத்துள்ளே
சேரு ந. வன்னி மீரும் தீவனமாகு மெத்த :
காரு நீ வாய் நீர் நிற்கும் வருத்திரு சன்மைதானே.

<u>வங்கார அக்கினி குமரன்:-</u>

அரப்பொடி. பலம். 3, உருக்குப் பொடி பலம் க, நெல்லிக்காய்க் கெந்தகம் பலம். 6, வெண்காரம் பலம். க, மனோசிலை பலம். க, செம்புப் பொடி பலம். ச, பித்தளைப் பொடி. பலம், வெங்கலப் பொடி பலம். க, ஊசிக் காந்தம் பலம். உ, ரசம். பலம். க, அரிதாரம் பலம். க,. திப்பிலி பலம். க இது வெல்லாங் கற்றாளைச் சாறு விட்டு மூன்று நாளரைத்து அடி உரத்த சட்டி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து அடுப்பேத்தி மூன்று நாளிடை விடாமல் நெருப் பெரித்து ஆறவிட்டு இறக்கச் செந்தூரமாம். அந்தச் செந்தூரத்தைப் பனியில் வைத்துக் கொண்டு இதுக்கு அநுபானம் பச்சை நாபி விராகனிடை ஒன் , பசுவின் கோமியத்திலே மூன்று நாளூறப் போட்டு உலத்தி மறுபடி மூன்று நாளூறப் போட்டு. உலத்தி திப்பிலி மூலம் பலம். உ, கூடப் போட்டு வெள்வெங்காயம். விராகனிடை. 10. கூடப் போட்டு அரைத்துச் செந்தூரத்துடனே கலந்து அரைப் பணவிடை கூட்டிக் கொள்ளவும்.. இந்தச் செந்தூரம் அரைப் பணவிடை வெள்ளுள்ளித் தயிலத்தில் . பத்து நாள் ரெண்டு நேரமும் கொள்ள வாயில் கொழுப்பு வயிற்றில் தள்ளின கொழுப்பும் தீரும்.. இந்தச் செந்தூரமும் சீனி வெருகடியும் கூட்டி தேனில் பத்து நாள் ரெண்டு நேரமுங் கொள்ளக் கல்லடைப்பன் சதை யடைப்பன் பதினெட்டு இந்திரியக் கட்டு அஞ்சு அந்திர வாய்வும் பித்தம் ரத்திருவத் தாறுந் தீரும். இந்தச் செந்தூரம் வெள்ளுள்ளித். தயிலத்தில். இருபது நாள் கொள்ள வயற்றில் வியாதி அறுபத்தாறும் வாய்வுத் திரட்சி முப்பத்தாறும் பெருவயிறு காமாலை பாண்டு ரோகம் விஷவாதம் சேற்றும முதலானதுந் தீரும்.. செந்தூரத்தி லொரு பணவிடை திரிகடுகு வெதுப்பிப் பொடி செய்து தேனில் இஞ்சி சாற்றில் கொள்ள. சன்னி பதினெட்டும் வாதம் என்பத்திலும் வாய்வு இருபத்தாறும் குன்மம் இருபத்தாறும் தீரும்.

<u>சகல புண்ணும் புரையோடினால் புரைப் புண்ணுக்கு என்னை செய்கிற விபரம்:</u>

நல்லெண்ணை, ரசகற்பூரம் விராகனிடை. க,. சாதிலிங்கம் விராகனிடை. க, முருதார்சிங்கி விராகனிடை. க, பச்சை வெட்டு விராகனிடை. க, துத்தம் விராகனிடை. க, துருசு விராகனிடை. க, வெண்பாட பட்டை விராகனிடை. க, சாம்பிராணி விராகனிடை. க, காசுக்கட்டி விராகனிடை. க, களிப்பாக்கு விராகனிடை. க, இது வெல்லாம் நல்லெண்ணையில் போட்டுக் காய்ச்சிப் புரைப் புண்ணுக்கு ஆகவும். சீலையில் தோட்டி உள்ளே வைக்கவும். புண்ணு ஆறும்.

(வேறு)

அத்திப் பட்டை, ஆலம்பட்டை, அரசம் பட்டை, உதியம் பட்டை, நாவல் பட்டை, கருவேலம் பட்டை, நெல்லிப் பட்டை, வெள்வேலம் பட்டை, செங்கத்தாரிப் பட்டை ஆக வகை 9-ம் கசாயம் வைத்து இறக்கிக் கொண்டு நல்லெண்ணை விட்டு காய்ச்சி புரை புண்ணுக்கு ஆகவும். ஆறும்.

புரைக்கு:- சதிரக் கள்ளிப் பால் திணியிட்டு உள்ளே வைக்கவும்.
வாய்வுக் கட்டிக்கு:- கருப்புட்டியில் எருக்கம் பூ வைத்து மூன்று நாள் கொடுக்கத் தீரும.

<u>நரம்புச் சிலந்திக்கு:-</u>

பழைய புளியாவது கருப்புட்டியிலாவது மூன்று பூ நாகம் வைத்து மூன்று நாள் கொடுக்கவும். உப்பு, புளி ஆகாது.

<u>நீரடைப்புக்கு:-</u>

சங்குப் பொடி பலம். உ, வெண்காரம் பலம். உ, சேர்த்துக் குகையில் வைத்து சில்லுப் போட்டுச் சீலை மண் செய்து புடமாகப் போட்டு எடுத்துக் கொண்டு அநுபானம் அகத்திக்கீரை கருநீர் விட்டு வேக வைத்து அந்தத் தண்ணீர் படி. 1/8, மருந்து விராகனிடை. க, போட்டுக் கொடுக்கவும். தீரும்.

(வேறு)

<u>இருமலுக்கு:-</u>

நிம்பற் செடி அரிசியும் ரொட்டி சுட்டுக் கொடுக்கவும்.
தேளுக்கு:- வெள்ளைக் குண்டு மணிப் பருப்பு விராகனிடை. உ, சித்திரமூலம் வேர்ப் பட்டை விராகனிடை. உ, புங்கம் கொட்டை விராகனிடை. உ மருக்காரைக் காய் விராகனிடை. உ, இது வெல்லாம் எருக்கம் பால் வாத்தரைத்துக் குளிகை பண்ணிப் பாவும்

விட்டு உரைத்துக் கடிவாயில் பசவும்.

வட்சற கசாயம்:- சீரகம் கிராம்பு, மிளகு, வெத்திலே.

<u>லிங்கக் குழம்பு:-</u>

இரதம் களஞ்சு.க, நாபி களஞ்சு.க, லிங்கம் களஞ்சு.4, வெங்காரம் கழஞ்சு.உ, வாளம் களஞ்சு.8 இஞ்சிச் சாறு வார்த்து ஆட்டி உருந்து பிரமாணம் மிளகு பண்ணி சுக்குத் தண்ணீராவது இஞ்சித் தண்ணீராவது கொடுக்கவும்.
குழம்பு:- இந்துப்பு விராகனிடை.உ, வெங்காரம் விராகனிடை.உ, லிங்கம் விராகனிடை.உ, வாளம் விராகனிடை.$\frac{1}{2}$, முத்துப் பருப்பு விராகனிடை.5 இது வெல்லா மரைத்து சிமிழில் அடைக்கவும்.

<u>சன்னிக்கு எருமைக் கொம்புத் தயிலம்.</u>

லிங்கம் விராகனிடை.க; தாளகம் விராகனிடை.க, மசேசிலே விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, வீரம் விராகனிடை.க இது வெல்லாம் வேப் பெண்ணை வார்த்து அரைத்துத் துணியில் தடவி மாட்டுக் கொம்பிலே சுத்தி தயிலம் இறக்கவும்.

<u>இருமலுக்கு லேகியம்:-</u>

தேத்தான் கொட்டை பலம்.க, கொண்டு வந்து நடுக்கி நீச்சத் தண்ணீரில் ஊறப் போட்டு மூன்று நாளின் பிறகு எடுத்து மை போலே அரைத்துச் சித்தரத்தை பலம்.க, மிளகு பலம்.க, ரெண்டும் வறுத்துப் பொடி பண்ணிச் சட்டி அடுப்பிலே வைத்துப் பனைவெல்லம் போட்டுக் காய்ச்சி பசுவின் வெண்ணெயும் போட்டு இந்தப் பொடியும் போட்டு லேகியமாய்க் கிண்டி வைத்துக் கொண்டு ரெண்டு நேர முங் கொடுக்கவும். தீரும். இது கை கண்டது.

<u>பூவரசங்காய் எண்ணை:-</u>

மூவுலகுந் தான் படைத்த முன்னோன் தனைப் பணிந்து புவுலகில் கிட்டாத பூவரசங்காய் சாறு படி நாலு திட்டமுடன் சங்கங்குப்பி சேர் களஞ்சு மீட்டு வெருகங் கிழங்குடனே வேண்டும் சுடு தரத்தி மருகன் கொரட்டைக் கிழங்கு வன்மையாய் பெருக்கரிய வாதமடக்கி வளரும் அசுவ கெந்தி சீதக் கிழி மூக்குங் கிழங்குடனே ஒதரிய சேர்ந்தவரை கொடிய பெருமரத்தின் வாருமிலேகள் மற்று வகை களெல்லாம் சாறுபடி யரையாய்த் தானிடித்து முன் சாற்றில் மீளவிடுத்து விகற்ப மாய் கசாய வகைகள் கருத்தா யுரைக்கக் கேள் சொல்லரிய பூவரசந் தன் பட்டை வெட்டியொரு பலம் சேர் விளங்கும் பெருமரத்தின் பட்டை பலம் நாலு திட்டமுடன் அமுக்கிலாவின் கிழங்கு ஐந்து பலம் விட்டு சமக்க கருநொச்சி தன் பட்டை முக்கிய முடன் மாவிலிங்கம் பட்டை வலிய செங்கத்தாரியுடன் வேலிலிய நீலிவேர் வேம்புடனதாக வளரும் கொட்டைக் கிரந்தி வரு மாயிலியப் பட்டை பருவமாய் பத்துப் பலங்கள் பருந்தாளியிலே சேர்த்து சுத்தமுடன் நீர் துலங்க விட்டு வெத்தலே நாலிலொன் றாய்க் காய்ச்சி நலமாக வைத்து முன் சால வற்க வகையைக் கேள் காந்தங் கூருஞ் சரகமும் கார்போகரிசி தாழகமு மிக் தொரு நெல்லிக்காயக் கெந்தகமும் நள் கடுகுரோகணியும் சொல்ல வளர் சாட்டிலை கு சரகமும் அன்பான மருந்தான மருந்தேழு வகை செம்மையாய் விராகனஞ்சு சேத்திரைத்து புண்மையாய் சித்தா மணக்கெண்ணை செப்பமாய் மூன்று படி வத்தாமல் விட்டு வகையாகப் பத்திரமாய் சேர்ந்த மெழுகு பதமே பார்த்துக் கூறு மொ கறண்டி கொண்டுவார் தங்கமத் தீரும் வியாதிதனைச் செப்பக் கேள் மூரும் அந்தி கிரந்தி சொறி கிரந்தி அத்திக் காய்க் கிரந்தி ஆலங்காய் மொழிகிரந்தி புக்கிரந்தி மொய்த்த வெள்ளை சூலே பதினெட்டு சுழல் மேகம் மூவேறு வாலே பறங்கிப் புண் வாய்வு காலுடன் கை யூறல் சுட்டம் கரப்பான் வெடி சூலே தொய்ய அண்ட வாதம் தொழு வாய்வு வையகத்தில் அந்திரத்தின் வாய்வு அழல் மேக வாயுவொடு கந்திரத்தின் கண் வீக்கம் கருங் கிரந்தி சிந்தனையாய் யனமொடு மேகமதாய் எரிகின்ற ரோக மெல்லாம் பாலுவரக் கண்ட பனிபோலே பறக்கும் ஞானமுடன் பத்தியத்தைச் சொல்வேன் பகர் முருங்கைப் பிஞ்சாகும் வத்தாவின் பாலாகும் வழுதலேயாம் மொய்த்த தொரு பச்சைப் பயறும் புகரும் புடலாகும் மெச்சு முளைத் தண்டாகும் மெல்லியரே யிச்சையுடன் வருத்தாட்டு கற்புப் புளிப் புகையுங் காட்டாதே யிப் புவியிற் யித் தயில மிவ்விதமாய்ச் செய்தாக்கால் தப்பாது கை கண்டதாம்.

<u>இதுக்கு அட்டவணை விப்ரம்:-</u>

பூவரசங் காய்ச் சாறு படி.4, சங்கங் குப்பிச் சாறு படி.$6\frac{1}{4}$, விருகங் கிழங்குச் சாறு படி.$\frac{1}{2}$, சிறுரட்டிச் சாறு படி.$\frac{1}{2}$, பழங்கோவை கிழங்குச் சாறு படி.$\frac{1}{2}$, தழுதழைச் சாறு படி.$\frac{1}{2}$, அமுக்கிலாந் தழை சாறு படி.$\frac{1}{2}$, ஆகாசக் கிழங்குச் சாறு படி.$\frac{1}{2}$, தொழியவரைச் சாறு படி.$\frac{1}{2}$, பெருமரத்துத் தழைச் சாறு படி.$\frac{1}{2}$ இது வெல்லாம் சாறு வகை.

இதுக்கு கசாய வகை பூவரசம் பட்டை பலம்.க, பெருமரத்துப் பட்டை பலம்.4, அமுக்கிலாங் கிழங்கு பலம்.5, கருநொச்சி சமூலம் பலம்.10, செங்கத்தாரிப் பட்டை பலம்.10, கருநாணை வேர் பலம்.10, வேப்பம் பட்டை பலம்.1 , கொட்டைக் கிரந்தி பலம்.10, மாவிலிங்கம் பட்டை பலம்.10, ஆயப் பட்டை பலம்.10, இது வெல்லாம் இடித்து நாலு மரக்கால் தண்ணீர் விட்டு ஒரு மரக்காலாகக் காய்ச்சிக் கொள்ளவும். இதுக்குக் கற்கம் வகை

காந்தம் விராகனிடை.5, கருஞ்சரகம் விராகனிடை.5, கார்போகரிசி விராகனிடை.5 தாளகம் விராகனிடை.5, நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனிடை.5, கடுகுரோகனி விராகனிடை.5, காட்டுச் சீரகம் விராகனிடை.5, இவை கசாய மிட்டு இந்தச் சாறும் கசாயமும் கற்கமும் நன்றாய்க் கலந்து சித்தாமணக்கு எண்ணை படி.3 விட்டு எரிக்கவும். மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். ஒரு நாள் ஒன்றுக்கு சிறு கரண்டி அளவு கொள்ளவும். ஒம-நாள்-ஒன்றுக்கு இதுக்குத் தீரும் வியாதி சகல கிரந்தியும், சகல மேகமுந் தீரும் பத்தியம் இச்சா பத்தியம்.

லிங்கப் புகை:-

லிங்கம் விராகனிடை.க, பசளையிலே அரைத்து கவசம் கட்டி வரிக் கும்மட்டிக்காய் அறுத்து அதுக்குள்ளே வைத்து சீலை மண் செய்து புடம் போடவும். எடுத்துக் கழுவிப் போட்டு காந்தம் விராகனிடை.க, நன்றாய் பொடி பண்ணி எருக்கம் பட்டை விராகனிடை.உ, மேல் சீவிப் போட்டு அரைத்து ரெண்டு மருந்தும் கூடச் சேர்த்து அரைத்து ஒரு காசிடை வில்லை செய்து அரசம் பட்டை கொண்டு வந்து இடித்துப் பஞ்சு போலே பண்ணி சுங்கானில் பஞ்சு வைத்து புகை முழுங்கவும். ரெண்டு வேளையும் மூன்று நாளைக்கு கொடுக்கவும். இதுக்கு தீரும் வியாதி கண்டமாலை, குலைப் புண்ணு, மேகப் புண்ணு தீரும். வாய்வும், கால் பிடிப்புக் கை பிடிப்பு சகல வியாதியும் தீரும்.

புண்ணுக்கு எண்ணை:-

விளக்கெண்ணை படி.¼, வெத்திலைச் சாறு படி.½, பெரும்பனைச் சாறு படி.1/8, ஈரவெங்காயச் சாறு படி.1/8, பெரிய அருணை.3 இது வெல்லாம் அடுப்பிலே வைத்துக் காய்ச்சிப் பதம் வருகிற போது மேல் பொடி போட விபரம். கிராம்பு விராகனிடை.க, யேலம் விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.½, நல்ல பாம்புக் கொழுப்பு விராகனிடை.4, பச்சை வெட்டு விராகனிடை.3, தருசு விராகனிடை.½, நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனிடை.½, ரசகற்பூரம் விராகனிடை.¼, இது வெல்லாம் பொடி செய்து போட்டுக் காய்ச்சி யிறுத்துக் கொண்டு கோழி இறகு தவைத்துப் புண்ணுக்குப் போடவும். கை கண்டது.

(வேறு)

நில அவரை கொண்டு வந்து சுரசம் பண்ணி தளச்ச ரெத்தக்கு தேனில் கட்டவும். நாற்பது நாள் வந்தவ சுரத்துக்கு பசுவின் நெய்யில் கொள்ளவும். மூன்று படி நெய் மூன்று படி சாறு கொள்ளவும். தாதவளை வேர்ப் பட்டை கொண்டு வந்து நிறுவைத்துப் பாக்குடனே அவரைப் பிரமாணம் கொள்ளவும். முகங் கோணாமல்க் கொள்ளவும். கை கண்டது. அவ பத்தியமாகாது.

ரச முறிவு எரிச்சலுக்கு மருந்து:-

களிப் பரட்டை கொண்டு நீர் வேக வைத்து ஒரு பிடி கொள்ளவும். பூச் செண்டு முகர சிந்தாமணித்

பூச்செண்டு முகர சிந்தாமணித் தயிலம்: பரிசன விரோசனம்:-

பேய்ப் பீர்க்கம் விரை ரெண்டு படி, அத்தம் விராகனிடை.க, இது இரண்டையும் ஒரு கலசத்திலிட்டு அந்தக் கலசத்தினிலே மூன்று சில்லிக் கருவே விட்டு அந்தக் கலசத்தளவு குழி வெட்டிக் கீழே ஒரு கலசம் வைத்து முன்னாந் தயிலம் இறக்கி தயிலத்தை யெடுத்து பூச்செண்டில் ஒரு பணவிடை தயிலம் தடவி முகர வயிறு பேதிக்கும். எத்தனை தரம் முகர்ந்தாலும் அத்தனை தரம் பேதிக்கும். உள்ளுக்குக் கொள்ள வொண்ணாது.

(வேறு)

நேர்வாளம் முத்தின தேங்கா யிலிட்டு மொளை கொண்டு மூடிக் கீழே புதைத்து முப்பது நாள் கிடக்க விட்டு மூளை போக்கி அரைத்து உருண்டை செய்து ஒரு உருண்டை நீரிலரைத்து தொப்புளில் தடவ வயறு கழியும் மாற்று க---டு சந்தனத்தை அப்பவும்.

(வேறு)

செவ்வேலங் கொட்டை பலம்.க, காந்தம் பலம்.க, கடுக்காய் பலம்.½, இந்துப்பு பலம்.க, வளவிந்தம் மஞ்சள் பலம்.க இது வெல்லாம் பொன்னிறமாய் வறுத்துப் பொடி செய்து ஒரு பணவிடை வெந்நீரில் கொள்ள விரோசனம் நன்றாய்க் கழியும்.

(அகஸ்தியர் குணவாகடம் விடப்பட்டது).

அரிதார வெள்ளை:-

அரிதாரம், சங்குச் சுண்ணாம்பு, அத்தம் இந்த வகைக்கு பலம்.க, எலுமிச்சம் பழச் சாறு விட்டு சாமமரைத்து வில்லை பண்ணி இலை சுத்தி சீலை மண் செய்து காட்டு முட்டை.21 மூட்டையில் புடம் போடவும். வெள்ளையாம்.

குட்ட வியாதிக்கு:-

கெந்தகம் களஞ்சு.10, ஒரு சட்டியிலே குன்றி பால் விட்டு வண்டு கட்டி அதன் மேலே கெந்தகம் வைத்து மூடி யெரியிடக் கீழே விழும். அதை எடுத்துக் கெந்தகம் களஞ்சு.10, சுத்த ரசம் களஞ்சு.க, விட்டுச் சூரணம் பண்ணி திரும் ஒரு பணவிடை ஒரு மண்டலம் தேனில் கொள்ள சகல குட்டமுந் தீரும். ரெண்டு மண்டலங் கொள்ள தாது விருத்தி உண்டாம். ஒரு வருஷம் கொள்ள நரை மாறும். கைப்பு, புளிப்பாகாது. பால், நெய், அவரைப் பருப்பு, சாதவளை, வத்தல் இட்டம்.

<u>மண்டூர லோக பற்பம்:-</u>

வல்லத்துக் கிட்டமாவது அலைவாய் மலைக் கிட்டமாவது பலம்.5, அரப்பொடி யிரது, திப்பிலி, சுக்கு, வகைக்கு பலம்.5, எல்லாம் பொடி செய்து கரிசிலாங் கண்ணி சாறு விட்டு அரைத்து பிறகு எலுமிச்சஞ் சாறு விட்டரைத்து களாச்சி அளவு உருண்டை பண்ணி 1 படி நல்லெண்ணெயில் ஊறப் போட்டு அந்தி சந்தி ரெண்டு நேரமுங் கொள்ளவும். பத்து நாள் மறு பத்தியம். உப்பு, புளி தவிர்க்கவும். (மேல் உள்ள ஏடுகள் சிதைந்துள்ளன)

*****
முற்றும்
*****

கை.ச.:28.12.63.

Completed verification
Sundaram
7.9.64

121